கல்கி

KALKI 6-1-80

90 காசு



'80 ஸ்பெஷல்

புதிய திருப்பம்



ஒளி கூட்டும் ஸ்டைல்கள்—
எழில் காட்டும்
புதிய பாணிகள் — உங்கள்
அழகுக் கோலத்தை
வெளிப்படுத்தும்.

மபத்லால் இன்டஸ்ட்ரீஸ் நியூ ஷொராக் மில்ஸ்
மபத்லால் ஃபைன்

MAFATLAL INDUSTRIES

MAFATLAL FINE

சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள்,
சேலைகள், மற்றும் உடுப்புத் துணிகள்

79/MF1/312

Kalki Shopping Page



ஆண்களுக்கு தையற்கலை வகுப்புகள்

நேரிலும் தபால் மூலமும் 2 மாத / 6 மாத பகுதிநேர / முழுநேர வகுப்புகளில் பயின்று சுயமாக பொருளீட்ட ஆண்களுக்கு அரிய வாய்ப்பு. ஷிப்டில் உள்ளவர்களுக்கு வசதி செய்யப்படும். செய்முறை வகுப்புகள், தமிழ் தெலுங்கு ஆங்கில மலையாள மொழிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. முற்றிலும் எளிய நவீன முறையில் நடத்தப்படும் ஒரே ஸ்தாபனம்.

நேரில் வரவும் (அ) விபர புத்தகம் பெற ரூ. 2-00 M.O. செய்க.

வனஜ் தையற் பள்ளி

32, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 600 008

(டென்னிஸ் ஸ்டேடியம் அருகில்)


(எந்த தேதியிலும் சேர்ந்து கொள்ளலாம்)

பண்டிகைக் காலங்களில் நாகரீகத்தின் சிகரம்...

பிரிண்டட் சில்க், காஞ்சீபுரம், பனாரஸ், கஜ்ஜிஸ், மணிபுரி மற்றும் தான்சேயி

எம்பிராய்டெர்ட் செய்யப்பட்ட புடவைகள், பட்டு ஆர்கன்ஸாஸ், சிஃபான்ஸ், மற்றும் சாட்டின்-சிஃபான்ஸ்.

அமெரிக்கன்-ஜார் ஜெட்டுகள், ஜாரி-கோட்டாஸ் மற்றும் பற்பல தினுசுகள்.



அந்நிய நாட்டு கரன்சிகள் ஏற்றுக் கொள்ளப்படும்

கலா மந்திர்

பண்டிகைக் கால புடவைகளுக்கு

827, அண்ணாசாலை, சென்னை 600 002 போன்: 89983

national 796

Kalki Shopping Page

70ம் 80ம்

பல்வேறு துறைகளில் நல்லதும் கெட்டதுமான கடந்த ஆண்டின் நிகழ்ச்சிகளும் எதிர்காலச் சிந்தனைகளும்



திரு ஏ. சிவசைலம்
தலைவர், சென்னை வர்த்தக சங்கம்(தொழில்துறைபற்றி)

எழுபதுகள் முடிந்து எண்பதுகள் ஆரம்பமாகும் தருணத்தில் தமிழகத்தின் பொருளாதார நிலையை ஆராயும்போது கவலையும் உண்டாகிறது. நம்பிக்கையும் பிறக்கிறது. தொழில் முன்னேற்றத்தில் அறுபதுகளில் காணப்பட்ட வேகம் எழுபதுகளில் குறைந்து போயிற்று என்பதும் தொழில் முன்னேற்றம் அடைந்த மாநிலங்கள் வரிசையில் மூன்றாவதாக இருந்த தனது ஸ்தானத்தை இழந்து தமிழகம் ரொம்பக் கீழே இறங்கிவிட்டது என்பதும் அனைவராலும் ஏற்கப்படுகிற கவலை தரும் விஷயம். இதற்குக் காரணம்: (1) கடந்த பத்தாண்டுகளின் முற்பகுதியில் மத்திய அரசு மிகவும் கண்டிப்பான தொழில் லைசென்ஸ் கொள்கையைப் பின்பற்றியது. (2) மின் விநியோகத்தில் இருந்த நிச்சயமற்ற தன்மை. (3) முதலாளி — தொழிலாளி பிரச்னைகளில் நிலவிய ஸ்திரமற்ற தன்மை. ஆனால் கடந்த இரண்டு மூன்று வருஷங்களுக்குள் நம்பிக்கையூட்டும் அறிகுறிகள் தோன்றின. முதலாவதாக ஜூலை 77 தொடங்கி மார்ச் 79 முடிந்த காலகட்டத்தில் நாம் நீண்டகால மின்வெட்டுக்களை அனுபவிக்கவில்லை. இப்போதும்கூட ஓரளவு மின்வெட்டு இங்கு இருந்த போதிலும் தொழில் முன்னேற்றமடைந்த மற்ற மாநிலங்களுடன் ஒப்புநோக்குகையில் இங்கு நிலைமை எவ்வளவோ மேல்தான். இருப்பினும் பற்றாக்குறை எதிர்காலத்தில் இங்கு ஏற்படாது என்று கூறுவதற்கில்லை. தொழில் வளர்ச்சி ஆண்டொன்றுக்கு எட்டு சதவீதம் எனத் திட்டமிட்டுச் செயல்படுவதெனில் மின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 15 முதல் 20 சதம் வரை அதிகரிக்குமாறு திட்டமிட வேண்டும் என்பது நிபுணர் கருத்து. இப்போது இந்தப் பிரச்னை குறித்து அரசு அதிகமாக உணரத் தொடங்கி யிருக்கிறது. இருக்கிற மின் நிலையங்களின் இயக்கத் திறனை அதிகரித்து, மின் உற்பத்தியையும், விநியோகத்தையும் முன்னிலும் சிறப்பாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதே உற்சாகமளிப்பதாக உள்ளது. உபரி மின்சாரம் உடைய கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்கப்படுவதானது அரசின் நன்முயற்சிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு. பொது விநியோகத்துக்கு அன்றித் தொழிலகங்கள் தங்களுக்குத் தாங்களே தேவையான அளவில் மட்டும் மின் உற்பத்தி செய்து கொள்ள அனுமதி வழங்குவது போன்ற சில யோசனைகளை அரசு கவனிக்கும் என்று நம்ப இடமிருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இரு பெரிய ரசாயன ஆலைகள் உற்பத்தி தொடங்கியுள்ளன. மோட்டார் கார் பாகங்கள் தயாரிக்கும் துணைத் தொழிலகங்களிலும் லாரி தயாரிப்புத் தொழிலிலும் உற்பத்திப் பெருக்கத்துக்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. துணைத் தொழிலகங்கள் சிறு தொழில்கள், தொடங்குவதில் கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி ஆணையாளர் கூற்றுப்படி மாவட்டத் தொழில் கேந்திரங்களை நிறுவுவதில் தமிழ் நாடுதான் முன்னணியில் நிற்கிறது.

வருகிற பத்தாண்டுகளில் தேசத்தின் பிற பகுதிகளைப் போலவே தமிழ்நாடும் மின்சாரப் பற்றாக்குறையை எதிர்நோக்கும். நிலக்கரி நெடுந்தொலைவிலிருந்து அனல்மின் நிலையங்களுக்கும் இதர தொழிலகங்களுக்கும் வர வேண்டி யிருப்பதால் இந்தப் பிரச்னை தலைதூக்கும். டீசல் எண்ணெய், எரிபொருள் எண்ணெய் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், எண்ணெய் சுத்திகரிப்புக்கு இங்கு நல்ல வசதிகள் இருந்தும் குரூட் எண்ணெயின் விலையும் அது தாராளமாகக் கிடைக்கிறதா இல்லையா என்பதை யொட்டியும் பிரச்னைகள் எழும். நமது மின்சார உற்பத்தியும் விநியோகமும் நன்கு நிர்வகிக்கப்பட்டு, குறிப்பாக அனல் மின் நிலையங்கள் திறம்பட இயங்குமாறு கவனித்துக் கொண்டால் தமிழகம் தொழில் முன்னேற்றமடைந்த முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக மீண்டும் விளங்க வாய்ப்புண்டு. இதற்கான சூழ்நிலைகள் அனுசரணையாக உள்ளன. இங்கு பழுப்பு நிலக்கரி, மாக்னைஸைட், குவார்ட்ஸைட் முதலிய கனிப் பொருள்கள் ஏராளமாய் உள்ளன. நமது கனிப் பொருள்களின் உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்கலாம்.

மாவட்டங்களின் தொழில் அபிவிருத்தியைக் கவனிப்போமேயானால் பதினைந்தில் ஒன்பது முன்னேற வாய்ப்புண்டு. இப்போதைய உற்பத்தியில் ஐம்பது சதவீதம் ஐந்து வட்டாரங்களில்தான் நடக்கிறது.

எனவே எதிர்காலத்தில் தொழில் வளர்ச்சியைத் திட்டமிட்டுப் பின்தங்கிய மாவட்டங்களில் அமைக்கலாம். விவசாயத்துடன் தொடர்பு கொண்ட தொழிலகங்களுக்கு இம் மாநிலத்தில் நிறைய வாய்ப்பு உள்ளது.

தமிழ் நாட்டின் பொறி இயல் தொழிலகங்கள் புதிய புதிய தொழில் நுணுக்கங்களைப் பெற்றுப் பயனடையத் தகுதி பெற்றுள்ளன. எனவே அடுத்த ஐந்து முதல் ஏழு ஆண்டுகளுக்குள் மூந்நூறு கோடி ரூபாய் வரை புதிதாக இத்துறையில் முதலீடு செய்தாலும் தாங்கும். இது போல ரசாயன உரம், சாயம், இதர ரசாயனப் பொருள்கள் உற்பத்தித் தொழிலகங்கள், தோல் மற்றும் எலெக்ட்ரானிக்தொழிலகங்கள்ஆகியவற்றின் விரிவாக்கத்துக்கும் உற்பத்தி பெருக்கத்துக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. நெசவாலைத் தொழில் ஒரு நெருக்கடி கட்டத்தைச் சில ஆண்டுகளுக்கு முன் அடைந்து தற்போது வியத்தகு முறையில் புத்துணர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. துணி வாங்குவோரிடையே உற்சாகம் குறைந்திருப்பதாகச் செய்திகள் வந்தபோதிலும் நெசவாலைகள் தொடர்ந்து தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்தில் கேந்திர ஸ்தானததை வகிக்கும்.

தமிழ் நாடு மேலும் தொழில் முன்னேற்றம் பெற வேண்டும் என்பதில் மாநில அரசு சிரத்தை கொண்டிருப்பதற்கு 1979ல் தெளிவான அறிகுறிகள் காணப்பட்டன. முதலமைச்சர் தொழிலதிபர்களை ஒன்று கூட்டிச் சாத்தியக் கூறுகள் பற்றி விவாதித்தார். தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், இந்தியாவின் வேறுபல மாநிலங்களை விடத் தமிழ் நாட்டில் தொழில் முன்னேற்றத்துக்கு அனுசரணையான சூழ்நிலை நிலவுவதாகவே கருதுகின்றனர். இங்கு ஸ்திரமான அரசு இருக்கிறது; மின்வெட்டுப் பிரச்னை குறைவாக இருக்கிறது; தொழிலாளி — முதலாளி உறவுகள் எதிர்பார்ப்புக்கும் அதிகமாகவே நல்லபடியாக உள்ளன என்பன காரணங்கள். ஆனால், இதற்கு மறுபுறமாகக் கச்சாப் பொருள்கள், இதர சில அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு அளிக்கும் சவாலைத் தொழில் துறை சந்திக்க வேண்டியிருக்கும். தமிழக அரசுமட்டும் தொழில் துறையை நம்பிச் செயல்படுமானால், முன்னேறவிடாது பின்னுக்கிழுக்கும் சில அம்சங்களை நீக்கிவிடுமானால், விற்பனை வரி, நகர்ப்புற நில உச்ச வரம்பு போன்ற சில அம்சங்களில் முன்னேற்றகரமான கொள்கைகளைப் பின்பற்றுமானால், தமிழ் நாட்டிலுள்ள தொழிலகங்கள் எண்பதுகளின் சவால்களை ஏற்கவும் தங்களது நிர்ணயித்த இலக்குகளை அடையவும் சக்தி பெற்று விளங்கும்.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி.

(ஆன்மீகத் துறை பற்றி)

1979ல் பக்தித் துறையில் இந்தியாவிலோ தமிழ் நாட்டிலோ புதுமை எதுவும் நிகழ்ந்ததாய்த் தெரியவில்லை.



இந்து மதத்தில் மறுமலர்ச்சிக்கே இடமில்லாத ஒரு முழு நிலை இருந்து வருவதுதான் இதற்குக் காரணம்.

ஈரான் உள்ளிட்ட அரபு நாடுகள் சிலவற்றில் ஆட்சியை மாற்றும் புரட்சிக்கு மதம் ஒரு கருவியாய்ப் பயன்பட்டுள்ளது. ஆனால் அதில் கிடைத்த வெற்றி நிலையானதென்று சொல்வதற்கில்லை.

தமிழகம் உள்ளிட்ட இந்தியாவில் சமயச் சார்பற்ற அரசு என்னும் கொள்கை அரசியல் சட்டத்தால் ஏற்கப்பட்டு விட்டதால், ஆட்சியை மாற்றும் முயற்சிக்கு மதத்தைப் பயன்படுத்தும் சக்திகள் இங்கு வெற்றிபெற முடியவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரை மதத் தொண்டு என்பது பக்தி நெறி வளர்க்கும் பணியாகத்தான் இருந்து வருகிறது. அந்த அளவில்தான் நானும் கடந்த ஆண்டில் மதத் துறையில் பணியாற்றினேன்.

இன்னும் சொன்னால், இந்தப் பக்திப் பிரசாரம் கூட இலக்கிய ஆர்வமாகத்தான் இருந்து வருகிறது. இனி வரும் ஆண்டுகளிலும் இந்த நிலையே நீடிக்கலாம்.

வள்ளலார், பாரதியார் போன்ற சீர்திருத்தவாதிகள் போதித்த புரட்சிகரமான கருத்துக்களை மக்களிடையே பரப்புகின்ற மத மறுமலர்ச்சி இயக்கம் நாட்டில் இல்லை. இது நாத்திகத்துக்கு வழி விட்டுவிட்டது.

என்னைப் பொறுத்தவரை எனது தமிழரசுக் கழகத்தை வரும் ஆண்டுகளில் தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் அடிப்படையாகக் கொண்ட சமூக சீர்திருத்தப் பிரசாரத்தில் ஈடுபடுத்த எண்ணியிருக்கிறேன்.

நல்ல வேளையாக இந்திய விடுதலை இயக்கத்தில் காந்திஜி, ராஜாஜி போன்ற தலைவர்கள் முன்னணியில் நின்றதால் பக்தி மதம் காப்பாற்றப்பட்டு விட்டது. ஆனால் அவர்களுடைய பாதையில் இன்றைய தேசியவாதிகள் என்போர் நடைபோட்டிருந்தால் தமிழ் நாட்டின் இன்றைய நிலை வேறு விதமாக இருந்திருக்கும்.

திரு மகேந்திரன்

(திரைப்படத் துறை பற்றி)

1979 — இந்த ஆண்டில் நல்ல திரைப் படங்கள் வெளிவந்து ரசிகர்களின் பேராதரவைப் பெற்றன. அதே நேரத்தில் மோசமான படங்களும் வெளிவந்து தக்கபடி நிராகரிக்கப்பட்டன.



படத் தயாரிப்பாளர்களும் ரசிகர்களும் விழிப்புடன் இருக்கிறார்கள். இருக்க வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.

மற்றபடி இந்த ஆண்டில் திரைப்படத் துறையைப் பொறுத்தவரை குறிப்பிட்டுச் சொல்ல ஒன்றுமில்லை.

நம்முடைய ரசனைகள் எப்போதும் ஆரோக்கியமானதாகவே இருக்கின்றன. உடை விஷயத்தில், தலையலங்கார விஷயத்தில் அவ்வப்போது இயல்பாய் ஏற்படுகிற மாற்றங்களை விரும்புகிற மாதிரியேதான் திரைப்படத்துறையிலும் ரசிகர்கள் மாற்றங்களை எதிர்பார்க்கிறார்கள்.

பராசக்தி படம் வெளிவந்தபோது திரு சிவாஜி புது முகம்தான். கற்பகம் படம் வெளிவந்தபோது திருமதி கே. ஆர். விஜயா புது முகம்தான். இருந்தாலும் நல்ல படங்கள் என்கிற தரமுணர்ந்து ரசிகர்கள் வரவேற்றுப் பாராட்டினார்கள்.

அதே போல், தயாரிப்பாளரைப் பற்றியும் நடிகர்களைப் பற்றியும் அதிகம் கவலைப்படாமல் ஜனக் ஜனக் பாயல் பாஜே படத்துக்கும் தேவதாஸ் படத்துக்கும் மக்கள் பேராதரவு கொடுத்தார்கள்.

எனவே, நம் ரசிகர்கள் எப்போதுமே, நல்ல படைப்புக்களுக்கு ஆதரவு தந்து வந்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டில் பெற்றுள்ள வெற்றி வரவேற்பை நோக்கும்போது, நான் என்னுடைய பொறுப்பை மேலும் அதிகமாக உணர்கிறேன். வரும் ஆண்டில் இன்னும் ஈடுபாட்டுடன் வேலை செய்ய வேண்டும். இந்த வருடம் கிடைத்துள்ள நல்ல பெயரை வரும் ஆண்டுகளிலும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே என் ஆசை.

திரு சுந்தா
(கதை உலகம்)

கடந்த ஆண்டில் தமிழ்ச் சஞ்சிகைகளின் மட்டுக்கு மிஞ்சிய பெருக்கம்; அதற்கேற்ப கதைகளின் அமோகமான பெருக்கம். இந்தப் பெருக்கிலே புதுப் புது எழுத்தாளர்களின் தோற்றம்; வண்ண வண்ணக் கதைகளின் படைப்பு. இரண்டும் வரவேற்றுப் பாராட்டத் தக்கவை.



ஆனால் இவற்றினிடையே, புத்தலை, bold theme என்ற பெயரால் ஆபாசக் கதைகளும் கோரக் கதைகளும் துர்நாற்றத்தையும் பயங்கரத்தையும் பரப்பின. இவற்றின் மூலம், கதை இலக்கியம் என்பது, சதைச்சந்தையாய், கொலைக் களமாய், கசாப்புக் கடையாய், தேக்கச் சாக்கடையாக மாறியது. இவ்விதக் கதைகள் பிரதிபலிப்பது போல் நமது சமூகம் இருக்குமேயானால், இதில் உயிர் வாழ்வதை விட, உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்.

சினிமா உலகிலிருந்து மறைந்த ஏகபோக நட்சத்திர முறை (Star System) கதையுலகுக்குக் கடந்த ஆண்டில் மாற்றலாயிற்று. கெட்ட கதைகளை எழுதுவோரில் சிலர், வெள்ளித் திரை நட்சத்திரங்களுக்கு ஒப்பான பகட்டையும், விளம்பரத்தையும் கிராக்கியையும் கர்வத்தையும் அடைந்தார்கள். பணத்தாலும் புகழ்ச்சியாலும் இவர்களை இழுத்துப் போட்டுக் கொள்வதில் சஞ்சிகைக்காரர்களிடையே போட்டா போட்டி.


இந்தக் கவர்ச்சி எழுத்தாளர்களின் நோக்கம் என்னவெனில், 'ஏ' படங்களில் கூட அனுமதிக்கப்படாதவற்றைத் தமது கதைகளில் புகுத்துவதே. அப்படிச் செய்தால் தானே, சினிமாவை விட அதிகமான மோகத்தையும் போதையையும் ஊட்ட முடியும்?

இனி, புத்தாண்டில் தமிழ்க் கதையுலகின் கதி என்ன?

இதே கதிதான்! இதற்கும் கீழான கதிதான்! எத்தகைய எதிர்ப்பும் இந்தப் போக்கைக் கண்டிக்கும்போல் தோன்றவில்லை!

பேராசிரியர் திரு சி. எஸ். மகாதேவன்
(வேளாண்மைத் துறை பற்றி)

1979ம் ஆண்டு வட மாநிலங்களில் மிகக் கடுமையான வறட்சியைத் தோற்றுவித்திருக்கிறது. சென்ற ஆண்டில் 126 மிலியன் டன்களாக இருந்த மொத்த உணவு தானிய உற்பத்தி இதன் விளைவாய் கணிசமாகக் குறையும். வரும் ஆண்டில் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்துக்கு இது அடிகோலும்.



பசுமைப் புரட்சி என்பது நடைமுறையில் கோதுமை விளையும் வட மாநிலங்களிலேயே கவனம் பெற்றுள்ளது. உயர் விளைச்சல் ரகங்கள், நவீன விவசாயக் கருவிகள் போன்றவற்றை ஏழை விவசாயிகள் பயன்படுத்த முடியவில்லை. பணக்கார விவசாயிகள் மட்டுமே இதனால் பலன் பெற முடிந்தது.

உலகிலேயே மிகச் சிறப்பான விவசாய நுணுக்கங்களை இந்தியாவில் கண்டறிந்துள்ளோம். இதைப் பயன்படுத்தி உலகின் மற்ற நாடுகள் பயன் அடைகின்றன. ஆனால்—இந்தியாவில் ஆராய்ச்சிக் கூடங்களுக்குள்ளே முடங்கிவிட்ட இந்த நுணுக்க அறிவு, கிராமப்புற ஏழை விவசாயிகளைப் போய் எட்டவில்லை.

விவசாயம் விவரம் தெரிந்தவனுக்கு ஒரு ரசவாதம் மாதிரி. ஆனால், இங்கே பரம்பரை விவசாயிகளின் பராமரிப்பில் இருந்த விளைநிலங்கள், இப்போது அரசியல் ஈடுபாடு கொண்ட ஆர்வக் குறைவானவர்களின் கைக்கு வந்துவிட்டன. நியாயமான உற்பத்திப் பெருக்கம் பாழாகிறது. அரசியலிலிருந்து விவசாயத்தை விடுவிக்கும்வரை விமோசனமில்லை. மதுரை, நெல்லை, திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களில் நிலவரியை மட்டும் செலுத்திப் பலனைக் காணாத நில உடைமையாளர்களைக் காண முடிகிறது.

சர்க்கரை உற்பத்தியைப் பொறுத்தவரை—மூலப் பொருளான கரும்பு இப்போது வெல்ல உற்பத்தியாளர்களுக்குப் போய்விடுகிறது. சர்க்கரைத் தொழிற்சாலைகள் தரக் கூடிய விலையை விடக் கூடுதல் விலையை வெல்ல உற்பத்தியாளர்கள் தர முடிகிறது. காரணம் அவர்கள் வரி செலுத்துவதில்லை.

மத்திய மாநில அரசுகள் எக்ஸைஸ் வரி போன்றவற்றில் ரிபேட் தந்தாலன்றி, சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது.

வரும் ஆண்டில், தமிழக விவசாய உற்பத்தி சிறப்பாக இருக்கும், உபரி விளையும் — என்றாலும் வட மாநில வறட்சிப் பாதிப்புக்கு இது ஈடு செய்ய முடியாது. காரணம் நம்முடைய அரிசி, கோதுமை பழகிய பகுதிகளுக்குப் பயன்படாது.

உணவுப் பொருள்களின் இறக்குமதியின் அவசியத்தால் வரும் ஆண்டில் அந்நியச்செலாவணி விரயமாகும். சர்க்கரை ரேஷன் போல் உணவு தானிய ரேஷன் வரலாம். துவரை உளுந்து போன்ற பயறு வகைகளுக்கும் ரேஷன் வந்தால் வியப்பில்லை.

நம்முடைய உணவுப் பழக்கங்கள் மாறினாலன்றி இது போன்ற விளைவுகளைச் சமாளிப்பதற்கில்லை.

திருமதி வசுமதி ராமசாமி

(சமூகப் பணி)

மகாத்மா காந்தியடிகள் நவகாளி யாத்திரையின் போது செய்ததை அன்னை தெரஸா தம்முடைய ஆயுட் காலம் முழுவதும் செய்து வந்திருக்கிறார். அவருடைய இந்தச் சமூகப் பணிக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டிருப்பது மிகவும் பெருமைக் குரிய செயலாகும்.



இந்திய மாதர் சங்கத்தின் 1979ம் ஆண்டின் முக்கிய கவனம் முதியோர் கல்வி, குழந்தைகள் காப்பகம் அமைத்தல், வரதட்சிணை ஒழிப்பு ஆகியவற்றில் இருந்தது. ஓரளவு குறிக்கோளை எட்டவும்முடிந்தது.

சென்னையில் மட்டும் பல்வேறு சமூக நல அமைப்புகளில் 12,000 பெண்களுக்கு மேல் சமூகப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், இந்தப் பணிகளில் பெண்கள் ஆர்வமுடன் ஈடுபட்டுப் பணியாற்றுகிற மாதிரி ஆண்கள் ஏன் செய்வதில்லை என்பது சிந்திக்க வேண்டிய விஷயம்.

பிச்சை எடுக்கக் குழந்தைகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பது, மாமியார் கொடுமையிலிருந்து பெண்களைக் காப்பாற்றுவது போன்ற வேலைகளிலும் நாங்கள் பணியாற்றுகிறோம். ஆனால் எல்லாமே அமைதி வழியிலான காந்திய முறையில்தான்.

சேரிகளில் வாழும் குழந்தைகளின் நலன்கள் கவனிக்கப்படவே இல்லாதது பெரும் குறை. நோயாளிகளை ஏதோ குற்றவாளிகள் போல் பார்த்து அலட்சியப்படுத்தும் மருத்துவமனைகளின் போக்கும் மாற வேண்டும்.

திரு அழ வள்ளியப்பா

(குழந்தைகள் ஆண்டு)

1956ஆம் ஆண்டு முதல் வேண்டுகோள் விடுத்து வருகிறோம். இந்தச் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டிலாவது நம் தமிழக அரசு குழந்தைகளுக்கான புத்தக 'டிரஸ்ட்' ஒன்றை நிறுவும் என எதிர்பார்த்தோம். மேலும் நமது அரசாங்கம் குழந்தைகளுக்கான தனி நூலகங்கள், அல்லது பெரியவர்களுக்கான நூலகங்களில் தனிப் பகுதிகளை அமைக்கும், ஆரம்பப் பள்ளிகளிலும் நூலகங்களை ஏற்படுத்தும் — என்றெல்லாம் எதிர் பார்த்தோம். ஆண்டு முடியப் போகிறது. இத்துறைகளில் உருப்படியாக எதுவும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. தேர்தல் வேறு குறுக்கிட்டு ஆட்சியாளரின் கவனத்தைத் திருப்பியுள்ளது. குழந்தைகளுக்கும் ஓட்டுப்போடும் உரிமை வந்தாலொழிய, குழந்தைகளுக்கான நல்ல திட்டங்கள் நிறைவேறுது போல் தோன்றுகிறது.



குழந்தைகளுக்கான புத்தகங்கள் இந்த ஆண்டிலே ஏராளமாக வெளிவர வேண்டும் என்றும் ஆசைப்பட்டேன். அச்சகத்தாள் விலை மும்மடங்குக்கு மேல் ஏறி அந்த ஆசைக்கும் அணை போட முயன்றது. ஆயினும், நம் தமிழ்ப் பதிப்பாளர்கள் குழந்தைகள் நாளான நவம்பர் 14ல் எழுபத்தேழு குழந்தைப் புத்தகங்களை வெளியிட்டது மிகப் பெரிய சாதனை! இதை நான் சொல்லவில்லை. சமீபத்தில் டில்லியில் நடந்த சர்வதேசக் குழந்தைப் புத்தகக் காட்சியையொட்டி நடந்த கருத்தரங்கில் பாராட்டுத் தெரிவிக்கப் பெற்றது!

திரு டி. எஸ். பார்த்தசாரதி

(Fine Arts)

வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கு இது மிக உற்சாகமான ஆண்டாக உள்ளது. மணி கிருஷ்ணசாமி, வி. ராமச்சந்திரன், போன்ற இளம் பாடகர்கள் மியூசிக் அகாடமியில் முதன் முறையாக மாலை 5 மணி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது குறிப்பிடத்தக்கது. அதேபோல் கிருஷ்ணவேணி லக்ஷ்மண், எட்டு மணி பரதநாட்டியக் கச்சேரியில் இடம் பெறுவதையும் குறிப்பிட வேண்டும். நாகமணி ஸ்ரீநாத், ஆர். என். ஸ்ரீலதா போன்ற மலரும் இசைக் கலைஞர்களுக்கு அகாடமி ஆதரவு தந்துள்ளது.

முதன் முறையாக இந்த ஆண்டில்தான் நாட்டிய ஆசிரியர் ஒருவருக்குத் தலைமை வகிக்கும் பெருமையும் வழங்கப் பெறுகிறது. நாட்டிய கலாகேசரி வழுவூர் ராமையா பிள்ளை அவர்கள் இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டியில் தலைமை ஏற்பதை நாட்டிய உலகில் அனைவரும் வரவேற்கிறார்கள்.



திரு கே.எஸ். நாராயணசாமி அவர்களுக்கு மியூசிக் அகாடமியின் இந்த ஆண்டு விருது வழங்கப்படுவதும், மிகப் பொருத்தமான விஷயம்.

அன்னமாச்சாரியார் கிருதிகள் திருப்பதி தேவஸ்தானத்தாரின் முயற்சியால் பிரபலமடைந்து வருவதும் இந்த ஆண்டில் முக்கியமான நிகழ்ச்சி. சங்கீத வித்வத் சபை, இந்தியன் பைன் ஆர்ட்ஸ் இரண்டிலும் இது பற்றி கருத்தரங்குகளும் நடைபெற்று வருகின்றன.

அகில இந்திய ரேடியோ, தொலைக் காட்சி இரண்டிலும் இந்த ஆண்டில் ஸ்ரீமதி எம். எஸ் அவர்களும் மேற்கத்திய இசையில் புகழ் பெற்ற திரு ஹாண்டல் மானுவல் அவர்களும் சிறப்பு நிகழ்ச்சி தயாரிப்பாளர்களாக (எமரிடஸ்) நியமனம் பெற்றிருப்பது இந்த ஆண்டின் சிறப்பான நிகழ்ச்சி.

ஒடிஸி நடனம் கற்றுத்தர ஒரிஸாவிலிருந்து திரு ரமணி ரஞ்சன் என்பவர் கலாக்ஷேத்ராவுக்கு வந்துள்ளார். கூச்சுப்புடி நிகழ்ச்சிகளும் பரவத் தொடங்கி விட்டன.

நாடகத் துறையில் பரீட்சார்த்த நாடகங்கள் சில நடந்துள்ள போதிலும் குறிப்பிடத் தக்கபடி ஒன்றும் இல்லை.

திரு எம். சி. சுப்பிரமணியம்

ஆசிரியர், இந்தியன் ரெவ்யூ
(அரசியலைப் பற்றி)

1979ஐ நினைக்கும்போது, பரவலாகச் செலாவணியில் உள்ள ஒரு வார்த்தை—பயங்கரம் — அதுதான் மனத்தில் தோன்றுகிறது.

அரசியல் தலைவர்களின் பதவிப் பேராசையால் கட்சி எல்லைக் கோடுகள் தகர்ந்தன. கட்டுப்பாடு உடைந்தது. நாணயம் அழிந்தது. ஆட்சி ஸ்தம்பித்தது. வெட்டுக் கிளித் தத்துவத்திற்கு மதிப்பு உயர்ந்தது.

தொழில் தலைவர்கள் இந்தியப் பொருளாதாரத்தின் மேலுள்ள தங்கள் பிடிப்பை வளர்த்துக்கொள்ள, அநாகரிக அரசியல் மூலம் ஆதிக்கம் செலுத்தும் கட்சிகளுக்கு ஆக்கம் தந்தார்கள்.



தொழிற் சங்கத் தலைவர்கள் தங்களுடைய சாம்ராஜ்யத்தை வளர்த்துக் கொள்ள வேலை நிறுத்தங்கள் மூலம் மக்கள் மீது போர் தொடுத்தனர். மருத்துவமனை, மின் உற்பத்தி, போக்கு வரத்து, பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் —எங்கும் வேலை நிறுத்தம்தான்.

வியாபாரிகள் பதுக்கல், கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்கள் மூலம் விலைவாசிகளை உயர்த்தினார்கள். விதி வரம்பு இல்லாமல் சிறுபான்மை சமூகத் தலைவர்கள் வெடித்துச் செயல்படத் துடித்தார்கள்.

அயல் நாடுகள் இந்தக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முன்வந்தார்கள். அயல் நாட்டுத் தூதர்கள் நம் நாட்டுத்தலைவர்களை அழைத்துப் பேச வைப்பதும், அரசியல் கட்சிகளுக்குப் பலவித உதவிகளை அளிப்பதாகப் பரவும் வதந்திகளும் இதற்குச் சான்று.

1979ல் தன்னலப் பற்று நாட்டுப் பற்றை தகர்த்தது. அரசியல் அநாகரிகம் உச்ச கட்டத்தை அடைந்தது.

1980 எப்படி இருக்கும்?

விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? முளைக்கலாம் — காலம் போகிற போக்கைப் பார்த்தால். அரசியல் கட்சிகளையும் அரசியல் தலைவர்களையும் மக்கள் இனம் கண்டுகொண்டு தங்கள் வாக்கைக் 'குறைவாகக் கறை படிந்த' கட்சிக்கு அளித்தால் விமோசனம் உண்டு.

வார்த்தைகளின் மாயா ஜாலத்தால் ஏமாந்து, சமீப கால நிகழ்ச்சிகளையும் மறந்து மக்கள் நடந்து கொண்டால்....

1979ம் ஆண்டு 1980ஐப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும்.

திரு அகிலன்

(இலக்கியத் துறை)

உரைநடை எழுத்தாளர்களுக்கு ஆண்டு தோறும் திரு. வி. க.வின் பெயரால் பத்தாயிரம் ரூபாய் பரிசு வழங்க தமிழக அரசு முன்வந்து, அதன் முதல் பரிசைக் காலஞ்சென்ற ஜெகசிற்பியன் சார்பில் அவர் குடும்பத்தாருக்கு அளித்தது பாராட்டத் தக்கது.

எழுத்துத் துறை, நாட்டின் அரசியல், பொருளாதார, கலாசாரத் துறைப் போக்குகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது: தொடர்பு கொள்ளக் கடமைப்பட்டது. அந்தப் போக்கிலிருந்து பார்த்தால், ஏராளமான பத்திரிகைகள் — மாதாந்தர மலிவு பதிப்புக்கள் தோன்றியிருப்பது ஒரு வகையில் வரவேற்கக் கூடியது என்றாலும், விபசாரம், கொலை, கொள்ளை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட மேல் நாட்டு குப்பைகளைத் தழுவியும், காப்பியடித்தும் எழுதும் போக்கு ஒருசிலரிடம் தீவிரமடைந்துள்ளது. ஆனால் அதே சமயம் பெண்களை எழுத்தில் இழிவுபடுத்தும் போக்குக்கு எதிராக ஒரு பெண்கள் இயக்கமே இங்கு தோன்றியிருப்பது வரவேற்கத் தக்கது.



இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு வரை நூலகத் துறையில் நிலவிய லஞ்ச ஊழல்களும் விருப்பு வெறுப்புக்களும் இந்த ஆட்சி வந்த பிறகு இல்லாததால், நூலக இயக்கம், ஆசிரியர்கள், பதிப்பாளர்கள், வாசகர்கள் ஆகியோருக்கு ஊக்கம் தரக் கூடியதாக இயங்கி வருகிறது. பழங்கால ஊழல்கள் இதில் மீண்டும் தலையிடாதபடி விழிப்போடிருக்க வேண்டும்.

கட்சிச் செல்வாக்கு, ஜாதிச் செல்வாக்கு, இவற்றுக்கு அப்பால் நின்று இன்றைய தமிழ் உரைநடை இலக்கியத்தைப் பற்றி நடுநிலையோடு ஆய்வதற்குக் கல்லூரித் தமிழாசிரியர்கள் சிலர் முன்வந்திருப்பதும் வரவேற்க வேண்டிய போக்காகும்.

பேட்டி : சுப்ரபாலன்



சிரிக்கச் சிரிக்க!

லேடி டைப்பிஸ்ட்: "புது மானேஜருக்குக் காது செவிடுங்கிறது எனக்கு நல்லதாப்போச்சு!"

அவள்: "ஏண்டி...?"

லேடிடைப்பிஸ்ட்: "நான் கம்மா உட்கார்ந்திருந்தா பழைய மானேஜர் என்னைக் கூப்பிட்டு போஸ் விடுவார்..... டைப் அடிக் கிற சத்தமே கேட்கலியே தூங்கறியாறு!"

*

அவள்: "மெட்ராஸில் கார் டிரைவிங் பழக வசதி யான ரோடு எது தெரியு மாடா...?"

இவள்: "எது....?"

அவள்: " 'L' டாம்ஸ் ரோடு!"

*

"ஹலோ! தியேட்டர் மானேஜரா? உங்க தியேட் டரில் ஓடற A படம் இன் றோடு கடைசியாமே... தயவு செய்து நாளைவரை அந்தப் படத்தை ஓட்ட முடியுமா..?"

"யார் நீங்க... எங்கே யிருந்து பேசறீங்க..?"

"கண் ஆஸ்பத்திரியிலி ருந்து பேசறேன்... ஆப ரேஷனுக்குப் பிறகு நாளை தான் என் கண் கட்டைப் பிரிக்கிறாங்க!"

-உ. ராஜாஜி

*



தொடரும்.

அவன்: "உங்களுக்கு Tea பிடிக்குமா?"

அவள்: "அதற்கு அடுத்த எழுத்துத் தான் ரொம்ப பிடிக்கும்."

-எம். சிவசுப்ரமணியன்

✕


வானொலியில் ஒரு விளம்பரம் "ஒரு இருமல் மாத்திரையின் விலை எட்டு காசுகள். தலைவலிகள் தனி - மன்னிக்கவும் தலைவலிகள் தனி.

-ப. த. தங்கவேலு

✕

ஒரு அமெச்சூர் நாடகத்தினர் ஒரு நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த போது மூன்று நடிகர்களுக்கு வசனம் மறந்து போய் விட்டது. மூவரும், விழித்துக் கொண்டும் தலையைச் சொறிந்து கொண்டும் நின்றார்கள். அதைக் கண்ட 'பிராம்ப்டர்' வசனங்களை உரத்த குரலில் சொல்லிக்கொண்டிருந்தார். கோபத்தின் உச்சிக்குச் சென்ற நடிகர் ஒருவர் "வசனம் எங்கள் காதுகளில் விழுகிறது. அதை யார் யார் பேச வேண்டு மென்றுதான் தெரியவில்லை!" என்றார்.

-கே. ஆர். சியாமளா


ஜனநாயகம்
ஜனாதிபதி பதவி
பிரதமர் பதவி
அடேடயப்பா! எவ்வளவு அழுக்கு சேர்ந்து போச்சு! பின்னாடி வர்றவங்களுக்கு தூசு தட்டி சுத்தம் பண்ணி வைக்கிறேன்!
வாக்காளர்
Zuma.

1980 ஜனவரி 6
சித்தார்த்தி மார்கழி 22
மலர்: 38 இதழ்: 23



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

சோஷலிஸ சங்கீதம்!

சம்பிரதாயத்தைக் காப்பாற்றுகிறோம் என்று கூறிக்கொண்டு கர்நாடக சங்கீதம் சாமானியனுக்குக் கிடைக்காமல் சதி பண்ணுகிற வித்வான்களே! அமைச்சர் வீரப்பன் தமிழிசைச் சங்கத்தின் தொடக்க விழாவில் பேசியதைக் கேட்டு இனியேனும் சரியாக நடந்துகொள்ளுங்கள்! இது சோஷலிஸ யுகம். உங்கள் இசை பாமரர்களை எட்டவேண்டும். அதற்கு ஆவன நீங்கள் செய்தாகவேண்டும். மறவாதீர்கள்.

சம்பிரதாயமாவது ஒன்றாவது? உடைத்தெறியுங்கள். சினிமாவைப் பாருங்கள். அதிலும் தான் ஒரு காலத்தில் காம்போதியையும் நாதநாமக்கிரியாவையும், குந்தலவராளியையும் சிந்துபைரவியையும் சிவரஞ்சனியையும் கட்டிக்கொண்டு அழுதார்கள். யாராவது சிந்தினார்களா? ஏதோ தமிழகத்திலுள்ள சில கோடானுகோடி பேர் எம். கே. டியும் சின்னப்பாவும் பாடியவற்றைத் திரும்பப் பாடி மகிழ்ந்திருப்பார்கள் அவ்வளவுதான். ஆனால் இன்று? நிலைமை எப்படி மாறிவிட்டது பார்த்தீர்களா? அராபிய இசையையும் ஆப்பிரிக்க இசையையும் மெக்ஸிகன் இசையையும் மங்கோலிய இசையையும் சினிமாவிலே குழைத்துக் கொடுக்கும் போது மக்கள் எவ்வளவு ஆர்வமாக விரும்பிக் கேட்கிறார்கள்! அதுபோல நீங்களும் ஏன் புதுமைகளைப் புகுத்தக் கூடாது? உதாரணமாக எத்தனை நாளைக்கு 'வாதாபி கணபதிம்பஜேகம்' என்று கச்சேரியின் ஆரம்பத்தில் பாடிக்கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஒரு தடவையாவது 'பஜேகம் கணபதி வாதாபி' என்று மாற்றிப் பாடித் தொலைத்தால் என்ன?

உங்களுக்குத் தெரியுமா? கடந்த நாற்பது ஆண்டுகளில் 20,000 சினிமா பாடல்கள் உருவாகி விட்டன. உங்கள் மும்மூர்த்திகள் எத்தனை கிருதிகளை இயற்றிவிட்டார்கள்? தலா ஆயிரம் இருக்குமா? இரண்டாயிரம்? பூ! இவ்வளவு தானே! அப்புறம் பழைய, புதிய பல வாக்கேயக்காரர்களின் பாடல்களையெல்லாம் சேர்த்தாலும் 10,000 தேறுமா? 15000? சே! இதுஒரு எண்ணிக்கையா? என்னது? இவற்றையே இன்னும் பாடியாக வில்லையே என்கிறீர்களா? அதை யார் கேட்டார்கள் சுவாமி? இவையெல்லாம் பழைய பாடல்கள். அவ்வப்போது புதிதாக ஏதாவது பாடுகிறீர்களா என்பது தான் கேள்வி! ஒரு ஜாலியோ ஜிம்கானா உண்டா, அல்லது காதல் வந்திருச்சு உண்டா? என்னது என்னது? இறையுணர்வா? இதென்ன அசட்டுத்தனம் சுவாமி? நாங்கள் தான் சொல்கிறோமே சம்பிரதாயத்தை உடைத்து எறியுங்கள் என்று. உலகம் எவ்வளவு வேகமாக மாறிக்கொண்டு வருகிறது! சந்திரனை மனிதன் அடைந்தாச்சு, தமிழகத்தில் அண்ணாயிஸம் வேரூன்றியாச்சு, நினைவிருக்கட்டும்!

கர்நாடக சங்கீதத்தின் சம்பிரதாயத்தையும் தூய்மையையும் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு நீங்கள் புதுமையாக எதையுமே சிருஷ்டிப்பதில்லை. புதுமை என்றாலே நீங்கள் வெறுக்கிறீர்கள். ஒரு ராகத்துக்கும் ஒரு தாளத்துக்கும் கட்டுப்பட்டு, அதற்குள் அடங்கியே நீங்கள் எவ்வளவுதான் புதிய புதிய கற்பனைகளையும் கணக்கு வழக்குகளையும் உதிர்த்தாலும் பிரயோஜன மில்லைங்காணும்! ராகமும் பழசு, தாளமும் பழசு தான். இதுவரை அதிகம் அறிமுகமாகாத ராகங்களை நீங்கள் பிரபலப்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டாலும் பழசு பழசுதானே! இதிலே புதுமையோ உங்களுடைய சிருஷ்டியோ என்ன இருக்கிறது? அராபிய இசையுடன் ஆப்பிரிக்கத் தாளத்தைக் கலந்து அந்த மெட்டில் ஸ்பானிஷ் பாடலைத் தமிழாக்கம் செய்து பாடினால் புதிய சிருஷ்டி என்று ஏற்கலாம். தமிழும், தமிழிசையும், தமிழ்நாடும் முன்னேறும். சோஷலிஸம் தழைக்கும். சினிமா சங்கீத மோகத்திலிருந்து சாமானியனை மீட்கலாம். எங்கே, உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள் பார்க்கலாம்!



[சமீபத்தில் கார்ட்டூனிஸ்ட் தாணு அமெரிக்காவில் வசிக்கும் தம் மகன் திருமணத்துக்குச் சென்று வந்தார். அவர் தம் அனுபவங்களை இங்கே தருகிறார்.]

''அமெரிக்காவில் அதை நிச்சயம் பார்த்துவிட்டு வா; இதைப் பார்க்காமல் திரும்பாதே. இதை மிஸ் பண்ணிவிட்டு வந்தாயோ நீ அமெரிக்கா போய் பிரயோஜனமேயில்லை''

நான் அமெரிக்கா கிளம்பு முன் கேட்ட இதைப் போன்ற குட்டி லெக்சர்கள் ஏராளம். நான் அங்கு இருந்ததோ ஒரே ஒரு மாதம். போனகாரியமோ வாஷிங்டனில் நடைபெற்ற என் மகனின் திருமணத்துக்காக! அந்த வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டு எனக்குக் கிடைத்த சொற்ப நாட்களில் அமெரிக்காவைச் சுற்றினேன். சில விஷயங்களில் அமெரிக்கா மிட்டாய் கடையாக என் பார்வைக்கு மாற நானே பட்டிக்காட்டானாகஅதிசயித்துப் போனதுண்டு. சில நினைவு அலைகள்:

தெரியாத்தனமாக அதை எடுத்துக் கொண்டு போனாலும் போனேன், நியூயார்க் விமான நிலையத்தில் இறங்கியதும் அது கஸ்டம்ஸ் அதிகாரிகளை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. ஏதாவது வெடி குண்டாக இருக்குமோ என்று அவர்களுக்குச் சந்தேகம். கொண்டையைப் பிடித்து அப்படியும் இப்படியும் ஆட்டி உருட்டிவிட்டு பயந்து ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து, கடைசியில் தயக்கத்துடனேதான் அதை எடுத்துப் போக அனுமதித்தார்கள். வேறொன்றுமில்லை ஒரு தேங்காய்! என் மகனின் திருமணத்துக்காக ஒரே ஒரு தேங்காய் மட்டும் சென்னையிலிருந்து வாங்கிப் போய் முகூர்த்தத்தின்போது அதை உபயோகப்படுத்த வேண்டும் என்கிற ஆவலில் நான் செயல்பட்டது அங்கே எல்லா அதிகாரிகள் வயிற்றிலும் புளியைக் கரைத்தது!

முழு தேங்காயை வீட்டுக்குள் உடைப்பது அங்கு லேசுப்பட்ட காரியமில்லை. இங்கு போலிருந்தால் ஆட்டுக்கல்லோ அம்மியோ எதுவும் இல்லாவிட்டால் வாசற்படியோ போதும். அங்கே அதெல்லாம் கிடையாது. சுவர் மூலையில் உடைக்க முயற்சி செய்தால் வீட்டுக்காரன் சண்டைக்கு வருவான். சில வீடுகளில் இடுக்கியினால் தேங்காயை உடைப்பார்களாம். தேங்காய் உடைவதைவிட இடுக்கிகள் பெரும்பாலும் உடையுமாம். சொன்னார்கள்.

குதிரைக் கொம்புக்கு அமெரிக்காவில் மறு பெயர் வெற்றிலை. கிடைக்காது. அப்படியே





வாஷிங்டனில் திருமணம்!

— தாணு



இந்தப்படங்கள் தெருவில் நடமாடும் பிரகிருதிகளைப் பார்த்து எழுதியவையல்ல. தெருவில் நடந்து செல்லும் ஆட்கள் எண்ணிக்கை மிகக் குறைவு. எல்லோரும் கார்களில் பறக்கிறார்கள். அதனால் இந்த ஸ்கெட்சுகள் ரெஸ்டாரண்டுகள், Department Stores, தியேட்டர்கள், ஏர்போர்ட் போன்ற இடங்களில் வரையப்பட்டவை...

கிடைத்தாலும் ஒரு டாலருக்கு நான்கு வெற்றிலைதான். இரண்டு டாலருக்கு வாங்கி வைத்துக் கொண்டு மாற்றி மாற்றி அதையே 'ரீசைகிள்' முறையில் உபயோகப்படுத்திக் கல்யாணத்தை ஒப்பேற்றினோம்! சில அரசியல் கூட்டங்களில் போட்ட மாலையையே மேடைக்குப் பின்புறமாக வாங்கித்திரும்பவும் இன்னொரு பேச்சாளருக்குச் சில சமயங்களில் போடுவது போல!

இருந்த கொஞ்ச நாளில் அமெரிக்க டெலிவிஷன் நிகழ்ச்சிகளைக் கட்டிக்கொண்டு அழுதேன். அப்படியே கொஞ்சம் ஆராய்ச்சியும் செய்தேன்.

காமெடி ரொம்ப ஸ்லாப்ஸ்டிக். நிறைய நாடகங்கள். ஆனால் பெரும்பாலானவைகளில் unwed mothers போன்ற — இன்று அமெரிக்காவின் சமூக வாழ்வில் பயங்கரமாகப் புரையோடிப் போயிருக்கும் சில அவலங்களைச் சித்திரிக்கும் பாத்திரப் படைப்புக்களே அதிகம் காணப்படுகின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது அங்கே மக்கள் இரவில் மாத்திரை ஏதும் போட்டுக்கொள்ளாமல் தூங்க முடியுமா என்ற சந்தேகமே எனக்கு ஏற்பட்டது.

மாதக் கணக்கில் 'ஜெனரல் ஹாஸ்பிடல்' என்ற டி. வி. நிகழ்ச்சி அங்கே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஹாஸ்பிடல் என்றதும் ஏதோ அங்கே இருக்கும் நோயாளிகளைப் பற்றியும் சிக்கலான நோய்களைப் பற்றியுமான அறிவு பூர்வமான படமோ என்று எண்ண வேண்டாம். டாக்டர்கள், நர்ஸ்கள், மற்ற ஊழியர்கள், அவர்களுக்குள் ஏற்படும் கள்ளக் காதல்கள், அதனால் விளையும் பிரச்னைகள், சண்டைகள், சில சமயம் கொலைகள்— இப்படித்தான் கதை ஓடுகிறது. அங்குள்ள வாழ்க்கையின் 'டென்ஷன்' நன்றாகவே பிரதிபலிக்கப்படுகிறது. இது போன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஏதேனும் மோசமான





கமெட்டையில் சிறப்பிதழுக்கு சிறப்பு சேர்ப்பவர்: ஹேமமாலினி

வண்ணப்படம்: ஏ.சங்கர்ராவ்

காமெடி வந்தாலும் நம்மால் அவர்ளை ரசிக்க முடிகிறது.

இங்கு நம்மூர் டி.வி.யில் Here is Lucy போடுகிறார்களே, அதில் நடிக்கும் லூஸில் பால் அங்கு பிரபலமான நடிகை.

ஆனால் இன்றைய தினத்தில் அங்கு மக்கள் கிரேஸியாக விரும்பிப் பார்ப்பது டோனு ஹூ என்பவர் நடத்தும் நிகழ்ச்சியைத் தான். வெரி இன்ட்ரஸ்டிங். மிக முக்கிய நடைமுறைப் பிரச்னைகளை எடுத்துக்கொண்டு சம்பந்தப்பட்டவர்களை ஸ்டுடியோவுக்கு வர வழைத்து அவர்களிடம் அவர் கேட்கும் கேள்விகள் இருக்கிறதே, அபாரம்! உதா ரணத்துக்கு விபசாரத்தைப் பற்றிய topic என்றால், ஒரு விபசாரி, விபசாரத்தை ஒழிக்க முயலும் அதிகாரிகள் ஆகியோரை நேருக்கு நேர் வைத்துக் கொண்டு அலசி எடுத்து விடுகிறார். அவர் நடத்திய சில நிகழ்ச்சிகளின் தலைப்புகள்: விபசாரம், அபார்ஷன், ஹோமோ செக்ஷுவாலிட்டி, தூக்குத் தண்டனை. இதைப் போன்று இன்னும் எவ்வளவோ!

Pizza என்ற உணவு வகை அங்கு மிகப் பிரசித்தம். நமது தோசை மாதிரி பெரிதாக இருக்கிறது. அதற்குள் காய்கறிகள், மாமி சம் எல்லாம் போட்டு ஏதோ பாகம் பண்ணு கிறார்கள். சைவ Pizza ம் கிடைக்கிறது. இந்த பீஸ்ஸா கிடைக்கும் இடத்துக்கு 'பீஸ்ஸா ஹட்' என்று பெயர். உடுப்பி ஹோட்டல்கள் போல இந்த பீஸ்ஸா ஹட்ஸ் ஒவ்வொரு ஊரிலும் இருக்கின்றன. எல்லா ஊர்களிலும் இவற்றின் கட்டட அமைப்பு, உள் அலங்கார அமைப்புகள் எல்லாம் ஒரே மாதிரி இருப்பது தனிச் சிறப்பு. அங் கெல்லாம் Chain ot Hotels என்றால் கிட்டத் தட்ட இரண்டாயிரத்து நானூறு இடங் களில் ஒரே மாதிரியான ஹோட்டல்கள் இருக்கின்றன என்று பொருள்.

பஃபலோ என்ற இடத்தில் ஒரு பழைய ஜாஸ் நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்தேன்! கை தட்டுவதிலும் விசில் அடித்துக் கலாட்டா பண்ணுவதிலும் நமக்கொன்றும் அவர்கள் சளைத்தவர்கள் இல்லையாக்கும்!

அமெரிக்கப் பகுதியிலிருந்து நயாக்ரா நீர்வீழ்ச்சி அற்புதமாயிருக்கிறது. அங்கே ஓர் இடத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் வேலி போட்டு அதற்குள் யாரும் போகக் கூடாது என்று தடுத்திருக்கிறார்கள். ஏன் தெரியுமா? யாரோ ஒருவன் 'அந்தக் குறிப்பிட்ட இடத்திலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் அப்படியே பூமிஉள்ளே சென்று கீழே போய்விட்டார்கள்' என்று ஒரு நாள் இரவு கனவு கண்டானும். மறுநாள் காலை அதிகாரிகளிடம் ஓடிப்போய்த் தன் கனவைச் சொன்னானும். அந்தக் கன வுக்கு மதிப்பளித்து ஏதாவது ஆகிவிடுமோ என்ற எண்ணத்தில் அவன் குறிப்பிட்ட அந்த இடத்தை மட்டும் வேலி போட்டு மக்களிடமிருந்து பிரித்திருக்கிறார்கள் என்று பக்கத்தில் இருந்தவர்கள் சொல்லக் கேட் டேன். இது வெறும் கதையாகக் கூட இருக் கலாம். ஆனால் சுவையாக இருக்கிறதே!

எங்கே போனாலும் காமிரா தொங்காத டூரிஸ்ட் தோளைப் பார்ப்பது அரிதாக இருக் கிறது. சரித்திரப் புகழ் பெற்ற இடங்களை யாரும் நின்று நிதானித்துப் பார்ப்பதில்லை. அவனவன் வருகிறான். டக் டக் என்று அந்த இடங்களை க்ளிக் செய்து கொண்டு இன் னொரு இடத்துக்குப் போய் விடுகிறான். யாரைப்போட்டோ எடுத்தாலும் "தாங்க்யூ" என்று சொல்லும் வழக்கம் அங்கு உண்டு. வாஷிங்டனில் ஒரு சிலையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கிடுகிடுவென்று வந்த ஒரு டூரிஸ்ட் அதைப் படம் எடுத்துவிட்டு சிலையைப் பார்த்துத் தன்னையுமறியாமல் Thank you என்று சொன்னானே பார்க் கலாம்!

செல்லும் இடத்துக்கெல்லாம் எனது ஸ்கெட்ச் நோட்டைத் தவறாமல் எடுத்துக் கொண்டு போய் அங்கங்கு பார்க்கும் விசித்தி யாசமான மனித முகங்களை ஸ்கெட்ச் பண்ணினேன். பல இடங்களில் யாரை வரைகிறேனோ அவர்கள்வந்து என்நோட்டை வாங்கிப் பார்த்துப் பெரிதாகச் சிரித்து நன்றி சொன்னதும் உண்டு. கோபமாகப் பார்ப்ப தும் உண்டு. ஒரு கடையில் ஒரு நீண்ட மூக்கு மனிதர் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். ராஜாஜி டிகால் இவர்களது மூக்குகளை ஒன்றாகச் சேர்த்து வைத்தாற் போல் இருந் தது. அவர் எரிச்சலுடன் என்னைப் பார்த்த தையும் பொருட்படுத்தாமல் வரைந்து முடித் தேன். பசி எடுத்தவனுக்கு நல்ல தீனி கிடைத்த மாதிரி அந்த மூக்கைப் பார்த்த தும் என் பேனாவுக்கு மகிழ்ச்சி. என் நண்பர் கேட்டார்: "ஏன் எப்போதும் அவர் சாய்ந்தே உட்கார்ந்திருக்கிறார்?" நான் சொன்னேன்: "இல்லாவிட்டால் அவர் முன்னால் போய் வருபவர்களுக்கு மூக்குக் குத்து காயங்கள் ஏற்படும்."

பிட்ஸ்பர்கில் புதிதாகக் கட்டப்பட் டிருக்கும் ஏழுமலையான் கோயிலுக்குப் போயிருந்தேன். 'இவ்வளவு நகைகளையும் [எல்லாம் தங்கம்] எப்படி களவு போகாமல் இவர்களால் பாதுகாக்க முடிகிறது?' என்ற எனது சந்தேகத்தைக் கேட்டே விட்டேன். "இங்கு தொடக் கூடாத இடத்தில் எவ ளுவது கைவைத்தால் அடுத்த விநாடி இங் குள்ள எச்சரிக்கை மணி ஒலித்து அருகில் உள்ள காவல் நிலையத்தில் பதிவாகும். திருட முயற்சி செய்பவன் தப்பியோடவும் முடியாதவாறு துல்லியமாக இக்கோயிலுக்குப்

பாதுகாப்பு ஏற்பாடுடன் செய்யப்பட்டிருக்கின்றன'' என்று பதில் கிடைத்தது.

இந்நாட்டில் வங்கிகளின் பணி அதிசயிக்க வைக்கிறது. அவை தங்களுக்குள் செய்து கொள்ளும் செக் பரிமாற்றமெல்லாம் ஹெலிகாப்டர் மூலம்தான். ஒரு இடத்தில் வங்கியின் முன்னால் ஒரு உயரமான கம்பம் பார்த்தேன். அதன் உச்சியில் அந்த வங்கியிலிருந்து மற்ற வங்கிகளுக்குப் போக வேண்டிய கடிதங்களை மூட்டை கட்டி ஏற்றி விடுகிறார்கள். ஹெலிகாப்டர் உச்சிக்கு வந்து அந்த மூட்டையை எடுத்துக் கொண்டு அந்த வங்கிக்குச் சேர வேண்டிய கடித மூட்டையை அங்கே விட்டு விட்டுப் போகிறது. பிறகு அதை இவர்கள் கீழே நிதானமாக இறக்கிக் கொள்கிறார்கள்.

எப்போது வேண்டுமானாலும் பணம் எடுக்கலாம். நள்ளிரவிலும் கூட. வங்கியின் முன்புறச் சுவரில் இருக்கும் தபால் பெட்டியின் வாய் போன்ற இடத்தில் ஃபாரத்தைப் பூர்த்தி செய்து எவ்வளவு பணம் எந்தெந்த நோட்டுக்களில் வேண்டும் என்ற விவரத்தை எழுதி மடித்து வைத்தால் சில விநாடிகளில் தேவைப்படும் பணம் விரும்பிய denomination களில் அழகாக மடிக்கப்பட்டுச் கைக்கு வந்து சேருகிறது. இந்த வசதிக்கு நூறு டாலர் லிமிட் வைத்திருக்கிறார்கள்.

ஒழுங்காக விளம்பரம் செய்தால் எந்த குப்பையையும் அங்கே விற்றுக் காசாக்கி விடலாம். எந்த மனிதனுக்கும் பிரச்னைகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அவனது ஈகோ (Ego) தான். அதை ஒழிக்க ஒரே உபாயம்: அவனைக் கண் முன் உட்கார வைத்து முகத்திலடித்தாற் போல் திட்டித் தீர்ப்பது. அந்தத் திட்டுக்களைக் கேட்கும் போது அவனது ஈகோ செத்துப் போகிறதாம். இப்படி ஒரு கண்டுபிடிப்பு EST (Erhard System Training) என்ற பெயரில், அங்கே சக்கைப் போடு போடுகிறது. மில்லியன் டாலர் பிஸினஸ்! அதைப் போலவே மரணத்தை எப்படி எதிர்கொள்வது என்று வகுப்பு நடத்துகிறார்கள், காசு வாங்கிக் கொண்டு.

திரும்பி வரும்போது நானும் என் மனைவியும் நியூயார்க் விமான நிலையத்துக்கு ரொம்பவும் முன்னாடியே வந்து அமர்ந்து கொண்டோம். லௌஞ்சில் எங்களைத் தவிர யாருமில்லை. மூன்று இளைஞர்கள் வந்தார்கள். முகத்தில் வேலை வெட்டி இல்லாத்தனம் தெரிந்தது. அதில் ஒருவன், எதிரே அழகிய கண்ணாடி பிரேம் செய்து மாட்டப்பட்டிருந்த ஏர் இந்தியா விளம்பரத்தைக் குறி வைத்துக் கையிலிருந்த செயினால் அடித்தான். ஏர் இந்தியா மகாராஜா சுக்கு நூறானார். 'நம்மை இப்படி அவமதிக்கிறார்களே' என்று எனக்கு உள்ளூற வேதனை. ஆனால் 'எங்களுக்கு எந்த நாடும் வித்தியாசமில்லை' என்று சொல்லாமல் சொல்கிறமாதிரி அந்த மூன்று பேரும் அந்த லௌஞ்சில் இருந்த ஒவ்வொரு நாட்டு விமானக் கம்பெனியின் விளம்பரக் கண்ணாடிகளையும் உடைத்துக்கொண்டே போனார்கள். நான் வெறும் தாணு! ஒன்றும் செய்ய முடியவில்லை. பார்த்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரம் கழித்து அங்கே வந்த போலீஸாரும் தாணு போலவே பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர ஒன்றும் செய்யவில்லை. இது எந்த வகையில் முன்னேற்றமோ?

மொத்தத்தில் எனக்கு ஒரே ஒரு வருத்தம் தான். அமெரிக்காவுக்கு சூட் போட்டுக் கொண்டுதான் போக வேண்டும். இல்லாவிட்டால் மதிக்க மாட்டார்கள் என்று அடம் பிடித்து என் நண்பர்கள் சிலர் எனக்கு இங்கிருந்து கிளம்பு முன் மூவாயிரம் ரூபாய் செலவு வைத்தார்கள். நியூயார்க்கில் போய் இறங்கியதுமே வேஷ்டி கட்டிக் கொண்டு ஒரு ஆந்திரக்காரர், பஞ்ச கச்சத்துடன் ஒரு வட இந்தியர் அங்கே காணப்பட்டார்கள். நான் அணிந்திருந்த சூட் என்னைப் பார்த்து கை கொட்டிச் சிரித்தது! மூவாயிரம் ரூபாய் செலவு வைத்த என் நண்பர்களைப் பார்த்தால் நஷ்ட ஈடு கேட்க வேண்டும் என்று திரும்பியதிலிருந்து அவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஆட்களைக் காணோம்!

சமீபத்தில் தனது 74-வது வயதில் காலமான பிரபல இந்திய ''ஆக்கி'' ஆட்டக்காரரான மேஜர் தயான்சந்த் பற்றிய சில விவரங்கள் இதோ:-

25 வருட கால ஆக்கி ஆட்டத்தில் அவர் போட்ட கோல்கள் எண்ணிக்கை 400. 1936-ம் ஆண்டு பெர்லின் நகரில் நடந்த ஒலிம்பிக் ஆக்கிப் போட்டியில் 8 கோல்கள் போட்டு ஜெர்மனியை இந்தியா தோற்கடித்தது. இதில் 6 கோல்கள் தயான்சந்த் போட்டது ஆகும். அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த ஒலிம்பிக் ஆக்கி போட்டியில் மொத்தம் 24 கோல்களில் 8 கோல்களை தயான்சந்த் போட்டு அமெரிக்காவை தோற்கடித்தார். மேற்கண்ட மூன்றும் உலக சாதனைகளாகும்.

தயான்சந்த் திறமையைப் பாராட்டிய ஹிட்லர், தனது ஜெர்மனி நாட்டிற்கு குடிபெயர்ந்து வந்தால் ராணுவத்தில் ''பீல்டு மார்ஷல்'' பட்டம் அளிப்பதாகக் கூறினார். தாய் நாட்டிற்காக விளையாடுவதே எனது உயிர் மூச்சு என்று ஹிட்லர் வேண்டுகோளை இந்திய ஆக்கிச் சிங்கம் தயான்சந்த் மறுத்து விட்டார். —காழி நிரஞ்சனி மணி

அமெரிக்காவில் என் மகன் மணந்து கொண்டது நம்ம ஊர்ப் பெண்தான். மாயவரம். 1970லிருந்து படிப்புக்காக அமெரிக்காவில் இருந்து வருகிறாள். கல்யாணத்துக்குப் புரோகிதர் கிடையாது. மந்திரங்கள் எல்லாம் டேப்பில் எடுத்துக் கொண்டு போயிருந்தோம். வாஷிங்டனில் வசித்து வரும் பெண் வீட்டுக்காரர்கள் மற்றபடி ஒரு குறையில்லாமல் கல்யாணத்தை நடத்தி விட்டார்கள். 'ஷம்மந்தி ஷண்டை' எதுவும் இல்லாமல் இந்த வாஷிங்டனில் திருமணம் இனிது நடந்தேறியது.

அமெரிக்காவில் தேர்தல் சூடு பிடிக்கும் நேரம் இது. பத்திரிகைகளிலும் ரேடியோ டெலிவிஷனிலும் அரசியல் பிரமுகர்கள் ஒருவரையொருவர் தாக்குவது எனக்கு ஒரு வித மனக் குளிர்ச்சியைத் தந்தது. ஏனென்றால் அவர்கள் ஒருவரையொருவர் தாக்கும் பாஷை நம்ம ஊர் அபேக்ஷகர் பாஷையைப் போலவே மட்டமாக இருந்தது!

Score with quality leather

Colour-Chem offers a complete range of sophisticated leather chemicals, finishes and auxiliaries, which enhance the quality of finished leathers to meet the most exacting standards of leather goods for export.


Natural and synthetic tanning agents for fine grain, filling and bleaching.

Natural and synthetic fat liquors for softening leather to specific requirements.

Binders and topcoats for toughness and scuff resistance.

Organic pigment dispersions and Speciality dyes for brilliant transparent colours.

Colour-Chem Ltd.
194, Churchgate Reclamation
Bombay 400 020



Colour-Chem packs top quality into leather

®Vernasein is the registered trade mark of Colour-Chem Limited

maa CC 27 C

புஷ்பா தங்கதுரை



[நகரங்கள், பிரதேசங்களின் பெயர்களை ஒரு Authenticity க்காக கதையோடு கலந்திருக்கிறேன். மற்றபடி கதையின் சம்பவங்களும், பெயர்களும் கற்பனையே எங்காவது ஒத்திருந்தால் அது ஏதேச்சையாக நிகழ்ந்ததே. கற்பனைக் கதை என்றாலும் அது நடக்கக் கூடிய சாத்தியங்கள் நிச்சயம் உண்டு.

—புஷ்பா தங்கதுரை]

....மாபார் (இந்த இடத்தில் தமிழ் நாட்டைக் குறிக்கிறது) முழுதிலும் தேர்ந்த தையற்காரரோ, உடை தயாரிப்பாளரோ கிடையாது. ஏனெனில் ஜனங்கள் வருஷம் பூராவும் வெற்றுடம்பாக இருக்கிறார்கள். காரணம், இங்கே பருவம் குளிரும் உஷ்ணமும் இல்லாமல் மிதமாக இருக்கிறது. அதனால் ஜனங்கள் தங்கள் மர்மஸ்தானம் நீங்கலாக (அங்கே சின்னத் துணிகளை அணிகிறார்கள்) வெற்றுடம்பாகவே இருக்கிறார்கள்.

—மார்கோ போலோ

[கி.பி. 1290ல் தமிழ் நாட்டில் பிரயாணம் செய்தவர்.]

கடவுக்குள் ஊசி

1

அந்தப் பத்திரிகைத் துணுக் தேர்தல் கூப்பாடுகளுக்கு நடுவில் இடுங்கி இருந்தது.

இராமநாதபுரம், செப். 8

கனிநாகலாபுரம் கிராமத்தில் மண் அரிப்பு ஏற்பட்டதில் மூன்று எலும்புக் கூடுகளும், ஒரு உலோகக் குழாயும், உலோக பாட்ஜும் கண்டு பிடிக்கப்பட்டன. பாட்ஜில் எச்.எம்.எஸ்.ஜே. என்று எழுத்துக்கள் காணப்பட்டன.

சாதாரண ஸ்பாட் விளம்பரங்களைப் போல் ஓடிவிட வேண்டிய துணுக்.

ஆனால் மல்லிக்கின் மனத்தில் கிரிச்சா வட்டம் அடித்தது.

என்ன காரணம்?

புரியவில்லை.

எலும்புக் கூடுகள் காரணமா?

இல்லை.

உலோகக் குழாய்?

இல்லை.

பாட்ஜ்?

டிட்டோ.

எழுத்துக்கள்....அந்த எச்.எம்.எஸ்.ஜே. அதுதான் நெஞ்சில் மணல் போல் கரகர.

இந்த எழுத்துக்களை எங்கே சந்தித்தோம்? எப்போது சந்தித்தோம்?

மூளையைக் கழற்றி ஆராய்ந்தான். விடை இல்லை.

எங்கேயோ எப்பவோ பார்த்ததாகத் தான் நினைப்பு! அது மேலேயும் வராமல் உள்ளேயும் போகாமல் சங்கடப்படுத்த.

அந்த எழுத்துக்களை ஓங்கி உச்சரித்தான். எச்.எம்.எஸ்.ஜே.

ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்..... இல்லை.

ஹெட் மாஸ்டர்..... இல்லை.

ஹிஸ் மெஜஸ்டி..... இல்....லை!

ஹிஸ் மெஜஸ்டி'ஸ் ஷிப்!

வானத்தில் விழித்துக் கொண்டு, ஒரு வெள்ளிக் கிரணம் ஓடி வர,

மனம் எல்லாம் வெளிச்சம்.


ஜேம்ஸ் டில்லான் வொய்ட் ஞாபகத்துக்கு வந்தார். சென்னையில் கன்னிமாராவில் தங்கினார். அவரை அழைத்துப் பேசினார். (டூரிஸ்ட் கைட் வழியப் பிடித்திருக்கார்.)— மிஸ்டர், மல்லிக்! துலாஜி ஆங்க்ரியா தெரியுமா?


—கப்பல் கொள்ளைக்காரன்!

—யு ஆர் ரைட்! கெல்லோ ஸீரீஸ் தெரியுமா?

—தெரியும்! நாவல்கள்! ஹச்சின்ஸன், லண்டன் பதிப்பு.

இங்கிலிஷ்காரர் சகல உடம்போடும் கருட்டி எழுந்தார். புன்னகை தாங்க முடியவில்லை. முகத்திற்கு வெளியே ஒரு இஞ்ச் பீச்சியது. கால்களை அகல வைத்து அருகே வந்து பூதமான கைகளால் அழுத்திக் குலுக்கினார்.







—இந்தியர்கள் பெரிய அறிவாளிகள்! என்று குறிப்பிட்டு அவனோடு ஏக ஆசனத்தில் சமமாக உட்கார்ந்தார்.

[கெல்ஸோ ஸீரீஸ் அவர் எழுதிய நாவல்கள். (லண்டனில் ஹச்சின்ஸன் நிறுவனம் பதிப்பித்தவை).]

அவரது சமீபத்திய முயற்சிகளைக் கூட ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அந்த ஏழை இந்தியன் தெரிந்து வைத்திருக்கிறானே!

—குடிப்பீர்களா (வொய்ட்)

—மாட்டேன்.

—ஸாஃப்ட்?

—ஆகட்டும்.

அதிகபட்சமாக, ஒரு கோலாதான் உச்ச வரம்பு.

சாயலும் பெயரும் பழைய கோகா கோலா நினைவுப்படுத்த.

இந்தியர்களின் கெட்டிக்காரத்தனை ஏமாற்றுத் திரவத்தை இருவரும் குடித்தார்கள்.

இங்கிலீஷ்காரரோ வேண்டாததைக் குடித்து விட்டவர் போல் கீழே வைத்தார். பிழைத்துக் கொள்ளத் தெரியும்.—வொண்டர்ஃபுல் ட்ரிங்க் என்றார், கூசாமல்.

தொடர்ந்தார். — சரித்திர ஆராய்ச்சி நடத்தறேன். ஈஸ்ட் இந்தியா கம்பெனி பற்றி. நாவல் எழுதத் திட்டம். வார்னர் பிரதர்ஸ் கூட ஸ்வாரஸ்யம் காட்டறாங்க. சார்லஸ் ப்ரான்சனையும், டலியா லைஹரையும் போட்டு, ராகெல் வெல்ஷை உங்க ராணியாக்கி...

வெல்ஷ் புடவை கட்டிக் கொண்டு ஆங்கிலத்தனமாக உட்கார்ந்து அவனுக்குக் காட்சி கொடுத்தாள்.

—உங்க சரித்திரம் தெரியணும்; உங்க கப்பல் பத்தி தெரியணும்; உங்க பழக்க வழக்கங்க!.... ஷூட்டிங் நடந்தா மலபார் கோஸ்ட்லே நடக்கணும். அங்கே அந்த நீயாஸ்..... தென்னிந்திய ஜாதிகளும் இனங்களும், எட்கார் த்ரஸ்டன் எழுதியது, படிச்சேன். நீயாஸ் இடுப்புக்கு மேலே துணி போடறதில்லே. பெண்களைச் சொல்றேன். நைன்டீன் டென்ஸ்லே எடுத்த போட்டோ பார்த்தேன். ஒவ்வொன்றும் எவ்வளவு பெரி....

ஹ ஹ ஹா என்று கருதியோடு சிரித்தார். கையில் கோலா கிளுகிளுத்தது.

அவன் மனத் திரையில் அவரது படம் வழியாக இந்தியா மகோன்னத உயரங்களுக்கு வளர்ந்து கொண்டிருந்தது.

—நீயாக்கள் இப்போ அப்படியில்லே. (மல்லிகா)

—நம்ப கதை அப்போதானே (பழைய காலத்திலே) நடந்தது.

—ஈஸ்ட் இந்தியா கம்பெனிங்க நீங்க! கிழக்குக் கடற்கரையில் தானே கதை நடக்கணும் இங்கே எப்படி நீயாக்கள் வருவாங்க? அது மேற்கு....

—மிஸ்டர் மல்லிக்! (சிரிப்புக்குள் கொஞ்சம் சொருகினார்) இங்கே கூட அப்போ நிறைய பேருக்கு ப்ளவும் கிடையாது. உங்களைப் பத்தி எல்லாம் படிச்சிருக்கேன். மார்கோ போலோவே எழுதியிருக்கார்....

—தெரியும்! Divisament Dou Monde


—வெரி குட்! புத்தகப் பெயரைக் கூடத் தெரிஞ்சு வச்சிருக்கீங்க! நான் எதுக்கு நியா வேணும்கிறேன்னு அந்த.... (சிரிப்பில் டைவ் அடித்தார்)..... மேற்கத்திப் பெண்ணுங்க பொறுமைப்படுவாங்க! படத்துக்குக் கவர்ச்சி!

ஒரு ஆயிரம் ரூபாய்க்கு அவருடன் மாமல்லபுரம், தரங்கம்பாடி, வந்தவாசி, சேர்வராய மலை எல்லாம் ஒரு சுற்றுச் சுற்றி....

(இரண்டே நாளில் முடித்து விட்டார்)

.....பிறகு மதராஸ் ஆர்கைவ்ஸில் ஒரு மாசம் டேரா.

அவரது ஆர்கைவ்ஸ் ஆராய்ச்சிகள் சரசரவென்று மாண்டேஜ்களாக அவன் நினைவுக்கு வந்தன.



"ஆசிரியர் சரியாய்ச் சொல்லிக் கொடுக்காததனால்தான் பெயில் ஆயிட்டேன்."

"சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்பதுதானே?"

"கேட்டேன். பரீட்சை ஹாலில் பேசக் கூடாது என்று சொல்லிவிட்டார்."

மு. செல்வபாண்டியன்

கிழக்கத்திய கம்பெனி ரிக்கார்ட்ஸ்களை வொய்ட் கேட்டது.

கவர்னர்களின் டயரிகளைப் பார்த்தது.

கப்பல்களைப் பற்றித் துருவிப் படித்தது.

டச்சு-பிரெஞ்சு காப்டன்களின் குறிப்புக்களைக் கேட்டது.

சென்னை கௌன்ஸில்-மேயர் நடவடிக்கைகளைப் பூரா வாசித்தது.....

அவரது அசுரத்தன நடவடிக்கை படிப்பு, குறிப்பு, எல்லாம் அவனை அப்போது அயர வைத்தன.

சென்னை முடிந்த பிறகு, பாண்டிச்சேரி. பிப்ளியோதெக்கில் இரண்டு வாரம்.

அதுவும் முடிந்து போகும்போதுதான்...

மீனம்பாக்கத்தில் அவர் விடைபெற,

போயிங் போன கையோடு அவன் உள்ளே வர,

லௌஞ்சில் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் கரும்பச்சை டயரி ஒன்று கிடக்க...

லண்டன் போன பிறகு அந்த டயரியைப் பற்றி அவசரமாக அவர் கேட்டிருந்தார்.

தபாலில் உடனே அனுப்பி வைத்தான்!

இப்போது....

அந்த டயரி ஞாபகம் வந்தது.

அதில் வொய்ட் என்ன எழுதியிருந்தார்? பிரதானமாக தினசரிக் கணக்குகள், மிகச் சிறிய குறிப்பு வார்த்தைகள், உதிரிகளான பெயர்கள்!

அந்தப் பெயர்களில் ஒன்றில் அழுத்தமான அடிக்கோடு போட்டுப் பேனாவை உழுதிருந்தார். (ஜுலை. 18ந் தேதியில்)

அந்தப் பெயர் சொமர் என்று நினைவுக்கு வந்தது. அடேடே!

ஹிஸ் மாஜெஸ்டி'ஸ் ஷிப் ஜூலி காலண்ட்!

எச்.எம்.எஸ். ஜூலி காலண்ட்!

எச்.எம்.எஸ்.ஜே....

—கொஞ்சமாவது மூளை யிருக்காடா?...

கேட்டவன் கோபி.

கையில்லாத பனியன் பூண்டு, பருமனான முடிப்புக்களுடன் வேட்டி கட்டியிருந்தான்.

தலை இரு முன் பக்கமும் ஒரு சீக்கிர வழுக்கை. அதற்கான காரணங்கள் நாலும் ஒரு வருஷ இடைவெளி விட்ட வயதுகளுடன் உள்ளே துவம்சம் செய்து கொண்டிருந்தன.

....போன தடவை தங்கக் காசு தேடறேன்னு சேலம் போனே! போலீஸ் கிட்டே சண்டை. போட்டதுதான் மிச்சம். உனக்கு ஏண்டா இந்தச் சொத்து வேட்டை? இருக்கிறதை வச்சிக்கிட்டு....

மல்லிக் பேப்பர்களுக்கு ஏஜென்ஸி எடுத்து அந்தப் பேட்டை முழுவதும் விநியோகம் செய்து கொண்டிருந்தான்.

கண்ணை மூடிக்கொண்டு வரும் வருவாய்!

இருந்தும் ஒவ்வொரு முறை திடீரென்று இந்த கு. யோசனை தோணும்போதும் வெளியூர் போவான். அந்த 'விசேஷ அலுவலு'க்காகப் போகும்போது கோபியிடம் சொல்லி விட்டுப் போவான்.

இந்தத் தடவை கனிநாகலாபுரம் போகலாம் என்று நினைத்தபோது... டோஸ் கிடைக்கிறது.

—எனக்கு ஒரு பெரிய துப்பு கிடைச்சிருக்கு, கோபி!

—போன தடவையும் அப்படித்தான் சொன்னே! ஆயிரம் நஷ்டமாச்சு!

—இப்போ அதிகம் செலவழியாது. கிடைச்சா பெரிய அதிர்ஷ்டம்.

—என்ன கிடைக்கும் சொல்லு!

—மூர்ச்சை போட மாட்டியே!

—இந்த ஜன்மத்திலே இல்லே, சொல்லு!

—1090 தங்கப் பாளம்!
1200 வெள்ளிப் பாளம்,
1,70,000 ஸாவரின்கள். மொத்தம் என்னுச்சு?

—நீதான் சொல்லணும்.

—எல்லாம் சேர்த்தா 45 டன்!

அப்பவே பத்து லட்சம் பவுன் மதிப்பு. ஒரு கமார்ல சொல்றேன்! பவுன் விக்கிற விலை வச்சுப் பார்த்தா குறைந்த பட்சமானாலும் நூறு கோடி கிடைக்கும். ஒண்ணு போட்டு என்பது ஸைபர் போட்டுக்கோ.

கோபி வாய் திறந்தபடி. இரண்டு ஈக்கள் போனது போனபடி.

—என்ன வாயைப் பிளந்துட்டே?

—வேறே என்னடா செய்ய முடியும்? உம் புத்தியை நினைச்சுத்தான். ஆமா, ஏதாச்சியும் சொப்பனம் கண்டியா?

உயிரோட்டமுள்ள கதை அமைப்பு!

''இந்தா புள்ளே! இப்போ வா! இல்லேன்னு வேறு வீட்டுக்குப் போயிடுவேன்'' என்று நல்லா குடிச்சிட்டு ரோயிலுல் துவண்ட மனைவியை அணைக்க, அந்த மனைவி சம்மதிச்சு, விளக்கை ஊதி அணைக்கிறாளே! இந்த உயிரோட்டமுள்ள கட்டம் நெஞ்சை விட்டு அகலுமா?


தன்னை அழித்துக் கொண்டு ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தியைப் போல 'குப்பம்மா' தன் குடும்பத்துக்காக வாழ்க்கை முழுதும் கஷ்டப்படுகிறாள்!

இது வெறும் கண்ணீர் கதை மட்டுமல்ல — கருத்தாழம்மிக்க கதையும் கூட!

தேவிகலா A/c, தினசரி 4 காட்சிகள்

மகாராணி. உமா

தினசரி 3 காட்சிகள்



சுனிதா சினி ஆர்ட்ஸ்...

பசி கலர்

art ads

கதை, வசனம், டைரக்ஷன்

துரை

தயாரிப்பு

ஜி. லலிதா

சங்கர் கணேஷ்

Next week

filmotsav '80

'CHALAN' Reports from BANGALORE

—நிஜம். நூறு சதவீதம்.

—இதெல்லாம் எங்கேடா இருக்கு? பூமிக்கு அடியிலயா?

—இல்லே, கடலுக்கு அடியிலே!

—லாரியை எடுத்துட்டுப் போய்த் தூக்கிட்டு வர்றதுதானே?

வயிற்றுக்குக் கீழ் அவன் ஒரு சாண் அளக்கப் போக.....

மல்லிக் இடைமறித்தான்.

—இதப் பார்ரா! போட்டோஸ்டட்.

ஒரு பழைய பழுப்பேறிய காகிதத்தின் போட்டோ காப்பி அது. கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்கள் இரகசியமாக சென்னைக் கவர்னருக்கு எழுதிய கடிதம். 1840 அக்டோபர் 12ந் தேதி இட்டது. எச்.எம்.எஸ். ஜூலி காலண்ட் வருகிறதாகத் தெரிவித்து அதில் ஏற்றியிருக்கும் சரக்குகளின் ஜாபிதா கொடுத்திருந்தார்கள்.

கொட்டக் கொட்டப் பார்த்தான்.

நிச்சயமாக, மல்லிக் சொன்னபடியேதான் சரக்குகள்!

—கப்பல் புறப்பட்டு 130 வருஷம் ஆயிருத்துடா! இன்னுமா இந்தியா வந்து சேரல்லே?

—கிட்டத் தட்ட வந்துடுத்து.

—அப்புறம்?

—காணாமல் போயிடுத்து.

—யார் சொன்னா?

—கடிதங்கள் சொல்லுது. கவர்னர் எழுதியிருக்கார். கப்பல் வந்து சேரலேன்னு.

—எங்கே போச்சு?

—கடல் கொள்ளைக்காரங்க கொள்ளையடிச்சு மூழ்கடிச்சுட்டாங்கன்னு எல்லாரும் நம்பியிருக்கா. காப்டன் பால்மர்ஸன் கப்பலோடு தென் அமெரிக்கா ஓடிட்டான்னு சிலபேர் நம்பினாங்க. புயல்லே மாட்டி கப்பல் மடகாஸ்கர் பக்கம் மூழ்கிடுச்சுன்னு சிலபேர் சொன்னாங்க.

—இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?

—ஆவணக் காப்பகம் போனேனே!

—ஆவணா?

—ஆர்க்கைவ்ஸ்! கவர்ன்மெண்ட் பழைய ரிக்கார்டுகள் எல்லாம் சேர்த்து வைக்கிற இடம். முந்நூறு வருஷ ரிக்கார்டெல்லாம் இருக்கு.

—உனக்கு அங்கேயிருந்துதான் இன்ஸ்பிரேஷனா? ஏண்டா, பைத்தியம் ஏதாவது பிடிச்சுடுத்தா?

—கோபி! இதிலே மட்டும் என் இஷ்டப்படி விட்டுடு. இதுலே நா இறங்கித்தான் ஆகணும். கொஞ்சம் பிஸினஸ்ஸைக் கவனிச்சுக்கோ.

இளம் காலையில் ஒன்பது ஒன்பதரைக்குக் குதிரை வண்டி கனிநாகலாபுரத்தில் அவனை இறக்கி வைத்தது. கையில் ப்ரீஃப் கேசுடன் அம்போ என்று நிற்க, குதிரை வெகு ஜோராகத் திரும்பி யார்ரா என்று ஒரு பார்வை அவனைப் பார்த்தது.

—அதோ பாரு, ஸார் ஊரு!

வண்டிக்காரன் சாட்டையை நீட்டினான். நீட்டின இடமெல்லாம் மணல் வெளி. எலும்பு வெளுப்பு! மெஷினில் அரைத்தது போல் ஒருபோல மணல்; பர்லாங்குகளுக்கு அப்பால் கொஞ்சம் பயிர் பச்சை போல் தெரிய, உத்தேசமாக அதுதான் ஊர் என்று தோன்றியது.

மாக்கு மாக்கு என்று நடந்தான்.

மண்ணில் இட்ட அடி புதைய, எடுத்த அடி வரமாட்டேன் என்றது.

காற்றில் உப்பு வாடை.

குச்சு நாய் ஒன்று சந்தேகத்தோடு பார்த்தது.

நெருங்கினால் கூரைகள் துலங்க, ஒரு சின்ன ஊர் உற்பத்தியாகியது.

பழசாகித் துருப்பிடித்தது.

1800க்குள் வந்தது போன்ற நினைவு.

தெருவுக்குள் நுழைந்தான்

பாழ் எங்கே, வாழ்வது எங்கே தெரியவில்லை. பாகுபடுத்த முடியாத குடியிருப்புகள்! மருந்துக்கு ஆள் தென்படவில்லை.

முதல் வீட்டு வாசலில் கோலம் போட்டிருந்தது. நின்று உள்ளே பார்த்தான். கர்ப்பக்கிருக இருட்டு. கூப்பிடலாமா யோசனை. ஒரு நொடி பார்வை கீழே!

என்ன அழகான கோலம்!

சப்பரக் கோலம்!

சப்பரம் முழுதும் நெளி நெளியாய்ப் பின்னலிட்ட வரிகள்! துளி பிசகில்லை. துளி சாய்வில்லை. துளி கோணலில்லை.

நிமிர்ந்தான்.

அங்கு ஒரு கோலம்!

தூணைப்பிடித்துக்கொண்டு, நெளிவாகச் சாய்ந்து ஒரு புன்னகை பூசுக விட்டிருந்தது அந்தக் கோலம்.

துளி மரு இல்லை. துளி மாசு இல்லை. பார்வையில் கிராமீயம் இழைய, தாவணி குழைய, அவள் நெஞ்சம் இரண்டும் இரு கொஞ்சல்கள்!

—வாங்க!

(தொடரும்)

புது வருடத்தின் புது முகங்கள்

பிளஸ் 1 வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள் பிருந்தா. தன் பரதநாட்டிய அரங்கேற்றத்துக்குத் தலைமை தாங்கப் பானுமதியை அழைக்கச் சென்றார். பானுமதி கேட்ட முதல் கேள்வி: ''நடிக்கிறாயாம்மா?'' அவருடைய சொந்தப் படத்திலேயே ஒப்பந்தமானார். அடுத்து ஜெயபாரதி இயக்கும் ''தேனீர்'' படத்திலும் கதாநாயகி வேடம் ஏற்று நடிக்கும் இவர் ஒரு ஹிந்திப் படத்திலும் நடித்திருக்கிறார். எல்லாப் படங்களுமே வெளிச்சத்தை 80ல்தான் பார்க்கப் போகின்றன.

சிம்கோ மீட்டர்ஸில் இன்று வேலை செய்து வரும் அவர் பட உலகில் காலடி எடுத்து வைத்து இரண்டு மாமாங்கமாகி விட்டது. நுழைந்தது நடிகராக அல்ல. டைரக்டரும் மகா கவியுமான ச. து. க. யோகியாரிடம் அன்று உதவி இயக்குனராகச் சேர்ந்தார். பின்பு திரை உலகுக்குத் தாற்காலிக குட்பை. இப்பொழுது டைரக்டர் ருத்ரைய்யா இயக்கும் ''ராஜா என்னை மன்னித்துவிடு'' என்ற படத்தில் கமலஹாசனுக்குச் சகோதரனாக நடிக்கிறார், உண்மை வாழ்க்கையிலும் கமலின் சகோதரரான சந்திரஹாசன்.

பாலசந்தரிடம் உதவி இயக்குனராகப் பணிபுரியும் கண்ணதாசனின் மகன் கண்மணி சுப்பு படத்தை இயக்க, அவரது மற்றொரு மகன் கலைவாணன் நடிக்க, ''அன்புள்ள அத்தான்'' என்ற பெயரில் எஸ்.கே. மேத்தா படம் தயாரித்து வருகிறார். இதில் முக்கியமான ஒரு வேடத்தில் நடித்து வருகிறார் குமாரி உமா. பிளஸ் 1 வகுப்பு படித்து வரும் உமாவுக்கு நடிப்பைப் பற்றி அதிகம் சொல்லித் தர வேண்டாம். ஏனெனில் அவரது தாயே மனோகரின் நாடகக் குழுவில் தொடர்ந்து நடித்து வருபவர்.

ரதியுடன் முதல் படத்தில் நடித்தவர் லதாவின் தம்பி ராஜ்குமார். அது ஒரு தெலுங்குப் படம். லதாவை ஒப்பந்தம் செய்ய வரும் தயாரிப்பாளர்கள் எல்லாம் ராஜ்குமாரைப் பார்த்தவுடன் ''நடிக்கிறாயா?'' என்று கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் ராஜ்குமாரோ படிப்புக்குப் பிறகுதான் நடிப்பு என்று பிடிவாதமாக இருந்தார். படிப்பு முடிந்தவுடன் பலர் ஒப்பந்தம் செய்ய முன்வந்தனர். முந்திக் கொண்டவர் மதி ஒளி ஷண்முகம். படத்தின் பெயர் ''காஷ்மீர் காதலி''

—''சலன்''

✱ ராஜ்குமார்



✱ பிருந்தா



✱ சந்திரஹாசன்



✱ குமாரி உமா



இலக்கியங்களிலே துகில் படைப்புகள் — 2

பார்வதி,



ADWAVE/LM1142 TAM/D

உனக்கு ஏன் இந்த சோதனை?



இமயத்தின் சாரல்—பனிச் சிகரங்கள் சூழ்ந்த இமயவனின் கோட்டகம்; இயற்கையின் குளிர் மேகங்கள் படர்ந்த எழில் தபோவனம்.

அங்கே செந்தீ வளர்த்து, பெண்ணொருத்தி தவம் புரிகிறாள். அவளது தவத்தின் இலட்சியம், சிவனைக் கணவனாக அடைய வேண்டுமென்பதே. அப்பெண், இமயவனின் மகளான உமை. பனி, மழை, தீ எதுவும் அவளை உறுத்தவில்லை. மரவுரி தரித்து, தர்ப்பைப் புல்லால் ஆன இடை நாணை முப்புரியாகச் சுற்றி, வான் நோக்கிக் கரம் கூப்பித் தவம் இயற்றுகிறாள்.

அச்சமயம், மான்தோல் உடுத்து, ஜடை முடி தரித்த ஓர் பிரம்மச்சாரி அங்கே வருகிறார். உமை ˆன் உபசாரத்தை ஏற்ற பின், "பெண்ணே, ஏனிந்தக் கடுந்தவம்?" என்று கேட்கிறார். உமையின் தவம் சிவனை வரிக்கவே என்று அவள் தோழி உரைக்கிறாள். அதைக் கேட்டு நகைத்த அவர், "உன்னைப் பார்த்தால் அரசிளங் குமரியாகத் தெரிகிறாய். அன்னத்தின் மென்சிறகு போன்ற பட்டு அணிய வேண்டிய நீ, யானைத்தோல் தரித்து, சுடலைச் சாம்பல் பூசி, பாம்பணி பூண்டு, கபால மாலை அணிந்த சிவனைப்போய் ஏன் விரும்புகிறாய்? கிழக் காளையை வாகனமாக உடையவன் அவன். யானைமேல் பவனி வரவேண்டிய நீ அவனை வரித்தால் ஊர் சிரிக்குமே!" என்று கூற, வெகுண்டு எழுந்த பார்வதி, "என் இதய நாதன் பட்டு உடுத்தினாலும் சரி, யானைத்தோல் அணிந்தாலும் சரி, அவரே என் கணவர். நீர் இங்கிருந்து செல்க..." என்று பதிலிறுக்கிறாள்.


—காளிதாசனின் குமார சம்பவக் காவியம்
உமாதவப் பலப்பிரதானம், 5வது சர்க்கம்.

நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம் காலம் காலமாக வந்த இந்தியப் பண்பாட்டைப் பின்பற்றுகிறது. நேர்மையே இந்த ஸ்தாபனத்தின் அடிப்படை. "செய்யும் தொழிலே தெய்வம்; அதில் நேர்மையே எங்கள் செல்வம்" என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு மக்களுக்குச் சேவை புரிவதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம்.

லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

GULMARG

குல்மார்க்



குல்மார்க்

- ரெப்ரிஜிரேடர்ஸ்
- ஏர்கூலர்கள்
- பாட்டில் கூலர்கள்
- டீப்ஃப்ரீசர்ஸ்
- ஒலிபெருக்கி கருவிகள்
- சன்ஃப்லோ வாட்டர் ஹீட்டர்கள்
- ஆர்க்டிக் ஏர்கண்டிஷனர்ஸ்

எலெக்ட்ரானிக்ஸ் லிட்.

KANARA/EL/102

Electronics Ltd

makes good things even better!

18. PATULLOS ROAD, MADRAS - 600 002 Phone : 812352

ஒரு முடிவு வழிவெடுக்கிறது

'லீலா தேவி'

"பாலு! ஏன் ஒரு மாதிரியா இருக்கே?" —காற்றிலே பறந்த என் மார்புச் சேலையைத் திருத்திக் கொண்டு, என் பக்கத்தில் இணையாக நடந்து வரும் அவன் மீது கண்களைச் செலுத்தியவாறு கேட்டேன்.

"இதே கேள்வியைத்தான் நான் கேக்கணும்னு இருந்தேன்; நீங்க முந்திக்கிட்டீங்க' என்றான் பாலு.

மெல்ல புன்னகைத்தபடியே, "நீயே முந்திக்கிட்டு இருக்கணும்" என்று சொல்லி விட்டுச் சற்று நிறுத்தி, அழுத்தமாக, "எல்லாத்திலேயும் நானே முந்திக்க வேண்டியிருக்கு" என்றேன்.

பாலு ஒன்றும் பேசவில்லை.

கார்களும், பஸ்களும் போட்டி போட்டுக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாய்ப் போய்க் கொண்டிருந்ததால் நானும் பேசவில்லை.

மெரீனாவின் தென்றல் காற்று இருவரையும் தழுவிச் சென்றது. ஜோடி ஜோடியாய்ச் செல்லும் இளசுகளைக் காணும்போது என் நெஞ்சம் விம்மித் தணிந்தது. தம்பதிகள் 'அமுல் பேபி'களையும் 'மர்பி பேபி'களையும் தூக்கிச் செல்வதைக் காணும்போது — என் உள்ளத்தில் சில ஏக்கங்கள் வளர்ந்து வளர்ந்து அவை ஒரு தீர்மானத்தில் வந்து முடிந்தன.


அந்தத் தீர்மானத்தைச் செயலாக்க முடியுமா? செயலாக்க மட்டும் முடிந்து விட்டால்?.... செயலாக்குவதில் அப்படியொன்றும் சிரமம் இருப்பதாய் நான் நினைக்கவில்லை.

மூன்று தினங்களுக்கு முன்...

அப்பா ஏதோ கடமைக்குக் கேட்டு வைப்போம் என்று கேட்டார். நான் என்னையே இழந்து, என் சிதைக்கப்பட்ட கனவை — தரை மட்டமாக்கப்பட்ட இளமையின் கனவுகளை — அப்பட்டமாகக் கொட்டி அவரை விழி பிதுங்கச் செய்து விட்டேன்.

"ராஜீக்கண்ணு! ஒனக்கு வயசு ஏறிண்டே போறது... ஒரு நல்ல வரன்...." அவர் பேச்சை முடிப்பதற்குள், கண்டிவிடப்பட்ட 'ஸ்ட்ரைக்கர்' 'காயினை' நோக்கிப் பாய்வது போல் "நல்ல வரன்.... ஏம்பா... எனக்கு நல்ல வரன்...." என்று விரக்தியாகச் சிரித்தவள், "இப்போ எனக்கு வயசு என்ன ஆறது தெரியுமோ? முப்பத்தி அஞ்சு! இப்போ இருந்து நல்ல வரனப் பார்க்க ஆரம்பிச்சிங்கன்னு, எழுபது வயசுக்குள்ள ஜாம் ஜாம்னு எனக்குக் கல்யாணத்தை முடிச்சட்டு நிம்மதியாக் கண்ணை மூடுவீங்க!

"விஜிக்குக் கல்யாணத்தைப் பண்ணி வச்சீங்க... அதுனால வந்த கடன் எல்லாம் நான் பாடுபட்டு அடைச்சேன். கல்யாணத்துக்கு அப்புறமும், அவளுக்கு ஒவ்வொரு விசேஷத்துக்கும் டாம் டூம்னு செலவு செஞ்சு செஞ்சே



என்னைக் கடன்காரியாக்கினீங்க... அந்தக் கடனை யெல்லாம் அடைக்கிறதுக்குள்ளே நான் மூக்காக் கிழமாட்டேன். சொல்லிக் காட்டறதா நெனைக்காதீங்க... இது நீங்க குடுத்த உடம்புதான். நீங்க குடுத்த படிப்புத்தான். இல்லேங்கலே. ஆனா காலா காலத்திலே விஜிக்கு ஒரு கல்யாணத்தைச் செஞ்சு வச்சதாட்டம் எனக்கும் செஞ்சு வைக்கணும்னு தோணலேயே.....? நான் போயிட்டா என் மூலமாக் கெடைக்கிற வருமானம் போயிடும்னு பயந்தீங்க. இன்னைக்கு என்னோட சேர்ந்தவாளெல்லாம் நாலு கொழந்தைக்குத் தாயா இருக்கா; ஆனா நான் இன்னமும் தனி மரமா நின்னுண்டு இருக்கேன்'' என்றேன்.

''ராஜி என்னை வார்த்தையாலே குத்தறயேம்மா....?''

''வார்த்தையாலே குத்தறதா நெனைக்காதீங்க. செயலிலேயே காட்டப்போறேன். சின்ன வயசிலேயே எனக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைச்சிருந்தீங்கன்னா — புருஷனுக்கு அடங்கின மனைவியா மாறியிருப்பேன். ஆனா, ஆபீஸ்லே இப்போ நான் சூப்ரண்டண்டா இருக்கிறதாலே, அதிகாரம் பண்ணிப் பண்ணியே பழகிட்டேன். இனிமே என்னால ஒரு கணவனுக்கு நல்ல மனைவியா இருக்க முடியும்னு நம்பிக்கையே இல்லை.''

''ஏம்மா இப்படிச் சொன்னா எப்படி?''

''இப்படி மட்டும் சொல்லலே. இதுக்கு மேலேயும் சொல்றேன். கேட்டுக்குங்க. என்னோட இளமைக் கனவுகளெல்லாம் அழிஞ்சது என்னவோ வாஸ்தவம்தான். நான் அதுக்காகக் கம்முனு வாயை மூடிக்கிட்டு இருக்கப் போறதில்லே... உங்களைப் போல் உள்ள தகப்பனார்களுக்கெல்லாம் ஒரு நல்ல பாடம் புகட்டப் போறேன். என்னோட முடிவைப் பார்த்து ஊர் உலகம் சிரிக்கலாம். சிரிச்சுட்டுப் போகட்டும். என்னைப் பத்தி யார் எப்படி வேணும்னாலும் பேசட்டும். இனிமே நான் யாரைப் பத்தியும் கவலைப் படப் போறதில்லே....'' என்று என் உள்ள க்கொதிப்பை யெல்லாம் வார்த்தைகளாய் வெளியே கொட்டியதும் அப்பா அப்படியே பேச நா எழாமல் ஒரேயடியாய்த் துவண்டு போய்விட்டார்.

பாலு காப்பியைக் குடித்துவிட்டுத் தம்ளரை மேஜையின் மீது வைத்தான். ''அப்போ நான் வரட்டுமா?'' என்று இழுத்தவன்,

---

பிரேஸில் நாட்டில் உள்ள மக்கள் தங்கள் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்ட பிறகு மிச்சம் இருக்கும் ரொட்டியைப் பேப்பரில் மடித்து வெளியே வீட்டு வாசலில் வைத்து விடுகின்றனர். இரவில் வரும் பிச்சைக்காரர்கள் அதை எடுத்துக் கொள்ளுகின்றனர். பிரேஸில் நாட்டில் உள்ள பிச்சைக்காரர்கள் பகிரங்கமாக வந்து பிச்சை எடுப்பதில்லை. -பி. நாராயணன்



''எங்கே அப்பாவைக் காணோம்?'' என்று கேட்டான்.

''கோவில்லே ஏதோ சங்கீத உபந்யாசமாம்... அவர் வர நாழியாகும்.''

''சரி.... நான் வரேன்.''

''அவசரமா?''

''...வந்து இல்லே...!'' என்று தடுமாறியவனின் பார்வை அம்பென என்மீது பாய்ந்தது.

''கொஞ்ச நாளாவே எம் மனசிலே சில எண்ணங்கள். அது தோல்வியினால ஏற்பட்ட வைராக்கியத்தில உருவானதா இருந்தாலும் என்னோட முடிவுக்கு உன்னைப் போல் ஒருத்தனலதான் வடிவம் கொடுக்க முடியும்'' என்றேன் நான்.

அவன் திகைப்புடன், ''என்ன சொல்றீங்க?'' என்று கேட்டான்.

''என்னோட இளமைக் கற்பனைகள் எல்லாம் குடும்பச் சூழ்நிலையால தான் தூளாயிடுத்து. என்னை இத்தனை நாளும் தனி மரமா வாட வச்ச எங்கப்பாவைப் பழி வாங்கணும். கேவலம் என்னோட சம்பாத்தியத்துக்காக என் வாழ்க்கையையே பலி வாங்கின எங்கப்பாவைப் போல் இருக்கிற லட்சோப லட்சம் அப்பாக்கள் மூஞ்சியிலே எல்லாம் கரியைப் பூசணும். அதுக்கு நீ எனக்குக் கை குடுக்கணும்.''

இன்னும் அவனுக்குப் புரியவில்லை. ''நீங்க சுத்தி வளைச்சு ஏதேதோ பேசறீங்க!'' என்று தடுமாறினான்.

அவன் தடுமாற்றத்தைக் கண்டு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ''சுத்தி வளைக்காமயே கேக்கறேன்: என்னைக் கல்யாணம்...'' என்று வார்த்தையை முடிப்பதற்குள் அவன் நிலைதடுமாறிப் போய்விட்டான்.

''பயப்படாதே பாலு! கல்யாணம் பண்ணிக்கோன்னு கேக்கலே. நான் உன்னை விட வயசில மூத்தவதான். ஆனாலும் என்னோட உடம்பை நான் பார்க்காத நேரங்களிலே நீ ரசிக்கிறது எனக்குத் தெரியாதுன்னு நெனைக்கிறயா? பெண்ணுக்கு ஒரு சக்தி இருக்கு, பாலு. தன் பின்னாடி இருந்து எவனாவது முறைச்சாக்கூடத் தெரிஞ்சுக்கிற சக்தி...''

பாலு சற்றுத் தயங்கியபடியே, ''என்ன தான் சொல்றீங்க....? தயவுசெஞ்சு நேரடியாவே சொல்லிடுங்க'' என்றான்.

''சொல்லிடறேன்! திருட்டுத்தனமா ரசிக்கிறதை என் அனுமதியோட ரசி! நீ பயப்படாதே பாலு... எனக்குக் கணவன்னு ஒருத்தன் வேண்டாம். ஆனா, என்னோட பெண்மை வீணாகக் கூடாது. எனக்கொரு குழந்தை 'கொழு கொழு'ன்னு பிறக்கணும். என்னோட இந்த முடிவு உனக்கும் மத்தவங்களுக்கும் மடத்தனமா இருக்கலாம். ஆனா, ப்யூர்லி அது என் சம்பந்தப்பட்டது. அதனோட பாதிப்புக்கு உள்ளாகல நான்.... தப்போ சரியோ— எனக்குக் கல்யாணம் ஆகாம கர்ப்பம் உண்டாகணும். அதைப் பார்த்து ஊர் உலக மெல்லாம் 'கல்யாணமாகாம புள்ளை பெக்கப் போறா'ன்னு சொல்லம்புகளால என்னைத் தாக்கணும். அந்த அம்புகளெல்லாம் என் அப்பாவோட இதயத்தைத் துளைக்கணும். காலா காலத்திலே பொண்ணுக்குக் கல்யாணத்தைச் செஞ்சு


ஆடம்பரமான எமல்ஷன் பெயிண்ட்,
இத்தனை அடக்கமான விலையிலா?
அதனால்த்தான் ஸூப்பர் டெகோப்ளாஸ்ட்
பற்றி மூலைமுடுக்கெல்லாம் தெரியுது!
asian paints
SUPER
DECOPLAST
WATER THINNABLE
INTERIOR/EXTERIOR WALL PAINT
ஆடம்பரமோ ஆடம்பரம்,இலாபமோ இலாபம்
எமல்ஷன் பெயிண்ட்களில்
ஸூப்பர்
டெகோப்ளாஸ்ட்
ஏஷியன் பெயிண்ட்ஸ்

அடுத்த வாரம்:
கிரிக்கெட் சிறப்பிதழ்
"குண்டுமணி" தயாரிப்பு



வச்சிருந்தா இப்படி நடந்திருக்காதேன்னு நினைத்து நினைத்து அவர் புழுவாத் துடிக்கணும். அவர் நெலேயில உள்ள மத்த அப்பாமார்களுக்கெல்லாம் அது பாடமா அமையணும்! ''ஒனக்கு ஒரு சத்தியமும் செஞ்சு தரேன். பின்னாடி உன்னோட வாழ்க்கையிலே எந்தக் காரணத்தைக் கொண்டும் குறுக்கிட மாட்டேன்!''

''உங்களோட முடிவை எல்லாம் சொல்லி முடிச்சிட்டீங்களா? இல்லே, இன்னும் பாக்கி ஏதாவது இருக்கா?'' என்று கேட்டான்.

அவன் போட்ட எதிர்க் கேள்வி என்னை மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாற வைத்துவிட்டது.

அவனே பேசினான்: ''உங்க முடிவைத் தப்புன்னோ, ரைட்டுன்னோ நான் வாதம் பண்ண விரும்பலே. என்னு வாழ்க்கையில பாதிப்புக்கு உள்ளானவங்க நீங்க. உங்க கண்ணோட்டத்திலே நீங்க எடுத்த முடிவு சரியானதாகக் கூட இருக்கலாம். காலா காலத்திலே உங்களுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்காதது உங்க அப்பாவோட தவறுதான். அதுக்காக உங்க குடும்பப் பெயருக்கே ஒரு களங்கத்தை உண்டாக்கிட்டு— உங்க பெண்மைக்கு நிரந்தர களங்கத்தை ஏற்படுத்திக்கிட்டு — அது மூலமாத்தான் உங்க அப்பாவும் — உங்க அப்பாவைப் போல் உள்ள மத்தவங்களுக்கும் பாடம் புகட்டணும்னு நீங்க நினைச்சீங்கன்னா அது சிறுபிள்ளைத்தனம்னுதான் சொல்லுவேன்.''

அவன் பேசப் பேச என் எண்ணத்தில் அவன் நெடு நெடுவென்று வளர்ந்து கொண்டே போனான். நான் தலை குனிந்து அவன் கண்களை நேருக்குநேர் சந்திக்கும் சக்தியை இழந்திருந்தேன். உண்மையில் நான் 'நெகட்டிவ் அப்ரோச்'தான் பண்ணி விட்டேனா? என் முடிவு தவறுதானா...?

''இப்போ நீங்க எடுத்த முடிவில உங்க வயசுக்கும் அறிவுக்கும் தகுந்த முதிர்ச்சியைப் பார்க்க முடியல. மனுஷனுக்கு வயசு கூடக் கூட — அனுபவம் பெறப் பெற — அவனோட சிந்தனைகள் — எண்ணங்கள் எல்லாம் வளர்ச்சி அடைஞ்சிருக்கணும். அப்படி இல்லாம போனதுக்கு உங்க மனசிலே வளர்ந்திட்ட விரக்திதான் காரணம்னு நெனைக்கிறேன். இப்போ நான் ஒரு முடிவு எடுத்திருக்கேன்'' என்று அவன் பேசுவதை முடிக்காமல் நீர்க்க முடன் என் முகத்தை ஆராய்ந்தான். கலங்கிய என் கண்கள் ''என்ன உன் முடிவு?'' என்று கேட்பது போல் படபடவென்று அடித்துக்கொண்டன.

''அம்மி மிதிக்காம, அருந்ததி பார்க்காம என்னையே உனக்குத் தர்றேன்னு சொன்னீங்க இல்லே? 'என் பெண்மை வீணாகக் கூடாது; நான் கொழு கொழுன்னு ஒரு குழந்தையைப் பெத்து எடுக்கணும்'னு சொன்னீங்க இல்லையா? அப்படிப் பொறக்கக் கூடிய குழந்தைக்கு நானே ஊர் உலகம் அறிஞ்ச தகப்பனா இருக்கப்போறதா முடிவு செய்துவிட்டேன்!'' என்று சொன்னதும், என்னையும் அறியாமல், ''பானு....'' என்று கத்திவிட்டேன்.

பானுவே தொடர்ந்தான்: ''எனக்கும் முப்பத்திரண்டு வயசு ஆறது. நல்ல வசதியான எடத்திலே நெறைய சீர் செனத்தி செய்யக் கூடிய எடத்திலே எங்கப்பா பெண் தேடிக்கிட்டு இருக்கார். அவரோட எண்ணத்தை முறியடிக்க இவ்வளவு நாளா எனக்கு வழி தெரியாம இருந்தது. என்னை விட உங்களுக்கு ரெண்டு மூணு வயசு அதிகமா இருந்தாலும் மனமொப்பி உங்களைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாராயிட்டேன்....''

என்னோட ஆற்றாமைக்குத் தன்னையே பலி கொடுக்கிறானோ என்று பயந்து நான் எதிர்க் குரல் கொடுக்க ஆரம்பிக்கவும், என்னை அவன் பேச விடவில்லை.

''நம்ம வயசு வித்தியாசத்தைப் பத்தி ஆயிரம் பேர் ஆயிரம் விதமா சொன்னாலும் நான் கவலைப்படப் போறதில்லே... இவ்வளவு காலமும் சமுதாயக் கொடுமைக்கு ஆளாகி — இளமைக் கனவுகள் எல்லாம் நிராசையாகித் தனி மரமா நீங்க நின்னப்போ யார் கவலைப்பட்டாங்க...?'' என்று அவன் முடித்தபோது, என்னை விட வயசில் சிறியவனாய் இருந்தாலும், பிரச்னையை எப்படி அலசி ஆராய்ந்து முடிவு எடுத்திருக்கிறான் என்று உணர்ந்ததும், நான் எடுத்த முடிவுக்கு உண்மையில் வெட்கித் தலை குனிந்தேன்.

''ராஜம்! உன்னோட முடிவை நீ சொன்னே. என்னோட முடிவை நான் சொன்னேன்.... இப்போ உன் முடிவு என்ன?'' என்று கேட்டதும் சிலிர்த்துப் போனேன்.

''என்னோட உரிமையாகப் போற உன்னை இனிமே வாங்க போங்கன்னு கூப்பிட்டா அதில அபஸ்வரம் தட்டறதா நெனைச்சுத் தான் அப்படிக் கூப்பிட்டேன்.... நான் கூப்பிட்டதிலே தப்பில்லையே...?'' என்று அன்பு ததும்பக் கேட்ட பானுவின் குரலே மாறியிருந்தது.

'ராஜம்' என்றபோதும், ஒருமையில் அழைத்தபோதும் உண்மையில் ஒருவித கிறக்கமே உண்டானது. மயக்கத்துடனே, ''பானு உன்னோட...'' என்று சொல்ல வந்தவள், நாக்கைக் கடித்துக் கொண்டு, ''உங்க முடிவுக்குக் கட்டுப்படறேன்...'' என்று சொல்லிக்கொண்டே அந்தப் பரந்த இதயம் இருக்கும் பரந்த மார்பில் முகம் புதைத்தேன்.


பெண்கள் தங்கள்
மனோபாவங்களை
அநேக அழகான வழிகளில்
வெளிப்படுத்துகிறார்கள்.
விமல்
அவற்றில்
ஒன்று!
VIMAL
A RELIANCE PRODUCT
100% பாலியெஸ்டர் புடவைகள்



லக்ஷ்மி

20

மறுநாள் விடியற் காலைப் பொழுதில் பஞ்சரத்தினத்துக்குத் தாங்க முடியாத நெஞ்சு வலி வந்து விட்டது. பொறுக்க மாட்டாது அவள் வேதனையில் துடிப்பதைக் கண்டு பயந்து போன மருமகள் வேகமாகத் தோட்டத்துக் கதவைத் திறந்து சிங்காரத்தை அழைத்தாள்.

டாக்டர் தணிகைவேலனைக் கையுடன் அழைத்து வரப் புறப்பட்ட சிங்காரம் மூச்சிரைக்க மாடிக்கு ஓடினுன்.

மாடிப் படுக்கையறை தாளிடாது சாத்தப் பட்டிருந்தது. மெல்லத் திறந்து கொண்டு உள்ளே சென்றுன் அவன். லேசான விடி விளக்கொளியில் தலையணை மீது கவிழ்ந்து படுத்துக் கொண்டு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் காமேஷ். படுக்கையருகே நின்று கொண்டு பலமாக இருமுறை இருமினுன். காமேஷ் அசைந்து கொடுக்கவில்லை. அப்படி ஒரு தூக்கம்.

மெல்லத் தோளைத் தொட்டு ''ஐயா!'' என்று அடிக் குரலில் கூப்பிட்டான். அடித்துப் போடப்பட்டவன் போல் எஜமான் ஆழ்ந்து உறங்குவதைக் காணச் சிங்காரத்துக்கு மெத்த வியப்பு.

இரவில் எந்த நேரத்திலும் கதவை விரலால் தொட்டால் கூட விழித்து எழுந்து கொண்டு விடும் ராஜ்குமார், இப்போது கும்பகர்ணனைப் போல! பரபரப்புடன் தோளைப் பிடித்து உலுக்கினுன்.

திடுக்கிட்டு எழுந்த காமேஷுக்கு நிலைமை புரிய சில விநாடிகள் பிடித்தன. ''மடையா! காலங்கார்த்தால வந்து எதுக்கு எழுப்பினே?'' கன்னென்று எரிந்து விழுந்தான்.

1979 ம் ஆண்டில் ஒரு விசேஷம். பன்னிரண்டு மாதங்களில் ஏழு மாதங்களின் முதல் தேதிகள் விசேஷமான தினங்களாகும்.

1979 ஜனவரி	1	:	புத்தாண்டு நாள்
ஏப்ரல்	1	:	ஞாயிற்றுக் கிழமை
மே	1	:	மே தினம்
ஜூலை	1	:	ஞாயிற்றுக் கிழமை
அக்டோபர்	1	:	ஆயுத பூஜை
நவம்பர்	1	:	பக்ரீத்
டிசம்பர்	1	:	மொகரம்

—ரா. அ. ரா. கிருஷ்ணன்

''நான் டாக்டர் தணிகைவேலைக் கூட்டி வர ஓடணும். நீங்க சித்த கீழே இறங்கி வந்து அம்மாளைக் கவனிச்சுக்கிட்டாத் தேவலை. முன்பு வந்தது போல் அவர்களுக்கு நெஞ்சு வலி வந்திருச்சி. சின்னம்மா அழுது கிட்டே இருக்காங்க. பூரணிக்குக் கையும் ஓடலை. காலும் ஓடலை. தவிக்குது.''

''முன்னே எப்போ வந்திச்சு?'' பிரஷ்ஷில் பேஸ்ட் டை அப்பிக் கொண்டு பொதுவாகக் கேட்டான்.''

''நீங்க ஊருக்குக் கிளம்பறத்துக்கு முந்தி அம்மாவுக்கு மாரடைப்பு வந்துஆச்சு போச்சுனு ஆயிடுத்து. உங்களுக்குக் கவலை கொடுக்கக் கூடாதுன்னு சின்னம்மா அதைப் பத்தி எழுதலையாம். பூரணி கிட்ட சொன்னுங்க. அது எங்கிட்ட சொல்லிச்சு.''

''கொஞ்சம் நில்லு வந்துடறேன்.'' வாய் கொப்பளித்து முகம் கழுவிக் கொள்ளக் குளியலறைக்குள் புகுந்தான்.

சிங்காரத்துக்கு அதிக நேரம் நிற்கப் பயமாக இருந்தது. கீழே சின்ன யஜமானி உடனே போக வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கும் போது இவர் சித்தே நிற்கச் சொல்கிறாரே? வாசற்படி மீது ஒருகாலும் உள்ளே ஒரு காலுமாகப் பரபரப்புடன் நின்றுன்.

முகத்தைக் கழுவி – முடியைச் சீராக வாரிக் கொண்டு, பனியன் மீது சலவை செய்த ஒரு சட்டையைப் போட்டுக் கொண்டு லுங்கியை அவிழ்த்து விட்டு பாண்டை நிதானமாகப் போட்டுக் கொண்டு நீண்ட கண்ணுடி முன் தன்னை அழகு பார்த்துக் கொண்டு நிற்பவனைப் பற்றி அவனுக்கு அதிசயமாகத்தானிருந்தது.

நெஞ்சு வலியால் கீழே பெரியம்மா துடிக்கும் போது, இப்போது இந்த அலங்காரமா தேவை...?

''நான் போய் டாக்டரைக் கூட்டி வரணும். கிளம்பறேனுங்க...'' சிங்காரம் குழறினுன். அகல்யா அம்மா கூப்பிட்டு விடுவார்களோ என்ற கிலி அவனுக்கு.

''சித்த நில்லு. நானும் வரேன். அதுக்கு முன்னுடி உனக்கு வாங்கிட்டு வந்த அந்தக் குட்டி ரேடியோவை எடுத்துத் தரேன். பின்னுல் மறந்து போயிடும். வேறு யாராச்சும் வந்தால் அதைக் கேட்பாங்க.''

குற்ற உணர்வில் தவித்தான் சிங்காரம். நேற்றே கொடுத்திருக்கலாம். அம்மா கீழே நோயோடு அவதிப்படும் வேளையில்தானு பரிசைத் தர வேண்டும்? அதே சமயம் மறுக்க முடியவில்லை. பெட்டியைத் திறந்து காமேஷ் மெல்ல அடியிலிருந்த அந்தச் சிறு டிரான்ஸிஸ்டரை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு,''இன்னும் யார் யாருக்குப் பரிசுகள் வாங்கி வந்திருக்கிறேனே, ஞாபகம் இல்லை...'' என்றுன்.

சிங்காரத்துக்கு வாயெல்லாம் பற்களாகி விட்டன. அவன் கேட்ட குட்டி ரேடியோ பெட்டி, தலையணையருகே காதோடு வைத்துக் கொண்டு பாட்டுக் கேட்கலாம். இடுப்பிலே புகையிலை ஒலைப்பைக்குள் கூட அடக்கமாகி விடும் அளவு சிறியது. யஜமான் அவனை மறக்கவில்லையே! கண்களில் நன்றி பெருகக் கனிவாக அவனைப் பார்த்தான்.

''உங்க மாமனுர் இன்னும் வரலேங்க. இரண்டு வாட்டி வந்து ஏமாந்து போய் விட்டார். இப்போ பெரியம்மாவுக்கு உடம்புக்கு முடியலேன்னு தகவல் கொடுத்தா காலையிலேயே வந்துடுவார். நடந்தே வந்துடுவார். அப்படியே உங்களைப் பார்க்கவும் துடிச்சிட்டு இருப்பார். அந்தப் பார்வதியம்மா கட்டாயம் நீமிதிக்கு முன்னுடி ஒரு தபா, அர்ச்சனை பண்ண வந்துடுவாங்க.''

''பார்வதியம்மாவா? யார் அவள்? காமேஷுக்கு உள்ளூற சிறிது கலவரம், அவர்களுக்கு அவள் என்ன உறவு?

''தூரத்து உறவை வச்சுக் கொண்டுமாதம் இரண்டு தபா சேலத்திலேயிருந்து அம்பாசிடரை எடுத்துக் கொண்டு அந்தம்மா இங்கே வராட்டி, மண்டை வெடிச்சுடும். பெரிய அம்மாளுக்கு ரொம்ப நாள் சிநேகிதமாச்சே ... போன வாட்டி வந்தபோது நீங்க எப்போ வரப் போறீங்க. சின்னப் பேரனுக்கு மோட்டார் பொம்மை வாங்கிட்டு வரும்படி அகல்யா அம்மாவைக் கடிதாசி எழுதச் சொன்னுங்க. இத்தனை சின்ன பெட்டிக்குள்ளே, எத்தனை பேருக்குச் சாமான் வாங்கிட்டு வருவீங்க? பெட்டியில் காணப்பட்ட கரடிப் பொம்மையும், மோட்டார் பொம்மையும் பார்வதி அம்மாளுக்கா... காமேஷ் மனத்துக்குள்ளே கணக்கிட்டுக் கொண்டு நின்றுன். ''சிங்காரம்!'' அகல்யாவின் குரல் ஓங்கி ஒலித்ததைக் கேட்டுஅரண்டு போய் விட்டான் அவன். சட்டென்று ரேடியோவை இடுப்பு மடிப்பில் கட்டிக் கொண்டு ஒரே பாய்ச்சலாகப் படிகளில் தாவி, யஜமானியின் கண்களில் படாது.. ஒரே ஓட்டமாகத் தெருவில் ஓடினுன்.

''அம்மாவுக்கு எப்படி இருக்கிறது?'' கேட்டுக் கொண்டே பஞ்சரத்தினத்தின் அறைக்குள்ளே மிடுக்காக வந்து நின்ற காமேஷை நிமிர்ந்து பார்க்க மனமில்லாதவள் போல் அகல்யா மாமியாரின் போர்வையைச் சரி செய்து கொண்டு நின்ருள்.

''முன்பு ஒரு தடவை மாரடைப்பு வந்திருக்கு, எனக்குச் சொல்லாமல் மூடி வச்சிங்க!'' அதட்டியபடி அருகில் வந்தான். ''ராஜா, என் ராஜா கிட்ட வா'' அரற்றியபடி கைகளை நீட்டிய கிழவியிடம் நெருங்கினுன். அவன் ஆரம்பத்திலிருந்து போட்ட கணக்குகள் ஒன்றும் ஒழுங்காகவே அமையவில்லை. ராஜ்குமாருடன் திருநல்லூருக்கு வந்து பஞ்சரத்தினம் அம்மாளைச் சந்தித்து... எல்லா விவரமும் தனக்குத் தெரியும் என்று சொல்லி வக்கீல் தேவசகாயம் கொடுத்த கடிதத்தையும், அந்த மோதிரத்தையும் காட்டிப் பயமுறுத்தி.....

ஆனுல் இப்போது என்ன குடி முழுகிப் போயிற்று? முன்னைவிட அவனுக்கு எல்லாமே சுலபமாகிக் கொண்டு வருகிறது. ராஜ்குமார் தண்ணியுடன் போய்த் தொலைந்தான். அவனுக்குப் பதில் மகன் ஸ்தானத்திலே வீட்டுக்குள் வந்து சேர்ந்து விட்டான். மாரடைப்பு வந்து அவதிப்படும் கிழவி, நீண்ட நாள் இருக்கப் போவதில்லை. அவள் போன பிறகு, அத்தனை சொத்துக்கும் வாரிசாக, அவன்தானே அனுபவிக்கப் போகிறுன்.. யாருக்குமே ஆள் மாருட்டம் புரியவில்லை. மாமனுர் பாலியையும், அந்தப் பார்வதி அம்மாளையும் சமாளிச்சுட்டால்...? சிந்தனை வேகமாகப் படர்ந்தது.

''ராஜா!'' கிழவி வேதனையுடன் அரற்றினுள்.

''கிட்டத்தான் இருக்கேன். பயப்படாதீங்க. இப்ப டாக்டர் வந்துடுவார்.. சிங்காரம் அழைச்சுக்கிட்டு வந்துடுவான்.'' சொல்லிக் கொண்டே. அருகில் நின்ற அகல்யாவை அழுத்தலாகப் பார்த்தபடி ''சூடா சாப்பிட எனக்குக் காப்பித் தேவை, கொண்டு வா'' என்று உத்தரவிட்டான்.

கிழவியின் கரங்களை மெல்லப் பிடித்துக் கொண்டு இருக்கை ஓரத்திலே உட்கார்ந்து கொண்டான்.



''பூரணி பாலே அடுப்பிலே வச்சு காச்சு நான் வரேன்'' என்று உத்தரவிட்ட அகல்யா அவனை எரித்து விடுகிறவள் போல் உறுத்து விழித்தாள். ''ராஜா! இனி எனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லே. நீ வந்துட்டியே அதுவே போதும். இந்தப் பூட்டுக்கு நான் பிழைக்க மாட்டேன்னு தோணுது. கிட்ட வாப்பா. என்னைக் கட்டிப் பிடிச்சுக்கோ. ஐயோ! வலிக்குதே. உன்னைப் பார்க்கக் கூட முடியலையப்பா!'' கிழவி அரற்றிய போது பொலபொலவென்று அகல்யாவின் கண்கள் நீரைக் கொட்டின. இடித்த புளியாக உட்கார்ந்திருந்த காமேஷ் அவனைப் பார்த்து விட்டுக் குற்ற உணர்வுடன் மெல்ல பஞ்சரத்தினத்தின் அருகே குனிந்து கொண்டான்.

''அம்மா, அப்படியெல்லாம் சொல்லாதீங்க: நீங்க பிழைச்சிடுவீங்க. நம்ப எல்லோரும் சுகமாக இருக்கப்போகிறோம்'' சட்டைப் பையிலிருந்து தனது கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைப்பது போன்று பாவனை செய்தான்.



''நேத்திக்கு உங்க வீட்டுக்குப் போன் பண்ணேன். நீங்க வெளியே போயிருப்பதாக ஒய்ஃப் சொன்னாங்க.''
''அப்படியா? ஆச்சரியமா இருக்கே!''
''இதிலென்ன ஆச்சரியம்?''
''என்னவா? எங்க வீட்டிலே இருந்த டெலிபோனை ஆறு மாதத்துக்கு முன்னாலே எடுத்து விட்டோம். என் ஒய்ஃப் எட்டு மாதத்துக்கு முன்பே அவங்க அப்பா வீட்டுக்குப் போய் விட்டாள்!'' -இரா. கந்தையா

காப்பியைக் கலக்கிக் கொண்டு வந்து அகல்யா முக்காலி மீது வைத்தாள். அதற்குள் வாசலில் காலடிச் சத்தம் கேட்டதும் வெளியே விரைந்து விட்டாள்.

டாக்டர் தணிகைவேலனைக் கண்டதும் அவனுக்கு மூச்சு வந்தது. ''மறுபடியும் மாரடைப்பு வந்து விட்டது போலிருக்கு.'' முனகினான் துயரத்துடன். ''ஊரிலிருந்து மகன் வந்த சந்தோஷம். அதுவே அவங்களுக்குத் தாங்க முடியலே. மாரடைப்பு வந்து விட்டது போலிருக்கு. கவலைப்படாதீங்க'' தணிகைவேலன், சிங்காரத்துடன் அறைக்குள்ளே நுழைந்தார்.

''வாங்கோ டாக்டர். உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கோம்'' என்று கையை நீட்டிய காமேஷின் கரங்களை ஆவலுடன் பற்றிக் கொண்டார் தணிகைவேலன்.

''ரொம்ப இளைச்சுக் கறுத்துப் போயிருக்கீங்க. நல்ல சமயத்துக்கு ஊருக்கு வந்தது நல்லதாப் போச்சு.'' கைகளைக் குலுக்கினர். பின்னர் எல்லோரையும் அப்பால் போகச் சொல்லி விட்டு, பஞ்சரத்தினத்தைப் பரிசோதிக்கத் தொடங்கினர்.

வெளியே அறைக்கு முன்னால் நின்று கொண்டிருந்த காமேஷ் காப்பியை வேகமாக விழுங்கி விட்டுத் தம்ளரைச் சுவர் ஓரமாக வைத்தான்.

''வந்தப்புறம் கூட என்கிட்டே அம்மாவின் உடம்பைப் பத்தி ஏன் நீ சொல்லலே?'' என்று அதட்டலாகக் கேட்டான்.

கண்ணீரில் ஒளி விட்ட கண்களால் அவனை மீண்டும் உற்றுப் பார்த்தாள் அகல்யா. அப்படி அவள் ஊன்றிப் பார்க்கும் போதெல்லாம் ஏன் அவனுக்கு ஒரு நடுக்கம் ஏற்படுகிறது?

''என்ன எது கேட்டாலும் முறைக்கிறே. உனக்கு என்ன வந்து விட்டது?'' மௌனமாக அவனை மீண்டும் வெறித்து விட்டு, அவள் சமையலறைக்குள் சென்று மறைந்து கொண்டாள்.

டாக்டர் தணிகைவேலன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவுடன், அவனும் அருகில் ஓடி வந்து நின்றான்.

டாக்டர் மிகவும் ஆதரவுடன் காமேஷின் தோளைத் தழுவிக் கொண்டார்.

''இப்பத்தான் ஊருக்குத் திரும்பியிருக்கீங்க. வழக்கம் போல் தீமிதிக்கக் கூடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கீங்களாம். சிங்காரம் சொன்னான். தீமிதி இன்னும் இரண்டு நாளில் நடக்க இருக்கிறதாமே?''

''அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு டாக்டர்?'' கலவரத்துடன் வினவினான் அவன்.


''அம்மாவின் உடம்பு ரொம்ப மோசமா இருக்கு. ஆஸ்பத்திரியில் வைச்சுக் கவனிக்க வேண்டிய கேஸ். அவங்களை இந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு நகர்த்துவதும் தவறு. நான் மூணு வேளை வந்து கவனிக்கிறேன், மிஸஸ் ராஜ்குமார் இருக்கவே இருக்காங்க, மாமியாரைத் தமது கண்கள் போலக் கவனிக்க. நீங்களும் கூட இருப்பது என் மனசுக்கு ஆறுதலா இருக்கு. பெரிய அம்மாளுக்கு அதுவே ஒரு மருந்து போல உதவி செய்யும். நம்மால் ஆனதைச் செய்வோம்....''


''தீமிதி வரை உடம்பு தாங்குமா டாக்டர்?'' அகல்யா மெல்லக் கேட்டாள்.

''தீமிதி என்ன தீமிதி வேண்டிக் கிடக்கு—அம்மா உடம்பை விட. அது பெரிசா... உன் கட்டுப் பெட்டிக் கொள்கைகளை உதறிவிட்டு அம்மாவைக் கவனிக்கிறதைப் பார்!'' எல்லோர் முன்னிலையிலும் ஓங்கி அதட்டல் போட்டான் காமேஷ்.

பதிலுக்கு அகல்யா அவனை வெட்டிவிடுவது போல் பார்த்துவிட்டுப் பின் பக்கம் சென்றுவிட்டாள்.

வைத்தியர் போட்ட ஊசி மருந்தின் சுகத்தில் பஞ்சரத்தினம் கண்களை மூடிக்கொண்டு மெல்லத் தூங்கிப் போனார்.


நாடாளுமன்றத் தேர்தல்...
நமது மானப் பிரச்சினைக்கோர்
அறைகூவல்!
பாபு ஜகஜீவன் ராமை பிரதமராக்குவோம்!
நடத்தியே காட்டுவோம், சமுதாயப் புரட்சியை!
ஆம்... அது நமது மானப் பிரச்சினைக்கோர் அறைகூவல்.
ஜனதா
கட்சி ஜெயிக்கும், மக்கள் ஆட்சி ஜொலிக்கும்.


கண்டாலே
இனிமை
கண்ணுக்கு
குளுமை
அதுவே
ஐடெக்ஸ்
கண்மை
தாமிக்கத் தாவர் எண்ணெகளையும், மூலிகைகளையும் மட்டுமே கலந்து விஞ்ஞான முறைப்படித் தயாரிக்கப்படுவது ஐடெக்ஸ்.
பெட்ரோலியம் ஜெல்லியோ,
மெழுகோ எந்தவிதமான வர்ணங்களையோ அறவே கலக்காதது ஐடெக்ஸ்.
கண்களுக்குக் கூர்மை, குளிர்ச்சி, கவர்ச்சி அளிப்பதில் நிகரில்லாதது ஐடெக்ஸ்.
35 ஆண்டுகளாக உங்கள் மகத்தான நம்பிக்கையின் ஓர் சின்னம் ஐடெக்ஸ்.
உங்கள் கண்கள் உங்கள் அழகின் ஜீவநாடி – அதற்கு தரத்தில் நிகரில்லாத கண்மை தேவை. அதாவது ஐடெக்ஸ் கண்மை தான் என்று சொல்லவும் வேண்டுமா ?
EYETEX
REGD.
ARAVIND LABORATORIES MADRAS-600 033

அதற்குள் பொழுது நன்றாக விடிந்துவிட்டது. அகல்யா தனது நித்தியக் கடமைகளைப் புறக்கணிக்க விரும்பாது விரைவாக ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கோவிலுக்குக் கிளம்பிவிட்டாள்.

முன் அறையில் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த காமேஷுக்கு எரிச்சலாகத் தானிருந்தது.

'பெரிய அடங்காப்பிடாரி போலிருக்கு — அழகாக இருக்கிறோம் என்ற திமிர்கொஞ்சம். படித்துவிட்ட கர்வம். ராஜ்குமார் முட்டாள் பயல். இழுத்த இழுப்புக்கு ஆடியிருக்கிறான். அதுதான் அந்த மிடுக்குப் பார்வை... இருக்கட்டும்.' தனக்குள் கறுவிக் கொண்டு மேற்கொண்ட தனது திட்டங்களை ஆராய்வதில் தன்னை மறந்திருந்தான்.

குருநாதன் பின்கட்டைத் தாண்டித் தோட்டத்துக்கு வந்தபோது மகள் கிணற்று மேடை அருகே முருங்கைக் கீரையை ஆய்ந்து கொண்டு தோய்க்கும் கல் மீது உட்கார்ந்திருப்பதைக் கண்டார்.

''மறுபடியும் மார்வலியாமே! என்னம்மா இப்படி யெல்லாம் சோதனை!''

மகள் குனிந்தபடியே துயரத்துடன் தலையை ஆட்டினாள்.

''ஆமாம், மாப்பிள்ளை ரொம்ப இளைச்சுக் கறுத்துப் போய் வந்திருக்கிறாரே? அவருக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லையே... மாடியிலே இருந்தார் பார்த்தேன். என்ன புது வழக்கம்... அறைக்குள்ளே ஒரே சிகரெட் நாத்தம். தீமிதிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாரே... இதெல்லாம் கூடாதுன்னு தெரியாதா?... எனக்குப் பரிசாகப் புகை பிடிக்கும் பைப் ஒன்னைப் பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுக்க வந்தார்.

''என்ன மாப்பிள்ளை... எனக்குப் புகை குடிக்கிற பழக்கமே கிடையாதேன்னு கேட்டப்போ ஒரு மாதிரி சிரிச்சார்.

''அவர் பேச்சு — பழக்கம் அவர் சிரிக்கிற மாதிரி எல்லாம் ரொம்பப் புதுசா இருக்கும்மா. ' என் மாப்பிள்ளை ராஜ்குமார் தானு இவர் அப்படின்னு நினைக்கக் கூடத் தோணுது....''

''என்னப்பா சொன்னீங்க?'' — இமைப்புடன் நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள் மகள். அழுதழுது அவள் கண்களும் முகமும் சிவந்து காணப்பட்டன.

''வருத்தப்படாதே. கொஞ்சம் மாறிப் போயிருக்கார். எல்லாம் பழையபடி சரியாயிடும்... முத்துமாரி கைவிட மாட்டாம்மா.....''

''கை விட்டுட்டா அப்பா....!'' என்று மகள் கட்டுக் கொள்ள முடியாது விம்மி விம்மி அழுதாள். (தொடரும்)



திருநல்லூர் சின்னஞ்சிறிய கிராமம். தன் பூர்வீக வீட்டுக்கு நவீன மின்வசதி அளித்துச் சௌகரியப் படுத்தினான் ராஜ்குமார். ஆனால் அந்தக் கிராம வீட்டில் தன் அருமை மனைவி அகல்யாவுடன் அனுபவிக்காமல் பொருள் சேர்க்கும் ஆவலில் அயல் நாடு செல்கிறான். கண் பார்வை மங்கிப்போன தாயார் பஞ்சரத்தினமும் அகல்யாவுமே அந்த வீட்டில் இருந்தனர். தாய்க்கு மகனைப்பிரிந்த ஏக்கம்; மனைவிக்குத் தன் கணவனைப் பிரிந்த தாபம்.

திருநல்லூர் கிராமத்து மாரியம்மன் வரப்பிரசாதி. தன் கணவன் ஆயுசோடு திரும்பி வருவதற்காகத் தீமிதிக்க (பூக்குழி)ப் பிரார்த்தித்துக் கொள்கிறாள் அகல்யா. தன் கணவன் திரும்பி வந்ததும் அவனையும் பூக்குழியில் இறங்கவைக்க நினைத்திருந்தாள் அகல்யா.

பாஹ்ரெய்னில் ஒரே உருவமுள்ள இருவர் ராஜ்குமாரும் காமேஷும் சந்தித்து நட்பை வளர்த்துக் கொள்கின்றனர். தாய்நாடு திரும்பும் வேளையில் இருவரும் ஒரே இடத்தில் வேலை தேடிக்கொள்ளலாம் என்று ஏற்பாடு. சென்னைக்கு வரும் வழியில் ராஜ்குமார் நீச்சல் ஆர்வத்தில் நீரில் மூழ்கிப்போகிறான். ஒரே உருவமுள்ள காமேஷுக்கு ராஜ்குமாராக நடிக்கத் தைரியம் பிறந்து. விடுகிறது 'தன் பழி'யைத்தீர்த்துக் கொள்ளவும் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்கிறான் அவன்.

ஒரு நாள் திருநல்லூருக்கு வந்து சேர்ந்து விடுகிறான் காமேஷ். அந்தக் கிராம வீட்டில் காமேஷ் ராஜ்குமார் தான் என்ற உருவில் பவனிவருகிறான். தனக்கு வரும் இடைஞ்சல்களை யெல்லாம் அவன் தவிர்க்க முற்படுகிறான். அவனுக்கு முக்கியமான தடைகள் பூக்குழியில் இறங்குவதும், அகல்யா விரதம் என்று கூறி அவனைத் திரஸ்கரிப்பதும் தான்!

ஒரு நாள் பஞ்சரத்தினத்துக்கு வியாதி முற்றி விடவே டாக்டர் தனிகை வேலுக்கு ஓடுகிறான் வேலைக்காரன் சிங்காரம். காமேஷ் சிங்காரத்துக்கு ஒரு பாக்கெட்ரேடியோ கொடுத்து அவனைச் சரிக்கட்டுகிறான். அகல்யாவின் தந்தை விஜயம் செய்து, ராஜ்குமார் வேஷத்திலுள்ள காமேஷின் விபரீதத் தோற்றத்தையும், சிகரெட் பிடிப்பதையும் பிரலாபிக்கிறார்! அந்தக் கணத்தில் அகல்யா "முத்துமாரித் தாயே! உன்சோதனைக்கு நான்தானா அகப்பட்டேன்!" என்று உருகிக் கண்ணீர் பெருக்குகிறாள். இனி மேலே கதையைத் தொடர்ந்து படிக்கலாம்.



தோல்வியில் வெற்றி!

போட்டிக் கதை 16

—ஜனமேஜயன்

நான்கு மூலைகளிலிருந்தும் குவிந்த ஒளி விளக்கு வெளிச்சம் மைதானத்தைப் பட்டப் பகலாக்கியது. ஸ்டேடியத்தை நிறைத்திருந்த கூட்டத்தினரின் பார்வைகள் பந்துடனே தொடர்ந்து மைதானத்தைச் சுற்றி வந்தது.

ராவ் பகதூர் சுப்பராமன் நினைவு கால் பந்தாட்ட பைனல். வெள்ளிக் கோப்பை யைப் பெற பெங்களூர் சி.இ. எஸ். அணியும், பம்பாய் மில் அணியும் மோதிக் கொண்டிருக் கின்றன.

ஆரம்பத்திலிருந்தே ஆட்டம் விறுவிறுப் பாக இருந்தது. இரு தரப்பினரும் மிகவும் 'ஃபாஸ்ட் கேம்' விளையாடியது ரசிகர்களுக்கு உற்சாகமாக இருந்தது. பம்பாய் டீம் அவர்களுக்கே உரிய பாணியில் 'ஹை பால்' போட்டு ஆடினார்கள்.

இன்னும் எந்த டீமும் கோல் போடவில்லை.

பெங்களூர் அணியின் கேப்டன் கார்த் திக்கிடம் பந்து கிடைக்கும்போதெல்லாம் ரசி கர்களின் உற்சாகம் கரை புரண்டது. ஆர்ப் பரித்தார்கள்.

பொதுவாகவே சிறப்பாக விளையாடும் கார்த்திக் இன்று மிக அபாரமாக ஆடினான். லாவகமாக எதிர்களைக் 'கட்' பண்ணினான். சாதுரியமாகப் பாஸ் செய்தான். மிக வேக மாக முன்னேறிச் சரியாக எய்ம்' செய்தான். இந்த வெள்ளிக் கோப்பையை வென்றாக வேண்டும்.

அவனுடைய உற்சாகத்துக்கும் உத்வேகத் துக்குமான காரணம் முதல் வரிசையின் மத்தி யில் சேரில் ரோஸ் நிறப் புடவையுடுத்தி அமர்ந்திருந்தது. பெயர் சுநந்தினி. அவளு டைய கரு வண்டுக் கண்கள் இமைக்காமல் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தன.

அவள் கார்த்திக்கின் விசிறி. ஓர் ஆட்டத்தைக் கூடத் தவற விட்டதில்லை.

கார்த்திக்கின் ஆட்டத் திறமையையும் சுநந்தினியின் அழகையும் தராசின் இருதட் டுக்களில் வைத்தால் சமமாக நிற்கும்.

இருவரும் கோவையில் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். பட்டம் பெற்ற பின் பெங் களூரில் வேலைக்குச் சேர்ந்து விட்டான் கார்த் திக். அவனுடைய கால் பந்தாட்டத் திற மைக்காகவே அவனை வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள்.

கல்லூரியில் படிக்கும்போதே கார்த்திக் கின் இதயத்தைப் பறித்து முந்தானையில் முடிந்து கொண்டாள் சுநந்தினி. அவளுடைய அப்பா இரண்டு மில்களுக்கும், மூன்று தியேட்டர்களுக்கும் சொந்தக்காரர் என்ப தால் தன் காதலை வெளியிடத் தயங்கினான் கார்த்திக்.

கடைசியில் ஒரு வழியாக நாலு நாட் களுக்கு முன் செமி பைனலில் பஞ்சாப் அணிக்கு எதிராக ஒரு 'ஹேட் ட்ரிக்' போட்டு

வென்றதைப் பாராட்ட வந்த சுநந்தினியிடம் தயங்கியவாறு தன் மனத்தைத் திறந்து காட்டிவிட்டான்.

வெட்கத்துடன் புன்னகைத்தபடி அவனுடைய காதலை ஏற்க ஒரு நிபந்தனை விதித்தாள் சுநந்தினி. 'இந்த பைனலில் ஜெயித்து வெள்ளிக் கோப்பையைப் பெற வேண்டும்.'

அதனால்தான் இன்று கார்த்திக் காற்றாய்ப் பறந்து 'ஆல் ரௌண்டராக' ஆடிக்கொண்டிருக்கிறான். வெள்ளிக் கோப்பையை வெற்றி

''கோ...ல்''

கோஷம் வானைப் பிளந்தது. எழுந்து நின்று கை வலிக்கும்வரை தட்டினாள் சுநந்தினி.

யாரோ சிலர் இரண்டு மூன்று கட்டுப் பட்டாசுகளைக் கொளுத்திப் போட்டார்கள்.

கார்த்திக்கை அவன் குழுவினர் தூக்கிக் கொண்டு கூத்தாடினார்கள்.

இடைவேளைக்கான விசில் ஊதினார் நடுவர்.



கொண்டு, சுநந்தினிப் பூங்கொத்தைச் சொந்தமாக்கி, அந்தக் கன்னத்தை, அந்த இதழ்களை...

இடைவேளைக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன. கொஞ்ச நேரமாகப் பந்து 'மிட் பீல்'டிலேயே இருக்கிறது.

''ரைட் அவுட்' சங்கரிடம் பந்து கிடைத்ததும் வில்லியம்ஸைக் 'கட்' செய்து கார்த்திக்கிடம் பாஸ் செய்தான். அதைத் தடுத்து நிறுத்தி லைனில் கரியப்பாவிடம் போட்டு விட்டு வேகமாகப் பாய்ந்து முன்னே ஓடினான் கார்த்திக். லைனிலேயே வேகமாகக் கார்னர் வரை சென்ற கரியப்பா கோல் ஏரியாவுக்குப் பந்தை 'லாப்' செய்ய, தயாராக இருந்த கார்த்திக் உயர எம்பிக் குதித்துத் தலையைச் சாய்த்து 'ஹெட்' செய்தான். கோல் கீப்பர் குப்தா திகைத்து நிற்கப் பந்து போஸ்டரை உராய்ந்தவாறு கோலில் புகுந்தது.

''கார்த்திக் பிரமாதமா ஹெட் பண்ணினான் இல்லே?'' என்றார் கண்ணாடிக்கார ரசிகர்.

''பண்ணி என்ன பண்றது? ஆப்பத் தலையன் இன்னிக்கு டிராதான் பண்ணுவான்.'' ஆப்பத்

தலைவன் என்று மப்ளர்க்காரர் குறிப்பிட்டது அம்பயரை.

''ஆமாம். கலெக்ஷனுக்காக எது வேணும் னாலும் பண்ணுவான்.''

''பைனலிலுமா அப்படிச் செய்வார்கள்?'' வேர்க்கடலையைக் கொரித்துக் கொண் டிருந்தவர் கேட்டார்.

''பார்த்துக்கிட்டிருங்களேன். இதுவரைக் கும் பிளேயர்ஸ் விளையாடினாங்க. இனிமேல் அம்பயர் ஆட்டம்தான்.''

''ஏதாவது பண்ணி'பெனல்டி' குடுத் துடுவான்.''

''கேரளா டீம் ஆடினப்ப எங்கே கோல் போட்டாலும் போட்டுடுவாங்களோன்னு பயந்து, ஐந்து நிமிஷம் முன்னாடியே ஓவர் பண்ணிட்டானே.''

''அதைப் பற்றிப் பத்திரிகையில் கூட எழுதியிருந்தான்.

''ராஜஸ்தானும் ரயில்வேயும் ஆடினப்ப என்ன பண்ணினான் பார்த்தீங்களா? பாக் ஸுக்குள்ளே ஹாண்ட்ஸ் ஆகுது, கண்டுக்காம விட்டுட்டானே. அன்னிக்கும் இதே 'ஆஃப் சைடு' ஆப்பத் தலைவன்தான் அம்பயர்.'' ஆஃப் சைடு இல்லாதபோது கொடுப்பதும், இருக்கும்போது விடுவதும் அவர் ஸ்பெஷா லிடி என்பது எல்லோருடைய கணிப்பு. அதனால்தான் அந்தப் பெயர்.

''ஸ்போர்ட்ஸ்மேன் ஸ்பிரிட் கொஞ்சம் கூடக் கிடையாது. அவங்களுக்கு வேண்டியது ஒரு நாள் கூடுதலான கலெக்ஷன்தான்.''

''கல்கத்தாவிலெல்லாம் இப்படிச் செய் தால் ஸ்டேடியத்தைத் தூளாக்கிவிடு வார்கள்!''

டோர்னமெண்ட் கமிட்டியும் நடுவர்களும் ரசிகர்சன் வாயில் புகுந்து புறப்பட்டார்கள். அவர்களுடைய வயிற்றெரிச்சலில் நியாயம் இல்லாமல் இல்லை.

இடைவேளை முடிந்து மீண்டும் விளையாட வந்தபோது கார்த்திக் நந்தினியின் பக்கம் பார்வையைச் செலுத்தினான். இனி நீ என் னுடையவன்தானே என்கிற மாதிரியான உரிமை கலந்த பார்வை.

டிஃபன்ஸைப் பலப்படுத்தினான் கார்த் திக். இனிமேல் கோல் விழாமல் தடுத்தால் போதுமே.

''அந்தப் பிரஸ்லிலே பிரிண்ட் ஆகிற தெல்லாம் ரொம்பக் காஸ்ட்லி!''
''என்ன புஸ்தகம்?''
''செக் புஸ்தகம்!'' அ. இராமதாஸ்



பம்பாய் அணி உத்வேகமாய் ஆட ஆரம் பித்தது. ஆனால் கோல் போட முடியவில்லை.

நேரமாக ஆக ரசிகர்கள் எதிர்பார்த்தது போலவே அம்பயர் கொஞ்சம் கொஞ்சமாக பம்பாய் அணியின் பக்கம் சாய்வது நிதர் சனமாகத் தெரிந்தது. அவர்களுக்குச் சாதக மாக ஆஃப்சைடைக் கண்டுகொள்ளாமல் விடுவது, ஃபௌல் கிக் கொடுப்பது...

ரசிகர்கள் கூச்சல் எழுப்பித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

இருபதாவது நிமிடம் பம்பாய் அணியின் சென்டர் ஃபார்வர்ட் முன்னேறியபோது, கோல் ஏரியாவில் பெங்களூரின் 'ஸ்டாப்பர்' தடுக்க முயலுகையில்—

அம்பயர் விசில் ஊதினார். 'பெனல்டி' யாம். பம்பாய் அணியினரே இதை எதிர் பார்க்கவில்லை.

ரசிகர்களின் எதிர்ப்புக் கூச்சல் கிளம்பிற்று.

'நான் அப்பவே சொன்னேனே பெனல்டி குடுத்தாவது டிரா பண்ணுவான்னு.'

''அயோக்கிய ராஸ்கல்!''

''....ப் பையன்''

''கூலிக்கு ஒழுங்கா மாரடிடா மடையா.''

அம்பயருக்கு அர்ச்சனைகள் நடந்தன.

''இதெப்படி ஃபௌலாகும்?'' பெங்களூர் ஆட்டக்காரர்கள் நடுவரிடம் வாதாடினார்கள். ஆனால் நடுவர் துரைராஜ் எதையும் பொருட் படுத்தவில்லை. அவர்களை பாக்ஸிலிருந்து வெளியே போகச் சொன்னார்.

சண்டை போட்ட தன் சகாக்களைச் சமா தானப்படுத்தினான் கார்த்திக். அவர்கள் முணு முணுப்புடன் ஒதுங்கினார்கள்.

வாய்ப்பைக் கோட்டை விடாமல் சரியாக கோல் அடித்து 'டிரா' பண்ணினான் பம்பாய் கேப்டன் சேனு.

ஆட்டம் முடிவை நெருங்கிக் கொண் டிருந்தது.

டிராதான் என்ற முடிவுடன் சலித்தபடி சிலர் எழுந்து போகத் தீர்மானித்தபோது, சென்டரிலிருந்து சங்கரன் 'லாப்' செய்த பந்தை நெஞ்சில் தடுத்து வேகமாகக் கோலை நோக்கிப் பாய்ந்தான் கார்த்திக். அதைத் தடுக்கப் பின்னாலேயே ஓடிவந்த சேனு முயல, இருபது கெஜ தூரத்திலிருந்து சக்தியையெல்லாம் இடது காலில் திரட்டி கோலை நோக்கி 'எய்ம்' செய்ய—

அது நிச்சயமாக கோல் ஆகும் என்று தெரிந்தபோது அம்பயர் விசில் ஊதினார்.

ஆஃப் சைடாம்.

பந்து கோலுக்குள் பாய்ந்து விட்டது.

'கோ....ல்' என்று ஆர்ப்பரித்த ரசிகர் களின் உற்சாகமெல்லாம் நடுவர் அந்தக்கோலை மறுத்தபோது ஆத்திரமாக உருவெடுத்தது.

சிலர் மைதானத்தில் பாய்ந்தார்கள். கலாட் டாவை எதிர்பார்த்து வரவழைத்திருந்த இரும்புத் தொப்பிப் போலீசார் அவர்களை விரட்டினார்கள்.

'நாளைக்கு எழுதவேண்டும்' என்று பத்தி ரிகை நிருபர்கள் தீர்மானித்தார்கள்.

தலைமை வகித்த போலீஸ் அதிகாரி, பரிசு வழங்க வந்திருக்கும் தம் மனைவிக்குக் கலாட் டாவுக்கான காரணத்தை விளக்கினார்.

பொதுவாக நடுவர் தீர்ப்பை எப்பொழு துமே எதிர்க்காத கார்த்திக்கே இதை

எதிர்த்தான். அவன் கோபம் எல்லை மீறியது. பந்தைக் கையில் எடுத்துக் கொண்டான்.

''ஆஃப் சைடென்றால் லைன் அம்பயர் கொடி காட்டியிருக்க வேண்டுமே'' என்று கோபத்துடன் கேட்டான்.

''அவசியமில்லை. என்னுடைய முடிவு தான் பைனல்.''

''பந்துக்கு நேராக இருந்த லைன் அம்பயருக்குத் தெரியாத ஆஃப் சைடு சென்டரிலிருந்த உங்களுக்குத் தெரியுமா?''

''எனக்குத் தெரியும். அதை நீ கேட்கக் கூடாது.''

''சரி. அப்படியே இருந்தாலும், நான் பந்தை 'மீட்' பண்ணின உடனே அல்லவா விசில் கொடுத்திருக்க வேண்டும்? முன்னேறி கோல் ஏரியாவை அடையும் வரை ஏன் பேசாமலிருந்தீர்கள்?''

அம்பயர் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினார். ''எனக்கு நீ ரூல்ஸ் சொல்லித் தர வேண்டாம். என் முடிவை மாற்றிக்கொள்ள முடியாது.''

பம்பாய் அணியினருக்கே கூடச் கொஞ்சம் சங்கடமாக இருந்தது.

ரசிகர்கள் கலாட்டாவில் இறங்கினார்கள். மாங்கொட்டைகளை மைதானத்தை நோக்கி வீசினார்கள். நாற்காலிகளை உடைத்தார்கள்.

''விளையாட்டின் சுவையே போச்சு, தூ..''

''இந்த அநியாயத்துக்கு ஒரு முடிவு கட்டவே முடியாதா?''

''நாளைக்கும் நாலு ரூபாய் வாய்க்கரிசி போட வேண்டியதுதானா? இன்னிக்கே கடன் வாங்கிக் கொண்டு வந்தேன். வரவேண்டாம்னாலும் மனசு கேட்க மாட்டேங்குது!''

கிழிசல் சட்டைக்காரரின் மனம் நொந்த அங்கலாய்ப்பு கார்த்திக்கின் நெஞ்சைத் தொட்டது. அவரைப்போல் எத்தனை பேரோ!

உண்மையான விளையாட்டு ரசிகர்களின் ஆர்வத்தைத் தவறான முறையில் காசாக்கும் இந்த அநியாயத்துக்கு ஒரு முடிவு கட்டத்தான் வேண்டும்.

ஒரு முடிவுக்கு வந்த கார்த்திக் அம்பயரின் கடிகாரத்தில் மணி பார்த்தான். ஐந்தே நிமிடங்களிருந்தன. தன் முடிவைச் சகாக்களிடம் தெரிவித்தான்.

'விளையாட ஒப்புக்கொள்ளாதே' என்ற ரசிகர்களின் கூச்சலைப் பொருட்படுத்தாமல் பந்தை நடுவரிடம் கொடுத்தான்.

வெற்றி பெற்றுவிட்ட பெருமையும் மகிழ்ச்சியும் அம்பயர் முகத்தில் தெரிந்தது. நிம்மதி! 'அப்பாடா....'


உயரே பாய்ந்து வந்த பந்தைக் தடுத்து கார்த்திக்கிடம் பாஸ் செய்தான் பாஸ்கர்.

அடுத்த கணம் கார்த்திக் பந்துடன் தன் பக்கத்துக் கோலை நோக்கி வேகமாக முன்னேறினான். கண்ணிமைக்கும் நேரத்தில் என்ன செய்கிறான் என்று புரியாமல் அனைவரும் குழம்பி விழித்துக் கொண்டிருக்கும்போது—

தன்னுடைய கோலினுள் பந்தை உதைத்தான்.

சேம் சைட் கோல்.

ரசிகர்கள், பத்திரிகை நிருபர்கள், எதிர்த் தரப்பினர், டோர்னமெண்ட் கமிட்டியினர் அனைவருமே ஸ்தம்பித்து விட்டனர்.



ஒருவர் ஒரு புலவரைப் பார்த்து, ''இராத் திரிக்கு என்ன சாப்பாடு?'' என்றார்.

சொல் வீரராயிற்றே அப்புலவர். பதில் தயக்கமின்றி வெளிவந்தது. ''விளக்கெண்ணெய்.''

''விளக்கெண்ணெயா?'' எனத் திகைத்துப் போனார் நண்பர்.

புலவர் ஓர் அகல் விளக்கை எடுத்து அதில் விளக்கெண்ணெயை விட்டு ஒரு திரியையும் போட்டு வைத்தார். திரியைக் கொளுத்தினார். திரி கொஞ்சம் கொஞ்சமாக எண்ணெயைச் சாப்பிடத் தொடங்கி முடிவில் விளக்கில் எண்ணெயே இல்லாமல் இருந்தது.

அருகிலிருந்த அன்பரிடம் புலவர், ''பார்த்தீரா? இராத் திரிக்கு விளக்கெண்ணெய்தான் சாப்பாடு'' என்று கூறி அன்பரின் திகைப்பை மாற்றினார். -எஸ். லீலாராம்

சில கணங்கள் ஒன்றும் புரியாமல் விழித்த பிறகுதான் அம்பயர் விசில் ஊதினார். அவர் முகம் என்னவோ போல் ஆகிவிட்டது. இப்படிச் செய்வான் என்று தெரிந்திருந்தால் அந்தக் கோலை விட்டுத் தொலைத்திருக்கலாமே.

டோர்னமெண்ட் கமிட்டியினர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். துளியும் எதிர்பாராத திருப்பம் இது. நாளைக்குத் தலைமை வகிக்க ஆளைக்கூட முடிவு செய்தாயிற்றே.

''நாளைக்கு ஒரு முப்பதாயிரம் கிடைக்கும்னு நெனைச்சிருப்பாங்க. நல்லா நாமம் போட்டாம்பா கார்த்திக்.''

'இனிமேலாவது நியாயமா நடக்கறாங்களான்னு பார்க்கலாம்.' ரசிகர்களுக்குத் திகைப்பான திருப்தி.

சுநந்தினியின் பக்கமே திரும்பவில்லை கார்த்திக். இனி அவளை மறந்துவிட வேண்டியதுதான். பரவாயில்லை. இதயத்தின் கனத்தைத் தாங்கிக்கொள்ள முயன்றான்.

''வெல்டன் கார்த்திக்!''—'ரன்னர் அப்' கோப்பையைப் பெற்றுக் கொண்டு திரும்பியவனை எதிர் கொண்டாள் சுநந்தினி. ''நீங்கள் செய்ததுதான் சரியான முடிவு. வெற்றி யடைவது மட்டும் பெருமையில்லை. ஒரு அநியாயத்தை முறியடிப்பதற்காகத் தோல்வி யடைவதும் பெருமைதான். என் பாராட்டுக்கள்'' அவள் பன்னீர்ப பார்வையில் குமிழியிட்ட மகிழ்ச்சி, கன்னத்தில் கோலமிட்ட நாணம்....


கார்த்திக்கின் மனம் துள்ளிற்று.

வெள்ளிக் கோப்பையை இழந்தால் என்ன?

இதோ ஒரு தங்கச்சிலையை அவன் வென்று விட்டானே!


சுத்த ஸைஃபரா இருக்கியே!
நான் இருந்தா நீங்க ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது! நான் இல்லன்னா, நீங்க வெறும் நூத்து தொண்ணூற்று எட்டு!
1980
நடிகை: 80 ஆம் ஆண்டு லட்சியம்.. 80 படங்களில் நடிக்க வேண்டும்! 1980 படங்களில் ஒப்பந்தம் ஆக வேண்டும்.
(விருந்தாளியிடம்) இந்த ஜனவரி 1க்கு என்ன சக்தி பாருங்க! ஒரு வருஷமாகத் தங்கி இருந்த 1979-ஐ ஒரே நாளில் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிடுச்சு!
அவர், தேதி கிழிச்ச 1979 காலண்டர் மாதிரி ஒட்டி உலர்ந்து போயிருக்கிறார்! அவள்...1980 புதுக் காலண்டர் மாதிரி 'புல்'லு உப்பி இருக்கிறாள்!
HAPPY NEW YEAR!
''80-லே 'கடன் கொடுக்கறதில்லே'ன்னு தீர்மானம் பண்ணி இருக்கேன்.''
''ஏன்? 79-லே நிறைய கடன் கொடுத்து ஏமாந்துட்டீங்களா?''
''அப்படி இல்லீங்க.. 79-லே வாங்கின கடன்களை 80-லே திருப்பிக் கொடுக்கறதில்லேன்னு தீர்மானம்!''
''79-லேயே உன் மாமியார் வந்ததா சொல்றியே... இத்தனை காலமா தங்கி இருக்காங்களா? உண்மையாகவா?''
''பின்னே பொய்யா?...79 டிசம்பர் 31-லே வந்தாங்க...!''


''என்ன முறைக்கிறே? என்னைச்செலவு எழுதற நோட்டுன்னு அலட்சியமா நினைக்காதே! நானும் உன்னைப் போல ஒரு காலத்திலே டைரியாக இருந்தவன் தான்.''
1980 டைரி
1979 டைரி
''1980-ல் உன் ஆசைகளை நிறைவேத்தலாம்னு தீர்மானிச்சிருக்கேன்! உன் ஆசை என்ன சொல்லு!''
''உங்களை 'டைவர்ஸ்' பண்ணிக்கணும்!''
''80-லே நம்ம பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணாம இருக்க மாட்டேன்!''
''80-ன்னு.. இந்த வருஷம் எண்பதிலேயா?.. அவ வயசு எண்பதிலேயா?''
''என்ன புது வருஷத் தீர்மானம்?...''
''வருஷா வருஷம் பண்ற மாதிரி இந்த வருஷமும் காபி, டீ, புகையிலை, சிகரெட்டை நிறுத்தி விடறதுன்னு தீர்மானம் பண்ணி இருக்கேன்!''
''புத்தாண்டு 80-லே M. P. ஆகணும்னு அவரை வாழ்த்தினியாமே...அவருக்கு உன் மேல் எக்கச்சக்கமா கோபம்!''
''ஏன்?''
''அவர் P. M. ஆகணும்னு ஆசைப்பட்டாராம்!''
''என்ன சார் புது வருஷம்? எல்லாம் பழைய மாசங்கள் தானே வரப்போகுது... ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சுன்னு!''



திருமலை-திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி

வெங்கடேஸ்வரப் பெருமாள் சேவை:

கட்டணங்கள் மாறுதல்

விலைவாசியேற்றம் காரணமாக, ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் சேவைகள் சிலவற்றிற்குக் கட்டணங்கள் 1980 ஜனவரி 1ந் தேதி முதல் உயர்த்தப்பட்டுள்ளன.

கல்யாண உற்சவம்:

கல்யாண உற்சவத்துக்கான கட்டணம் ரூ. 1000லிருந்து ரூ. 1500க்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமைகளில் அபிஷேகம்:

அபிஷேகங்களின்போது சேவார்த்திகள் உட்காருவதற்கான இடவசதி ஏற்பாடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அபிஷேகத்தின் போது குறிப்பிட்ட இடங்களில் (அறைகள்) உட்காருவதற்கு முன்கூட்டியே இடம் ரிசர்வ் செய்து கொள்வதற்கான ஏற்பாடுகள் வருமாறு

அபிஷேகம்	கட்டணம்	உட்காரும் இடம்	டிக்கட்டுகள் எண்ணிக்கை
1. பூரணாபிஷேகம்	ஒரு நபருக்கு ரூ. 500	சயன மண்டபம்	16
2. கம்புராகிண்ணம்	ஒரு நபருக்கு ரூ. 300	ராமர் மேடை	20
3. புனுகு பாத்திரம்	ஒரு நபருக்கு ரூ. 200	ஸ்நபன மண்டபம்	60
4. மற்ற பாத்திரங்கள்	ஒரு நபருக்கு ரூ. 100	திருமாமணி மண்டபம்	100

ஒவ்வொரு மாதமும் சிரவண நட்சத்திர தினத்தில் திருமலையில் 1008 நெய் திரிகளைக் கொண்டு சஹஸ்ர தீபாலங்கார சேவை நடைபெறும். இந்த ஆர்ஜித உத்ஸவத்தில் பங்குகொள்ள விரும்புவோர் ரூ. 2000 செலுத்த வேண்டும்.

1980 ஜனவரி முதல் தேதியன்றும் அதற்குப் பின்னரும் கல்யாண உத்ஸவம் நடத்த ஏற்கெனவே ரிஸர்வ் செய்து கொண்டுள்ளவர்கள் திருத்தியமைக்கப்பட்ட கட்டணப்படி பாக்கித் தொகையைச் செலுத்த வேண்டும்.

எக்ஸிக்யூடிவ் ஆபீசர்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி



முன்கதை சுருக்கம்

பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் அரபிக் கடல் பகுதி பெரும் போர்க்களமாயிருந்தது. வெள்ளைக் காரர்களும் வெள்ளைக் கொள்ளைக்காரர்களும் அதில் உலாவிப் பாரதத்தின் சொத்தைப் பலவிதத்திலும் கொள்ளையடித்துக் கொண்டார்கள். அவர்களை அடக்கவும் இந்திய மேலைக்கடல் பகுதியைக் காக்கவும் கனோஜி ஆங்கரே என்ற மாபெரும் வீரனொருவன் தோன்றினான். அவனை பிரிட்டிஷார் கொள்ளைக்காரனென்று அழைத்தார்கள். மகாராஷ்டிரர் தங்களைக் காக்கவந்த தெய்வம் என்று கொண்டாடினார்கள். அந்த மகாவீரன் சரித்திரம் "ஜலதீபம்" என்ற நாவலில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருக்கு அடுத்த இளைய தலைமுறையைப் பற்றிய கதை இந்தக் "கடல் ராணி". மடகாஸ்கரில் தளம் அமைத்துக் கொண்டு இந்திய மேலைக்கடலில் வரும் கப்பல்களைச் சூறையாடிய கொள்ளைக்காரர்களைப்பற்றிய வரலாறு கலந்த கதை இது. இக்கதை அரபிக்கடல் பகுதியில் கார்வார் துறைமுகத்துக்கும் விஜயதுர்க்கத்துக்கும் இடையே சிவாஜி மகாராஜா கட்டிய கடற்கோட்டையான சிந்து துர்க்கத்தில் தொடங்குகிறது. இலக்கியத்திலும் சரித்திரத்திலும் பிரசித்திபெற்ற பல பாத்திரங்களை இந்தக்கதையில் நீங்கள் சந்திப்பீர்கள். கடலால் சூழப்பட்டதும் மிகவும் வலுவுள்ளதுமான சிந்து துர்க்கக்கோட்டையின் குளிர்ந்த கடலில் பங்குனித் திங்களின் பின்பனி மூட்டத்தையும் லட்சியம் செய்யாது அலைகடல் தாமரையாக நீந்திக் கொண்டிருந்த

கடல் ராணி கதிரவன் தலைகாட்டத் தொடங்கியதும் சிந்து துர்க்கத்துக்குப் புறம்பேயுள்ள பாறையில் கட்டப்பட்டிருந்த அறைக்கு வருகிறாள். அங்கு வைத்துப் போன ஆடைகளைப் புனைய உள்ளே நுழைகையில் அங்கு உறங்கிக் கொண்டிருந்த

இந்திரஜித் அனந்த் என்ற வாலிபனைப் பார்க்கிறாள். அவனை அதட்டி அனுப்பிவிட்டு உடையணிந்து வெளியில் வந்ததும் கடல் ராணியை

ஸ்டான்டன், ஸ்மித் என்ற இரு வெள்ளைக்காரக் கப்பலதிகாரிகள் பார்க்கிறார்கள். அவளையும் வெளியே கதவுக்கருகில் தூங்கிக்கொண்டிருந்த இந்திரஜித் அனந்தையும் நோக்கி மிரட்டி கைத்துப்பாக்கியை நீட்டி ராணியைத் தங்களுடன் வருமாறு அழைக்கிறார்கள். அந்தச் சமயத்தில் அரைத் தூக்கத்திலிருந்த அனந்தின் கைத்துப்பாக்கி துரிதமாக இயங்கி ஒரு வெள்ளைக்காரனைக் கையிலும் இன்னொருவனை காலிலும் சுட்டுவிடவே நிலைமை தலைகீழாக மாறுகிறது. அவர்களையும் ராணியையும் அனந்த் ஒரு படகில் அழைத்துக் கொண்டு அடுத்திருந்த பாண்டவகட் கோட்டைக்கு செல்கையில் காஸண்ட்ரா என்ற பெரும் கொள்ளைக்கப்பலின் தலைவனான

காப்டன் இங்க்லண்ட் அவர்களை நான்கு படகுகளுடன் வளைத்துக்கொள்கிறான். இந்திரஜித் அனந்தை தன்னுடன் அனுப்புமாறும் உத்தரவிடுகிறான். அந்த சமயத்தில் இந்திரஜித் அனந்த் தனது இடையிலிருந்த துப்பாக்கியை மின்னல் வேகத்தில் உயர்த்தி, இங்க்லண்டின் படகு ஒன்றை மட்டும் தொடர்ந்து வரச்சொல்லி மற்ற படகுகளை காஸண்ட்ராவுக்கு அனுப்பி விடுகிறான். இங்க்லண்டையும், ராணியையும் பாண்டவ கட்டிலுள்ள தனது அறைக்கு அழைத்துச் சென்று தனது நண்பனான ஒற்றைக்கால்

ஸில்வரைக் காட்டுகிறான். ஒரு கால் மரக்காலாயிருந்தாலும் ஸில்வர் பயங்கர மனிதனென்பதை ராணி உணருகிறாள். இங்க்லண்ட் ஸில்வரைக்கண்டதும் ஆனந்தக் கூச்சல் போட்டு அவன் அங்கு எப்படி வந்தான் என விசாரிக்கிறான். அனந்த் தன்னைக் காப்பாற்றியதாகக் கூறுகிறான் ஸில்வர். அன்று மாலை இந்திரஜித் அனந்த் ராணியை அவள் உத்தரவுப்படி தென்னந்தோப்பில் சந்திக்கிறான். அங்கு அவளைக் கடலந்த லாத் ஸித்தியின் கொலைகாரனிடமிருந்து காப்பாற்ற அவளை அப்படியே கட்டித்தரையில் தள்ளித் தானும் அவளுடன் புரண்டு விடுகிறான். அவன் இடுப்பிலிருந்த துப்பாக்கியால் அந்தக்கொலைகாரனைக் கொல்லவும் ஏற்பாடு செய்கிறான். அந்த நிகழ்ச்சி, இருவரின் முதல் ஸ்பரிசம், கட்டி விழுந்த நிலையில் புரண்ட போது ஏற்பட்ட உணர்ச்சிகள், இருவரையும் காதலின் மென்மைக் கயிறுகளால் பிணைக்கின்றன. அந்த சமயத்தில் ராணியை நோக்கி வந்த ஓர் அம்பை ராக்கினியை அனந்த் பிடித்து அது ஸில்வரின் கிளி யென்றும் அபாயமானதென்றும் அறிவிக்கிறான். அதைத்தொடர்ந்து ஸில்வர் வருகிறான். அவனுடன் கூடவருகிறான் மிகக்கொடியவனான

காப்டன் டெய்லர் என்ற பிரசித்திபெற்ற கொள்ளைக்காரன். அவனிஷ்டப்படி காஸண்ட்ராவுக்குச் செல்லத் தீர்மானித்த அனந்த், ராணியையும் உடனழைத்துச் செல்கிறான். டெய்லரின் பீரங்கிப்படகு கடலில் சிறிது தூரம் சென்றவுடன் கடல்ராணியின் தந்தையும் மால்வான் தளபதியுமான,

சங்கர்பந்த் சில படகுகளுடன் தனது மகளை விடுவிக்க வருகிறார். ஆனால் அனந்த் தனது கைத்துப்

பாக்கியால் அவரது முயற்சியைப் பயனற்றதாகச் செய்து அவரையும் பதினைந்து வீரர்களையும் காலண்ட்ராவுக்கு வரும்படி உத்தரவிடுகிறான். காலண்ட்ராவில் அவர்களுக்கெல்லாம் தங்க வசதி செய்து கொடுக்கிறான் இங்கலண்ட். அனந்தின் கோரிக்கையின் மீது ராணியும், அனந்தும், சங்கர் பந்தும் தங்கத் தனது அறையையே கொடுக்கிறான். அந்த அறையிலிருக்கும் போது இரவு ஏறிய சமயத்தில் கதவைத் திறந்து கொண்டு ஒரு கூனன் வருகிறான். அவன் அனந்தின் மேஜைக்கருகே வந்து சங்கர்பந்தைத் தான் அழைத்துச் சென்றுவிடுவதாக அறிவிக்கிறான். முதலில் அதற்கு உடன்படாத சங்கர்பந்த் அந்தக் கூனன் நிமிரென்று நிமிர்ந்து விட்டதும் அவன் கனோஜி ஆங்கரேயின் ஆசைநாயகி மகனும் பெருங்கடல் வீரனுமான

துலாஜி ஆங்கரே என்பதை அறிகிறார். துலாஜி ஆங்கரே தானும் பதினைந்து வீரர்களை அழைத்து வந்திருப்பதாக அனந்திடம் கூறுகிறான். பிறகு தன் சட்டையிலிருந்த ஒரு காகிதத்தை அனந்திடம் கொடுத்துவிட்டு சங்கர்பந்தை அழைத்துச்சென்று விடுகிறான். தனியே விடப்பட்ட இருவர் உணர்ச்சிகளும் கரைபுரண்டு ஓடுகின்றன. பரஸ்பர பிணைப்பில் சொர்க்கத்தை இருவருமே காண்கின்றனர். அந்த சமயத்தில் வெளியே பெரும்புயலடிக்கிறது. ஸில்வர் மெள்ளத் தன் கிளியுடன் அந்த அறைக்குள் வருகிறான். அப்பொழுது துலாஜி காகிதத்திலிருந்த ரகசியத் திட்டத்தைப்பார்த்துக்கொண்டிருந்த இருவரும் அவனைக் கண்டதும் துலாஜி கொடுத்த காகிதத்தை மறைத்து விடுகிறார்கள். ஸில்வர் ராணியிடமிருந்த மேஜைக்கு அருகே வந்து அதன் மீது சாய்ந்தபோது மேஜைக்கு அடியில் தனது கைத்துப்பாக்கியை அவன் வயிற்றில் அழுத்துகிறான். அங்கு வந்த காப்டன் இங்கலண்ட் உள்ள நிலையை அறிகிறான். அப்படி அறிந்த இங்கலண்டிடம் தனக்கொரு திட்டம் இருப்பதாகவும் அதைக் காலையில் விவாதிக்கலாமென்றும் கூறுகிறான் அனந்த். அவன் சொற்படி மறுநாள் தளத்தில் எல்லோரும் கூடுகிறார்கள். அங்கு இந்திரஜித் உட்கார ஒரு நாற்காலி போடப்பட்டிருக்கிறது. அந்த நாற்காலியில் தான் முன்பு காலண்ட்ராவின் அசல் தலைவனான காப்டன் மாக்ரேயைக்கட்டியிருந்தார்களென்பதையும், அவனை ஸில்வர் காப்பாற்றியிருக்கா விட்டால் அவனை டெய்லர் தூக்கில் போட்டிருப்பானென்பதையும் உணர்ந்து கொண்டான். அதை வெளிப்படையாகவும் அறிவித்து விட்டு அதில் உட்கார்ந்தான். தன்னை ஏதாவது செய்ய உத்தேசிக்கும் பட்சத்தில் கொள்ளைக்காரர்களுடன் கப்பலைச் சுட்டுப்பொசுக்கிக் கொளுத்திவிட முடியுமென்றும் அனந்த் கூறுகிறான். "என்னால் முடியுமா முடியாதாவென்பதை அவனைக் கேளுங்கள்" என்று எதிரே கையை நீட்டுகிறான் அனந்த். அந்தத் திசையைப் பார்த்ததும் அனைவரும் பிரமித்தார்கள். அவர்கள் முற்றும் எதிர்பாராத விந்தை நிகழ்ந்திருந்தது.


இனி மேலே படிக்கலாம். மகாராஷ்டிர சரித்திரத்தின் மகோன்னதப் பாத்திரங்களான மன்னர் ஷாஹு, பேஷ்வா பாஜிராவ், முதலிய பலரை இந்த நூலில் சந்திப்பீர்கள். சரித்திர ஆராய்ச்சி மாணவர்களுக்கு எனது மற்ற நூல்களைப்போலவே ஓராண்டு காலத்துக்குக் குறையாமல் வரஇருக்கும் இந்தநூலும் உதவும் என நம்புகிறேன்.

அத்தியாயம் 23

திட்டமும் கொண்டாட்டமும்

மூந்நூற்று என்பது பீரங்கிகளை உடையதும், ஏககாலத்தில் ஐந்நூறு பேராவது போராடக்கூடிய வசதியுள்ள விசாலமான தளத்தை உடையதும், காப்டன் இங்க்லண்ட் டெய்லர் ஆகிய இரு பெருங் கடலோடிகளின் தலைமையில் இயங்கியதும், எந்தக் கடுமையான கடற் போருக்கும் தயாராயிருப்பதுமான காலண்ட்ராவின் தளத்தின் நடுவில் நாற்காலியில் அமர்ந்து, தன்னை யாராவது தொடும் பட்சத்தில் காப்டன்கள் மாலுமிகளுடன் சேர்த்துக் கப்பலைக் கொளுத்தி விடுவதாகக் கூறிய இந்திரஜித் அனந்தின் துணிவைக் கண்ட இங்க்லண்டும் டெய்லரும் பிரமித்தனர்; தளபதி சங்கர் பந்த் அபாய நிலையால் அவனுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டிருக்கிறதென நினைத்து அசந்து நின்றார்; பக்கத்தில் அமர்ந்திருந்த ராணியின் மனம் கூட அவன் துணிவைக் கண்டு குழம்பியது. அந்த நிலையில் "நான் சொல்வதில் சந்தேகமிருக்கால் அவனைக் கேளுங்கள்" என்று அவன் ஆள்காட்டி விரலால் எதிரே சுட்டிக் காட்டியபோது அனைவரும் அதிர்ச்சி யடைந்தார்களென்றால், எதிர்பாராத விந்தையைக் கண்டு பிரமித்தார்களென்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது.

அவன் காட்டிய திசையில் கண்களைச் செலுத்திய அனைவரும் அங்கு



நெட்டையான மெல்லிய உருவத்துடன், கூன் கடுகளவுமின்றி அந்தக் கப்பலின் பாய்மரம் போல் மிகக் கம்பீரமாக நின்றிருந்த துலாஜியைக் கண்டனர். அவன் பிரிட்டிஷ்காரர்களைப்போலவே நல்ல மாலுமி உடைகளை அணிந்திருந்தான்.



அவன் இடையிலிருந்த கச்சையில் காணப்பட்ட இரு கைத் துப்பாக்கிகளும் மற்ற கைத் துப்பாக்கிகளை விட ஓரளவு பெரியதாகவும் பயங்கரமாகவும் இருந்தன. அவற்றுக்கு நடுவில் கச்சையில் செருகப் பட்டிருந்த ஒரு குறுவாளும், ஒரு மூலையில் அவன் மேல் விட தொடையைத் தொட்டுத் தொங்கிக் கொண்டிருந்த மகாராஷ்டிரரின் பெரிய வளைவு வாளும், அவன் கனோஜியின் புதல்வன் என்பதையும் எதற்கும் துணிந்தவன் என்பதையும் பறைசாற்றின. இத்தனைக்கும் துலாஜி புன்முறுவலுடன் நின்றிருந்தான். அவன் நின்ற தோரணையில் போரின் எச்சரிப்போ ஆயத்தமோ எதையும் காணோம். அழகிய முகத்திலிருந்த கண்கள் மட்டும் சிறிது அதிகமாகப் பளிச்சிட்டன. முகத்தில் தொங்கிய இரு முரட்டுக் குழல்கள், முக அழகை அதிகப் படுத்தியனவா, மற்றவரை அச்சுறுத்த அப்படி வளைந்து கிடந்தனவா என்பது புரியவில்லை.

காப்டன் இங்க்லண்ட், டெய்லர் இருவருமே புரிந்து கொண்டார்கள், ஏதோ ஒருவிதமாகத் தங்களை அனந்த் மடக்கி விட்டான் என்பதை. ஆனால் எப்படி மடக்கினான்? தன்னைத் தனியாக துலாஜி ஆங்க்ரே மட்டும் தங்களை என்ன செய்துவிட முடியும்? கப்பலிலுள்ள தங்களிடம் சேர்ந்திருக்கும் நானூறுக்கும் மேற்பட்ட மாலுமிகளை எப்படி அழித்துவிட முடியும்? என்ற கேள்விகள் அவர்கள் மனத்தில் எழுந்தன. தவிர துலாஜி ஆங்க்ரேயின் கூன் என்ன ஆயிற்று என்பதும் விளங்காததால் இங்க்லண்ட் கேட்டான்: ''அனந்த! இந்தக் கப்பலின் மாலுமிகளின் தொகை உனக்குத் தெரியுமா?'' என்று.

இதற்கு அனந்துக்குப் பதில் துலாஜியே பதில் சொன்னான்: ''தெரியாத எந்த விஷயத்திலும் அனந்த் காலெடுத்து வைக்க மாட்டான். உங்கள் பலம் தெரியும். போரிடும் திறமையும் தெரியும். தெரிந்துதான் காலண்ட்ராவுக்கு வந்திருக்கிறான். அனந்தை உங்களுக்குச் சரியாகத் தெரியாது. இந்தக் கப்பலைக் கொளுத்தி விடுவேன் என்று அவன் சொன்னால் அதைச் செய்வான். அவன் சொல்லை நிலைநிறுத்தக் கூடியவன்'' என்று தெளிவு படுத்தினான் துலாஜி.

அதுவரை பொறுமையாயிருந்த காப்டன் டெய்லர், ''உன் கூன் என்ன ஆயிற்று?'' என்று வினவினான் கடும் கோபத்துடன்.

இதற்கு அனந்த் பதில் சொன்னான்: ''அவசியம் இருந்தவரையில் இருந்தது. அவசியம் தீர்ந்தது. போய்விட்டது.'' என்றான்.

டெய்லர் அனந்தை நோக்கித் திரும்பினான். ''கூனுக்கு அவசியமென்ன?'' என்று வினவினான்.

''உங்களுக்கும் அங்க ஹீனத்துக்கும் ரொம்பப் பொருத்தமுண்டு. வில்லருக்கு ஒரு கால் கிடையாது. அவன் உங்கள் நண்பன். அவனைக் கண்டு அஞ்சுகிறீர்கள். ஒரு கூனனும் கிடைத்தால் உங்களுக்குத் திருப்தி அதிகமாயிருக்கும் என்று துலாஜி நினைத்திருக்க

லாம். பதினைந்து மாலுமிகள் அதிகப்படியாகக் கிடைக்கிறார்கள். அவர்கள் தலைவனே ஒரு கொள்ளைக்காரன் மகன். அதுவும் கூனன். அவர்களைச் சேர்த்துக் கொள்வதால் காலண்ட்ரா பலப்படுகிறது. ஆள் பலம் அதிகமாகிறது. தவிர உங்கள் வேலைக்கு மற்றவர்களை விட மேலைக் கடலோரத் துறைமுகங்களையும் அவற்றின் சூட்சமங்களையும் நன்கறிந்த துலாஜி உபயோகப்படலாம். இந்தக் காரணங்களால்தான் அவனையும் பதினைந்து மாலுமிகளையும் நீங்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று விளக்கினான் அனந்த்.

இம்முறை இங்கலண்ட் கேட்டான், ''எங்கள் வேலையா? அதென்ன?'' என்று.

அனந்த் லேசாகப் புன்முறுவல் கொண்டான். ''மாக்ரேயைப் பிடிப்பது'' என்று பதில் சொன்னான்.

''மாக்ரேயை நாங்கள் விடுதலை செய்தோம். பாவ்னி என்ற கப்பலைக் கூடக் கொடுத்து அனுப்பினோம். அப்படியிருக்க நாங்கள் ஏன் மறுபடியும் அவனைப் பிடிக்க வேண்டும்?'' என்று டெய்லர் கேட்டான் உக்கிரமாக.


இந்திரஜித் அனந்த் நாற்காலியின் கைகளை அழுத்திக் கொண்டிருந்த தன் கைகளை எடுக்காமலே சொன்னான் ''நீங்கள் அவனைக் கண்டு அஞ்சுகிறீர்கள். உங்களைப் பிடிக்கவும் இந்தக் காலண்ட்ராவை முடியுமானால் திரும்பப் பிடிக்கவும், முடியாவிட்டால் அழிக்கவும் நான்கு புதிய போர்க் கப்பல்களுடன் மாக்ரே கிளம்பியிருக்கிறான். அவனை அழிக்க நீங்கள் முயலுகிறீர்கள்'' என்று.

டெய்லரும் இங்கலண்டும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். தூர இருந்த வில்வரின் முகத்தில் விவரிக்க இயலாத விபரீதச் சாயை ஒன்று படர்ந்தது. ''அனந்த்! அரபிக் கடலில் நடக்கும் சகல விஷயங்களையும், எல்லோர் நோக்கத்தையும் நீ அறிந்திருக்கிறாய் என்பது தெரிகிறது. ஆனால் இந்தக் கப்பலைக் கொளுத்திவிடுவேன் என்று சொன்னாயே அதெப்படி முடியும்?'' என்று வினவினான்.

பேச்சை என்ன காரணத்தாலோ வில்வர் அசல் பாதையிலிருந்து மாற்றுகிறான் என்பதை அனந்த் புரிந்து கொண்டான். இருப்பினும் அதைப் பற்றி ஏதும் குறிப்பிடாமல் அந்தப் பாதையிலேயே சென்றான். ''வில்வர்! முடியாத எதையும் நான் சொல்வதில்லை.

சப் இன்ஸ்பெக்டர்: அவர் மெடிக்கல் ரெப்ரசன்டேடிவ் குடித்ததாகக் கூறுகிறீரே! பின் ஏன்யா கூட்டிகிட்டு வந்தே!

கான்ஸ்டபிள்: மெடிக்கல் காலேஜ் ரெப்ரசன்டேடிவ் உட்கார்ந்து கொண்டு குடிச்சதைத்தான் அப்படிச் சொல்றார்!
-ரேகா ராகவன்



நான் சொல்வதைப் புரிந்து கொள்ளக் கண்டுதான் வேண்டும். சிறிதளவு அறிவு இருந்தாலும் நல்லது. அதோ நிற்கும் துலாஜியின் கச்சையில் உள்ள கைத்துப்பாக்கிகளிரண்டும் அவன் தந்தையால் கொடுக்கப் பட்டவை. என்னைவிடப் பன்மடங்கு துரிதமாகச் சுடக் கூடியவன் துலாஜி. எந்த விநாடியிலும் இமையைக் கூட அசைக்காமல் மற்றவர் இமைக்கும் நேரத்துக்குள்ளாகவே அந்தத் துப்பாக்கிகளை இயக்கக் கூடியவன். இந்த டெய்லரும் இங்கலண்டும் அதோ தொலைவில் நிற்கும் நீகூடத்தான் பிணமாகிவிடுவீர்கள்'' என்று சொல்லிக் கொண்டு போனவன் சட்டென்று ஆகாயத்தை நோக்கினான். அங்கு ஒரு பறவைக் கூட்டம் சென்று கொண்டிருந்தது. ''இரண்டு போதும்'' என்று அனந்த் சொல்வதற்கும் பறவைகளில் இரண்டு காப்டன் டெய்லரின் இரு கால்களுக்குமிடையில் விழுவதற்கும் சரியாக இருந்தது.

இந்த அசுர சாதகத்தை, அசுர வேகத்தை, கண்ட அனைவருமே எல்லையில்லாப் பிரமிப்பை அடைந்தார்கள். துலாஜி துப்பாக்கி எழுந்ததையோ இயங்கியதையோ யாரும் பார்க்கவில்லை; பறவைகள் விழுந்ததைத்தான் பார்த்தார்கள். திரும்ப அந்தக் கைத்துப்பாக்கி துலாஜியின் உறையில் எப்பொழுது சென்றது என்பதும் புலப்படவில்லை யார் கண்களுக்கும்; காப்டன் இங்கலண்ட், டெய்லர், மாலுமிகள் அனைவருமே புரிந்து கொண்டார்கள் இரண்டு பயங்கர வீரர்களிடம் தாங்கள் சிக்கிக்கொண்டிருப்பதை. அதனால் பேச்சை இழந்தார்கள்.

சங்கர் பந்த் வாயைப் பிளந்து கொண்டு ஆகாயத்தைப் பார்த்தார். தளத்தில் ஊன்றியிருந்த டெய்லரின் கால்களைப் பார்த்தார். அவற்றின் நடுவே ஓடிக்கொண்டிருந்த பறவைகளின் குருதி அருவியையும் பார்த்தார். அந்த அருவி மனித ரத்த நதியாவது மிகச் சுலபமென்பதை உணர்ந்து கொண்டார்; ஆகவே சிறிது பயத்துடன் சொன்னார்: ''மனிதர் பறவைகளல்ல. திரும்பச் சுட முடியும்'' என்று.

''முடியும் அவகாசமிருந்தால்'' என்றான் அனந்த்.

''ஏன் அவகாசம் இருக்காது? நீயும் இந்த துலாஜியும் மட்டும் எங்களனைவரையும் சுட்டுவிட முடியுமா? மற்ற மாலுமிகள் கையைக் கட்டிக் கொண்டு நின்றிருப்பார்களா'' என்று கேட்டு மற்றவர்களை விடத் தமக்குத் தைரியம் அதிகம் என்பதைக் காட்டினார் பந்த்.

''முடிந்தால் மாலுமிகள் எங்களைச் சுடலாம். அதுவும் அவர்கள் தலைவர்கள் இறந்த பின்பு சுடலாம். சிறிது கண்களைத் திறந்து பாருங்கள் பார்வை ஒழுங்காயிருந்தால். அறிவைத் திறந்து நோக்குங்கள் அறிவில் கூர்மையிருந்தால்'' என்றான் அனந்த். இதைச் சொல்லிக் கால்களை நன்றாக நீட்டிக் கொண்டு கையைச் சிறிது சோம்பல் முறித்து நாற்காலியில் சாய்ந்து கொண்டான். அந்தச் சமயத்தில் தூரத்திலிருந்த வில்வர் மெள்ளத் தனது பெல்டிலிருந்து கைத் துப்பாக்கியை எடுக்க முயன்றான்.

''அதைத் தொடாதே!'' துலாஜியின் குரல் இரும்புச் சாலாகைகளிரண்டு உராய்ந்த

ஒலியில் ஒலித்தது: இத்தனைக்கும் துலாஜி தனது கைத் துப்பாக்கியிடம் கையைக் கூடக் கொண்டு போகவில்லை. அந்த எச்சரிக்கையுடன் மேலும் சொன்னான், ''நீங்கள் அனந்த் சொல்வதைப் புரிந்து கொள்வது உங்கள் உடலுக்கும் நல்லது உயிருக்கும் நல்லது. டெய்லர், இங்கலண்ட்! உங்களுக்கு வெகு அருகில் சூழ்ந்து நிற்பது உங்கள் மாலுமிகளல்ல. என்னுடன் வந்த பதினைந்து பேரும் சங்கர்பந்துடன் வந்த பதினைந்து பேரில் பதின்மூன்று பேரும் ஆக இருபத்தி எட்டு வீரர்களின் பார்வையில் நீங்கள் இருக்கிறீர்கள். அவர்களும் நம்மைப் போலக் கொள்ளைக்காரர்கள். போருக்கு அஞ்சாதவர்கள். ஆகையால் உங்கள் நாலு பேர் இயங்கு முன்பு உங்கள் வேலை முடிந்து விடும் இந்த உலகத்தில். அது மட்டுமல்ல. கப்பலைக் கொளுத்தவும் அனந்த் ஏற்பாடு செய்திருப்பான். இதில் சந்தேகமே வேண்டாம்.''

துலாஜியின் சொற்கள் எந்த வித பதற்றமின்றி வெளி வந்தன. அதைத் தொடர்ந்து கேட்டான் துலாஜி: ''அனந்த்! கப்பலைக் கொளுத்த என்ன ஏற்பாடு?'' என்று.

''நேற்று விளக்குக்கு வாங்கி வந்த கிரஸின் விளக்கிலிருக்கிறது. அதை என் அறையில் ஊற்றித் திவைக்க சங்கர்பந்தின் மாலுமிகள் இருவரை நிறுத்தியிருக்கிறேன். அவர்கள் பொறுமை அதிக நேரம் நீடிக்காது'' என்று சொன்ன அனந்த், ''துலாஜு! கொள்ளைக்காரர் ஒருவரை யொருவர் அழித்துக்கொள்வதில் பயனில்லை. தவிர, டெய்லர், இங்கலண்ட் இவர்கள் யோசனையும் நமது யோசனைக்கு மாறுபட்டதல்ல. இவர்கள் மாக்ரேயின் பலத்தை உடைக்கப் பார்க்கிறார்கள். நாம் பிரிட்டிஷ் கடற் படை பலத்தை உடைக்கப் பார்க்கிறோம். இரண்டும் ஒன்றுதான்'' என்று கூறினான். அடுத்தும் ஒரு கேள்வியை வீசினான். ''இப்பொழுது மாக்ரே கொண்டு வருகிறானே இரண்டு லட்சம் பவுன், அதை எப்படிப் பங்கு போடுவது?'' என்று.

இதைக் கேட்டதும் தளத்தில் பரபரப்பு அதிகமாயிற்று. ''இரண்டு லட்சமா!'' என்று வியப்பு நிரம்பிய குரலில் கேட்ட டெய்லர் சரேலென நாற்காலியிலிருந்து எழுந்தான். இங்கலண்ட் மிதமிஞ்சிய பிரமிப்பால் ''அதற்குத் தான் நீ இங்கு வந்தாயா?'' என்று வினவினான் பிரமிப்பு குரலில் மிதமிஞ்சி ஒலிக்க.

கொள்ளைக்கார மாலுமிகள் அனைவரும் கயிற்றை இழந்து ''ஹீ!'' என்று கூவினார்கள் தங்கள் குதூகலத்தைத் தெரிவிக்க.

அதுவரை கம்மாயிருந்த ராணி கேட்டாள் அனந்தை நோக்கி ''பவுன்களை மட்டும் சொன்னீர்கள். அதில் வரும் நகைகளையும் மொகலாய மோஹராக்களையும் வைரங்களையும் ஏன் சொல்லவில்லை?'' என்று.

ராணியின் பேச்சு அனைவர் கூக்குரலையும் அடக்கியது. தளத்தில் பேரமைதி நிலவியது. அனந்தும் துலாஜியுங்கூட ராணியை உற்றுப் பார்த்தார்கள் குழப்பமடைந்த பார்வையுடன். ''ஆம், ஏன் சொல்லவில்லை? கொள்ளைக்காரர்களுக்குள் எதற்கு ஒளிவு மறைவு?''



இலங்கைச் சுற்றுப் பயணம் சென்றிருந்தோம். பார்க்கின்றவர்களெல்லாம் தமிழ் நாட்டிலிருந்து வருவதை அறிந்து கொண்டு, ''கைலி கொண்டு வந்திருக்கிறீர்களா?'', ''புது பாட்டில் இருக்கின்றதா?'' ''காஞ்சிபுரம் சேலை?'' ''பிளாஸ்டிக் பக்கெட்?'' என்று கேட்டுத் துளைத்து விட்டார்கள்.

திரிகோணமலைக்குச் சென்றிருந்தபோது ஒருவர், நாங்கள் தமிழ் பேசுவதைக் கேட்டு, அருகில் வந்தார். ''தமிழ் நாட்டில் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''திருச்செந்தூர்'' என்றோம்.

''செந்திலாண்டவர் விபூதி இருக்கின்றதா?'' என்று கேட்டார்.

'இப்படியும் ஒரு மனிதரா?' என்று வியந்து கொண்டே விபூதி கொடுத்தோம். அவரும் மகிழ்ச்சியாக வாங்கிச் சென்றார்!

பேராசிரியர் மா.பா. குருசாமி

என்று இரண்டாம் முறையும் கேட்டாள் ராணி.

''மற்றதை இவன் விழுங்கப் பார்க்கிறான்'' என்றான் டெய்லர்.

''அதிலும் நமக்குப் பங்கு வேண்டும்'' என்றான் இங்கலண்ட்.

எதற்கும் பதில் சொல்ல முடியாத அனந்த் தனது பரிதாப விழிகளை ராணியின் மீது திருப்பினான். துலாஜியின் பார்வையில் கெஞ்சல் தெரிந்தது. இப்படி இரு மகாவீரர்களையும் அடக்கித் திணற விட்ட கடல்ராணி சிறிது இரைந்தே நகைத்தாள். ''மாக்ரே பிடிபட்டால் அவன் கப்பல்களில் கிடைக்கும் அனைத்திலும் காஸண்ட்ராவிலுள்ள அனைவருக்கும் பங்கு உண்டு. ரத்னு இதுவரை பேச்சுத் தவறியதில்லை'' என்றும் கூறினாள் ராணி.

டெய்லர் ராணியைத் தலை தாழ்த்தி வணங்கினான். ''ராணி, யூ ஆர் கிரேட்'' என்று கூறியதன்றி, ''திஸ் கால்ஸ் பார் செலிப்ரேஷன். பிரிங் த ட்ரிங்க்ஸ் (இது கொண்டாட்டத்துக்குரியது. கொண்டு வாருங்கள் குடி வகையறுக்களை)'' என்று கூவினான் டெய்லர்.

மாலுமிகள் விரைந்து புட்டிகளைக் கொண்டு வந்தனர். மது காஸண்ட்ராவின் மாலுமிகளை ஆட்கொண்டது. ராணி மட்டும் மதுவை அருந்தவில்லை. கையில் குப்பியைப் பிடித்த வண்ணம் புன்முறுவல் கொண்டு அந்தக் காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் இரு குடிகாரர்கள் தள்ளாடிக் கொண்டு வந்து ராணியின் இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்கள்.

(தொடரும்)



அது ஒரு மாதிரியான நினைவு

ஜக்கணரை காரிதாசன்

நான் அவருக்கு வாழ்க்கைப்பட்டுப் பதினைந்து வருடங்கள் ஓடிவிட்டன. மூன்று குழந்தைகள். மூத்தவள் பெண் குழந்தை. பன்னிரண்டு வயசாகிறது. இரண்டாவது பையனுக்குப் பத்து. மூன்றாவதும் பையன் ஏழு!

ஆரம்பத்தில் ஏதேதோ தொழில் செய்து பார்த்துவிட்டு அவை ஒன்றும் நிலைக்காமல், இப்போது ஏழெட்டு வருஷங்களாக டீக் கடை வியாபாரம்தான் கொஞ்சம் கைகொடுத்து உதவியிருக்கிறது.

டீக்கடை வைத்திருக்கிற இடம் ஒரு மலைப் பகுதி பிரதேசத்தில் சின்ன டவுன்! காலையில் இட்டிலி வியாபாரம் அதிகமாக இருக்கும். பகலில் சாப்பாடு கொஞ்சம் ஓடும். சாயங்கால நேரங்களில் மறுபடியும் இட்டிலி. இடையிடையே பருப்பு வடை, போண்டா, பக்கவடா என்று சில்லறை வியாபாரங்கள். பொதுவாகக் கடையில் எப்போதும் வியாபாரம் இருந்துகொண்டே இருக்கும்.

மெயின் ரோடு ஓரத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் மேற்புறம் கடை, கீழே சரக்கு அறை, படுக்கை அறை, குளிக்கும் இடம், சமையல்கட்டு என்று இரண்டு மூன்று சின்னச் சின்ன அறைகள். கடையின் ஒரு மூலையில் டீ போடும் இடம். அதனை ஒட்டினாற்போல் மரப் பலகைப் படிக்கட்டு — கீழே வரவும் போகவும் அது உபயோகம்.

காலையில் எழுந்ததும் நான் முதல் வேலையாக அடுப்பைப் பற்றவைத்து இட்டிலி பாத்திரத்தை வைத்துவிட்டு அடுப்பில் நெருப்பு தயாரானதும் டீ பாய்லருக்குப்போட்டுச் சூடு பண்ண வேண்டியது. அதற்கப்புறம் கடையின் மேலே, கீழே சுற்றுப்புறங்களை யெல்லாம் சுத்தமாகப் பெருக்கித் தண்ணீர் தெளிக்க வேண்டும். சட்னிக்கு அரைக்கப் பொருட்களைத் தயார் செய்கிறபோது மெதுவாக அப்போதுதான் எங்கள் சரக்கு மாஸ்டர் வந்து சேருவார்! அவருக்கு வயசு அம்பது. பக்கத்தில்தான் வீடு. சாவகாசமாக எழுந்து வந்து சேருவார். அவர் வருவதற்குள்ளாகப் பாதி வேலைகளை நானே முடித்து வைத்துவிடுவேன்.

சட்னி அரைத்துத் தாளித்து இட்டிலி ஒரு தட்டு எடுப்பதற்குள்ளாக நன்றாக விடிந்து விடும். அப்போதுதான் எனது கணவரும் எழுந்திருப்பார். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு கடையைத் திறக்கிற சமயத்திலேயே ஆட்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்து விடுவார்கள்! கையோடு டீ போடுகிற ஆளும் வந்து சேருவார்.

இனி எனது கால்களுக்கு ஓயாத நடைதான்! கடைக்கு உள்ளேதானனுக்கும் அடுப்புக்கும் படிக்கட்டுக்கும் நடந்து நடந்து வலி ஏற்படும்.

அவர் மேலே இருந்து ஒரு 'சுவிட்சை' அழுத்துவார். கீழே மணியோசை கேட்கும். நான் உடனே ''என்னங்க?'' என்று இழுக்க ''ஏய்! சட்னியைக் கொண்டா!'' என அவர் கட்டளை பிறப்பிக்க, சட்னிப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போய்ப் படிக்கட்டில் நான் நிற்க...''இன்னொரு தட்டு இட்டிலி கொண்டு வா'' என அவர் இரைந்து பேச இட்டிலி கொண்டுபோன கையோடு ''பொடியைக் கொண்டா!'', ''பக்கவடாவுக்கு மாவு ரெடி பண்ணு'',''வடைக்கு வெங்காயம் வெட்டு!'' என்பது போன்ற கட்டளைகள் ஒவ்வொன்றாக முழங்கும். அத்தனையையும் நான் ஒருத்தி சமாளிக்க வேண்டும்!


இப்படியும் கொஞ்ச நேரம் அசந்தாலோ அல்லது சலிப்பை வெளிக் காட்டினாலோ உடனே கணவரிடமிருந்து சொற்கள் கணை முனைகளாக வந்து தாக்கும்!

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், அவர் அப்படி என்மீது கடு சொற்களை வீசுவதிலும் ஒரு காரணம் இருக்கிறது! அதாவது கல்யாணமாகிப் பதினைந்து வருஷமாகி

விட்டாலும் கூட நான் மூன்று குழந்தை களுக்குத் தாயாகி விட்டாலும் கூட இந்தப் பாழாய்ப் போன எனது உடம்பு மட்டும் கட்டுக் குலையாமல் இருக்கிறது! அதோடு நான் கொஞ்சம் செவ செவேலென்று அழ காக வேறு இருக்கிறேனும். மற்றவர்கள் சொல்லுவார்கள். இப்படி நான் இருப்பது என்னுடைய கணவருக்கு ஒரு வகையில் வெறுப்பை ஏற்படுத்துகிறது என்பதை நான் தோறும் நிமிஷத்துக்கு நிமிஷம் கண்டு கொண்டுதானிருக்கிறேன். அதற்கு நான் என்ன செய்ய?

படிக்கட்டில் நின்றபடி ஏதேனும் பொருட் களை மேலே கொடுக்கிறபோது அங்கே சாப் பிட்டுக் கொண்டிருக்கிற ஆட்களில் யாரா வது என்னைப் பார்த்து விட்டால் அப்போதே என் கணவரின் பார்வை என்னையும் அவர் களையும் மாறி மாறிப் பார்ப்பதைப் பல முறை பார்த்திருக்கிறேன். அதனால்தான் நான் அங்கே வந்துவிட்டால் குனிந்த தலை நிமிருவதே இல்லை. அப்படியும் மீறி என்னையு மறியாமல் எப்போதாவது நான் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு அங்கே யாரா வது பார்த்துவிட்டால் அடுத்த நிமிடம் இவர் என்னோடு காரணமில்லாமலே சீறு வார். எனக்குப் பதில் பேசவே வராது. அப்படியே ஆத்திரம் வந்தாலும் அதை அடக்கிக் கொள்வேன். ஏனென்றால் அதிலும் ஆபத்து இருக்கிறதே! அப்படித்தான் ஏதோ ஒரு சமயம் பேசப் போய் உடனே இவர் குடிப்பதற்குக் கிளம்பி விட்டார்! குடிப் பழக்கமும் இவரிடம் உண்டு. பத்து நாள் இருபது நாள் என்று அது நீண்டுகொண்டே போகும். அப்புறம் கடை கண்ணெல் லாம் கவனிப்பாரில்லாமல் ஓய்ந்துபோகிற வேளையில் இவரும் தம்மைச் சுதாரித்துக் கொண்டு அதை விட்டுவிடுவார்! இனி மாதக் கணக்கில் குடிக்கவே மாட்டார்! அதனால் எனக்கு அடிக்கடி ஒரு பயம்! இவரிடம் ஏதாவது தாறு மாறாகப் பேச்சுக் கொடுக்கப்போய் அது எங்கே இந்த மாதிரி குடியில் கொண்டு இறக்கி விடுமோ என்பதற் காகக் கூடியவரைக்கும் அமைதியாகவே இருந்துவிடுவேன்!

வாரத்தில் இரண்டு கிழமை நாட்களில் மட்டும் கடையில் வேலை கொஞ்சமாக



இருக்கும். எனக்கென்னவோ சினிமாப்பார்ப்ப தென்றால் கொள்ளை ஆசை. அப்படி ஏதா வது ஒரு திங்கட் கிழமையில் ஆசையோடு சினிமாவுக்குப் போக உத்தரவு கேட்பேன்.

முதலில் அவர் 'போ' என்று சொல்ல மாட்டார். 'வேண்டாம்' என்றும் சொல்ல மாட்டார். 'உன்னுடைய இஷ்டம்!' என்று பிடிபடாமல் சொல்லிவிடுவார். நான் பேசா மல் இருந்து விடுவேன். சிறிது நேரம் கழித்து ''ஏய்! சினிமாவுக்குப் போகணுமென்னியே! போ போ!'' என்று அனுப்பி வைப்பார்.

ஆனால் அதில் அதிசயம் என்னவென்றால் நான் சினிமாக் கொட்டகைக்குள் நுழை வதற்கு முன்பாகவே — எனக்கே தெரியாமல் முன்னாடியே அவர் வந்து எங்காவது ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு என்னைக் கண் காணிப்பார்!

எதையுமே எதார்த்தமாகச் சொல்லவோ செய்யவோ மாட்டார். எதையாவது மன சுக்குள்ளேயே நினைத்துக் கொண்டு கண்ட படி ஏதேதோ பேசுவார். சில சமயங்களில் அவர் எதை நினைத்துக் கொண்டு பேசுகிறார் என்பதைக் கண்டுபிடிக்கவே முடியாது.

அக்கா எப்பவாவது ஊரிலிருந்து குடும்பத் தோடு இங்கே வந்து இரண்டொரு நாட்கள் தங்கிப் போவாள். ''என்னடி மைதிலி! இப்படி இளைச்சுப் போயிட்டே? ஊருக்கு வந்து ஒரு எட்டு நாள் தங்கிட்டு வர்றது?'' அன்போடு அக்கா கேட்கிறபோது இவரும் அப்போதைக்கு ''சரி போயிட்டு வா'' என்று கௌரவமாகச் சொல்லிவிடுவார். அவர்கள் புறப்படுகிற நேரம் பார்த்து ''ஏனுங்க! அக்கா கூப்பிடறாங்களே... போயிட்டு வரவா?'' என்று நான் பயந்து பயந்து கேட் கிற சமயம் ''ஏண்டி! அக்கா கூடப் போக ஆசையா... இல்லே அத்தானோட போக ஆசையா?'' என 'பட்'டென்று உடைப் பார். எனக்கோ அழுகை பீறிட்டுக் கொண்டு வரும். பேசாமல் உள்ளே போய்விடுவேன்.

ஓயாத வேலைகள் காரணமாக உடல் அசந்து ராத்திரி வேளையில் எப்போது படுக் கையில் விழுவோம் என்றிருக்கும். படுக்கை யில் விழுந்தவுடனே கண்கள் சுழலும். அந்த நேரம் பார்த்துத்தான் இவரும் தொந்தரவு செய்வார். என் தலைவிதியை நானே நொந்து கொண்டு வருகிற தூக்கத்தையும் கஷ்டப் பட்டு அடக்கிக் கொண்டு அவரது ஆசை யைப் பூர்த்தி செய்யவேண்டும்.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

''அந்த டவுன் பஸ்ஸிலே மட்டும் ஏன் கூட்டமே இல்லே?''

''அது 'பிரேக் டவுன்' பஸ்!''

-அ. இராமநாதன்



மாமூலாக விறகு உடைக்கும் பையன் சந்தானம் விறகு உடைத்துக் கொண்டிருப் பான். அவன் கொஞ்சம் முறுக்கேறிய உட லோடு வாட்ட சாட்டமாக இருப்பான். அவன் என்னோடு பேசினால்கூட இவருக்கு ஆகாது.

இன்னொரு வயசுப் பையன் பாலன். அவன் பக்கத்து மளிகைக் கடையில் வேலை செய் கிறான். ரொம்பவும் வெகுளி. எப்போது பார்த்தாலும் சிரித்துக் கொண்டே இருப் பான். 'அக்கா! அக்கா!' என்று சதா நேர மும் என்னோடு எதையாவது வந்து பேசிக் கொண்டே இருப்பான். அவன் அப்படிப் பேசிக் கொண்டிருக்கிற வேளைகளில் அவர் வந்துவிடக் கூடாதே என்று ஒவ்வொரு நேரமும் பயந்து சாவேன்.

அவர் வாய்க்குப் பிடித்தபடி எதைச் சொன்னாலும் செய்து கொடுக்கிறேன். அதி லெல்லாம் எனக்குக் கஷ்டம் தெரிவதில்லை. அவருடைய அன்பான வார்த்தை எப்போ தாவது கிடைக்காதா என்று ஏங்குகிறேன். என்னையும் என்னுடைய உணர்ச்சிகளையும் மதித்துக் கனிவோடு என்னோடு உறவாடும் நாள் வராதா என்று காத்திருக்கிறேன். எப்போ தாவது அந்த நாள் நிச்சயம் வரும். அது எப்போது?

ஆமாம், இதையெல்லாம் நான் ஏன் சொல் லிக்கொண்டிருக்கிறேன், எனக்குள்ளாக?

அதற்குக் காரணம் இருக்கிறது. இன் றைக்கு ஊரிலிருந்து கடிதம் வந்தது. அவருடைய அம்மா ஏதோ அவசர வேலை யாக அவரை உடனே புறப்பட்டு வரும்படி யாக எழுதியிருந்தார்கள். அவரும் உடனே ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்!

அவர் போன நேரத்திலிருந்து ''ஏய்!'' என்ற குரலைக் கேட்க முடியவில்லை. அதுவே பெரிய வேதனையாக இருக்கிறதே!

அடிக்கொரு தரம் ''அதைக் கொண்டா, இதைக் கொண்டா'' என்ற கட்டளையைக் காணவில்லை. அது என்னவோ போலிருக் கிறதே!

நான் இதோ தலையைத் துவட்டியபடி வெளியே உட்கார்ந்திருக்கிறேன். என்னை மறைமுகமாகக் கண்காணிக்கிற கண்களைக் காணாமல் வாட்டமாக இருக்கிறதே!

மளிகைக் கடைப் பாலன்கூட வந்து ஒரு மணி நேரம் அடுப்புக்குப் பக்கத்திலேயே நின்று ஏதேதோ கதை அளந்துவிட்டுப் போனான். நான் பயந்து நடுங்கும்படி அவர் இல்லையே! அது மனத்துக்குக் கஷ்டமாக இருக்கிறதே!

எல்லாவற்றையும் விட இன்றைக்கு ராத் திரியைப் பற்றி நினைத்தால் இப்போதே ரொம்பவும் வருத்தமாக இருக்கிறதே! என் னைத் தொந்தரவு செய்ய அவர் இல்லையே என்று இப்போதே ஏக்கம் வழிகிறதே!

அவருடைய இந்த ஒரு நாள் பிரிவு என்னை இப்படி யெல்லாம் வாட்டுகிறதே!

ஏன் அப்படி?

என்ன இருந்தாலும் அவர் தாலி கட்டிய கணவன் இல்லையா? கடவுளே! அவர் நல்ல படியாக ஊர் வந்து சேர வேண்டும்!





கடுகு பதில்கள்!

✠ ஆர். எம். அரச, செங்கோட்டை

கே: பஞ்சகல்யாணி படத்தில் கழுதைக்குப் பதிலா கடுகு நடித்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?

ப: விஷயம் தெரியாதா? முதலில் என்னைத் தான் நடிக்கக் கூப்பிட்டார்கள். காது நீளமாயில்லை என்று தள்ளி விட்டார்கள். (ஆமாம், கல்யாணிக்குத் திரையில் குரல் கொடுத்தது நீங்கள் என்கிறார்களே, உண்மையா?)

✠ சுதாமணிமேகலை, வேலூர்

கே: அமரர் கல்கி இப்போது இருந்தால், இன்றைய எழுத்தாளர்களுக்கு என்ன சொல்வார்?

ப: பண்பாட்டைக் காப்பாற்றச் சொல்வார். அவர் எழுதிய நாவல்களில் துணிச்சலான கட்டங்கள் பல இருந்தும், தாமே தணிக்கையாளராக இருந்து பண்புடன் எழுதியவராயிற்றே. ஆபாசத்தை எழுதாதீர்கள் என்று வேண்டுகோள் விடுவார்.

✠ இ. க. எ. சங்கர், சென்னை-4

கே: நிசப்தமாகச்செல்லும் பஸ்ஸில் (இஞ்சின் சத்தம் தவிர) திடீரென்று இருவர் ஏறி, லொட, லொட வென்று பேசினால் எப்படி இருக்கும்?

ப: லொட லொடவென்று இருக்கும். (ஆமாம், நீங்கள் ஐ. ஏ. எஸ். பரீட்சை எழுதப் போகிறீர்களா? பொது அறிவை வளர்த்துக் கொள்ள இவ்வளவு ஆர்வம் காட்டுகிறீர்களே!)

✠ குருராஜன், வில்லிவாக்கம்

கே: வாழ்க்கையில் பிரச்னைகளே வந்து கொண்டிருக்கின்றனவே, என்ன செய்வது?

ப: அவைகளைக்கண்டு சலிப்படையாதீர்கள். மனம் தளர்ந்து விடாதீர்கள். ஒவ்வொரு மனிதனும் பட்டை தீட்டப்படாத வைரக் கல்லாகத்தான் துவங்குகிறான். வாழ்க்கைப் பாதையில் எதிர்ப்படும் பிரச்னைகளைத் தைரியமாக அனுகிப் பட்டை தீட்டிக் கொள்ளக் கொள்ள அவன் ஜொலிப்படைகிறான். 'ஹூம்' என்று சலிப்படைந்து ஒதுங்கிக் கொள்கிறவன் கல்லாகவே இருப்பான். வைரமாக வேண்டுமானால் உரசல்களைக் கண்டு அஞ்சக் கூடாது.

✠ உஷா ராஜமூர்த்தி, சென்னை-1

கே: உங்களை யாராவது மடையா என்று செல்லமாக அழைத்தது உண்டா?

ப: உண்டு. ஆனால் செல்லமாக அல்ல.

✠ மீனாட்சிவைத்தியநாதன், திருச்சி-18

கே: கல்கி கென்று ஒருதரம் இருக்கும் போது சினிமாக்காரர்களின் போட்டோக்கள் அவசியம் தானா?

ப: தரம் குறையாத படங்களைப் போட்டால் என்ன தவறு? சினிமாவும் வாழ்க்கையின் ஓர் அம்சமாக இருக்கும்போது அதற்குப் பத்திரிகையில் இடம் ஒதுக்குவது தப்பில்லை.

✠ எஸ். பி. ராஜா, சேந்தமங்கலம்

கே: இரவு நேரத்தில் செக்கிங் இன்ஸ்பெக்டர் மேல் லாரியை ஏற்றி விட்டுத்திரும்பிப் பாராமல் போய் விடுகிறார்களே சில டிரைவர்கள், இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அந்த செக்கிங் இன்ஸ்பெக்டராக நான் இல்லையே என்று நிம்மதி யடைகிறேன்.

✠ 'ரதிப்பிரியா' தாம்பரம்

கே: ரா. கி. ரங்கராஜனின் படகு வீடு படித்திருக்கிறீர்களா?

ப: ஓ! அந்த அருமையான நாவலின் கடைசி சில பாராக்களில் மினி இலக்கியமே அல்லவா அவர் படைத்துள்ளார். 'அடக்கத்தினால் கடுகினும் சிறுத்தாற் போலவும் உள நிறைவினால் பிரபஞ்சத்திலும் பெரிதானாற் போலவும் சொல்லுக்கு அடபாற்பட்ட உணர்விலே ஒன்றுகிறது' கதாநாயகரான துறவியின் சிந்தை. விவேகானந்தர், வள்ளுவர், கீதாசாரியன், அரவிந்தர், நாவுக்கரசர், ரமணர் ஆகியவர்களின் கருத்துக்களை அழகாக முத்து கோத்துக் கதையை முடிக்கிறார். அபாரம்!

✠ ராஜா. கே. சுவாமி, சென்னை-17

கே: அரசியல் பித்து பிடித்தவர்கள்தான் உலகில் அதிகமாக இருக்கிறார்களே?

ப: அதுதான் நம் துரதிர்ஷ்டம். அதனால் தான் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் அரசியல் செய்திகளைப் போடுகிறார்கள். மனிதன் இயற்கையிலேயே ஓர் அரசியல் பிராணி என்று பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு அரிஸ்டாட்டில் கூறினார்.

ரூ. 5 பரிசு பெறுபவர்:

சுதா மணிமேகலை
12-2, பேரி பக்காளி வீதி, வேலூர்-4.

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

ஊட்டும் கரம் அறியுமே— அவன் வயிற்றுக்கு உன்னதம் எதுவென்று.



everest/79/PP/194 tam

உங்கள் கவனம் அடிக்கடி தேவைப்படுகிறது குழந்தைக்கு. அவனை சீராட்டி வளர்க்க நீங்கள் எதனையும் செய்வீர்கள்: குளிப்பாட்டி, உடை உடுத்தி, உணவு ஊட்டி, உடல் நலம் பேணிக் காப்பதில் நீங்கள் எடுத்துக் கொள்ளும் கவனம் தான் எவ்வளவு?

கருத்துள்ள அதே கவனம் பளிச்சிடுமே நீங்கள் அவனுக்கு தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டிலும். திண்ணம் அதுவே, தீவிர சுகாதார முறையில் கைபடாத் தூய்மையோடு தயாரித்த பிஸ்கட்.

நீங்கள் அவனுக்கு ஊட்டும் உணவிலே உள்ளதைப் போன்ற நிகரான ஊட்டச் சத்து அதிலே: பால், சர்க்கரை, க்ளூகோஸ், செரிப்பதற்கு எளிதாக இழைய அரைத்த கோதுமை.

கண்மணிக்கென்று உங்கள் கரம் தொடும் அந்த பிஸ்கட், கரகரப்பானது, சுவை மிக்கது. கொரித்து, ரசித்து மகிழ்வானே உங்கள் குழந்தை.

எண்ணிப் பாருங்கள்: 7, உலக விருதுகளை வென்ற, இந்தியாவின் அதி நவீன பிஸ்கட் தயாரிப்பாளர்களின் படைப்பை.

பாப்பா படம் போட்ட இந்த வண்ணமய உறையை பார்த்து வாங்குங்கள்.



7, உலக விருதுகளை வென்றது.

பார்லே
க்ளூகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

கல்லூரியில் 'குவிஸ்'

[ஒரு ஞாயிற்றுக் கிழமை. பிற்பகல். சென்னை கிறிஸ்துவக் கல்லூரி ஆண்கள் விடுதி. வெஸ்லி ஹால். பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் கபில் தேவ் பிரமாதமாக ஆடிக் கொண்டிருந்த சமயம். கல்லூரி விடுதியில் நுழைந்து " 'குவிஸ் போட்டிக்காகக் 'கல்கி'யி லிருந்து வந்துள்ளோம்" என்றதும் மாண வர்களிடையே ஒரு சுறுசுறுப்பு. 'க்விஸ்' நிகழ்ச்சிக்காக 'கபில்தேவ்' ஆட்டத்தை கூடத் தியாகம் செய்யத் தயாரானார்கள். டீ வி பார்ப்பதை விட்டு வந்தார்கள். போட்டியில் பங்கேற்கத் தங்களுக்குள் ஆறு பேரைத் தாங்களாகவே தேர்ந் தெடுத்துக் கொண்டனர். மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அக்கல் லூரியிலேயே பொருளாதாரத் துறையில் உதவிப் பேராசிரியராக இருக்கும் திரு ஜி. சுரேஷ் தாஸ், 'க்விஸ் மாஸ்டராக' இருந்து நிகழ்ச்சியை நடத்திக் கொடுக்க ஒப்புக் கொண்டார்.

ஏற்கெனவே 'கல்கி' தயாரித்திருந்த கேள்விகள் திரு. சுரேஷ்தாஸிடம் கொடுக்கப்பட்டதும் நிகழ்ச்சி தொடங் கிற்று. விதி முறைகளை வகுத்து மதிப் பெண்கள் வழங்கப்பட்டன. கேள்வி ஒவ்வொன்றுக்கும் பதிலளிக்க ஒரு நிமிட அவகாசம் அளிக்கப்பட்டது.

கேள்விகளும் அவற்றுக்கான சரியான விடையும், சரியாகப் பதிலளித்தது யார் என்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. விடை தெரியாவிடில் தப்பு விடை அளிக் காமல் 'தெரியாது' என்று பெரும்பா லான மாணவர்கள் கூறிவிட்டனர். ஓரி ரண்டு கேள்விகளுக்கு மாணவர்கள் அளித்த தவறான விடைகளும் சுவை கருதித் தரப்பட்டுள்ளன.]

பங்கேற்ற மாணவர்கள்:

1. திரு கோதாவால்லா
2. திரு பீமாடு
3. திரு ஜிக்கு ஜார்ஜ்
4. திரு நிஷித்
5. திரு மணிவர்ணன்
6. திரு விஜய் சேகர்

கேள்வி: 1978ல் மன்னர் ஷா, ஈரானை விட்டு வெளியேறியபோது, ஈரானின் பிரதம மந்திரியாக இருந்தது யார் என்று சொல்ல முடியுமா?

பதில்: ஷாபூர் பக்தியார்.

(இக்கேள்விக்கு எந்த மாணவரும் பதி லளிக்கவில்லை.)

கேள்வி: முதல் விக்கெட் விழாமல் நியூசி லாந்துக்கு எதிராக விநு மன்காடும், பங்கஜ் ராயும் அடித்த 413 ரன்கள் ஓர் உலக ரிகார்ட் என்பது பலரும் அறிந்தது. இது ஏற்படுத் தப்பட்டது எந்த ஆண்டு?

பதில்: 1956ம் ஆண்டு.

(திரு ஜிக்கு ஜார்ஜ் சரியாகப் பதிலளித் தார்.)

கேள்வி: சுதந்திர இந்தியாவின் இரண் டாவது பிரதம மந்திரி யார்?

விடை: திரு குல்ஸாரிலால் நந்தா.

(இரண்டு மாணவர்கள் பதிலளிக்கத் தவறி ஜிக்கு ஜார்ஜ் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: தமிழில் முதன் முதலில் எழுதப் பட்ட அகராதி எது?

பதில்: சதுரகராதி.

(எவரும் பதிலளிக்கவில்லை.)

கேள்வி: ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு காரியதரிசி விமான விபத்தில் உயிரிழந்தார். அவர் யார் என்று சொல்ல முடியுமா?

பதில்: டாக் ஹேமர்ஷீல்ட்.

(ஜிக்கு ஜார்ஜ் சரியாகப் பதிலளித்தார்.)

✖ குவிஸ் நிகழ்ச்சியில் பங்கேற்ற சென்னை கிறிஸ்துவக் கல்லூரி மாணவர்களும் 'குவிஸ்' மாஸ்டரும்



கேள்வி: 'ஷெட்யூல்ட்' வகுப்பினரே இல்லாத மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் எவை?

பதில்: மாநிலங்கள்: நாகாலாந்து, சிக்கிம். யூனியன் பிரதேசங்கள்: அந்தமான், நிகோபார் தீவுகள், லக்ஷதீபம்.

(இக்கேள்விக்கு எவரும் சரியாகப் பதிலளிக்காமல், திரு மணிவர்ணன் மாநிலங்களை மட்டும் சரியாகச் சொல்லி ஒரு மதிப்பெண் பெற்றார்.)

கேள்வி: 'வெள்ளை' ஒரு நிறமா?

பதில்: இல்லை. பல நிறங்களின் சேர்க்கையே வெள்ளையாகும்.

(திரு நிஷித்தும், திரு விஜய் சேகரும் பாதி பாதி சரியாக விடையளித்து போனஸ் மார்க் பெற்றனர்.)

கேள்வி: இந்தியாவில் உள்நாட்டு நெருக்கடி நிலைமை 1975ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது பலருக்கு நினைவிருக்கலாம். பிரகடனப்படுத்தப்பட்ட தேதியும் மாதமும்

பதில்: 26ம் தேதி ஜூன் மாதம் (1975)

(திரு ஜிக்கு ஜார்ஜ் சரியாக விடையளித்தார்.)

கேள்வி: ராஜ் நாராயணன் மக்கள் கட்சியின் செயல்படு தலைவர் என்பது அறிந்த விஷயம். மக்கள் கட்சிக்கு முன் அவர் இருந்த கட்சி எது?

பதில்: ஜனதா (செக்யூலர்).

(திரு கோதா வால்லா சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: இந்திரா காந்திக்கும், சஞ்சய் கானுக்கும் உள்ள உறவு முறை என்ன?

பதில்: ஒன்றுமில்லை. இந்திரா காந்தி அரசியல்வாதி. சஞ்சய் கான் சினிமா நடிகர்.

(இரண்டு மாணவர்கள் பதிலளிக்காமல் ஜிக்கு ஜார்ஜ் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: துருக்கியின் அடிப்படை நாணயத்தில் (Unit currency) பெயர் என்ன?

பதில்: குருஸ்.



✱ ஜிக்கு ஜா'ஜுக்குப் பரிசு



✱ ஜிக்கு ஜார்ஜ்

கேள்வி: அமெரிக்காவில் சுதந்திர தினம் எந்நாளில் வருகிறது?

பதில்: ஜூலை நாலாம் தேதி.

(திரு கோதாவால்லா பதிலளித்தார்.)

கேள்வி: மூன்று பெண்கள் மூன்று நிமிடங்களில் மூன்று பக்கம் எழுதி முடிக்கிறார்கள். ஒரு பெண் ஒரு பக்கம் எழுத எவ்வளவு நேரமாகும்?

பதில்: மூன்று நிமிடங்கள்.

(திரு மணிவர்ணன் சரியாக விடையளித்தார்.)

கேள்வி: பட்டர் பிரான் என்ற பெயர் யாரைக் குறிக்கும்?

பதில்: பெரியாழ்வார்.

(எவரும் பதிலளிக்கவில்லை.)

கேள்வி: இந்தியாவில் உள்நாட்டு நெருக்கடி நிலைமை 1975ம் ஆண்டு பிரகடனப்

(எவரும் பதிலளிக்கவில்லை.)

கேள்வி: களவனுக்கும், கள்வனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பதில்: களவன் என்றால் நண்டு. கள்வன் என்றால் திருடன்.

(எவரும் பதிலளிக்கவில்லை.)

கேள்வி: ஆர். எஸ். எஸ். என்பது எதைக் குறிக்கிறது?

பதில்: ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் என்பதன் சுருக்கம் அது.

(ஜிக்கு ஜார்ஜ் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: கிரிக்கெட்டில் ஒரு பாட்ஸ்மெனை எத்தனை வகைகளில் அவுட் செய்ய முடியும்? அவை யாவை?

விடை: பதினொரு வகைகளில் அவுட் செய்ய முடியும். அவை: 1, Bowled 2, Caught 3, Stumped 4, Run out 5, L B W 6, Hit Wicket 7, Handling the ball 8, Hitting the ball more than once 9, Obstructing the field 10, Knocked out 11, If the ball touches the body or is stopped by it.

(6 வகைகளை மட்டுமே நிஷித் கூறினார். அதற்கு மேல் மற்றவர்களாலும் கூறமுடியவில்லை.)

கேள்வி: மோனா லிசா சித்திரத்தை வரைந்தவர் யார்?

பதில்: லியனார்டோ வின்ஸி.

(ஜிக்கு ஜார்ஜ் சரியாக விடையளித்தார்.)

கேள்வி: இந்தியாவில் மொத்தம் எத்தனை அணுசக்தி நிலையங்கள் உள்ளன?

பதில்: நான்கு.

(திரு கோதாவால்லா சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: இ எஸ் பி என்றால் என்ன? விளக்கம் தரவும்.

பதில்: Extra sensory Perception ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட ஆறாவது புலனாகக் கருதப்படும் இதனால் பார்க்காமல், கேள்விப்படாமல், பேசாமல், உணராமல், முகராமல் சில பொருள்களின், நபர்களின் தன்மை பற்றி அறியக் கூடும்.

(திரு விஜய் சேகர் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: ராஜாஜி எழுதிய ஒரு கதை திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு வெளியாகியுள்ளது. அது என்ன?

பதில்: 'திக்கற்ற பார்வதி'.

(திரு மணிவர்ணன் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: Numismatism என்றால் என்ன?

பதில்: Ccin collection பழக்கத்தை Numismatism என்று சொல்வார்கள்.

(திரு மணிவர்ணன் Numismatism என்பது அரிஸ்டாடிலின் தத்துவம் என்றும், விஜய் சேகர் ஸ்டாம்ப் சேகரிப்பது என்றும் சொல்ல ஜிக்கு ஜார்ஜ் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: உலக அரங்கில் பெரும்பான்மையாகப்பேசப்படும் ஐந்து பிரதம மொழிகளைக் கூறவும்.

பதில்: சைனீஸ், ரஷ்யன், ஆங்கிலம், ஜெர்மன், ஸ்பானிஷ் மொழிகளாகும்.

(திரு கோதா வால்லா நான்கு மொழிகளைச் சரியாகச் சொன்னார்.)

கேள்வி: (1) Polo (2) waterpolo ஆகிய விளையாட்டுக்களில் ஒவ்வொரு அணியிலும் எத்தனை பேர் உண்டு?

பதில்: போலோ: நான்கு பேர்; வாட்டர் போலோ: ஏழு பேர்.

(ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றியவாறு எண்களைக் கூறினர். எவரும் சரியாகக் கூறவில்லை.)

கேள்வி: சமீபத்தில் ஓர் இந்திய சர்வகலாசாலை தனது ஐம்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. அந்த சர்வகலாசாலையில் துணைவேந்தராகப் பணி புரிந்த ஒருவரின் நூற்றாண்டு விழாவும் சமீபத்தில் கொண்டாடப்பட்டது. இரண்டையும் கூற முடியுமா?

பதில்: அண்ணாமலை பல்கலைக் கழகம்; சர் சி. பி. ராமசாமி ஐயர்.

(பல்கலைக் கழகத்தின் பெயரை மட்டும் ஜிக்கு ஜார்ஜ் சரியாகக் கூறினார். இரண்டாவது கேள்விக்கு எவராலும் பதிலளிக்க முடியவில்லை.)

கேள்வி: Logarithms ஐ எவர் கண்டு பிடித்தது என்று தெரியுமா?

பதில்: ஜான் நேபியர்.

(ஜிக்கு ஜார்ஜ் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: குச்சிப்புடி நடனமும், ஒடிஸி நடனமும் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவை?

பதில்: குச்சிப்புடி ஆந்திரத்தையும் ஒடிஸி ஒரிஸா மாநிலத்தையும் சேர்ந்தது.

(ஒரிஸா என்பதை மட்டும் கோதாவால்லா சரியாகச் சொன்னார்.)

கேள்வி: ஹைதராபாத் விமான தளம் இருக்கும் இடம் தெரியுமா?

பதில்: பேகம்பேட்.

(திரு விஜய் சேகர் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: தூக்கமற்ற நிலைமைக்கு ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை உண்டு. Alternate word for sleeplessness என்னவென்று கூற முடியுமா?

பதில்: Insomnia

(மணிவர்ணன் சரியாகப் பதிலளித்தார்.)

கேள்வி: சமீபத்தில் பிரபல தமிழ் எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒரு விருது பெற்றார். அது என்ன?

பதில்: ரஷ்ய நாடு வழங்கும் நேரு விருது.

(நிஷித் சரியாகப் பதிலளித்தார்.)

[போட்டி முடிவில் மதிப்பெண்களைக் கணக்கிட்டபோது திரு ஜிக்கு ஜார்ஜ் 12 மதிப்பெண்கள் பெற்று முதலாவதாக வந்தார். கல்கி சார்பில் அவருக்கு ரூ. 50 பரிசு அளிக்கப்பட்டது. திரு சுரேஷ் தாஸ் பரிசை ஜிக்குவுக்கு வழங்கினார்.]

நிகழ்ச்சி தொகுப்பு: **சாயகன்**
புகைப்படம்: **மன்னை மூர்த்தி**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''அதோ போறாரே, அவர் லைட் பாயாவிருந்து புரொட்யூசர் ஆனவர், பாவம்!''

''எதற்கு பாவம் என்கிறீர்?''

''அவர் படம் வெளிவந்த பிறகு மறுபடியும் லைட் பாயாக ஆகிவிடுவார் என்பதை நினைத்துத்தான்.''

-மு. செல்வபாண்டியன்



பாலை வெறுத்த ராஜு உவந்து பருகுகிறான் நான் நியூட்ரமுல் சேர்த்தபின்.



இன்றோ நியூட்ரமுல் 'வஸ்தாது' அவன்தான்.

குழந்தைகளைப் பால் குடிக்க வைப்பது பெரும்பாடாக இருப்பானேன். இல்லையென்கிறார்கள் பல்லாயிரம் தாய்மார்கள். அவர்கள் வாழ்த்துவது நியூட்ரமுல் இனிமை. ருசிக்கு ருசி. பலத்துக்கு பலம்... கோக்கோ, பால், மால்ட் யாவும் செறிந்த நியூட்ரமுல்...பலேருசி. வளப்பமாக அதிலுள்ளவை புரதச்சத்துக்கள் வைட்டமின்கள், உலோக தாதுக்கள் வளரும் உடம்புக்கு போஷாக்கு. ருசிமயமான நியூட்ரமுல்... பருகப் பருகப் பலம் பெருகும் பெருகும்.



அமுல் படைப்பு

நியூட்ரமுல் பருகப் பருகப் பலம் பெருகும் பெருகும்.

மார்க்கெட் செய்வோர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட்,
ஆனந்த், குஜராத்

daCunha GCM-16 TM

முழு நாவல்

கிரியாஊக்கி

செம்பியன்



1

கடற்கரையில் சந்திரோதயத்தை வர்ணித்தாள் சரோஜா. ''நீலக் கடல் அலைக் கரங்களை நீட்டி ஆரவாரித்து எழுகிறது. சந்திரனை எட்டிப் பிடித்து ஆலிங்கனம் செய்து கொள்ளலாம் என்ற ஆசையோடு பொங்கி எழுவதுபோலத் தோன்றுகிறது. அந்த ஆசை பூர்த்தி பெறாமல் சரிந்து விழும்போது, கோபமும் தாபமும் மிக கண்ணீர், வெண் முத்துக்களாய்ச் சிதறுகின்றன. சந்திரன் ஆரஞ்சு வர்ணத்தில் பிரகாசமாய்க் காட்சி தருகிறான். 'என்ன அவசரம் இரவெல்லாம்தான் இருக்கிறதே!' என்று கூறுவான் போல் நிதானமாய் மேலெழும்புகிறான். சிறிது சிறிதாக அந்த ஆரஞ்சு வர்ணம் மாறிச் சந்தன நிறம் பெறுகிறான். இப்பொழுது இன்னும் அழகாகத் தோன்றுகிறான். அந்த அழகிலே சொக்கிப் போய் அசைவற்று இருப்பது போல் தோன்றும் கடல் மறுபடியும் வேட்கை மிகுந்து பொங்குகிறது. காற்று இந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டும் என்று நாணத்துடன் அவசரப்படுவது போல நிலத்தை நோக்கி வீசுகிறது. இதோ ஒரு நண்டு வெட்கத்துடன் தன் வளைக்குள் புகுந்து கொள்கிறது. மேகங்களே இல்லாத நிர்மலமான வானத்தில் நட்சத்திரங்கள் கண்சிமிட்டி அலைகடலின் அவஸ்தையைப் பார்த்துச் சிரிக்கின்றன. ரொம்பத் தாமதமாகத் தம் கூடுகளை நோக்கி ஏகும் பட்சிக் கூட்டம் ஒன்று காற்று மெத்தையில் வழுக்கிக் கொண்டு போவது போல் அனாயசமாக விரைந்து செல்கிறது. வெண் மணல் பரப்பு நிலவொளியில் பளபளப்புப் பெற்று மின்னுகிறது. ஜனநடமாட்டமே அதிகமில்லை. நிழலுருவங்களாகத் தொலைவில் சிலர் சாலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்... போதுமா, இன்னும் கொஞ்சம் சொல்லவா?''

''நீ எவ்வளவு பேசினாலும் நான் கேட்டுக் கொண்டே இருக்கத் தயார், சரோஜ்!'' என்றான் சுபாஷ். ''இலக்கியங்களில் இது போன்ற பல வர்ணனைகளைப் படிக்கும்போது பலருக்கு அதன் மகத்துவம் புரிவதேயில்லை. என்னைப் போன்ற குருடர்களால்தான் இயற்கை வர்ணனைகளின் மகத்துவத்தை அதிகமாக உணர முடியும். என் மனத்தில் நீ இப்போது சொன்னதை யெல்லாம் ஒரு சித்திரமாக நான் காண்கிறேன். உன்னைப் பொறுத்த மட்டில் இந்த ஓவியக் காட்சி இதற்குள் மாறியிருக்கலாம். ஆனால் என் உள்ளத்தில் மாறாமல் அப்படியே பல காலம் இருக்கும்.''

மாற்றம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது. இதோ சந்திரன் இதற்குள் தனது சந்தன நிறத்தைத் துறந்து பால் போன்ற வெண்ணிலவாக மாறிவிட்டிருக்கிறான். நட்சத்திரங்கள் முன்னிலும் பிரகாசமாய்த் தெரிகின்றன. பனிப் படலம் சூழ்வது போல் ஆனால் அதனினும் மிக மெல்லியதாகச் சல்லாத் துணி போல நிலவுத் திரை எங்கும் சூழ்ந்திருக்கிறது....

''சரோஜ்!''

''உம்....!''

''எனக்கு ஒரு உதவி செய்வாயா?''

''மாட்டேன்! இப்படி யெல்லாம் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தால் என்னால் முடியாது. நேரடியாக இதைச் செய், இப்படிப் பண்ணு என்று சொல்லுங்கள். இந்த உபசார வார்த்தைகளுக்கெல்லாம் இன்னுமா நமக்கிடையே அவசியம் இருக்கிறது?''

''அப்படியானால் சரி, சரோஜ், நான் சொல்வதைக் கேட்டுச் சிரிக்காமல் என் விருப்பத்தை நிறைவேற்று! எனக்கு என் உருவத்தை நிலைக்கண்ணாடியில் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஒரு ஆசை! எனது பேசும் நிலைக் கண்ணாடியாகச் சற்று நேரத்துக்குப் பணி புரிய வேண்டும்!''



''பேஷாக...ஆரம்பிக்கட்டுமா?''

''நினைவிருக்கட்டும் சரோஜ்! நிலைக் கண்ணாடிக்குப் பொய் பேசத் தெரியாது!''

சரோஜா சிரித்தாள். ''எனக்கும் தெரியாது. பொய் பேச , வேண்டிய அவசியமே எனக்குச் சிறு வயதிலிருந்து ஏற்பட்டதில்லை. என் பெற்றோர் அதற்கு இடம் வைத்ததும் இல்லை. நான் வளர்க்கப்பட்ட விதம் அப்படி. சரி, சொல்லட்டுமா...?

''உங்கள் தலை முடி நெளி நெளியாக இருக்கிறது: எவ்வளவுதான் வாரி விடப்பட்ட போதிலும் முன்புறத்தில் சில கேசச் சுருள்கள் சுருண்டு வந்து விழுகின்றன. நீண்ட தலைமுடி, ஸ்டெப் கட்டிங் எல்லாம் உங்களுக்குப் பிடிக்காது போலும்!''

''உனக்குப் பிடிக்குமா?''

''எனக்குப் பிடிக்கும் பிடிக்காது என்பதற்காக நீங்கள் ஒரு காரியத்தைச் செய்வது எனக்குப் பிடிக்காது. நீங்கள் நீங்களாக இருப்பதுதான் எனக்குப் பிடிக்கும்... மேலே தொடரட்டுமா...? உங்கள் முகம் வட்டவடிவமாக இருக்கிறது. சிரித்தால் கன்னக்கதுப்புக்கள் உள்ளத் தூண்டும் விதமாகப் பம்மி



எழுகின்றன. புருவங்கள் அடர்த்தியாக உள்ளன. கண் இமைகள் நீண்டு மேல் நோக்கிச் சுருண்டு இருக்கின்றன. ஒரு நாள் தாடி சொர சொரப்பை ஏற்படுத்தினாலும் முகம் பிரகாசமாகத்தான் இருக்கிறது.. கறுப்புமில்லை சிவப்புமில்லை. பழுப்பு நிறத்தவர். உங்கள் வலது காதிலிருந்து மட்டும் இரண்டு ரோமங்கள் நீண்டு வெளியே எட்டிப் பார்க்கின்றன.

''உங்கள் தோள்கள் உயர்ந்து காணப்படுகின்றன. தன்னம்பிக்கை அதில் தெரிகிறது. மார்பு அகன்று விரிந்திருக்கிறது. இடை சிறுத்தும் வயிறு இருக்கிற இடமே தெரியாமலும் விளங்கி நீங்கள் சரியாகச் சாப்பிடுவதே இல்லை என்பதை உணர்த்துகின்றன. கால்கள் நீண்டு இருக்கின்றன. உங்களுக்கு மட்டும் பார்வை இருந்தால் மிக வேகமாகக் கால்களை எட்டிப் போட்டு விருவிருவென்று நடப்பீர்கள்...''

''முக்கியமான விஷயத்தைக் கூறாமல் விட்டு விட்டாயே?''

''என்ன?''

''கண்கள்?''

''சபாஷ்! எனக்குப் பொய் பேசத் தெரியாது என்று முன்பே சொன்னேன். நம்பினால் நம்புங்கள் நம்பாவிட்டால் போங்கள்! உங்கள் கண்களை நோக்கும்போது அது பார்வையற்றது என்று யாருமே எண்ண மாட்டார்கள். அத்தனை அழகாக இருக்கிறது. விழிகள் நேர்த்தியாக அழகாக மையத்தில் கச்சிதமாக அமைந்துள்ளன. வெண் பட்டில் கறுப்புத் திராட்சையை வைத்தாற் போல் பளிச்சென்று இருக்கின்றன. நீங்கள் நடந்து கொள்கிற விதத்தால் பார்வை யற்றவர் என்பதை யாரேனும் அனுமானிக்கலாமே யொழியக் கண்களை நோக்கும்போது அவை ஒளி அற்றவை என்று யாருக்குமே தோன்றாது. அதனால்தான் உங்களுக்குக்கறுப்புக் கண்ணாடியே தேவையில்லை என்று நான் வற்புறுத்தி வந்திருக்கிறேன்.... சரி, கிளம்புவோமா நேரமாகிறது.''

''இன்னும் ஒரு விஷயம் பாக்கி இருக்கிறது, சரோ!''

''என்ன?''

''சூழ்நிலையை வர்ணித்தாய், மகிழ்ந்தேன். என்னை வர்ணித்தாய், நெகிழ்ந்தேன். இப்போது உன்னையும் வர்ணித்துவிடு! பரவசமாகி மெய்சிலிர்க்கிறேன்!''

''என்னை நானே வர்ணித்துக் கொள்வதா? அதை நீங்களல்லவோ செய்ய வேண்டும்.''

''ஓகே ஐ ஆம் ரெடி! ப்ளீஸ் மே ஐ டேக் யுவர் ஹேண்ட்?''

அவள் சில விநாடிகள் தாமதித்துத் தன் கரத்தை நீட்டப்பட்ட அவனது உள்ளங் கையில் வைத்தாள். மெல்ல வலது கரத்தால் அதைப் பொத்திக் கொண்டான். பிறகு மிருதுவான அந்த விரல்களை ஒவ்வொன்றாய் ஸ்பரிசித்துப் பார்த்தான். ''நீண்ட கரம், நேர்த்தியான விரல்கள். சுட்டு விரல் முதல் சுண்டு விரல் வரை எல்லாம் அளவாகக் கச்சிதமாக இருக்கின்றன.''

மெல்ல அந்தக் கரத்தை இலேசான வற்புறுத்தலுடன் இழுத்துத் தன் முகத்தருகே கொண்டு சென்றான். அதனை முகரும் போதே யதேச்சையாக ஏற்பட்டது போல் அதனைத் தனது உதடுகளால் ஸ்பரிசித்தான். ''நேற்று இரவுதான் மருதாணி இட்டுக் கொண்டிருக்கிறாய், இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்றாள் வியப்புடன்.

''சானல் 5 ஸெண்ட் வாசனை சூழ்ந்தாலும் மருதாணி மணத்தையும் இலேசாக உணர முடிகிறது. இவ்வளவு அருகில் வைத்துப் பார்த்தால்!''

''சானல் இல்லை, கிரிஸ்டீன் டயார்!'' என்றாள்.

''ஐ ஸ்டாண்ட் கரெக்டட்'' என்று கூறியவாறே மெல்ல அவள் உள்ளங் கையிலிருந்து தொடங்கி இலேசாகத் தடவியவாறே வழி கண்டு பிடித்துக் கொண்டு தன் விரல்களை மேலே கொண்டு சென்றான். அவள் தோள்களில் வழுக்கிச் சென்று கழுத்திலே உயர்ந்து முகத்தை அடைந்தன அவை. ''செழுமையான கரங்கள்; பால் வெண்மை!''

''இல்லை, மாநிறம்தான்!'' என்றாள்.


இதற்குள் அவள் முகம் அவனது இரு கரங்களுக்கிடையிலும் சிறைப்பட்டு விட்டிருந்தது. நாசூக்காக, கண்கள், நெற்றி, கன்னம், காது, அதரங்கள் என்று தனித் தனியே விரல்கள் இலேசாக ஸ்பரிசித்துப் பார்த்தன.

''என்ன, மௌனமாகி விட்டீர்கள்! வர்ணனையே காணோமே'' என்றாள்.

''நான் வாயடைத்துப் போய்விட்டிருக்கிறேன் சரோ!'' என்றான் சுபாஷ்.'' இத்தனை அழகாய் இருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை! கிட்டத்தட்ட காதளவு நீண்டு அகன்ற கண்கள்! சந்திரக் கிரணங்களின் ஒளியைப் பிரதிபலித்து அவை மின்னுவதை என்னால் உணர முடிகிறது. உன் நெற்றி அளவாக இருக்கிறது. நல்லவேளை குங்குமம் இன்றி செஞ்சாந்து அணிந்திருக்கிறாய். என் விரல் பட்டதால் கலையவில்லை. காதுகள் சங்குப் புஷ்பங்கள் போல் இருக்கின்றன. மூக்கு நீர்க்கமாக எடுப்பாக இருக்கிறது. உன் முகம் சற்று நீண்டது

◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆

பசு, எருமை மாடுகளை வீதிகளில் அலைய விடுபவர்களைப் பிடித்து வந்து, போலீஸ் ஸ்டேஷன் முன்னால், அம்மாடுகளிலிருந்து பால் கறந்து தண்ணீர் கலக்காமல் ஒரு மாத காலம் விற்பனை செய்ய வேண்டும் என்ற தண்டனையை விதிக்கலாம். இதை விடப் பெரிய தண்டனை இருக்க முடியாது.



ஆறு மனமே ஆறு ①

தான். கன்னங்களில் சதைப் பற்று அதிகமில்லை. ஆனால் மிருதுவாக வழுவழுப்பாகச் சிற்ப செதுக்கிய வடிவமைப்புக் கொண்டதாக விளங்குகின்றன. உன் அதரங்கள் புன்னகையில் விரியும்போது கன்னங்களில் குழி விழுவதை உணர முடிகிறது...''

அவன் கரங்கள் அவள் கழுத்துக்கு இறங்கின. ''அப்பா! எவ்வளவு உயர்ந்த கம்பீரமான கழுத்து! இதனைச் சுற்றிச் சூழ்ந்து அணிகலனாக விளங்குவதில் பெருமை யுற்ற இரட்டை வடமுத்துச் சரம்!''

அவனுடைய கரங்கள் அவளுடைய தோள்கள் மீதாகப் படர்ந்தபோது, ''போதும் போதும், இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவள் சிரித்தபடி.

''அதெல்லாம் முடியாது. நீ மட்டும் என்னைப் பாதாதி கேசம் வரை வர்ணிக்க வில்லையா? நானுடைய பதிலுக்கு....''

''சரிதான் போங்கள்!'' என்று அவள் எழுந்து மணலை உதறிக் கொண்டாள். அவனும் அவசரமாக எழுந்து கரங்களை நீட்டித் துழாவி அவளைப் பிடித்தான். 'விட மாட்டேன்' என்று கூறிச் சுற்றி வளைத்தான்.

அவள் தடுக்கவில்லை. தடுக்க மனம் வரவில்லை என்பதோடு அந்த ஆலிங்கனத்தை விரும்பி வரவேற்கவே செய்தாள். இப்படி கபாஷ் நடந்து கொண்டிருக்கவில்லையானால் தனக்கு ஏமாற்றமாக இருந்திருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது. அவள் தன்னை விடுவித்துக் கொள்ள முயலவில்லை என்பதே அவனை நிதானிக்கச் செய்தது. அவள் தன்னிடம் கொண்டுள்ள காதலை, வைத்திருக்கும் நம்பிக்கையைத் தான் துஷ்பிரயோகம் செய்வது போல் உணர்ந்தான். மெல்ல மெல்ல அவன் கரங்கள் தளர்ந்தன. அவளை விடுவித்தான். அவ்வாறு விடுவிக்கப்பட்டதால் அவள் மீது அவனுக்கு மதிப்பும் அன்பும் மேலும் அதிகரிக்க அவள் நெகிழ்ந்தாள். கண்கள் பனித்தன.

''சரோ! என்னை மன்னித்துவிடு! நான் அத்து மீறிப் போக இருந்தேன்!'' என்றான்.

அவள், அவன் வலக்கரத்தை ஆர்வத்துடன் பற்றி உயர்த்தி, தன் அதரங்களை எத்தனையோ முறை பல்வேறு இடங்களில் பதித்தாள். பற்றிய கரத்தை விடாமல், ''வாருங்கள், போகலாம்'' என்று அழைத்துச் சென்றாள். ''மனங்கள் ஒன்றுபட்ட பின் மன்னிப்புக் கோருவது, மன்னிப்பது எல்லாம் அர்த்தமற்ற செயல்கள். உங்கள் காதல் மெய்யானது. அது அத்துமீறிப் போக உங்களை அனுமதிக்காது.''

அவள் மனம் முழு திருப்தியில் நிறைந்திருந்தது. அதற்கு மேல் அவர்கள் பேசவில்லை. பேச அவசியம் இருக்கவில்லை. அவளை அவள் வீட்டு வாசலில் இறக்கிவிட்டு, கார் கதவைத் திறந்து அவள் இறங்க உதவியவரை மௌனம் நீடித்தது. ''குட் நைட்!'' என்றான் விடை பெறு முகமாக.

''சரோ ஒருசின்ன ரிக்வெஸ்ட்!''

''என்ன?''

''உனக்குக் கொலுசு இருக்கிறதா?''

''இருக்கிறதே. வெள்ளியில் முன்பு அம்மா செய்தாள். இப்போதெல்லாம் பயன்படுத்துவதில்லை. அவுட் ஆஃப் ஃபேஷன்...''

''ஃபேஷன் இல்லை என்றாலும் எனக்காக எப்போதும் நீ கொலுசு அணிய வேண்டும்!''

''ஆகட்டும்!'' என்றாள் மெல்ல நகைத்து. அதுவே கொலுசு எழுப்பும் ஒலி போல் இனிமையாக ஒலித்தது. பார்வையற்ற அவன், செவிப் புலனால் தன் அருகாமையைச் சதா உணர விரும்புகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

''அன்டில் வீ மீட் எகைன்'' என்று கூறி விடை கொடுத்தான்.

2

"ஏனம்மா இவ்வளவு நேரம்?'' என்றார் ஆண்டியப்பன். பெயர்தான் ஆண்டியப்பனே யொழியப் பெரும் தனக்காரர். சுயமாகச் சம்பாதித்து முன்னுக்கு வந்தவர். எனவே அவருக்கு ஏழ்மையின் துயரங்களும் தெரியும், செல்வத்தின் சௌகரியங்களும் தெரியும். உழைப்பின் உயர்வும் தெரியும், சோம்பலின் அபாயங்களும் தெரியும். வாய்ப்புகளை நழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியங்களை உணர்ந்திருந்தார். இவை யெல்லாவற்றையும் தம் மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்களைக் கர்வமற்றவர்களாக, கருணை உள்ளத்தவர்களாக, சுறுசுறுப்பானவர்களாக, தன்னம்பிக்கையுடன் செயல் படுகிறவர்களாக வளர்த்திருந்தார். அக்கா தம்பி இருவருக்குமே உயர் கல்வி அளித்தார். அத்துடன் அவர்களுக்குப் பூரண சுதந்திரம் அளித்து அதனைப் பொறுப்புணர்வுடன் அவர்கள் பயன்படுத்துகிறார்களா என்பதை மட்டும் கண்காணித்து வந்தார். இதனால் பெண்ணும் பிள்ளையும் அவருடன் வாதம் புரியவும் தயங்க மாட்டார்கள். தம் பக்கம் தவறு இருந்தால் ஒப்புக்கொள்ள ஆண்டியப்பன் என்றும் தயங்கியதில்லை. அந்த நல்ல குணம் அவருடைய செல்வங்களிடமும் படிந்து விட்டது. எனவே விவாதமாக ஆரம்பித்தாலும் விபரீத முடிவு என்றுமே ஏற்பட்டதில்லை.

''நேரமானதற்குக் காரணம் இருக்கிறதப்பா! கபாஷும் நானும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டோம்!''

"ஆமாம், இறுதிப் பரீட்சை கிட்டத்தில் இருக்கிறதல்லவா? நிறைய டிஸ்கஷனுக்கு இடம் இருந்திருக்கும்!"

"அதுமட்டுமில்லே அப்பா! எங்கள் எதிர்காலம் பற்றியும் பேசினோம்!"

ஆண்டியப்பன் மௌனமானார். பைப்பை எடுத்து அதில் நிதானமாகப் புகையிலை நிரப்பித் தீக்குச்சி கிழித்துப் பற்ற வைத்துக் குபுகுபுவென்று புகையை இழுத்து விடும் வரை நிதானித்தார். அந்த நேரம் முழுவதும் 'எங்கள் எதிர்காலம்' என்ற வார்த்தைகளைப் பற்றித்தான் அவர் சிந்திக்கிறார் என்பது அவளுக்குப் புரிந்தது. காத்திருந்தாள்.

"எங்கள் என்று இருவரையும் பிணைத்து நீ பேசியதைக் கவனித்தேன்!" என்றார்.

"ஆமாம், அப்பா! ஐ ஸீக் யுவர் பர்மிஷன் டு மேரி ஹிம்" — நெருடலான சில விஷயங்களை ஆங்கிலத்தில் சொல்லி விடுவது சுலபமாக இருக்கிறது என்று, அவர் மறுபடியும் மௌனமானபோது இவள் எண்ணினாள். ஏன் அப்படி? தான் ஆங்கில இலக்கியம் படிப்பதாலா அல்லது தாய் மொழியில் கூறும்போது செய்தி அவர் இதயத்தைத் தாக்குமானால் அதன் வீரியம் அதிகமாயிருக்கும் என்பதாலா?

பைப் நாலு தடவை அவர் வாய்க்குள் செருகப்பட்டுத் திரும்பியது. பிறகு, நீண்ட பெருமூச்சுடன் புகையை வெளியேற்றி விட்டு எழுந்து, மடியிலிருந்த நாளிதழ் கீழே சரிந்து விழுவதையும் பொருட்படுத்தாது நின்றார்.

"சரோ! உனக்கும் உன் தம்பிக்கும் அளவோடு சுதந்திரம் கொடுத்து வளர்த்தேன். அப்படி சுதந்திரம் தருவதாலேயே பொறுப்புணர்வு வளரும் என்று எதிர்பார்த்தேன். என் கணக்குப் பிசகி விட்டதா?"

"இல்லே அப்பா! இல்லவே இல்லே. இப்போதும் நான் பொறுப்புணர்வுடன்தான் பேசுகிறேன்!"

"சுபாஷை நான் பார்த்திருக்கிறேன். இங்கேயே வந்திருக்கிறான். பார்க்கவும் நன்றாயிருக்கிறான். தயக்கம் கூச்சம் இன்றித் துணிவுடன் புத்திசாலித்தனமாகப் பேசுகிறான். எம். ஏ. தானே படிக்கிறான்?"

"ஆமாம் அப்பா. லிட்ரசர் எம். ஏ. ஸ்காலர்ஷிப் கிடைத்துப் படிக்கிறார். பிரிலியண்ட் ஸ்டுடண்ட். எல்லாவற்றிலும் டிஸ்டிங்க்ஷன்."

"ஆனால் அவன் ஏழை."

"நீங்களும் ஒரு காலத்தில் ஏழையாக இருந்தவர்தான் அப்பா."

"அதை எனக்கு நீ நினைவு படுத்த வேண்டிய அவசியமில்லே. எப்போதும் என் நினைவில் இருப்பதுதான். அவன் பார்வையற்றவன்."

"கண்ணிருந்தும் குருடாய் இருப்பவர்கள் எத்தனையோ பேரைவிடப் பார்வையில்லாதிருந்தும் படிப்பில் மேதையாக, பண்பில் செக்உந்தராக இருப்பது மேல்!"

"அவன் குடும்பம்? ஜாதி?"

"கௌரவமான குடும்பம், மனித ஜாதி!"

"நம்மவர்கள்தான் என்பது எனக்குத் தெரியும். ஜாதகம். பார்த்து விடலாமா?"

"மனப் பொருத்தம் சரியாக இருக்கிறது அப்பா."

"பார்வையற்றவனுக்குப் பாடம் படித்து உதவப் போய் ஒருவர் மனத்தை ஒருவர் படித்து விட்டீர்கள்! ஒரு கருணைப்பணி காதலாக மாறும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லே!"

"நானும் நினைக்கவில்லே அப்பா! அவரது கண்களாக விளங்கி, அடிக்கடி அவருக்கு நான் பாடம் படித்துக் காட்டிய போது, ஒரு சமூக சேவை என்ற எண்ணத்தில்தான் செய்தேன். ஆனால் அது எப்படியோ எங்களையும் அறியாமல் நாளாவட்டத்தில் நட்பாக வளர்ந்து பிறகு காதலாகவும் மலர்ந்து விட்டது. எண்ணிப் பார்த்தால் எனக்கே வியப்பாக இருக்கிறது!"

"நன்றாக யோசித்துப் பார் அம்மா. இது கருணை அல்லது அனுதாபம் என்ற கருத்தில் அடங்குவதாக இருக்கப் போகிறது. 'ஐயோ பாவம்' என்னும் பரிதாப உணர்வைக் காதல் என்று தவறாகக் கணித்து விட்டாயானால் பிற்காலத்தில் ரொம்ப ரொம்பக் கஷ்டமாகி விடும்."

"நான் தெளிவாக இருக்கிறேன் அப்பா!"

"அவன் பெற்றோர் என்ன சொல்வார்களோ?"

"நீங்களும் அம்மாவும் போய்க் கேட்டால் மறுக்கப் போவதில்லே. பெருமையாக நினைப்பார்கள்."


"எல்லாவற்றுக்கும் பதில் வைத்திருக்கிறாய். சரி போய்ப் பார்க்கிறேன். உனக்கு நல்ல இடத்தில் கல்யாணம் ஆக வேண்டுமே என்ற கவலே எனக்கு இருந்து வந்தது. என் வேலையை எளிதாக்கி விட்டாய்."

"கடினமான காரியமே இனிமேல்தானே ஆரம்பமாகப் போகிறது! அம்மாவிடம் பேசி நீங்கள்தான் ஜெயிக்க வேண்டும்!"

"மாப்பிள்ளை வீட்டோடு வந்து இருப்பான், மகளைப் பிரிய நேராது என்றால் அம்மா உடனே சரி என்றுவிடுவாள்."

"அது நடக்காத காரியம் அப்பா! மாமனார் வீட்டோடு வந்து தங்கிவிடக் கூடியவர்

வாகனங்களை வேகமாக ஓட்டுபவர்களுக்கு, ஐம்பதடி நீளத்துக்கு வாழைப் பழத் தோல்களைப் பரப்பி அதன்மீது ஒரு டின் விளக்கெண்ணெயை ஊற்றி, கீழே விழாமல் அந்த ஐம்பது அடியை ஒரு நிமிடத்தில் ஓடிக் கடக்க வேண்டும் என்ற தண்டனையை வழங்கலாம்.



அல்ல அவர். பார்வை இழந்ததோடு தன் மானத்தையும் அவர் இழந்துவிட வில்லை.''

''பின்னே?''

''தனிக் குடித்தனம். அவர் இலக்கியத் துறையில் தம் ஆற்றலை வளர்த்துக் கொள்ளப் போகிறார். ஏற்கனவே ஆங்கிலத்தில் அவர் எழுதிய பல கதை கட்டுரைகளை இந்தியப் பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் வெளிவரும் ஒருசில பத்திரிகைகளுக்கும் அனுப்பியதில் நாலு கதைகள் நிராகரிக்கப்பட்டாலும் இரு கட்டுரைகள் ஏற்கப்பட்டுள்ளன. எனவே உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் தமது எழுத்தாற்றலால் பிரகாசிக்க முடியும் என்று நம்புகிறார். டைப்ரைட்டரை இயக்குவதில் நிபுணர்.''

''நீ?''

''நான் பரீட்சை முடிந்து பட்டம் பெற்றதும் ஒரு பள்ளியில் உபாத்தியாயினியாக வேலை தேடிக் கொள்ளப் போகிறேன். அப்படியே எம். ஏ.க்கும் படிக்கப் போகிறேன். இருவருமாகச் சேர்ந்து சம்பாதிப்பது எங்களுக்குப் போதுமானதாக இருக்கும்.''

''குழந்தை பிறக்கும்வரைதானே?''

''நாங்கள் அவசரப்படப் போவதில்லை.''

''சரி, அண்ணாநகர் பங்களாவை வாடகைக்கு விட்டிருக்கிறோம் அல்லவா? அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விடுகிறேன். பெயிண்ட் அடித்துப் புதுப்பிக்க ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் அங்கே தங்கிக்கொள்ளலாம். ஒரு கார், டிரைவர், கூர்க்கா, சுபாஷுக்கு உதவியாக ஒரு ஸெர்வண்ட், உனக்கு ஒரு வேலைக்காரி....''

''அப்பா பிளீஸ்! நாங்கள் எங்கள் சம்பாத்தியத்தில் வாழ விரும்புகிறோம். உங்கள் தயவில் அல்ல.''

''அது சரி. ஆனால் இத்தனை செல்வம் இருக்கிறதே இதையெல்லாம் நான் யாருக்குக் கொடுப்பேன்? உனக்காகத்தானே...''

''கொடுங்கள் அப்பா. வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் எங்கள் தன்மானத்தைப் பாதிக்காத வகையில் அதைச் செய்யுங்கள். அதற்கு உரிய சமயம் வரட்டும். தம்பி படித்து முடிக்கட்டும். அவன் விருப்பங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கென்றும் சில ஆசைகள் இருக்கும். வியாபாரத்தில் உங்களுக்கு ஆதரவளித்து வளர்த்த சமுதாயத்துக்காக நீங்கள் பிரதியுபகாரமாக அறக் கட்டளைகள் சில நிறுவப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். அதையெல்லாம் முதலில் நிறைவேற்றுங்கள். அப்புறம் எங்களைப் பற்றிப் பார்த்துக் கொள்ளலாம்.''

''சரி, கல்யாணத்தையாவது நான் சிறப்பாக நடத்திப் பார்க்கலாம் இல்லையா?''

''அதுவும் அவசியமில்லையப்பா. அடக்கமாகவே நடக்கட்டும். உங்கள் நண்பர்களையெல்லாம் அழைக்க நீங்கள் விரும்பலாம். அது நியாயம். அதற்கு நாங்கள் தடை கூறமாட்டோம். ஒரு ரிஸப்ஷனுக்கு ஏற்பாடு செய்யுங்கள். அதைத் தொடர்ந்து டின்னர். பிறகு ஏழரை மணிக்கு ஆரம்பித்து ஒன்பதரை வரை ஒரு கச்சேரி.''

''ஆ! பத்மநாபன் புளூட்!''

''வேறு யார்? அவர்தான் மகிழ்ச்சியோடு காத்துக் கொண்டிருப்பாரே!''

''சரி, நீங்கள் குடியிருக்கப் போகும் போர்ஷனிலாவது கட்டில், ஃபிரிட்ஜ், சோபா செட், டைனிங் டேபிள் எல்லாம் வாங்கிப் போட்டு ஃபோனுக்கும் ஏற்பாடு செய்து விடுகிறேன்.''

''அப்பா! வெகுமதிகளைக் கொடுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. அது உங்கள் அன்பை உணர்த்துவது போல் இருக்க வேண்டும். நமது செல்வச் செருக்கைக் காட்டிக் கொள்வது போல் எதையும் செய்து விடாதீர்கள். அது சுபாஷின் உள்ளத்தை ரொம்பவும் புண்படுத்தி விடும். உங்க காரைக் கூட இப்போது நான் பயன்படுத்துவது போல் திருமணமான பின்னர் உபயோகிக்க மாட்டேன்.''

''ஐ ஆம் புரௌட் ஆஃப் யூ சரோ!'' என்றார் ஆண்டியப்பன். ''என் மாப்பிள்ளை பற்றியும் நான் பெருமைப்படுகிறேன். எப்போதுமே மனத்தில் பட்டதை வெளிப்படையாகப் பேச உனக்குக் கற்றுக் கொடுத்தேன். உன் பதில்கள் எல்லாம் எனக்கு ரொம்பவும் திருப்தியளித்துள்ளன. உன்னைச் சரியானபடிதான் வளர்த்திருக்கிறேன் என்பதில் நானும் பெருமைப் பட்டுக் கொள்கிறேன்.''

''இனி அம்மாவைத்தான் சரிக்கட்டணும்.''

''அதை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ கவலைப்படாதே'' என்றார் ஆண்டியப்பன், அவள் தோள்களில் தட்டிக் கொடுத்தார்.

3

''இருவரது பெற்றோரும் திருமணத்துக்குச் சம்மதித்து விட்ட மகிழ்ச்சியைக் கொண்டாட சினிமாவுக்குப் போவோம்'' என்றான் சுபாஷ். ''கச்சேரிக்குப் போவோம்'' என்றாள் சரோ. ''புளூட் பத்மநாபன் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''கேள்விதான், வாசித்துக் கேட்டதில்லை.''

''பிரமாதமாக வாசிப்பார். மாயக் கண்ணன் குழலிசை பற்றி நாம் எவ்வளவோ கதைகள் கேள்விப்பட்டிருக்கிறோமே, அதெல்லாம் ஒன்றும் மிகைப்படுத்திச் சொன்னதல்ல என்றே தோன்றும் இவர் வாசிப்பைக் கேட்டால்.''

''அப்போ போய்வர வேண்டியதுதான்.''

சபா காரியதரிசிக்கு அவளைத் தெரியும். ''அப்பா வரலையா?'' என்று கேட்டு வரவேற்றார்.

''இல்லே! ஏதோ போர்ட் மீட்டிங்காம். வீடு திரும்ப நேரம் ஆகும் என்றார்.''

சுபாஷை அவருக்கு அறிமுகப்படுத்தினாள். பெயரையும் எம். ஏ. ஃபைனல் இயர் என்பதையும் மட்டும் கூறினாள்.

''தெரியுமே! கல்யாண விருந்துச் சாப்பாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோமே'' என்றார் அவர்.

''அடடே! அதற்குள் இவ்வளவு தூரம் விஷயம் பரவிவிட்டதா?'' என்றாள் வியப்பும் நாணமும் கலக்க.

''சரிதான். உங்க அப்பா பார்க்கிற பேரிடமெல்லாம் தமது மகளைப் பற்றிப் பெருமையாகப் பீற்றிக் கொண்டிருக்கிறார். தெரியாமல் போகுமா? ஆபீஸோ இளப்போ கச்சேரியோ பிஸினஸ் மீட்டிங்கோ எங்கே போனாலும் அருமையான மாப்பிள்ளையைத் தனக்கு அளித்த உன் சாமர்த்தியத்தைத் தான் புகழ்ந்து கொண்டிருக்கிறார்.''

இருவருக்கும் பத்து ரூபாய் டிக்கெட் எடுத்திருந்தாள் சரோஜா. முதல் வரிசையில் அவர்களை உட்கார்த்தி வைத்துவிட்டு, ''பார்வையற்றவர்களுக்குக் காது ரொம்ப நிட்சண்யமாய் இருக்கும் என்பார்கள். பத்மநாபனை எச்சரித்து வைக்கிறேன்!'' என்றார். ஆண்டியப்பன் குடும்பத்துக்கும் பத்மநாபனுக்கும் இடையில் இருந்த நெருங்கிய சிநேகம் சபாக் காரியதரிசிக்கு நன்றாகத் தெரியுமாதலால் இப்படிப் பேசுகிறார் என்பதைப் புரிந்து கொண்டு சுபாஷ் சிரித்தான். ''எனக்கு அவ்வளவு தூரம் சங்கீத ஞானமெல்லாம் கிடையாது. பயப்பட வேண்டாம்'' என்றான்.

''கேட்டுக் கேட்டுப் பழகினால் தன்னால் ஞானம் வருகிறது!'' என்றார் காரியதரிசி. ''எங்களுக்கு அதிகமாகத் தேவைப்படுவது ரசிகர்கள்தாம். ஞானஸ்தர்கள் அல்ல. அரங்கில் ஏறுபவர்களுக்குத்தான் ஞானம் முக்கியம். கேட்பவருக்கு எதற்கு? இதை ரொம்பப் பேர் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்கள். கர்நாடக சங்கீதத்தைக் கேட்டு ரசிக்கத் தனிஞானம் வேண்டும். அது தன்னிடம் இல்லை என்று எண்ணியே பல பேர் கச்சேரிகளுக்கு வருவதில்லை. சபையும் நிரம்புவதில்லை. என் போன்றவர்களுக்குக் கஷ்டமாகப் போகிறது!''

''அப்படி ஒன்றும் கூட்டம் குறைவாக இல்லையே'' என்றாள் சரோஜா.

''பத்துவைப் பொறுத்த மட்டில் அந்தக் கவலை இல்லை. நான் பொதுப்படையாகப் பேசுகிறேன்'' என்றார் காரியதரிசி. ''சரி; நீங்கள் கச்சேரி கேளுங்கள். அப்புறம் சந்திக்கலாம். போவதற்கு முன்னால் பத்துவைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போங்கள். சந்தோஷப்படுவார்'' என்றார்.


''கண்டிப்பாக'' என்றாள் சரோஜா.

''வித் பிளஷர்'' என்றான் சுபாஷ்.

திரை தூக்கியதும் பத்மநாபன் அவையை ஒரு நோட்டம் விட்டான். அதில் வித்யா கர்வம் விகசிப்பதாக சரோவுக்குத் தோன்றியது. இன்னும் கொஞ்சம் அடக்கமாக இருக்கலாம் என்று எண்ணினாள். சரோஜாவை அவன் கண்கள் சந்தித்தன. புன்முறுவல் செய்தான். அடுத்து அவள் அருகே அமர்ந்திருந்த சுபாஷை நோக்கினான். மறுபடியும் இவள் பக்கம் அவன் பார்வை மீண்டது. இலேசான தோள் குலுக்கலுடன் கூடிய கேலிச் சிரிப்பு இழைந்தது. 'இலக்கியப் பாடம் படித்துக் காட்டியது போக இப்போது அவள் கலை உணர்வின் தரம் உயரவும் உதவியாகிறதோ? நல்ல சமூக சேவை!' என்பது போலிருந்தது அந்த மௌனச் சிரிப்பு. புன்னகையுடன் கூடிய உதட்டுப் பிதுக்கலும் புருவ நெரிப்புடன் கூடிய நெற்றிச் சுருக்கலும் தொடர்ந்தன.

பத்மநாபனின் கேலி பழகிப் போன ஒன்றுதான் என்பது போல் இவளும் புன்னகைத்தாள். இந்த நாடகமெல்லாம் கச்சேரி ஆரம்பமாகும் வரைதான். அதன் பின் இசை அமுதத்தில் அவள் முழுமையாக லயித்தாள். அவள் எதிரே அந்த அரங்கம் இல்லை. சுற்றிலும் ரசிகப் பெருமக்கள் இல்லை. பத்மநாபன் இல்லை. பக்கத்தில் காதலன் சுபாஷ் கூட இல்லை. ஏன் அவளே இல்லை! அங்கு இசை மட்டுமே இருந்தது. அது ஒரு சமயம் அருவியாய்ப் பொழிந்தது. ஒரு சமயம் சிற்றோடையாக நெளிந்து பாய்ந்தது. ஒரு சமயம் அலைகளாக எழும்பி விழுந்தது. வேறு ஒரு சமயம் கரை தொட்டுக் கொண்டு பாயும் ஆறுகக் கம்பீரமாகத் தோன்றியது. அதன் பலவித லாவண்யங்களில் அவள் இரண்டறக் கலந்து தன்னை இழந்திருந்தாள். இத்தகைய ஓர் அபார சக்தி பத்மநாபனின் குழலுக்கு எங்கிருந்து வந்தது என்று அவள் பல சமயங்களில் எண்ணிப் பார்த்ததுண்டு. அது உழைப்பு, ஞானம் என்பதையெல்லாம் மீறிய தெய்வானுக்கிரகம் என்ற முடிவுக்குத்தான் அவள் வந்திருந்தாள். தன்னை அப்படியே முழுமையாகக் கவிகரித்து அடிமைப்படுத்தி

போக்கு வரத்துக்கு இடைஞ்சலாகப் பெரிய பள்ளங்களைத் தோண்டிவிட்டுப் பல மாதங்கள் அமைதியாக இருக்கும் கார்ப்பரேஷன் அதிகாரியின் கண்களைக் கட்டி, கீழே விழாமல் நடந்து வரவேண்டுமென்ற நிபந்தனையை வழங்கலாம்.



விடுகிற அந்தத் தெய்வீக இசையிலும் அதனை அநாயாசமான ஆற்றலுடன் பொழிபவனிடத்திலும் அவள் அளவிடற்கரிய மதிப்பும் மரியாதையும் ஏன் பக்தியுமே கொண்டிருந்தாள். இத்தகைய இசையை வழங்கக்கூடிய ஒருவனை அறிந்திருப்பது, அவனுடன் பழகக் கொடுத்து வைத்திருப்பது ஒரு பெரும் பேறு, பாக்கியம் எனக் கருதினாள்.

கச்சேரி முடிந்து சற்று நேரம் ஆன பிறகும் அவள் பறி கொடுத்திருந்த தன் சுய உணர்வுகளைத் திரும்பப் பெறவில்லை. ''போகலாமா?'' என்று சுபாஷ் மெல்ல வினவிய பிறகுதான் அவள் தன் நிலைபெற்றாள். அவள் பார்வையற்ற தன் வசதி கருதிக் கூட்டம் கலையக் காத்திருக்கிறாள் என்றுதான் அவன் எண்ணினான்.

''போகலாம்'' என்று சொல்லி எழுந்தாள். அரங்கத்துக்கு வெளியே காரியதரிசி காத்திருந்தார். ''வாருங்கள், ஒரு நிமிஷம் பத்துவைப் பார்த்துவிட்டு வந்துவிடலாம்'' என்று அழைத்துப் போனார். குழலைக் கண்களில் ஒற்றிக் கொண்டு பிறகு அதனை அதற்குரிய பெட்டிக்குள் வைத்து மூடிக் கொண்டிருந்த பத்து. ''என்ன சரோ! என்னை என்கரேஜ் பண்ண வந்தாயாக்கும்!'' என்றான்.

''உங்கள் இண்டல் புத்தி உங்களை விட்டுப் போகாதே!'' என்றாள் சரோ உரிமையுடன் கடிந்து கொள்கிறவளாக.

''இண்டலுமில்லை ஒன்றுமில்லை. நீ வந்து எதிரே உட்கார்ந்தாலே எனக்கு டானிக் தான். கச்சேரிக்கு இடையில் சின்னதாக ஒரு பெக் போடுவேனே அதைக் கூட இன்று மறந்து விட்டேன், போ! வீட்டை விட்டுக் கிளம்பும்போது போட்டதுடன் சரி.''

''அந்தச் சனியனை விட்டுத் தொலையுங்கள் என்றால் நீங்கள் கேட்க மாட்டீர்களே. உங்களுக்கு எதற்கு அந்தச் செயற்கை ஊக்கமெல்லாம்? இசையே உங்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. நீங்கள் வேறு எதற்கோ அடிமையாகப் பார்க்கிறீர்கள்.''

''ஒவ்வொரு கச்சேரியின் போதும் நீ இதே மாதிரி என் எதிரே வந்து உட்கார்ந்துகொள். நான் விஸ்கியைத் தலையைச் சுற்றித் தூர எறிந்து விடுகிறேன். என் இசைத் திறன் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. அது முழுமையாக வெளிப்பட்டு விகசிக்க... ஒரு கிரியா ஊக்கி வேண்டும்.''

''ஏனய்யா பத்து! நாங்களெல்லாம் இருக்கிறோமே, ரசிக்கிறோமே எங்களைப் பார்த்தால் கிரியா ஊக்கிகளாகத் தெரியவில்லையா உமக்கு?'' என்றார் காரியதரிசி.

''எல்லாரும் ரசிக்கிறார்கள். எனக்குத் தெரிகிறது. ஆனால் ரசிப்பது வேறு என் இசையிலேயே இரண்டறக் கலந்து விடுவது என்பது வேறு. யார் ரசிக்கிறார்கள் யார் தம்மையே இழந்து விடுகிறார்கள் என்பது எனக்குப் புரிந்துவிடும். அப்படிப்பட்டவர்கள் எதிரே வந்து உட்கார்ந்தால் அப்போது வாசிப்பே அலாதியாகத்தான் இருக்கும்.''

''அழகுதான் போம்! நீர் போகிற இடத்துக்கெல்லாம் சரோவும் வர முடியுமா ஓய்! கொஞ்ச நாளில் அவளுக்குக் கல்யாணம் வேறு ஆகப் போகிறது. நீர் விஸ்கியைக் கிரியா ஊக்கியாக நம்பிக் கொண்டிருக்க வேண்டியதுதான்!''



''கல்யாணமா? சரோவுக்கா?'' என்றான் பத்மநாபன் திடுக்கிட்டவனாக.

''என்ன சுவாமி மெதுவாகக் கேட்கிறீர்! பட்டணம் பூரா அது தானே பேச்சு. உமக்குத் தெரியாதா? சரோவின் குருநாதருக்கே தெரியாதென்றால் ஆச்சரியம்தான்!''

''இல்லை. நிஜமாகவே எனக்குத் தெரியாது!''

இதற்குள் முகம் கன்றிச் சிவந்திருந்த சரோஜா, ''ஐ ஆம் ஸாரி. நான் இங்கு வந்ததுமே உங்களுக்கு சுபாஷைச் சரியான முறையில் அறிமுகப்படுத்தியிருக்கணும். தவறிவிட்டேன். இது நாள்வரை அவரை நண்பர் என்று உங்களுக்குக் கூறி வந்தேன். இனி அவர் என் வருங்காலக் கணவர்'' என்றாள்.

பத்மநாபனின் முகம் கறுத்துக் கருமையாவதை நிதர்சனமாக அனைவராலும் காண முடிந்தது. அவன் அதை மறைத்துக் கொள்ளக் கூட முயலவில்லை.

''வணக்கம் ஸார்!'' என்றான் சுபாஷ். ''உங்க கச்சேரியை ரொம்பவும் ரசித்தேன். கேட்கக் கொடுத்து வைத்திருந்ததே என்று எண்ணுகிறேன். சினிமாவுக்குப் போகலாம் என்ற என்னை இங்கே அழைத்து வந்த சரோவுக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும்.. நவரச கானடாவில் என்னமாய்ச் சங்கதிகளை உதிர்த்தீர்கள்! நான் ஆங்கில இலக்கிய மாணவன். டென்னிஸன் சிற்றாறு பற்றி ஒரு கவிதை எழுதியிருக்கிறான். அதைப் படித்தால் தத்ரூபம் அந்தக் கவிதையே ஒரு சிற்றாறு ஓடுவது போல் தோன்றும். அப்படி வார்த்தை ஜாலம் பண்ணியிருக்கிறான். கவிதையின் ஓசை நயத்திலேயே சிற்றாற்றின் ஓசையைக் கொணர்கிறான். அதன் எழில்களை, ஏற்ற இறக்கங்களை, வளைவு நெளிவுகளை, சந்திக்கும் எதிர்ப்புக்களை, பெறும் வெற்றிகளை முத்துச் சிதறல்களை, ஒளி ஜாலங்களையெல்லாம் காட்டுகிறான். எனக்கு அந்தக் கவிதைதான் நினைவுக்கு வந்தது. இதை மிகப் பெரிய பாராட்டு என்று நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் டெனிஸன் போன்ற ஒரு உலக மகா கவியுடன் நான் யாரையும் எதையும் சுலபத்தில் ஒப்பிட்டுப் பேசிவிட மாட்டேன்!''

அவன் பேசி முடிக்கும்வரை அமைதியாகக் காத்திருந்தான் பத்மநாபன். அதன் பிறகு இரு விநாடிகள் இடைவெளி விட்டுச் சொன்னான்: ''பேஷ்! சுபாஷின் சபாஷுக்காகத்தான் நான் காத்திருந்தேன். இப்போது அதுவும் கிடைத்து விட்டது. ஜன்ம சாபல்யம் ஆகிவிட்டது போ!'' என்றான். குரலில் கடுகடுப்பையோ பரிகசிப்பையோ அவன்

சற்றும் குறைக்கவோ மறைக்கவோ முயல வில்லை.

சரோவுக்கு அவன் நடந்து கொண்ட விதம் பிடிக்கவே இல்லை. ''நான் வருகிறேன். பிறகு சந்திக்கலாம்'' என்றாள்.


''ஆகா!'' என்று போலிப் பரிவை வெளிப் படுத்தினான் பத்து.

காரிலே சற்று நேரம் கனத்த மௌனம் நிலவியது. ''அவன் ஏன் அப்படிப் பேசி னான்?'' என்று இனியும் தாங்கிக்கொள்ள முடியாமல் கேட்டான் சுபாஷ்.

''அதுதான் எனக்கும் புரியவில்லை'' என் றாள் அவள்.

''என்னை அவனுக்குப் பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன்.''





''பிடிக்காமல் இருக்க என்ன இருக்கிறது? உங்களைச் சில சந்தர்ப்பங்களில் மொத்த மாக அவர் சந்தித்துப் பேசியது இதுவரை பத்து நிமிஷத்துக்கு மேலிராது. அதற்குள் பிடிக்கும் பிடிக்காது என்று ஒரு முடிவுக்கு வர முடியுமா?''

''என்னைத்தான் பிடிக்கவில்லையோ அல் லது உன் கணவனாக நான் மாறப் போகி றேன் என்பதுதான் பிடிக்கவில்லையோ?''

''இருக்கலாம்.''

''அப்படியென்றால்?''

''உங்களிடம் நான் மறைக்க விரும்ப வில்லை. பத்மநாபன் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டார்.''

''நிஜமாகவா? இவ்வளவு பெரிய இசை மேதையைக் கணவனாக அடைவது உன் பாக்கியம் ஆயிற்றே?''

''இவ்வளவு பெரிய இசை மேதையை நான் குருவாகத்தான் அடைய ஆசைப்பட்டேன். கணவனாக அல்ல.''

அவள் மேலே பேச அவன் காத்திருந்தான். அதைப் புரிந்து கொண்டு அவள் தொடர்ந் தாள். ''அவர் இசையில் எனக்கு ஏற்பட்ட லயிப்பு காரணமாக அவரைக் குருவாக அடைய ஆசைப்பட்டேன். அப்பா உடனே அவர் கேட்ட தொகைக்குச் சம்மதம் அளித்து ஏற்பாடு செய்தார். கிட்டத்தட்ட இரண்டு மாசம் அவரிடம் குழல் பயின் றேன். உங்களுக்கும் அது தெரியும். அதற்கு மேல் எனக்குப் பிடிக்காமல் போய் விட்டது.''

''ஏன் பாதியில் நிறுத்தி விட்டாய்?''

''முதலில் அவர் மது அருந்துகிறார் என்பது தெரிய வந்ததுமே எனக்கு அதிர்ச்சி யாக இருந்தது. பிறகு சில சமயம் அவர் குழல் பயிற்சி அளிப்பதை விட்டுவிட்டு வம்பு பேச ஆரம்பித்தார். பேச்சு அதிக மாகவும் பயிற்சி குறைவாகவும் இருந்தது. ஒருவேளை நான் மோசமான மாணவியாக இருந்திருந்தால் அவருக்கு அலுத்து விட் டிருக்கலாம். ஆனால் அப்படியும் அல்ல. சுமாராக வாசிக்கவே செய்தேன். ஆனால் அவர் கற்றுக் கொடுத்தால்தானே மேலே என் ஆற்றலை வளர்த்துக் கொள்ள முடியும்? நாம் தவறான இடத்துக்கு வந்து விட் டோமோ என்று தோன்றியது. அப்புறம் அவர் என்னையே குரு தட்சிணையாக அடை யப் பார்க்கிறார் என்பதும் படிப்படியாகப் புரிந்து போயிற்று.''

''அதில் வியப்பென்ன? தமது இசை விகசிக்க ஒரு கிரியா சக்தி தேவை என்று அவர் கூறுகிறாரே?''

''அது மட்டும் காரணம் என்று எனக்குத் தோன்றவில்லை. என் தகப்பனாரின் செல்வத்தின் மீதும் அவருக்கு ஆசை விழுந்து விட்டதாக நினைக்கிறேன்.''

''அது உன் கணிப்புத்தானே! அது பிசகாகவும் இருக்கலாமல்லவா?''

''இருக்கலாம். ஆனால் எனக்கு அவர் இசையில்தான் ஈடுபாடு, அவரிடம் இல்லை என்னும்போது அவர் விருப்பத்துக்கு நான் எப்படி இணங்க முடியும்?''

''பாவம்!'' என்றான் சுபாஷ். ''எத்தனை ஆசைகளை வளர்த்துக் கொண்டானோ? அதிர்ஷ்டசாலியான என்னைப் பார்த்து அவன் பொறாமைப்படுவதில் என்ன ஆச்சரியம்! ஏன் சரோ, அவன் ரொம்ப அழகாய் இருப்பானோ?''


அவள் குபீரென்று சிரித்து விட்டாள். ''ஏன் இப்போது உங்களுக்குப் பொறாமையா?''

''இல்லை சரோ! பெருமை! அவன் சிறந்த கலை மேதை என்பதோடு அழகனாகவும் இருப்பானேயாகில் அவனை லட்சியம் பண்ணாமல் இந்த அந்தகனை நீ ஏற்றுக் கொண்டாய் என்றால் எனக்கு எவ்வளவு பெருமை அதில்?''

''அழகன்தான்!'' என்று ஒப்புக் கொண்டாள் சரோ. ''நல்ல வசீகரமான அழகு. ஒரு மாதிரி என்னிடம் அச்சத்தையே ஏற்படுத்திய அழகு.''

''அப்படி யென்ன?''

''அவர் இசையில் என்னை இழந்தது போல அவரிடமே என்னை இழந்துவிடுவேனோ என்ற பயம்.''



''எனக்குப் புரியவில்லை. அவனைக் காதலிக்கவில்லை என்கிறாய். அவனிடம் உன்னை நீயே இழந்துவிடலாம் என்று பயப்பட்டதாகவும் சொல்கிறாய்!''

''இதில் புரியாமல் இருக்க என்ன இருக்கிறது'' என்று சற்று எரிச்சலோடு கேட்டாள் சரோஜா. ''நீங்கள் வெகு சீக்கிரம் என் கணவராக வரப் போகிறவர். உங்களிடம் எதையும் மறைக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் இவ்வளவுநேரம் அவரைப் பற்றி உங்களிடம் பேசினேன். இல்லாத போனால் அவரைப் பற்றிப் பேசவே எனக்குப் பிடிக்காது. அவரது இசையைக் குறித்துத்தான் பேசுவேன்.''

அவன் மறுபடி மௌனமானான். வீடு வந்துவிட்டது. கார் நின்று விட்டது. அவன் இறங்கப் போனான். அவன் தோளைப் பற்றித் தடுத்து நிறுத்தினாள் சரோஜா. ''நான் கடுகடுப்பாகப் பேசியிருந்தால் மன்னியுங்கள். பத்துவின் இசைக்கு நான் அடிமை. ஆனால் அவருக்கு நான் அடிமையாக விரும்பவில்லை. இவ்வளவுதான் விஷயம். புரிகிறதல்லவா?''

''புரிவது போல்தான் தோன்றுகிறது சரோ. ஆனால் ஒன்று. அவனிடமிருந்து தப்பிப் பாதுகாப்புப் பெற என்னை மணக்கப் போகிறாயா அல்லது....''

அவள் சட்டென்று திரும்பி அவன் தோளில் நெற்றியைப் பதித்து வலக் கரத்தால் மற்றொரு தோளைச் சுற்றி வளைத்தாள். ''இன்னொரு தரம் இப்படிப்பட்ட சந்தேகங்களை நீங்கள் எழுப்பாதீர்கள். என் நெஞ்சு வெடித்து விடும்'' என்றாள். ''நான் உங்களை மனமார, நெஞ்சார, ஏழேழு ஜன்மங்களுக்கும் காதலிக்கிறேன்'' என்றபோது அவள் குரல் தழுதழுத்தது. அவன் அவள் முதுகில் இலேசாகத் தட்டித் தடவித் தந்தான். ''கம் ஆன். சீர் அப். லெட் அஸ் ஃபர்கெட் திஸ் ஈவினிங்!'' என்றான்.

''உங்களுக்காகப் பத்துவின் இசையைக் கூட நான் துறக்கத் தயாராயிருக்கிறேன். இனி அவர் கச்சேரிகளுக்குப் போகாமல் இருந்துவிட்டால் ஆயிற்று!'' என்றாள்.

''நோ நோ நான் ஒன்றும் அப்படிப்பட்ட கிராதகன் அல்ல. உன்னுடைய சுதந்திரங்களில் நான் தலையிடவே மாட்டேன். மேலும் இவ்வளவு உயர்ந்த இசையைக் கேட்க வாய்ப்பிருக்கும்போதெல்லாம் அதனைத் தவற விடுவது போன்ற முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது. அது மட்டுமில்லை சரோ! அந்த இசை மென்மேலும் வளம் பெற உன்னைப் போன்ற ஒரு ரசிகை — கிரியா ஊக்கி தேவை என்றான். அதை அவனுக்கு நீ மறுதளிக்கக் கூடாது. நீ அளிக்கிற போஷாக்கு அந்த இசைக்குத் தேவையெனில் அதை நீ தந்துதான் ஆகவேண்டும். இல்லையானால் மதுப் பழக்கத்துக்கு இப்போதே ஆளாகியுள்ள அவன் நாளடைவில் அதற்கே அடிமைப்பட்டு விடுவான். அவனையும் அவன் இசையையும் அந்த சர்வநாசத்திலிருந்து நாம் காப்பாற்றியாக வேண்டும்.''

''உங்கள் பெருந்தன்மை யாருக்கு வரும்?'' என்று தோளிலிருந்து தலையை உயர்த்தி அவள் கேட்டபோது அவன் காதில் அவள் அதரங்கள் விளையாடின. கன்னத்திலும் இதழ் பதித்துப் பிரிந்தாள். ''வரட்டுமா?''


''உள்ளே வந்து அம்மாவை ஒரு நிமிஷம் பார்த்துவிட்டுப் போ!'' என்றான். அவ்வாறே செய்தாள்.


அவள் விடை பெற்றுச் சென்ற பிறகு அவள் கூறிய ஒரு வாக்கியம் அவனைச் சுற்றிச் சூழ்ந்தது. 'நல்ல வசீகரமான அழகு; ஒரு மாதிரி என்னிடம் அச்சத்தை ஏற்படுத்திய அழகு!' இந்தச் சொற்கள் இப்போது சுபானையே கலங்க அடித்துக் கொண்டிருந்தன. 'அத்தனை கவர்ச்சிகரமான தோற்றம் உள்ளவனா அவன்?' என்று எண்ணினான்.

ராஜ பாட்டையாக நேர் பாதையாகச் சென்று கொண்டிருந்த காதல் இப்போது சந்து பொந்துகளையும் இருட் குகைகளையும் மேடு பள்ளங்களையும் காண்பது போல் தோன்றியது. அவன் நீண்ட நேரம் யோசித்தான்.

அவள் பத்மனாபனின் இசையில் மட்டுமின்றி அவன் அழகிலும் கவரப்பட்டிருக்கிறாள். ஆனால் அவனைக் காதலிக்கவோ அவனைக் கணவனாக அடையவோ விரும்பாததால் அந்தக் கவர்ச்சியில் சிக்கிவிடாமல் நல்ல மனோ திடத்துடன் இருந்திருக்கிறாள். ஏவாளைக் கவர்ந்த ஆப்பிள் கனி என்பது இதுதானோ? ஆனால் அந்தக் கனியை அவன் பறித்துத் தின்று ஆசைக்கு இடம் தந்தது போல சரோ தடுமாறவில்லை. இதற்காக அவளைப் பற்றி நான் பெருமிதம் அடைய வேண்டும். அவளைப் பாராட்ட வேண்டும். இதற்குப் பதில் ஏதேதோ கேட்டு அவளைக் கலங்க வைத்து விட்டேன். அவள் கண்ணீரால் நனைந்து இன்னமும் ஈரம் காயாமல் இருந்த தன் சட்டையை அவன் தொட்டுப் பார்த்துக் கொண்டான். எத்தனையோ இலக்கியங்களை நான் கரைத்துக் குடித்துக் கட்டுரைகள் எழுதி டிஸ்டிங்ஷன்

கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகள் அமைந்துள்ள இடங்களைக் குறிக்கும் வகையில் தற்போதுள்ள அறிவிப்புப் பலகைகள் வாகன ஓட்டிகளைக் கவர்வதில்லை. எனவே கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகள் அமைந்துள்ளதைக் குறிக்கும் வகையில், பெரிய கற்குவியல்களையும், பாட்டில்களையும் வீதியின் ஓரத்தில் குவித்து வைக்கலாம்.




TEXTILES, SUGAR,
INDUSTRIAL CHEMICALS,
ALCOHOLIC BEVERAGES,
VANASPATI, PVC, RAYON TYRE CORD,
FERTILIZERS,
ELECTRONIC CALCULATORS,
IRON CASTINGS.
IN THE
SERVICE OF
THE NATION
DCM
THE DELHI CLOTH AND GENERAL MILLS CO. LTD., DELHI

மார்க்குகள் வாங்கி என்ன பயன்? காதல் என்பது வேறு, கவர்ச்சி என்பது வேறு என்பதையும் இரண்டையும் தனித் தனியே பிரித்து இனம் கண்டு கொண்டு தெளிவு பெற வேண்டும் என்பதையும் சரோ அறிந்திருக்கிறாள். அது எனக்குத் தெரியவில்லை! அவன் நிம்மதியுற்ற மனத்துடன் ஒரு பெருமூச்சு வெளிப்படுத்தி உறங்கிப் போனான்.

4

“ஒரு குருடனையா மணந்து கொள்ளப் போகிறாய்? என்னால் நம்பவே முடியவில்லை!'' என்றான் பத்மனாபன்.

அவன் அவளைக் கல்லூரி விட்டதும் சந்தித்து ஓர் உயர்தர ரெஸ்டாரண்டுக்கு அழைத்து வந்திருந்தான். வர மாட்டேன் என்று கூறிக் கல்லூரி வாசலில் தர்க்கம் புரிந்து அதன் மூலம் நாலு பேர் கவனத்தை ஈர்க்க விரும்பாமல் அவள் அவனோடு ஆட்டோவில் ஏறி வந்திருந்தாள். அன்றைக்கு என்று பார்த்துக் கார் இல்லை. ஒர்க்ஷாப்புக்குப் போயிருந்தது. கார் வந்திருந்தால் பத்மனாபனையும் ஏற்றிக் கொண்டு டிரைவரை நேரே வீட்டுக்கே ஓட்டச் சொல்லி யிருக்கலாம். டாக்ஸியோ ஆட்டோவோ பிடித்து இன்று வீடு திரும்புவதாகச் சொல்லியிருந்தாள். பத்மனாபனுக்கு இது வசதியாகப் போயிற்று. என்ன சாப்பிட்டோம் என்பதே தெரியாமல் ஏதோ கொரித்துக் கொண்டிருந்தாள். அவனும் ஏதோ ஆர்டர் செய்திருந்தானே தவிர டிபன் சாப்பிடுவதில் சிரத்தை காட்டவில்லை. அவளைத் தாக்குவதில்தான் தீவிரமாய் இருந்தான். ''ஒரு குருடனை உன்னால் எப்படிக் காதலிக்க முடிகிறது?'' என்று மீண்டும் வினவினான்.

''எப்படி என்று கேட்டால் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. ஆனால் அவரை நான் காதலிக்கிறேன், கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்பது தெளிவாகத் தெரியும். அதே போல் உங்களை நான் விரும்பவில்லை. உங்கள் இசையை மட்டுமே விரும்புகிறேன் என்பதிலும் நான் தெளிவாக இருக்கிறேன்.''

''காதலுமில்லை ஒரு மண்ணுமில்லை. உனக்கு அந்தக் குருட்டுப் பயல் மீது அனுதாபம், பரிதாபம். அதைப் போய்க் காதல் என்று நினைத்துக் குழம்பிக் கொண்டிருக்கிறாய்.''

''இதோ பாருங்கள். உங்களிடம் உங்கள் இசைத் திறன் காரணமாக எனக்கு மரியாதை உண்டு. அதைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்!''

''நான் என்ன சொல்லி விட்டேன் இப்போ? எதற்கு இப்படிப் பாய்கிறாய்?''

''சுபாஷை மரியாதைக் குறைவாகக் குருட்டுப் பயல் அப்படி இப்படி யென்றெல்லாம் பேசாதீர்கள். எனக்குப் பிடிக்காது.''

''நான் இரண்டு மாதம் முன்பாகவே உன் அப்பாவிடம் நம்மைப் பற்றிப் பேசி இருக்க வேண்டியவன். அவரும் சம்மதித்திருப்பார். நம் கல்யாணம் கூட இதற்குள் நடந்து முடிந்திருக்கலாம். உன் பேச்சைக் கேட்டு அவரிடம் பேசுவதை ஒத்திப் போட்டேன். இப்போ காரியம் கெட்டுவிட்டது.''

''நீங்கள் என்னையும் புரிந்து கொள்ளவில்லை என் அப்பாவையும் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் என் அப்பாவிடம் நம்மைப் பற்றிப் பேசியிருந்தால் என்ன சொல்லி யிருக்கப் போகிறார்? ஆகட்டும், என் மகளிடம் கலந்தாலோசித்து விட்டுச் சொல்கிறேன் என்றிருப்பார். உங்களை அனுப்பி விட்டு என் அபிப்பிராயத்தைக் கேட்டிருப்பார். என் கருத்தை அறிந்து, சற்று முன் நான் உங்களிடம் கூறியதையே அவரும் உங்களிடம் சொல்லியிருப்பார். என் விருப்பத்துக்கு விரோதமாக ஒருபோதும் அவர் நடந்து கொள்ளவே மாட்டார். உங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும். அவமானமாகவும் இருந்திருக்கும். அந்தத் தலை குனிவை நான் தவிர்த்தேன். அதற்காகச் சந்தோஷப் படுங்கள்!''

''என் சங்கீதத்தை நீ காதலிக்கவில்லையா?''

''ஓ! நிச்சயமாகக் காதலிக்கிறேன். சுபாஷும் கூட உங்கள் இசையில் மெய்மறக்கிறார். உங்கள் சங்கீதத்துக்காக நான் உயிரையே விடத் தயார்.''

''ஆனால் என் மனைவியாகத் தயாராக இல்லையாக்கும்!''

''ஆமாம்.''

''அதெப்படி?''

''உங்களுக்கு ஏன் புரிய மாட்டேனென்கிறது? இல்லை .... நீங்கள் புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள். தெய்வானுக்கிரஹம் காரணமாக உங்களிடம் ராக தேவதைகள் எல்லாரும் கைகட்டிச் சேவகம் புரிகிறார்கள். அதிலே கர்வமுற்று நீங்கள் என்னையும் உங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ளப் பார்க்கிறீர்கள். நான் உயிரையும் விடுவேன் என்றது உங்கள் இசைக்காக. உங்களுக்காக அல்ல. ஆனால் நான் உங்கள் மனைவியானாலோ உங்கள் இசைக்கு மட்டுமின்றி உங்களுக்கும் கட்டுப் பட்டாக வேண்டுமல்லவா?''

''ஆனால் என்னுடைய இசை மேன்மேலும் வளர, விருத்தி அடைய, அதற்கு நீ அளிக்கும் போஷாக்கு தேவை சரோ! உனக்கு ஏன் இது புரிய மாட்டேனென்கிறது.''

''அதை நான் கண்டிப்பாகத் தருகிறேன். கணவருடன் சேர்ந்து நானும் எங்கள் நட்புறவால் அந்தப் போஷாக்கை நிச்சயமாக அளிக்கிறோம். இதில் உங்களுக்குச் சந்தேகமே


வேண்டாம்!'' என்று கூறி விட்டு எழுந்தாள், 'நேரமாகிறது' என்று உணர்த்துவது போல..

*   *   *

''**ச**ரோ! உன்னிடம் என்னைப் பற்றி ஏதாவது சொன்னாளா?'' என்று சுபாஷைக் கேட்டான் பத்மநாபன்.

''உம்!'' என்றான் சுபாஷ். அதற்கு மேல் பேசவில்லை. பத்மநாபன் தன் வீட்டுக்கு வந்தது, தன் பெற்றோர் எதிரேயே தன்னைத் தனியே அழைத்துப் போய் அந்தரங்கமாகப் பேச வேண்டி யிருப்பதாகக் கூறியது, முதலிய எதுவுமே அவனுக்குப் பிடிக்கவில்லை. வீட்டிலேயே தன் தனி அறையில் பேசலாம் என்று சுபாஷ் கூறிய யோசனையையும் அவன் ஏற்க வில்லை. ''இங்கே பக்கத்தில் தானே இந்திரா பூங்கா இருக்கிறது? அங்கே செல்வோம்'' என்று அழைத்துப் போனான். இருவரும் புல் தரையில், நிழலில் அமர்ந்தார்கள்.

கண்ட இடங்களில் சாலையைக் கடக்கும் பாதசாரிகளை நின்ற இடத்திலிருந்து பிடிப்பதற்கு வசதியாக, பெரிய சுருக்குடன் கூடிய நீண்ட நைலான் கயிறுகளைச் சுழற்றும் அமெரிக்க கௌபாய்களைப் போக்குவரத்துப் போலீஸ்காரர்களாக நியமிக்கலாம். - மு. கணேசன்



''நாங்கள் இருவரும் காதலர்கள் என்பதைச் சொல்லியிருப்பாளென்றும் நினைக்கிறேன்'' என்று மீண்டும் ஆரம்பித்தான் பத்மநாபன்.

இதற்கு மேல் பேசாதிருக்க சுபாஷினால் முடியவில்லை. ''இல்லை, அப்படி அவள் கூறவில்லை. ஒரு தலைப்பட்சமான காதல் என்பதாகத்தான் அவள் சொன்னாள். அவள் உங்களை விரும்பவேயில்லை.''

''உண்மைதான். என் இசையில் மட்டும் தான் நாட்டம் அவளுக்கு. ஆனால் அவளை நான் மனமார நேசிக்கிறேன்.''

''ஸாரி. உங்களுக்கு நான் உதவ முடியாது. உங்கள் சார்பில் அவளிடம் என்னால் வாதாட முடியாது!''

''வேண்டவே வேண்டாம்! அதை நான் கேட்கவுமில்லை. நான் வந்த நோக்கமே வேறு....''

''என்ன?''

''இப்போது அவள் உன் மனைவியாகப் போவதால் பழங் கதையெல்லாம் நான் மறந்துவிடப் போகிறேன். அவளை நான் காதலிக்கவேயில்லை; எங்களிடையே இருந்தது வெறும் நட்புறவுதான், குரு சிஷ்ய பாவம் தான், வேறு எதுவுமே இல்லை என்று எண்ணிக் கொள்ளப் போகிறேன்.''

''ரொம்ப சரி. அதற்கு நான் என்ன பண்ண வேண்டும்?''

''பார்த்தாயா இன்னும் உனக்குக் கோபம் தணியவில்லை! நான் எதற்கு இவ்வளவும் மனம் விட்டு உன்னிடம் சொல்கிறேன் என்றால், பின்னால் வீண் சந்தேகங்கள் ஏதும் மனத்தில் ஏற்படக் கூடாது பார். அதற்காகத்தான்.''

''எனக்கு என் சரோ மீது சந்தேகமே எழாது. என்றுமே எழாது; யார் என்ன சொன்னாலும் அவளை நான் சந்தேகிக்க மாட்டேன்.''

''போன ஜன்மத்தில் பண்ணின புண்ணியம்தான் அவள் உன்னை இந்தப் பிறவியில் அடைந்திருக்கிறாள். நானும் அதிர்ஷ்டசாலி தான். உன் நட்பைப் பெற்று விட்டேனென்றால்!''

''பெற்று விட்டீர்கள். நாங்கள் தனிக் குடித்தனம் நடத்தப் போகிறோம். எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வாருங்கள். நாங்களும் உங்களைத் தேடி வருகிறோம். சரோவுக்கு உள்ளது போன்று அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் எனக்கும் உங்கள் இசையில் லயிப்பு உண்டு.''

''இதெல்லாம் சத்தியம்தானே? கல்யாணமான பிறகு இதேதடா இவன் அடிக்கடி நம்மைத் தேடி வந்து கழுத்தறுக்கிறான் என்று எண்ண மாட்டாயே?''

''ஒருநாளும் மாட்டேன். உண்மையில் உங்களை வெறுக்கவோ ஒதுக்கவோ கூடாது என்று நானே சரோவிடம் கூறியிருக்கிறேன்!''

''அப்படியானால் இந்த நண்பனின் நல்லெண்ணத்தை நிரூபிக்கும் விதமாக நான் உங்கள் இருவருக்கும் பரிசுகள் தந்தாக வேண்டும். நீங்கள் அதைத் தட்டாமல் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இல்லையெனில் நான் ரொம்ப வருத்தப்படுவேன்.''

''என்ன பரிசு?''

''சரோவுக்குத் திருமண தினத்தன்று இரவு என் கச்சேரி. அதற்கு நான் பணம் வாங்கிக் கொள்ளப் போவதில்லை!''

''சரி.''

''உனக்கு தாஜ் கொரமண்டல் ஹோட்டலில் ஒரு 'பிரைடல் ஸ்வீட்'. மூன்று இரவுகள் புதுமணத் தம்பதிகளுக்கு என்றே ஏற்பட்ட அந்த அறைகளில் நீங்கள் தங்கலாம். திருமண ரிஸப்ஷன் முடிந்த கையோடு அங்கே போய் விடுங்கள். என்ன சரிதானா? சாப்பாடு டிபன் காப்பி போன்ற எல்லா செலவும் என்னுடையது. பில்லை நேரே எனக்கே அனுப்பி விடுவார்கள்.''

''ரொம்ப செலவாகுமே?''

''நான்ஸென்ஸ்! என்னுடைய பெஸ்ட் ஃபிரண்ட்டின் ஆனந்தத்துக்காக நான் செய்கிற சிறு காரியம். ஒரே கச்சேரியில் அந்தப்

பணத்தை நான் பார்த்து விடுவேன். சரி யென்று சொல்லு சுபாஷ்.''

''சரி!'' என்றான்.

பத்து அவனை அப்படியே ஆலிங்கனம் செய்து கொண்டான். ''இப்போதுதான் எனக்கு நிம்மதியாய் இருக்கிறது. என்னை நீ மன்னித்ததாகவும் ஆகிறது.''

''மன்னிக்க என்ன இருக்கிறது? நீங்கள் சரோவை விரும்பினீர்கள். அவள் என்னைக் காதலித்தாள். காதலில் நீங்கள் தோற்றீர்கள். ஆனாலும் நட்புறவை நீடிக்க விரும்புகிறீர்கள். இதில் யார், யாரை எதற்காக மன்னிப்பது?''

''உனக்கு மட்டும் கண் பார்வை இருந்தால் உனது இந்தப் பெருந்தன்மை காரணமாக என் கண்களில் நீர் திரண்டிருப்பதைக் காண்பாய்'' என்றான் பத்மநாபன். அவன் கரங்களை எடுத்துத் தன் கன்னங்களில் வைத்துக் கொண்டான். அவை நனைந்திருப்பதை சுபாஷினால் உணர முடிந்தது.

5

''உனக்கு நினைவிருக்கிறதா சரோ? கடற்கரையில் ஒரு நாள் நீ சந்திரோதயத்தை எனக்கு வர்ணித்தாய். உன்னை நீயே வர்ணித்துக் கொண்டு உன் அழகை நான் உணருமாறு செய் என்று கேட்டேன். அதற்கு நீ என்னை நானே எப்படி வர்ணித்துக் கொள்ள முடியும்? நீங்கள்தான் என்னை வர்ணிக்க வேண்டும் என்றாய். உடனே நான் உன் விரல்களையும் கரங்களையும் தோள்களையும் முகத்தையும் கழுத்தையும் தொட்டுத் தடவிப் பார்த்து அவற்றின் அழகுகளை உணர்ந்து வர்ணித்தேன். 'போதும் இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள்' என்றாய் நாணத்துடன். அதற்கு நான், முடியாது! என்னை மட்டும் நீ பாதாதி கேசம் வர்ணித்துக் கூறவில்லையா? அப்படி நான் உன்னை வர்ணிக்க வேண்டாமா என்றேன். நீ நேரமாகிறது என்று கூறி, சரேலென்று எழுந்து விட்டாய்...''

''அன்று நிறைவேறாத காரியத்தை இன்று நிறைவேற்றிக் கொள்ளுங்கள் தாராளமாக'' என்றாள் சரோ, அவன் நெஞ்சிலே தன் முகத்தைப் பதித்து. அவர்கள் தாஜ் கோரமண்டலில் பிரைடல் ஸ்வீட் எனப்படும் புது மணத் தம்பதிக்கென்றே ஏற்படுத்தப்பட்ட சிறப்பு அறையில் இருந்தார்கள். பிரும்மாண்டமான கட்டில். அதில் படுத்தால் உடம்பு இருக்கிற இடம் தெரியாமல் புதைந்து கொள்ளும் என்று தோன்றிய அளவில் சொகுசான, கனமான மிருதுவான மெத்தை. போர்த்திக்கொள்ள ஸாடின் துணியாலான ரஜாய் மெத்தை — ஏர் கண்டிஷனர். சாண்டிலியர் எனப்படும் அலங்காரச் சர விளக்குகள். தரையில் உயர் ரக ரத்தினக் கம்பளம். சுவரில் சிருங்காரச் சித்திரங்கள். ஒரு பக்கமாக இருந்த பிரும்மாண்டமான சோபாவில் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். பக்கத்தில் பாத் டப்புடன் கூடிய குளியல் அறை. அதை யொட்டி உடை உடுத்த — அலங்கரித்துக் கொள்ள ஓர் அறை. திரைச் சீலைகள் கனமாகத் தொங்கின. திரும்பிய பக்கமெல்லாம் நிலைக் கண்ணாடிகள். ''அடேயப்பா! அரசி ஷீபா அல்லது கிளியோபாட்ராவின் சயன அறைகள் கூட இத்தனை சுக போகங்களைக் கண்டிராது'' என்றான்.

அவள் களுக்கென்று சிரித்தாள். ''நம் தேசத்து அரசிகளைப் பற்றி நீ குறிப்பிடாதது சரி. எல்லாரும் வீராங்கனைகள். சுக போகங்களுக்கு மதிப்பு அளிக்காதவர்கள்.''

அவன் அவசரப்படவில்லை. தன் தோளிலே தலை சாய்த்திருந்தவளை ஆரத் தழுவியதுடன் நிறுத்திச் சல்லாபித்தான்: ''கல்யாணத்தை ரொம்ப ஏற்பாடாகச் செய்து விட்டார் உன் அப்பா'' என்றான். ''காலை முகூர்த்தத்துக்கு முக்கிய உறவினர்கள் மட்டும் வந்திருப்பார்கள். மாலை ரிஸப்ஷனை ஏழு மணிக்கு என்று குறிப்பிட்டு ஒருவர் பாக்கியின்றி வந்தவர்களை யெல்லாம் விருந்தளித்து உபசரித்து விட்டார் இல்லையா? அதை விடச் சிறப்பு விருந்துக்குப் பிறகு 7—30 மணிக்குக் கச்சேரி என்று ஆரம்பித்து 9 மணிக்கு முடித்ததுதான். இதனால் இசையில் உண்மையான ஈடுபாடு உள்ளவர்கள் மட்டுமே கச்சேரியில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்திருப்பார்கள். மற்றவர்கள் முதல் பந்தியில் அமர்ந்து சாப்பிட்டுவிட்டுப்புறப்பட்டு விட்டிருப்பார்கள்.''

''ஆமாம், பத்மநாபன் ஃப்ளூட் வாசிக்கும் போது சளசளவென்று எல்லோரும் பேசிக் கொண்டிருந்தால் அது [illegible] அப்பாவுக்கும் பிடித்தே இராது.''

''ஒன்பதுக்குக் கச்சேரி முடிய ஒன்பதரைக்குப் புறப்பட்டுப் பத்து மணிக்குள் இங்கு நாம் வந்து விட்டோமே? ரொம்பக் கச்சிதமாகத்தான் எல்லாம் முடிந்திருக்கிறது.''

''அம்மாவுக்கு மட்டும் வருத்தம்'' என்றாள்.

''ஏன்? ஏன்?''

''கட்டிலும் மெத்தையுமாக வாங்கியிருந்து இரட்டுப் பால் இளநீரது வரை எல்லாம் தயாராக வைத்திருக்கிறேன். சாந்தி முகூர்த்தம் என்பதாக அதற்குரிய கிரியைகள் எதையும் செய்யாமல் ஹோட்டலுக்குப் போகிறேன் என்கிறாயே; என்ன மாடர்னோ என்ன ஃபாஷனோ என்று அலுத்துக் கொண்டாள்.''

''பெரியவர்கள், பழைமையில் ஊறியவர்கள் அப்படித்தான் இருப்பார்கள், சரோ. நாம் விட்டுக் கொடுக்காது போனு

னும் அவர்கள் வேதனைப் படா திருக்குமாறு சமாதானமாகப் பேச வேண்டும்.''

''நீங்கள் சொல்லுங்கள் உங்கள் மாமி யாருக்கு ஆறுதல்!'' என்று கூறிச் சிரித் தான். ''ஆகட்டும் சொல்கிறேன்!'' என்ற வாறே அவன் நெற்றியில் இதழ்களைப் பதித் தாள். அடுத்தடுத்து வேறு வேறு இடங்களை அவன் உடலில் அவள் விரல்களும் அதரங் களும் தேடின. கூடவே அவளது வர்ணனை களும் தொடர்ந்தன. அவற்றில் கனிவு இருந்தது, கவர்ச்சி இருந்தது, கரை காணாத காதலும் இருந்தது.

அவள் ஆடைகளை அவன் நெகிழ்விக்க முயன்றபோது அவள் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய் சரோ? தடுமாறுகிறேன் என்றா?''

''சேச்சே! உங்கள் கண்களாகத்தான் நான் விளங்குகிறேனே. எனவே நீங்கள் எப்போ தேனும் எதற்கேனும் தடுமாற நேர்ந்தால் அது என் குற்றமாகத்தானே இருக்கும்!''

''பிறகு?''

''இது போன்ற முதலிரவில் வேறு எந்தப் பெண்ணும் முதல் காரியமாக என்ன செய்திருப்பாள் என்று எண்ணிப் பார்த் தேன். சிரிப்பு வந்தது.''

''என்ன செய்திருப்பாள்?''

''கூச்சப்பட்டு விளக்கை அணைத்திருப் பாள். ஆனால் நான்? உங்கள் வர்ணனைக ளெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று எதிரே உள்ள நிலைக்கண்ணாடியில் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்!''

''போக்கிரி!'' என்று கூறி அவனும் சிரித் தான். ''ஏற்கெனவே என்னை இருள் சூழ்ந் திருப்பதால் விளக்கு எரிந்தாலும் எரியா விட்டாலும் ஒன்றுதான் என்ற தைரியமா உனக்கு?''

அப்போதுதான் அவள் கவனம் அந்த டேப் ரிகார்டர் மீது பதிந்தது. ''அடேடே! இந்த ஹோட்டலில் டேப் ரிகார்டர் கூட வைத்திருக்கிறார்களே'' என்றாள்.

''சிவ சிவா! நாம் பேசுவதை யெல்லாம் அது பதிவு செய்து தொலைக்கப் போகிறது!'' என்றான்.

நெகிழ்ந்திருந்த ஆடைகளுடன் அவள் அவனிடமே விட்டு விட்டு எழுந்து சென்று ஆராய்ந்தாள். ''இல்லை. மின் இணைப்புத் தரப்படவில்லை, பாட்டரியிலும் இயங்க வில்லை.''

''ஏதாவது இனிய பாடல்களை நாக கேட்கப் பதிவு செய்து வைத்திருப்பார். னாக்கும். இயக்கிவிட்டு வாயேன்'' என்றான்.

அவள் அவ்வாறே செய்தாள். திரும்பிச் சோபாவை நெருங்கு முன் பத்மநாபனின் குழலொலி கேட்டு அவளை ஒரு கணம் ஸ்தம் பிக்கச் செய்தது. அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். ''இதென்ன கூத்து?'' என்றாள்.

''அடேடே பத்மநாபன் இந்த அறை யைக் கொடுத்தது மல்லாமல் தன் இசை யையும் பதிவு செய்து இங்கே வைத்திருக் கிறான் முன்யோசனையுடன். எவ்வளவு ஏற்பாடாகக் காரியம் செய்திருக்கிறான், பார்த்தாயா?''

''என்னது? இந்த அறை அவர் தந்ததா?''

''ஆமாம் சரோ. இந்த மூன்று இரவுகள் நாம் இங்கே தங்கப் போவது அவன் எனக் களிக்கும் கல்யாணப் பரிசுதான். உனக்கு அவன் அளித்த பரிசு கல்யாணக்கச்சேரி.''

''கல்யாணக் கச்சேரிதாங்க இந்த டேப் பிலும் பதிவாகி யிருக்கிறது! கவனித்துக் கேளுங்க! இன்று மாலை வரவேற்புக்குப் பிறகு நடந்த அதே கச்சேரிதான். தமது கச்சேரியைத் தாமே மேடையில் பதிவு செய்து இங்கே நமக்கு முன் வந்து சேரு மாறு அவசரமாக அனுப்பி யிருக்கிறார்'' என்று படபடத்தாள்.


''சரி, இருக்கட்டுமே. அதற்கு ஏன் இப்படிப் பதறுகிறாய்? கல்யாணப் பரிசு காற்றோடு போய் விடவாமா? நீண்ட காலம் நம்முடன் நிலைத்து இருக்க வேண்டும் என் பதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்திருக் கிறான்.'' அவன் கூறி முடிப்பதற்குள் அவள் டேப் ரிகார்டரை நிறுத்தி விட்டாள்.

''ஏன் சரோ? ஏன் நிறுத்தி விட்டாய்?''

''நாம் கிளம்பி நம் வீட்டுக்கே போயிட லாங்க. இங்கே வேணும். நமக்கென்று நாம் பார்த்து வைத்திருக்கும் ஃபிளாட் டுக்குப் போயிடுவோம். அல்லது என் பெற் றோர் வீட்டுக்கோ உங்க பெற்றோர் வீட் டுக்கோ போனாலும் சரி.''

''இது என்ன பைத்தியக்காரத்தனம்?''

''நாம இங்கே இருப்பதுதான் பைத்தி யக்காரத்தனம் என்று தோன்றுகிறது எனக்கு. 'பத்துவில்' இந்தப் பரிசை நீங்கள் ஏற்றுக் கொண்டே இருக்கக் கூடாது. இங்கே வருவதென்பது உங்க ஏற்பாடு என்றே



மின்னிசோட்டா என்ற ஊரில் ஒரு 'க்ளப்' இருக்கிறது. 'பொய் சொல்பவர்கள் க்ளப்' என்று பெயர். அதில் 'உலகிலேயே தலை சிறந்த பொய்யைச் சொன்னவன்' என்ற பட்டத்தைப் பெறப் போட்டி ஒன்று நடந்தது. அதிலே பட்டம் பெற்ற பொய்:

''ஒரு சமயம் வெள்ளம் வந்த போது ஆமைகள் வீட்டிலிருந்து வெளியே வந்து ஓடுகளையே திருப்பிப் போட்டுப் படகு போல் உபயோகித்து உயிர் பிழைத்தன!''

இந்தப் பொய்யைச் சொன்ன கிரிகோரி ஹாவல் என்ற அமெரிக்கருக்கு உலக சாம் பியன் பட்டம் கிடைத்தது!

'வீக் எண்ட்'டிலிருந்து -கோ. நிபா



நான் இந்த நிமிஷம் வரையில் எண்ணியிருந்தேன்.''

''நீ எதற்குப் பயப்படுகிறாய் சரோ? அந்த டேப் ரிகார்டரை ஆன் பண்ணு சொல்கிறேன்.''

''வேண்டாங்க.''

''இது என்ன முட்டாள்தனம்?'' அவன் குரல் உயர்ந்தது. அவளுக்குப் பயமாக இருந்தது. முதலிரவன்றே அவனுடைய அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்ள அவள் தயாராக இல்லை. அதிலும் வலுவான காரணம் ஏதுமின்றி 'செண்டிமெண்டலாக'த் தான் நடந்து கொண்டால் அவனுக்குச் 'சே' என்று போய்விடலாம். ஏற்கெனவே இது என்ன மூடப் பிடிவாதம் என்றல்லவா கேட்டுவிட்டார். இது மூடப் பிடிவாதமில்லை என்று தன்னால் வாதாடி ஜெயிக்க முடியுமா? பகுத்தறிவுக்குப் பொருந்தாதனவெல்லாம் மூடத்தனம்தானே?

அவன் தன் மடியிலிருந்த புடவைத் தலைப்பை ஏந்திக் கொண்டு எழுந்தான். அதைப் பற்றியபடியே அதையே வழிகாட்டியாகக் கொண்டு அவளை அடைந்தான். அவளுடைய நடுக்கத்தை நெருக்கம் உணர்த்தியது. ஆலிங்கனம் செய்தான். முதுகில் ஆதரவாகத் தட்டி ''பத்மநாபனுக்காக நானும் பயப்பட முடியாது. நீயும் பயப்படக் கூடாது'' என்றான்.

''ஒரு விதத்தில் பத்மநாபன் இந்த ஏற்பாட்டைச் செய்ததும் அதனை நான் ஒப்புக் கொண்டதும் நல்லதாகவே போயிற்று. ஏனென்றால் இந்த இரவுக்குள்ளாகவே நீ உன் பயத்தை வெற்றி கொள்ள நான் உதவி விடுவேன். நீ உன் பயத்தை உதறிவிட்டால் பிறகு எனக்கும் உன்னைப் பற்றிக் கவலையே இராது. ஆனால் உன் பயம் நீடிக்கிறவரை பத்மநாபன் உன்னை வெற்றி கொள்வதற்குரிய வாய்ப்பும் நீடிக்கிறது. புரிகிறதா?''

அவள் அடக்க மாட்டாமல் விம்மி விம்மி அழுதாள். அவன் தடுக்கவில்லை. அழ விட்டான். சற்று நேரம் கழித்துத் தானாகவே ஓய்ந்தாள். ''என்னை மன்னிச்சுடுங்க. எவ்வளவோ சந்தோஷமாக இருக்க வேண்டிய இரவை அழுது கெடுத்து விட்டேன்'' என்று விசும்பினாள்.

''அழுது முடிந்து விட்டதல்லவா? இனி விடியும்வரை மகிழ்ச்சி நிலவ வேண்டியது தானே!'' என்றான்.

''நான் செண்டிமெண்டலாச் சொன்னேன். நீங்க அறிவு பூர்வமாப் பேசறீங்க.''

''ஏதோ நான் முட்டாள்தனமாக உளறுவதாக நீ எண்ணாத வரை சரிதான்'' என்று கூறிச் சிரித்தான். ''நம்முடைய காதலில் நாம் உறுதியாக இருந்தால் எதைப் பற்றியும் நாம் கவலைப்படத் தேவையில்லை. எங்கே, அந்த டேப் ரிகார்டரை ஆன் பண்ணு பார்க்கலாம்!''

அவள் வேறு வழியின்றி அதை இயக்கினாள். ககன குதூகலம் ஒலித்தது.

''சரோ! சரோ!'' என்று அவள் காதருகே அவன் ரகசியமாய் அழைத்தான். அதில் வேட்கை தொனித்தது. ''கட்டில் எந்தப் பக்கம் இருக்கிறது சரோ?'' என்று கரகரத்த குரலில் வினவினான். அவள் அழைத்துச் சென்றாள். கொலுசுகள் ஜல் ஜல் லென்று ஒலித்தது.

இடையூறுகளைக் குறைக்க மஞ்சள் கயிறும் தாலியும் தவிர மற்ற நகைகளைக் கழற்றி அவள் தலையணைக்கடியில் வைப்பது அவனுக்குத் தெரிந்தது. 'கொலுசுகளை மட்டும் கழற்றி விடாதே' என்று வேண்டினான். அவனுடைய இந்த வினோதமான விருப்பம், அதிலே அவன் குறியாக இருப்பது அவளுக்குள் ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. அது காரணமாகப் பெற்ற துணிவுடன் அவள் காதுகளைத் திருகினாள். அவன் ரசித்தான்.

ககன குதூகலத்தை அடுத்து ஸ்ரீரஞ்சனியும் காம்போதியும் கேட்டன. என்றும் போல் இன்றும் அவை அவளை முழுமையாக அடிமைப்படுத்தின. அறிவு ஆன்மா சிந்தனை அனைத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டன. உடல் மட்டுமே சுபாஷின் விளையாட்டுக் கருவியாயிற்று. பத்மநாபனின் சூழ்ச்சி அவளுக்கு நன்றாகப் புரிந்தது. அவன் பரிசாக அளித்த அறையில் அவனது இசையோடு சேர்ந்து அவனும் அங்கே இருப்பது போன்ற பிரமையை அவளால் தவிர்க்க முடியவில்லை. 'அச்சம் தருகிற ஒரு கவர்ச்சி அவரிடம் இருக்கிறது. அவருடைய இசையில் மட்டுமின்றி அவரிடமே என்னை இழந்து விடுவேனோ என்று அஞ்ச வைக்கிற கவர்ச்சி' என்றுதானே அவள் கூறியிருந்தாள் சுபாஷிடம். ''சுபாஷ்! நீங்க தவறு செய்து விட்டீர்கள். பத்மநாபனின் சூழ்ச்சி உங்களுக்குப் புரியவில்லையா சுபாஷ்?'' என்று அவள் தனக்குள் மருகினாள். ஏதோ ஒரு நடுக்கம் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை ஓட அவள் சுபாஷை இறுக அணைத்தாள் பாதுகாப்பாக. அவனோ அதற்கு வேறு வித அர்த்தம் செய்து கொண்டு புளகாங்கிதமுற்றான்.

டேப் ரிகார்டரில் ஹம்ஸநாதம் ஒலித்தது. அவள் உடலின் ஒவ்வொரு அணுவின் உயிரிலும் அந்த நாதம் ஊடுருவிக் கலந்தது. சுபாஷின் பிடி தளர்ந்தது. சுபாஷ்தானா அது?

டேப் ரிகார்டரை அவளும் நிறுத்தவில்லை. அவனும் நிறுத்தவில்லை. அது தானாகவே எப்போது நின்று போயிற்றோ அவர்களுக்குத் தெரியாது. காலை எட்டு மணிக்குத்தான் கண் விழித்தார்கள்.

பத்மநாபனைப் பற்றிய கசப்புணர்வு நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்க எழுந்தாள் சரோஜா. எப்பேர்ப்பட்ட தெய்வீகமான இசையை எவ்வளவு கேவலப்படுத்தி விட்டான் அவன்! சே! இப்படிப்பட்ட கீழ்த்தரமான மனிதர்களிடம் போய் சங்கீத தேவதை சரணடைந்திருப்பது எவ்வளவு

பெரிய துரதிர்ஷ்டம்! அவன் முகத்தில் இனி விழிப்பதே பாவம்! நேற்று வரை அவனை அவள் கூடிய மட்டில் ஒதுக்கினளே தவிர வெறுத்ததில்லை. ஆனால் இன்று அவனை அடியோடு வெறுக்கவே செய்தாள். ஆயினும் அவன் இசையைத் தன்னால் வெறுக்க முடியுமா என்பது அவளுக்குச் சந்தேகமாகவே இருந்தது.

'கூடிய சீக்கிரம் இந்த டேப் ரிக்கார்டரைக் கைதவறிக் கீழே போட்டு உடைத்துவிட்டதாகப் பாவனை பண்ண வேண்டியதுதான்' என்று அவள் முடிவு செய்தாள். மிருதுவான ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்ட இந்த அறையில் போட்டால் உடையாது. அதற்கும் ஒரு சமயம் வரக் காத்திருக்க வேண்டியதுதான்!

6

'புதிதாக ஒரு சாகித்தியத்தைக் கவனம் செய்தேன்' என்றோ, 'புதிதாக ஒரு ராகத்தை அப்பியசித்து விருத்தி செய்தேன்' என்றோ கூறிக்கொண்டு பத்மநாபன் அவர்கள் இல்லத்துக்கு அடிக்கடி வந்தான். வாசித்துக் காட்டினான். அவ்வப்போது சில ரக்தியான ராகங்களையும் பிரபலமான கீர்த்தனைகளையும் வாசிப்பான். கணவன் மனைவி இருவருமே அருகருகே அமர்ந்து கரம் கோத்தபடி கேட்பார்கள்.

''ரொம்ப அழகாயிருக்கிறது!'' என்பான் சுபாஷ். ''அழகுணர்ச்சி என்பது சாதாரணமாகக் கண்களுடன் சம்பந்தப்படுத்தப்படுவதுதான். ஆனால் கண் இழந்தவர்களுக்குத்தான் ஒலியின் அழகுகள் நன்றாகத் தெரியும். ராக வடிவத்தின் அழகு, வெண்கல மணி ஓசையின் அழகு, வெள்ளிச் சதங்கை ஒலியின் அழகு, பட்சிகளின் கானத்திலே உள்ள அழகு என்று ஒவ்வொன்றிலும் அழகையும் காண்கிறேன் நான். நீங்களெல்லாம் இனிமையை, சுநாதத்தை, சுகானுபவத்தைத் தான் உணர்வீர்கள்.''

''மற்றது எப்படியோ. இப்போது உன் வார்த்தைகளில் உள்ள அழகை நான் ரசிக்கிறேன்'' என்றான் பத்து.

''அர்த்தமுள்ள வார்த்தைகளின் அழகு என்பது வேறு. அது இலக்கிய அழகு. அதைத்தான் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். அது தவிர அந்த வார்த்தைகளை வெளியிடும் தொனி அழகு என்பதும் உண்டு. ஒன்றும் புரியாவிட்டாலும் கேட்டு ரசிக்கக் கூடிய எழில் அந்தக் குரலுக்கும் அது தேர்ந்தெடுத்துக் கூறுகிற வார்த்தைகளுக்கும் இருக்கும். வி. பி.யின், ராதாகிருஷ்ணனின், சீனிவாச சாஸ்திரியின், அண்ணாதுரையின் சொற்பொழிவுகளைக் கேட்டிருப்பவர்களுக்குப் புரியும் நான் சொல்வது. எனக்கு அந்த ஆற்றல் துளியும் கிடையாது.''

''எவ்வளவு ஆழமாகச் சிந்தித்துப் பேசுகிறாய்'' என்று வியந்து பாராட்டிய பத்மநாபன் ''இன்னொரு தரம் இந்தப் புது ராகத்தைக் கேட்போமா?'' என்றான்.

''பேஷாக'' என்றாள் சரோஜா.

சிறிது நேரம் அவன் வாசித்த பிறகு இடையில் சற்று நிறுத்தினான். அடுத்த சித்திரிப்பை அவன் ஆரம்பிக்கு முன்னர் அவள் தன்னையும் அறியாமல் ஒரு புதிய கோணத்தில் அந்த ராகத்தைத் தன் கண்டத்திலிருந்து எழுப்பினாள்.

''பேஷ் பேஷ்! பலே!'' என்று கூறி ரசித்து அதையே தானும் குழலில் வாசித்தான் பத்து. அதிலிருந்து அவனுக்குப் புதிய கற்பனைகள் தோன்றின. அவன் சிலிர்ப்பது சுபாஷுக்குத் தெரிந்தது. 'கிரியா சக்தி' என்றான் அவன் காதோடு. பத்மநாபனின் கண்கள் மூடியிருப்பதைக் கவனித்துக் கொண்டு சுபாஷின் கரத்தைத் தன் கண்களில் ஒரு முறை ஒற்றி எடுத்ததன் மூலம் தன் அன்பு கலந்த நன்றியை அவள் வெளிப்படுத்தினாள்.

இப்படியே நாட்கள் ஆனந்தமாகச் சென்றன. நீ ''பயத்தை உதறி விட்டதால் வாழ்க்கை எவ்வளவு இலகுவாகி விட்டது பார்த்தாயா?'' என்று சுபாஷ் அவளைக் கேட்கவில்லை. அவள் அன்றைய இரவோடு பயத்தை உதறிவிட்டாள் என்பதில் அவன் தீர்மானமாக இருந்தான். அதைக் கேட்டு உறுதிப் படுத்திக் கொள்ள அவசியம் இருப்பதாக அவன் நினைக்கவில்லை. அவளும் அந்தப் பேச்சை எடுக்கவில்லை. சுபாஷின் அன்பு, பத்துவின் இசை என்று இரண்டும் தனித் தனியே இருக்கும்வரை, ஒன்றை ஒன்று குழப்பாத வரை, அது அது அதன் அதன் எல்லைக்குள் இருக்கும் வரையில் அவளுக்குச் சிரமம் ஏதுமில்லை. தடம் மாறினால்தான் ஆபத்து. நல்ல வேளையாக அப்படி ஏதும் இதுவரை நிகழவில்லை. ஆனால் இனி எதிர் காலத்தில் — அண்மைக் காலத்திலேயே நிகழாது என்பது என்ன நிச்சயம்? இந்தப் பயம் அவள் இதயத்துக்குள் 'முணுக் முணுக்' கென்று இருந்து கொண்டேதான் இருந்தது. ஆனால் அவள் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. சுபாஷுக்குப் பிடிக்காது.

அவள் இப்போது ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்தாள். அங்கு போதிக்க வேண்டிய பாடங்களைக் காலையில் தயார் செய்தாள். எம். ஏ. பரீட்சை எழுதுவதற்கான பாடங்களை இரவில் படித்தாள். சுபாஷுக்கு எம். ஏ. எழுத அவள் ஏற்கெனவே படித்து உதவி இருந்ததால், ஓரளவு சுலபமாக இருந்தது. அவனுக்கும் எம். ஃபில் எழுத ஆசை. அவள் எம். ஏ. எழுதி முடித்த பிறகு தனக்கு உதவலாம்



என்று கூறியிருந்தான். அதுவரை சிருஷ்டி இலக்கியத்தில் ஈடுபட்டான். படிப்படியாக சுபாஷ் சந்திரனின் பெயர் பிரபலமாகி வந்தது. ரூபாய்களாக மட்டுமின்றி டாலர்களாகவும் ஸ்டர்லிங்குகளாகவும் வரத் தொடங்கியபோது அவர்களுக்குப் பொருளாதாரச் சிரமங்கள் வெகுவாகக் குறைந்து போயின. என்றுமே அடக்கமாக இருக்கப் பழகிய அவர்களுக்கு இது வசதியான வாழ்க்கையாகவே தோன்றியது. ஆனால், ஓய்வே இருக்கவில்லை. வீட்டு வேலைகள், சமையல் காரியங்கள் வேறு. கணவனுக்குச் செய்ய வேண்டிய சிறு சிறு உதவிகள். அவ்வப்போது பத்து வந்து போய்க் கொண்டிருந்தான். எல்லாமாகச் சேர்ந்து வெகு வேகமாக நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

ஒரு நாள் ''என் கச்சேரிக்கே நீ இப்போதெல்லாம் வருவதில்லையே?'' என்று பத்மநாபன் கேட்டான்.

''இங்கேதான் வீட்டிலேயே வாரத்தில் மூன்று நாள் கச்சேரி நடத்தி வருகிறீர்களே'' என்று கூறிச் சிரித்தாள் சரோ.

''இருந்தாலும் அரங்கிலே கேட்பதுபோல் ஆகுமா?'' என்றான். ''நாளை மெலடி கிளப்பில் இருக்கிறது வருகிறாயா?''

ஒருமையில் அவன் விளித்ததைக் கவனியாதவள் போல், ''கண்டிப்பாக வருகிறேன்!'' என்றாள். ''என்ன சந்துரு, போவோமா?''—கல்யாணமான பிறகு அவள் கணவனை 'சந்துரு' என்று செல்லமாக அழைக்க ஆரம்பித்திருந்தாள்..

''ஓ. கே.'' என்றான்.

அங்கே அவர்களுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. திரை தூக்கப்பட்டதும் பத்மநாபன் வழக்கமான தோரணையில் அவையோரை நோட்டம் விட்டான். சரோவையும் சுபாஷையும் பார்த்துப் புன்முறுவல் செய்தான். பக்க வாத்தியக்காரர்கள் சுருதி சேர்த்துக் கொண்டு தயாராக இருப்பதைப் புலப்படுத்தினார்கள். தம்புரா போட அழைக்கப்பட்டிருந்தவர் தமது பணியைச் சிவனே என்று ஆற்றிக் கொண்டிருந்தார். பத்மநாபன் தன்னைச் சுற்றிலும் கழுத்தை ஒடித்துப் பார்த்து எதையோ தேடினான். பிறகு ஏமாற்றம் தொனிக்கும் குரலில், ''சபா காரியதரிசியைக் கூப்பிடுங்கள் ஃப்ளூட்டை மறந்து போய் டாக்ஸியில் விட்டு விட்டேனா வீட்டிலேயே மறந்து வைத்து விட்டு வந்து விட்டேனா தெரியவில்லையே?'' என்றான். அந்தப் பேச்சு ஒலி பெருக்கியிலேயே கேட்டது.

அவையோர் குபீரென்று சிரித்து விட்டார்கள். சிலர் சூள் கொட்டிக் கொண்டும் சிலர் 'சேசே' என்ற அலுத்துக் கொண்டும் எழுந்து போகவே தொடங்கி விட்டார்கள். ''குடிப் பழக்கம் ஏற்பட்டுப் போச்சன்னா இதுதான் தொல்லை!'' என்று ஒருவர் வெளிப்படையாக உரக்கவே பேசியது முன் வரிசையில் சுபாஷ் — சரோஜாவின் காதுகளில் விழுந்து அவர்களை மனச் சங்கடத்துக்குள்ளாக்கியது.

''இவன்தான் மறந்தான் என்றால், சிஷ்யப் பையன் என்ன செய்தானாம்?'' என்றான் சுபாஷ்.



''இன்று கச்சேரி இருப்பதையே அவனிடம் கூற பத்து மறந்திருப்பார்'' என்றாள் சரோ.

''நீ போய்ப் பார்'' என்று உத்தரவிட்டான் சுபாஷ். அவள் விரைந்தாள். குடிக்கத்தான் செய்கிறார் என்றாலும் இவ்வளவு ஞாபக மறதியாகவா ஒரு மனுஷன் இருப்பார்? இராது.... இங்கே டாக்ஸியில் இறங்கி இப்படித்தான் வந்திருப்பார். அரங்கை யொட்டியுள்ள இந்தக் கிரீன்-ரூமில் தான் சற்று நேரம் அமர்ந்து சபா காரியதரிசி, பக்கவாத்தியக்காரர்களுடன் பேசிக் கொண்டிருந்திருப்பார். அவள் அந்த அறைக்குள் நுழைந்தாள். குழல் பெட்டி மேஜை மேல் கேட்பாரற்றுக் கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு அரங்கத்தினுள் நுழைந்து அவன் எதிரே வைத்துவிட்டுத் திரும்பினாள்.


அவையோரிடையே கரகோஷம் எழுந்தது. குழல் அகப்பட்டு விட்டதல்லவா? அவள் திரும்பி வந்து சுபாஷ் அருகே அமர்ந்து சொன்னாள்: ''வெல்டன்'' என்றான்.

''அது சரி. ஒவ்வொரு கச்சேரிக்கும் நாம் போய்க் கொண்டிருக்க முடியுமா? புத்தி சொல்வாரே இல்லை போலிருக்கிறது. உங்கள் நண்பன் என்கிற முறையில் நீங்கள் கொஞ்சம் சொல்லக் கூடாதா?''

''ஆகட்டும். நிச்சயம் சொல்கிறேன். கேட்பானா என்பது சந்தேகம்.''

குழல் எதிரே வந்து விடக் கேலியாகக் கரவொலி எழுந்ததும் தனது இசைத் திறனுக்குச் சவால் விடப்பட்டு விட்டது போல் உணர்ந்தான் பத்து. அந்தச் சவாலை ஏற்கும் பாவனையில் வீராவேசம் தோன்றப் பெட்டியை அலட்சியமாய்த் திறந்து குழலை எடுத்து இதழ்களில் பொருத்திச் சில ஸ்வர ஒலிகளை எழுப்பினான்.

ஆரம்பத்தில் அவன் சிந்தனையை ஒருமுகப்படுத்தி வாசிக்கச் சிரமப்படுவது தெரிந்தது. ஆயினும் அவையோர் அதை லட்சியம் பண்ணாமல் அனுதாபத்துடனும் எதிர்பார்ப்புடனும் அமர்ந்திருந்தார்கள். எழுந்து போகத் தொடங்கியவர்கள் கூடத் திரும்பி வந்து உட்கார்ந்து விட்டிருந்தார்கள். போகப் போகத்தான் சரியாகும். பத்து ரசிகர்களைக் கைவிட மாட்டான்; இசைத் தேவதையும் பத்துவைக் கைவிட மாட்டாள் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. கல்யாணி வர்ணம், ஆபோகி, பந்துவராளி முடிந்து சங்கராபரணம் தொடங்கியது. அப்போதுதான் அவன் அவர்களை வானம்பாடிகளாக்கி விண்ணிலே பறக்க வைத்தான். பசும் பயிர்களாக அவர்களை மாற்றி இசை மழையிலே நனைந்து களிக்கச் செய்தான்: தேனீக்களாக அவர்களை உருமாற்றி ராக மலர்களிலே மது மாந்தச் செய்தான். போகப் போகக்



மானேஜர்: நீ அரை மணி நேரத்துக்கு முன் இங்கு இருந்திருக்க வேண்டும்!
வொர்க்: ஏன் சார்! என்ன நடந்தது?

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

கச்சேரி இன்னும் சூடு பிடித்தது. ரசிகர்கள் ஆழ்கடலில் அமிழ்ந்து முத்துக்களை அள்ளிக் கொண்டு வந்தார்கள். வான வில்லைத் திருப்பிப் போட்டு ஊஞ்சல் ஆடினார்கள். மேக மண்டலங்களில் மிதந்து சென்றார்கள். கச்சேரி முடிந்ததும் அனைவரும் தங்களையு மறியாமல் எழுந்து நின்று நீண்ட நேரம் கர கோஷம் செய்தார்கள்.

விடை பெற மேடை மீது ஏறித்திரைக்குப் பின் சென்றபோது, சபா காரியதரிசி, பத்துவின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொள்வதைக் கண்டாள் சரோ. ''பார்க்கிறாயல்லவா என் பெருமையை?'' என்று கேட்பது போல் கர்வத்துடன் அவளை நோக்கினான் பத்மநாபன். பிறகு, ''உன் கையால் குழலை எடுத்து வந்து தந்தாயல்லவா அதுதான் இப்படி அமைந்துவிட்டது கச்சேரி'' என்றான். அவளுக்கு ஆனந்தக் கண்ணீரும் துயரக் கண்ணீரும் ஒன்றாகக் கலந்து கண்களில் தளும்பி நின்றது.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அவளைப் பார்க்க அவன் வந்தபோது காணப் பரிதாபமாகக் காட்சி யளித்தான். க்ஷவரம் செய்யப்படாத முகம், உறக்கமின்றிச் சிவந்த கண்கள், கசங்கிய சட்டை, மித்தானைக்கூட அணியாத தோற்றம், வாரப்படாத கேசம்.

''வாருங்கள்'' என்று அழைத்த அவள் அனுதாபத்தையும் கச்சேரி அளித்திருந்த ஆனந்தத்தையும் மறைத்துக் கொண்டு, ''உங்களுக்கே அழகாக இருக்கிறதா நீங்கள் நடந்து கொண்ட விதம்?'' என்றாள் கோபமாக.

''யார் பத்துவா?'' என்று கேட்டான் சுபாஷ். ''சரோ கோபப்படுவதில் அர்த்தமிருக்கிறது பத்து. என் போன்ற ரசிகர்களுக்கு பத்து என்கிற தனி மனிதனைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் உன் இசை! அது உனது ஏகபோக உரிமையல்ல. சகலருக்கும் சொந்தமான பொதுச் சொத்தாக அதனைக் கருத வேண்டும் நீ. அதைப் போற்றிப் போஷித்துப் பாதுகாக்க வேண்டும் என்னும்போது உன்னையும் நீ தீய பழக்கங்களுக்கு அடிமையாகாமல் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ள அவசியமிருக்கிறது.''

''ஆகட்டும். கவனித்துக் கொள்கிறேன்'' என்றான் பணிவாக, பவ்வியமாக, குற்றம் புரிந்துவிட்ட குழந்தை மன்னிப்புக் கேட்பது போல. கூடவே மேஜை மேல் சுபாஷ் தன் இலக்கியப் பணிக்குப் பயன்படுத்த வைத்திருந்த தாள் ஒன்றின் மீது பால் பாயின்ட் பேனாவினால் எழுதினான்: ''நான் இப்படியாகிவிட்டேன் என்றால் அதற்கு யார் காரணம்?''

தாளை அவன் சரோவிடம் நீட்டினான். நீதான் காரணம் என்று சொல்லாமல் சொல்லும் பாவனையில்.

அவள் அதைப் பெற்றுக் கண்ணோட்டம் செலுத்திவிட்டு அலட்சியமாகக் கிழித்தெறிந்தாள். குற்றச்சாட்டை நான் ஏற்கவில்லை மறுக்கிறேன் என்று உணர்த்தும் முகமாக. கிழிக்கவில்லை தாளை. கிழித்தால் ஒலி சுபாஷுக்குக் கேட்கும்!

''சும்மா இங்கே சாது போல் பேசிவிட்டு அப்பால் போய் மறுபடியும் பாட்டிலைக் கவிழ்க்காதே'' என்றான் சுபாஷ். ''யாராவது ஒரு நல்ல மனோதத்துவ நிபுணரை நீ அணுகுவது நல்லது. அவரது பாதுகாப்பில் ஒரு மாதம் இருந்து ஒத்துழைத்தாயானால் அவர் இந்தப் பழக்கத்தை நீ விட்டொழிக்க உனக்கு உதவுவார்.''

''பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போ என்கிறாயா?''

''இல்லை பத்து! மூளை பிசகிப் போனவர்கள்தாம் ஸைக்கியாட்டிரிஸ்டுகளை அணுக வேண்டுமென்பதில்லை. உன்னைப் போல் பலவீன மனமுடையவர்கள், குழப்பங்களுக்கு ஆளானவர்களும் கூடப் போய்ப் பயன் பெறலாம். டாக்டர் மேற்பார்வையிலேயே நீ இருந்தால் குடிக்க வேண்டும் என்ற தாபம் தீவிரமாக எழும்போது நீ அதை மறக்க அவர் உனக்கு உதவுவார். அப்படியே படிப்படியாக நீ இந்தக் கெட்ட பழக்கத்தை வெற்றி கொள்ளலாம். குழலை மட்டும் அருகில் வைத்துக்கொள். எங்களைப்போன்ற உத்தம நண்பர்கள் மட்டும் வந்து சந்திக்க அனுமதி கொடு. வேறு யாரையும் அணுக விடாதே!''

''உன் உபதேசங்களை எவ்வளவு நேரம் கேட்பது? நான் வருகிறேன்'' என்று புறப்பட்டான்.

''பேஷாகப் போய் வா. ஆட்சேபணை இல்லை. ஆனால் இங்கு வந்தால் நீ என்னிடமிருந்து உபதேசம் பெறாமல் தப்ப முடியாது! நான் உனக்கு உண்மை நண்பனாக இருக்கவே பிரியப்படுகிறேன்.''

அவன் கோபத்துடன் வாசல் கதவை 'டமார்' என்று இறந்து மூடும் ஒலி கேட்டது.

''பாவமாக இருக்கிறது அவரைப் பார்த்தால்'' என்றாள் சரோ.

''பரிதாப உணர்வுக்கு இடம் தராதே. அது ஆபத்து'' என்று எச்சரித்தான் சுபாஷ். ''அவன் இப்படி ஆவதற்குக் காரணமே நீதான் என்று சாதித்தாலும் சாதிப்பான், நீ ஏமாந்து விடக் கூடாது!''

அவன் வார்த்தைகள் சரோவின் நெஞ்சில் சுருக்கென்று தைத்தன. எவ்வளவு கச்சிதமாகக் கணிக்கிறார் மனப் போக்குகளை.


அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத் தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்
மிகத்துரித
நிவாரணம் அளிக்கும்
வியர்க்குரு பவுடர்
Glaxo
nycil
PRICKLY HEAT POWDER
வாங்குவீர் நைஸில் —
விரட்டுவீர் வியர்க்குருவை.
* அதிகபட்ச சில்லறை விற்பனை விலை.
உள்ளூர் வரிகள் தனி.
அரிப்பு, எரிச்சல் போன்ற
தொல்லைகளிலிருந்து மிகத்
துரித நிவாரணம் தரவல்லது
வியர்க்குரு பவுடர்
ஒன்றுதான் நைஸில்.
விசேஷ மருந்துக்
கலவையுள்ள நைஸில், எவ்
வொரு கட்டத்திலும்
வியர்க்குருவை எதிர்த்துப்
போராடுகிறது.
1. அதிகம் வியர்க்காமல் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமூட்டுகிறது.
GN-79-364 E Tam



அவன் எழுதித் தந்த தாள் கீழே கிடப்பதைப் பார்த்தாள். அதைப் பற்றி சுபாஷிடம் சொல்வதா வேண்டாமா?

அவள் ஒரு முடிவுக்கு வரு முன்னர் பத்மநாபன் ஓசைப்படாமல் மீண்டும் அவள் எதிரே வந்து நின்றான். என்ன இது விடை பெற்றுப் போனவர் திரும்பி வந்து நிற்கிறார்! எதற்கு? வியப்புத் தணிந்து அவள் வினா எழுப்பு முன்னர் அவன் பரிதாபமாக அவளைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டான். கன்னத்தில் போட்டுக் கொண்டு கெஞ்சுவது போல் ஜாடை காட்டினான்: 'நான் திரும்பி வந்திருக்கிறேன் என்பது சுபாஷுக்குத் தெரிய வேண்டாம்!'

இவர் போவது போல் போய் சுபாஷுக்குப் போக்குக் காட்டிவிட்டுத் திரும்பி வந்திருக்கிறார். எதற்காக? கதவை மட்டும் திறந்து சாத்தி சத்தப்படுத்தி விட்டு வந்திருக்கிறார்! இப்படி சுபாஷை ஏமாற்ற இவர் ஏன் முயல வேண்டும்? பளிச் சென்று அவளுக்குப் புரிந்தது. பார்வையற்ற சுபாஷுக்குத் தான் திரும்பி வந்திருப்பது தெரியக் கூடாது என்று இவர் கருதுகிறார் என்றால் அதற்கு ஒரே ஒரு அர்த்தம்தானே!

மறுபடியும் பணிவாகக் கும்பிட்டு முக பாவனையால் கெஞ்சினான் அவன். "என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே சரோ! ப்ளீஸ்! அந்த அவமானத்தை என்னால் தாங்க முடியாது!"

பரிதாப உணர்வுக்கு இடம் தராதே ஆபத்து என்று சில விநாடிகளுக்கு முன்புதான் எச்சரித்திருந்தான் சுபாஷ். ஆனாலும் அவர் தன் குரு. அவளுக்கு அவர் இசையில் பிரேமை, பக்தி!.

"வாசலில யார் பாரு" என்றான் சுபாஷ்.

"யாருமில்லே. நான்தான் வாசல் கதவைத் தாளிட்டு விட்டு வந்தேன்" என்றாள் சரோ.

இப்போது நன்றி கூறும் புன்முறுவலுடன் கரம் கூப்பினான் பத்து. அடுத்து அந்தப் புன்னகை விஷமப் புன்னகையாக, காமத்தை மறைக்காமல் வெளிப்படுத்தும் புன்சிரிப்பாக மாறியது. கூப்பிய கரங்களை விரித்து அவள்பால் நீட்டி, "வா இங்கே!" என்று அபிநயம் பிடித்தான். கண்களைச் சிமிட்டி "வந்துவிடு! இந்தக் கரங்களுக்கிடையில் சிக்கிக்கொள்ள வா" என்று அழைத்தான்.

அவளுக்கு வானமே இடிந்து தன் தலையில் விழுவது போலிருந்தது. இவர் குடித்திருப்பதால் இப்படி நடந்து கொள்கிறாரா, இல்லை மெய்யான துணிச்சலுடன் செயல்படுகிறாரா? அசாதாரணமான இசை ஆற்றலைப் பெற்றுள்ள இவர் தேவனா, அசுரனா? அவருடைய நோக்கங்களைப் பற்றி இனி ஐயப்பாடே இல்லை. எங்கிருந்து வந்தது இவருக்கு இந்தத் துணிவு? கணவனின் எச்சரிக்கையை மீறி இவரிடம் பச்சாதாபம் காட்டி ஒரு சிறு பொய் கூற முற்பட்டவுடன் விளைவு எவ்வளவு பயங்கரமானதாக இருக்கிறது! வாசலில் யாருமில்லை என்று சுபாஷிடம் நான் கூறிய பிறகு இனி அதை மாற்றிக்கொள்வதற்கும் இல்லை. அற்ப விஷயத்தில் தான் பொய் சொன்னதாகத் தெரிந்தால் சந்தேக வித்து சுபாஷின் மனத்தில் ஊன்றிக் கொள்ளும்.

இந்த இக்கட்டிலிருந்து எப்படித் தப்புவது? அவளுக்கு ஒரே ஒரு வழிதான் தோன்றியது. ஓரிரு நிமிஷங்களுக்கு முன்புதான் பத்மநாபனுடன் அமர்ந்துபேசிக்கொண்டிருந்த இரட்டை சோபாவிலிருந்து சுபாஷ் இன்னும் எழுந்திருக்கவில்லை. அவள் அவன் அருகில், மிக அருகில் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள். 'என்னை இப்போது உங்களால் என்ன செய்துவிட முடியும்?' என்பது போல் பத்மநாபனைப் பார்த்தாள். அவன் முகத்தில் கடுகடுப்புக் குடிகொள்ளக் கண்டாள்.

"சரி, நான் கட்டுரையைத் தொடர்கிறேன்" என்று எழப் போனான் சுபாஷ். "சந்துரு!" என்று அழைத்து அவன் தோளைப் பற்றி அழுத்தி அமரச் செய்தாள். "நான் வந்து பக்கத்தில் உட்கார்ந்ததுமே முள் குத்துகிறதா?" என்று கேட்டு அவன் கரத்தைப் பற்றித் தன் மடியில் வைத்துக் கொண்டாள். "இன்று ஞாயிற்றுக் கிழமைதானே? என்னோடு சிறிது நேரத்தைச் செலவிட்டால் என்னவாம்? தினம்தான் உங்களுக்கு வேலை, எனக்கும் காரியம்!"

அவன் சிரித்துக் கொண்டே அவள் முதுகுப்புறமாக இடக் கரத்தைக் கொண்டு போய், மறுதோள் மீதாக உள்ளங்கையைப் பதித்தான். வலக் கரத்தால் அவள் கன்னத்தைத் தடவினான். "நீ வேலைக்குப் போய் வருகிறாய். நான் தினமும் வீட்டோடு இருப்பதால் எல்லா நாளும் ஒரே மாதிரிதான் இருக்கிறது. ஞாபகப் படுத்தியதற்கு தாங்க்ஸ்" என்றான்.

தன் கன்னத்தை வருடிய அவன் கரத்தை எடுத்து அவள் தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள். "என் தவறை மன்னியுங்கள்" என மானசீகமாக வேண்டினாள்.

"பத்மநாபன் சீக்கிரம் விடை பெற்றுப் போனதும் நல்லதாகப் போயிற்று!" என்று கூறியவாறே அவளைத் தன் மடியில் சரித்துக் கொண்டு விரல்களால் விளையாட ஆரம்பித்தான் சுபாஷ்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. ஏதாவது சல்லாபித்துக் கொண்டிருந்தால் சற்று நேரத்தில் பத்து அலுத்துச் சலித்துப் போய் விடுவான் என்று எண்ணியவள் இந்தத் திடீர் திருப்பத்தினால் துணுக்குற்றாள்.

"இப்பவா?" என்றாள் அவன் விரல்களைத் தன் கரங்களால் தடுத்துச் சிறைப்படுத்தி.

"ஏன், இப்போதைக்கு என்ன? எனக்குப் பகல் இரவு எல்லாம் ஒன்றுதான் என்பதை நீயே என்னிடம் சொல்லியிருக்கிறாய், மறந்து விட்டதா?" என்று சிரித்தான் சுபாஷ்.

தர்மசங்கடமாகப் போயிற்று அவளுக்கு. விநாடிக்குள் ஒரு முடிவுக்கு வந்தவளாக எழுந்து அவன் கைகளைப் பற்றி இழுத்தாள். "வாங்க, பெட் ரூமுக்குப் போவோம்."

அவனைத் தன்னை யொட்டி நடத்தி அழைத்துப் போனான். அப்படிப் போகும்போதே பத்மநாபன் சிலையாக நின்று ஆங்காரத்துடன் தன்னை வெறித்துப் பார்ப்பதைக் கண்டாள். படுக்கை அறைக்குள் நுழைந்ததும் சட்டென்று கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டாள். ''எதற்குக் கதவைச் சாத்துகிறாய்? இங்கே யார் இருக்கிறார்கள் நம்மைத் தவிர'' என்றான் சுபாஷ். ''அதென்னவோ, பகல் நேரமானதாலோ என்னவோ கூச்சமாயிருக்கு சந்துரு! எவனாவது வந்துவிடுவானோ, பார்த்து விடுவானோ என்று ஒரு பிரமை!'' அவன் சிரித்தான். பெண்களின் இயல்பு விசித்திரமானதுதான்! ஜன்னல் கதவுகளையும் சாத்தித் திரைச் சீலைகளையும் இழுத்துவிட்டு மின் விசிறியைப் போட்டாள். அதன் பின்னர் அவன் விருப்பங்களுக்கெல்லாம் அவள் வளைந்து கொடுத்தபோது கூடவே வெளியே பத்மநாபன் இன்னும் இருக்கிறாரா, போய்விட்டாரா என்ற கேள்வி அவள் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்தது. தன்னை நோக்கி நீண்ட அவர் கரங்களுக்குள் சிக்காமல் கணவனை அழைத்துக்கொண்டு படுக்கை அறைக்குள் சென்றபோது ஏமாற்றமும் கோபமும் போட்டியிட வெறித்த அந்தப் பார்வை! அவள் உள்ளத்தில் பீதியைக் கிளப்பிய நோக்கு. இப்போது கூட நாலரை அங்குலச் சுவரை அல்லது ஓரங்குல கனமுள்ள மரக்கதவை ஊடுருவிக்கொண்டு அந்தக் கண்கள் தன்னைப் பார்ப்பது போலவே தோன்றியது. 'இது போன்ற சந்தர்ப்பத்தில் தான் விரும்பா விட்டாலும் பத்து என்னுடன் இருப்பது இது இரண்டாவது முறை!' என்று நினைத்தாள். அச்சத்துடன் அவள் தேகம் நடுங்கியது. விம்மி வில்லாய் வளைந்து நிமிர்ந்தது.

பத்மநாபன் எப்போது வெளியேறினானோ அவளுக்குத் தெரியாது. ரொம்ப நேரம் கழித்து இருவருமாக வெளியே வந்தபோது அவன் இல்லை. ஓசைப்படாமல் அவள் வாசல் கதவைத் தாளிட்டு விட்டுத் திரும்பினாள்.

7

மெலடி கிளப் காரியதரிசி ஒரு நாள் போன் செய்தார். ''பத்மநாபன் பற்றிக் கேள்விப்பட்டீர்களா?'' என்றார்.

''இல்லையே!'' என்றான் சுபாஷ்.

''புரொஹிபிஷன் கேஸில் அகப்பட்டு லாக் அப்பில் இருக்கிறார். சரோவின் அப்பா ஏதாவது செய்தால்தான் உண்டு. ஆண்டியப்பனுக்கு நான் போன் பண்ணுவதைவிட நீங்கள் பேசினால் கொஞ்சம் வெயிட் இருக்கும் என்று நினைத்தேன். இசை உலகில் பத்துவுக்கு அனுதாபம் காட்டுகிறவர்கள் ரொம்பக் குறைவு. பொறாமைப்படுகிறவர்கள்தான் ரொம்ப அதிகம். அவர் தமது குடும்பத்தினராலேயே வெறுக்கப்படும் அளவுக்கு அவ்வளவு மோசமாகி விட்டார்.''

''நான் உடனே கவனிக்கிறேன்'' என்றான் சுபாஷ்.

ஃபோனில் அவன் குரலைக் கேட்டதும் அவர் வியப்பை அடக்க முடியாமல், ''ஏது அதிசயமாக இருக்கிறது!'' என்றார்.

'''சரோ தினம் ஒரு தரம் போன் பண்ணித் தன் அம்மாவிடம் சௌக்கியமாய் இருக்கிறேன் என்றாவது சொல்ல வேண்டும்; அதற்காகத்தான் போன்' என்று கூறிப் பிடிவாதமாக ஏற்பாடு செய்தீர்கள். அதற்கு உண்மையானுமே நற்பயன் இன்றுதான் கிட்டியிருக்கிறது!''

''ரொம்ப சந்தோஷம். என்ன சமாச்சாரம் சொல்லு... நூறு அனாவசிய போன் கால்களை ஈடுகட்டுகிற மாதிரி இந்த ஒரு போன் கால் இருக்கட்டும்.''

''உங்களால் ஒரு உபகாரம் ஆகவேண்டும்.''

''சுற்றி வளைக்காதே. நீ உதவி கேட்பதே அபூர்வம். நான் மாட்டேன் என்று சொல்லப் போகிறேன், அதுவும் மாப்பிள்ளைக்கு! சட்டென்று விஷயத்துக்கு வா!''

''பத்மநாபன் லாக் அப்பில் இருக்கிறான். புரொஹிபிஷன் கேஸ்...''

''ஜாமீனில் விடுவிக்க முடியாது. அபராதம் கட்டுவதோடு தப்பி வந்துவிடவும் முடியாது. புதிய சட்டம் உனக்குத் தெரிந்திருக்கும்.''

''அதனால்தான் உங்களுக்கு ஃபோன் செய்கிறேன். பத்மநாபன் இசை ஜீனியஸ். அவன் சிறையில் இருப்பது என்பது மாபாதகம். அவனுக்காக நான் பரிந்து பேசவில்லை. அந்தக் கலை சிறைப்படக் கூடாது. வாடிவிடும்.''

''நான் மினிஸ்டரிடம் பேசிப் பார்க்கிறேன். லோயர் லெவலில் நடக்கிற காரியமில்லை.''

''பார்க்கிறேன் என்று சொல்லாதீர்கள். காரியத்தை முடிக்கிறேன் என்று சொல்லுங்கள். நமது சி. எம்.முக்குக் கலை பற்றியும் கலைஞர்கள் பற்றியும் தெரியும்.''

''ஓகே'' என்றார் ஆண்டியப்பன். ''ஒரு தடவை நான் குறுக்கிடலாம். அடுத்த முறை அகப்பட்டுக் கொண்டால் ஆண்டவன் கூட அவனைக் காப்பாற்ற முடியாது. நமது சி. எம்.முக்கு மதுவினால் ஏற்படும் தீமைகளும் தெரியும். சட்டம் அனைவருக்கும் பொது என்பதும் தெரியும். பத்துவுக்குச் சொல்லி வை.''

''ஆகட்டும்; தாங்க்யூ!''

மாலையில் சரோ வந்ததும் நடந்ததைச் சொன்னான். ''நீங்கள் அவருக்காகப் பரிந்து பேசியிருக்க வேண்டியதில்லை. ஜெயிலில் தான் இருந்துவிட்டு வரட்டுமே'' என்றாள்.

''என்ன இப்படிப் பேசுகிறாய் சரோ?''

''பின்னே? யாரால் இவரைக் கட்டிக் காக்க முடியும்? எத்தனை நாளைக்கு? எச் சரிப்பதற்கு அதிகமாக நாம் என்ன செய்ய முடியும்? கண்களை அகலத் திறந்துகொண்டு பாழும் கிணற்றில் விழுகிறவர்களை நாம் எப்படித் தடுப்பது? இருபத்தி நாலு மணி நேரமும் இவருக்கு நாம் காவல் இருக்கவா முடியும்? வைச்சு அனுத்து விட்டது. ஏற் கெனவே அவருக்கு இசை உலகில் மவுசு போய்விட்டது. கச்சேரிகள் வெகுவாகக் குறைந்து விட்டன.''

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே அவன் வந்துவிட்டான். ''ரொம்ப தாங்க்ஸ்'' என்றான்.

''இவள் அப்பாவுக்கு அல்லவா சொல்ல வேண்டும் தாங்க்ஸ்.''

''நீதான் போன் பண்ணினதாக ஆண்டி யப்பன் சொன்னார். இன்று நான் முழுதும் அவருக்கு வீணாகி விட்டதாம். ஐயாயிரம் ரூபாயாவது சம்பாதித்திருப்பாராம். நஷ்ட மாகி விட்டதாம். மாப்பிள்ளைக்காகத்தான் இதைச் செய்தேன். உனக்காக இல்லை தெரிஞ்சுக்க'' என்றார்.

''நான் யாருக்கும் எதற்கும் சிபாரிசுக்குப் போவதில்லை. இதுதான் முதல் தடவை. இதுவே கடைசித் தடவையும் கூட.''

''மறுபடியும் நான் மாட்டிக் கொண்டால் தர்ப்பயாமிதான் என்கிறாய். அதுதானே? மாட்டிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாகக் குடிக்கிறேன்.''

''குடிக்காமல் இருக்கிறேன் என்று சொல் லேன்.''

''அதற்கு ஒரு வழி இருக்கிறது.''

''என்ன?''

''நான் இங்கேயே வந்துவிடுகிறேன். உங்களுடனேயே இருந்து விடுகிறேன்.''

''நான்சென்ஸ்'' என்றாள் சரோ. கண வன் சரி என்று சொல்லிவிடப் போகிறாரே என்பதால் அவசரமாக அவள் முந்திக் கொண்டாள்.

''உங்கள் குடும்பத்தில் ஒருவனாக ஏற்றுக் கொண்டால், பரிவும், அன்பும் காட்டினால், சதா உங்கள் கண்காணிப்பில் இருந்தால் நான் திருந்திவிட முடியும் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கிறது.''

''எனக்கு இல்லை'' என்றாள் சரோ.

''ஏன் சரோ, இவ்வளவு கடுமையாகப் பேசுகிறாய்?'' என்றான் சுபாஷ்.

''உங்களுக்குத் தெரியாது. இவர் நம் வீட்டையே சாராயக் கடையாக்கி விடுவார். ஹி இஸ் பியாண்ட் எனி ஹெல்ப். கடைசியில் இவருடன் சேர்ந்து நாமும் கம்பி எண்ண வேண்டியதாகிப் போகும். பேசாமல் நீங்கள் முன்பே யோசனை சொன்னது போல் யாரா வது மனோ தத்துவ நிபுணரின் நர்ஸிங் ஹோமில் இருந்து சிகிச்சை பெற்றுவரலாம்.''

கோபத்தில் பத்மநாபனின் கண்கள் பள பளத்தன. 'என் இசைத் திறன், என் வாழ்க்கை என் எதிர்காலம் எல்லாவற்றை யும் பாழடித்தது மது அல்ல. நீதான்' என்பது போல் அவளைப் பார்த்தான். 'உன்னை மட் டும் நான் அடைந்திருந்தால் நாதியற்றவனா கவா இருப்பேன்? ஆண்டியப்பனின் அரண்மனை போன்ற மாளிகையில் சுக போக வாழ்க்கை



கிட்டியிருக்கும்! அத்தனையையும் கெடுத்து விட்டு இந்தக் குருட் டுப் பயலைக் கட்டிக் கொண்டு அழுகிறாய்.'

அவனது சிந்தனைப் போக்கு அவளுக்குத் தெளிவாய்ப் புரிந்தது.

''நீங்கள் பிரிட்டிஷ் கௌன்சிலில் சினிமா வுக்கு இன்று அவசியம் போக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே!'' என்று நினை வூட்டினாள்.

''நானும் வருகிறேனே'' என்றான் பத்து.

''வேண்டாம். ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றைத் திரைப்படமாக எடுத்திருக் கிறார்கள். நாங்கள் இலக்கிய மாணவர்களா தலால் போக விரும்புகிறோம். உங்களுக்கு எதற்கு? உங்களுக்குப் புரியாது. பிடிக்கவும் செய்யாது. மேலும் இரண்டு டிக்கட்டுகள் தான் இருக்கின்றன.''

''எப்படியோ இன்று என்னை விரட்டி அடிப்பது என்று தீர்மானித்து விட்டாய். சரி, வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட் டான் பத்மநாபன்.

''அப்படியொன்றுமில்லை பத்து! இது பத்து நாட்களுக்கு முன்பாகவே ஆசையோடு நாங்கள் போட்ட புரோகிராம். நீ கோபப் படாதே. வழக்கம் போல் வந்து போய்க் கொண்டிரு'' என்று ஆறுதலாகக் கூறினான் சுபாஷ்.

அவன் காட்டிய இந்தப் பரிவைத் தாராள மாகவே பயன்படுத்திக் கொண்டான் பத்து. சரோவுக்குத்தான் அவன் வந்து விட்டாலே முள்ளின் மேல் நிற்பது போலிருந்தது. ஆனால் முன்பு போல் அவளிடம் அவன் ஏடாகூட மாக நடந்து கொள்ளவில்லை. மரியாதைகாட் டினான். இருந்தாலும் இவனை நம்பக் கூடாது என்று அவள் எச்சரிக்கையாகவே இருந்தாள்.

ஒரு நாள் அதிகாலையில் அவர்கள் காப்பி தயாரித்துச் சாப்பிட்டு முடிக்கும் போது வந்துவிட்டான் பத்மநாபன்.

''சரோ ஸாரங்கதரங்கிணி என்று கேள் விப்பட்டிருக்கிறாயா? நேற்று முழுவதும் ஆராய்ந்து கொண்டிருந்தேன். ரொ வு ஜோராய் இருக்கிறது. கொஞ்சம் கேட் கிறாயா?''

''இப்பவா? எனக்குச் சமையலைக் கவ னிக்கணும். பள்ளிக்கூடம் கிளம்பணும்!'' என்றாள்.

''இருக்கட்டும் சரோ. ஆர்வத்தோடு வந்திருப்பவர்களை விரட்டாதே. சமையலை இன்று சிம்பிளா முடிச்சுடலாம். உட்கார்ந்து கேளு'' என்றான் சுபாஷ்.

அவள் பத்துவுக்குக் காப்பி கலந்து கொண்டு வந்து வைப்பதற்குள் அந்த ராகத்தை அவன் வாசிக்க ஆரம்பித்து விட்டான். ஆறினால் பாதகமில்லை வை என்று ஜாடை காட்டிவிட்டு வாசித்துக் கொண்டே இருந்தான். நீண்ட நாட்களுக்குப் பிறகு மறுபடியும் தன்னை மெய் மறக்கச்

செய்யும் ஆற்றல் அவனுடைய இசைக்கு வந்திருப்பதை அவன் உணர்ந்தான். அவனது உற்சாகம் எதனுலோ எப்படியோ திரும்பி விட்டிருந்தது. அவன் சற்று நேரம் வாசித்த பிறகு காப்பியை இரண்டு வாய் குடித்து விட்டு வைத்தான். அந்த ராகத்தின் ஆரோகண அவரோகணங்களை விளக்கிக் கூறிவிட்டு மறுபடி வாசித்தான். புதிய புதிய கற்பனைகளில் லயித்தான். ஓரிடத்தில் தவறு நேர்ந்த போது சகிப்புத் தன்மை இன்றித் தன்னைத் தானே கடிந்து கொள்பவனுக விரல்களை முறித்துச் சொடுக்கித் தலையைக் குலுக்கிஞன்.

''மறுபடியும் வாசித்தால் சரியாக வந்துவிடுகிறது. இதற்கு ஏன் இவ்வளவு அவஸ்தை?'' என்ருன். அந்த ஒரு சொல் ஏதோ மந்திரம் போல் வேலை செய்தது. திரும்பின பக்கமெல்லாம் விதவிதமான வண்ணங்களில் புதுப் புது மலர்கள் இதழ் விரித்துப் புஷ்பிப்பது போல் அவன் அடுக்கடுக்கான புதுப் புது கற்பனைகளை வளர்த்தான். இப்போதுதான் அப்யசிக்க ஆரம்பித்த ஓர் அபூர்வ ராகத்தில் இத்தனை லாவண்யங்களைக் காட்ட முடியுமா என்று அவன் வியந்து போஞன்.

அவன் முடித்து நிறுத்தியபோது ''அபாரமாய் அற்புதமாய் இருந்தது'' என்று கூறிஞன் சுபாஷ். அவனோ இன்னமும் அந்த நாத வெள்ளத்திலிருந்து கரை காணுதவனாகவே காட்சியளித்தான்.

''சரோ! மணி எட்டாகப் போகிறது.'' என்று சுபாஷ் நினைவூட்டவும், ''ஐயோ! ரொம்ப நேரமாச்சு. நான் குளிக்கப் போறேன்!'' என்று கூறி எழுந்து விரைந்தான்.

''நானும் புறப்படுகிறேன். ஸாரி. உங்களுக்கு ரொம்பத் தொந்தரவு!'' என்ருன்.

''தொந்தரவா? தேவ கானம் கேட்பதில் என்ன தொந்தரவு? இன்னும் சாவகாசம் இல்லையே என்ற ஏக்கம்தான்'' என்று கூறி விட்டுப் படுக்கை அறைக்குள் புகுந்து சென்ருன். அதை யொட்டிக் குளியலறையும் இருந்தது.

''வரட்டுமா சுபாஷ்?'' என்று கூறி எழுந்தான் பத்து.

''ஆகட்டும்! குட்பை அண்ட் தாங்க்ஸ்'' என்ருன் சுபாஷ். ''இன்றைய தினம் மிக அழகாக ஆரம்பமாகியிருக்கிறது.''

'விகாரமாய் முடியப் போகிறது!' என்று மனத்தளவில் கூவிக் கொண்டான் பத்து. விரைந்து வாசல் பக்கம் சென்று கதவைத் திறந்து செருப்பை மாட்டிக் கொண்டு வெளியேறுவது போல் நடித்து மீண்டும் சத்தப்படுத்திச் சாத்தினுன். கால் செருப்பைக் கழற்றிக் கையில் எடுத்து மேல் துண்டில் சுற்றிக் கொண்டான். 'அடாடா! கொஞ்சம் மெதுவாகச் சாத்திவிட்டுப் போகக் கூடாதா? வீடே இடிந்து விழும்போல் அதிர்கிறதே' என்று முணு முணுத்துக் கொண்டே சுபாஷ் திரும்புவதைப் பார்த்துத் திருப்தியுற்ருன். ஸ்பிரிங் லாக் உள்ள கதவு. வெளிப்புறமிருந்து சாவி போட்டு மட்டுமே திறக்க முடியும். நான் வெளியேறிவிட்டதாகவே நினைத்துக் கொண்டிருக்கிருன் சுபாஷ்! உட்புறமுள்ள இரண்டாவது தாழ்ப்பாளைப் போடுவதில் இவன் கவனமாக இருப்பதில்லை என்று தெரிகிறது. தன் திட்டத்தில் முதல் படி வெற்றிதான்.

ஒரு கையில் மேல் துண்டில் சுற்றப்பட்ட செருப்பு இன்னொரு கரத்தில் ஃப்ளூட் பெட்டி. ஆகியவற்றுடன் அவன் படுக்கை அறையை அடைந்தான். தாழ்வான கட்டில். அதன் அடியில் உருண்டு புரண்டுதான் நுழைய வேண்டும். தவழக்கூட முடியாது. உருண்டான். 'என்ன மாடர்ன் பர்னிசேரோ! ஆறு மாசத்துக்கொரு தரம் கட்டிலை நகர்த்திப் பெருக்குவார்களா? ஒரே தூசி! தும்மல் வராமல் இருந்தால் சரிதான்!' என்று எண்ணிக் கொண்டான்.

சில நிமிஷங்களில் குளியலறையிலிருந்து சரோ வெளிப்பட்டான். அவன் பாதங்கள், வெண்மையான, மிருதுவான பாதங்கள் கொலுசு அணிந்து புன்னகும் பாதங்கள் மட்டும் தெரிந்தன. உடம்பைத் துடைத்துக் கொள்வதும் உடை அணிவதும் அலங்கரித்துக் கொள்வதும் பார்க்க முடியாவிடினும் புரிந்தது. கூடவே அவர்கள் பேசிக் கொள்வது கேட்டது.

''பத்துவின் தயவால் இன்று உங்களுக்கு மோர் சாதம்தான்'' என்ருள்.


''பாதகமில்லை போ! ஒரு நண்பனைச் சந்தோஷப்படுத்துவது என்பது சாம்பார் சாதத்தை விட முக்கியமில்லையா?''

''இருந்தாலும் இவ்வளவு தூரம் நீங்கள் அவருக்கு இடம் தர வேண்டாம். நேரம் போது இல்லையா வரவும் போகவும்?''

''அவனைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது சரோ! எவ்வளவு உயர்ந்த கலைஞன்! இப்படி வீணுகப் போகிருனே என்று.''

''சரி சரி நான் வரட்டுமா?'' என்ருள்.

''அவ்வளவுதானு! வழக்கமான விடை பெறுதலுக்குக் கூடவா நேரமில்லை?''




VEP
Soap
VEP
மேனியழகு மிளிர
இயற்கையின்
கைவண்ணம்
வேப்
சோப்பு
மறைந்திருக்கும்
அழுக்கை ஈர்த்து வெளி
யேற்றி உங்கள்
சருமத்தின் மினு
மினுப்பும் மெருகும்
கலையா வண்ணம்
போற்றிப் பாதுகாக்கிறது
வேப் சோப்பு.
கேரளா சோப்ஸ் &
ஆயில்ஸ் லிமிடெட்
(ஒரு அரசு நிறுவனம்)
கோழிக்கோடு.
FDS KS 2871 TAM

ஒரு நிமிஷம் இருவர் கால்களும் நெருங்கி வருவதைக் காண முடிந்தது. முதலில் அவளுடைய குதிகால்கள் உயர்வதையும் பிறகு அவளது இரு கால்களும் அவனது கால்களை மிதித்துக் கொண்டு நிற்பதையும் அவன் பார்த்தான். ''போதும் போதும்! ஒரு 'ஜெமி கோலன்' போடுங்கள். சாயந்திரம் தொடரலாம்.'' என்று கூறிக் 'களுக்' கென்று சிரித்தாள். அவள் பாதங்கள் நகர்ந்தன. ஜல் ஜல் என்று ஒலி எழுப்பி வேகமாய் நடந்தன.

மீண்டும் ஒரு முறை வாசல் கதவு திறந்து மூடப்பட்டது. தனது டைப்ரைட்டர் எதிரே அமர்ந்து உறையைக் கழற்றிவிட்டுத் தாளைச் செருகினான் சுபாஷ். ஒரு சிறு கதை உருவாகிக் கொண்டிருந்தது. அவனது சிந்தனையும் விரல்களும் ஒருங்கிணைந்து செயல்படத் தொடங்கின.

கட்டிலுக்கு அடியிலிருந்து ஓசைப்படாமல் வெளிப்பட்ட பத்மநாபன் மெத்தை மீது அசையாது படுத்துக் கொண்டான். காத்திருந்தான். 'அரை மணி நேரம் போகட்டும்' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

பிறகு நாடகத்தை ஆரம்பித்தான். ஃப்ளுட் பெட்டியினுள் ஓர் ஓரமாக லாட்டின் துணியில் சுற்றி வைக்கப்பட்டிருந்த ஒரு ஜதை கொலுசுகளைச் சத்தப்படுத்தாது எடுத்தான். வாசல் பக்கம் பூனையாக நடந்து ஓசை எழுப்பாது அவற்றை அணிந்தான். பிறகு சதங்கை ஒலி கொஞ்ச சற்று நடந்தான்.

டைப் செய்யும் ஓசை நின்றது. 'சரோ?' என்று வினா எழுப்பி வினவினான் சுபாஷ்.

நடப்பதை நிறுத்திச் சிலையானான் பத்து.

மறுபடியும் டைப்ரைட்டர் ஒலி எழுப்பியது. மேலும் இரண்டடி எடுத்து வைத்தான் பத்து. கால்களிலிருந்து கொலுசுகளைக் கழற்றினான். கொலுசு அதிக ஓசை எழுப்பாது நடக்கவும் அதனைச் சத்தப்படுத்தாது கழற்றவும் யாரோ முயல்வது போல் ஒலி எழுப்பியது.

''சரோ!'' என்று மிரட்சியுடன் அழைத்தான் சுபாஷ். ''சரோ!''

பதில் இல்லை. வாசல் கதவுக்கு அவளிடம் ஒரு சாவி உண்டு. இவனுக்குத் தொந்தரவு இல்லாதிருக்க அவள் பஸ்ஸரை அழுத்தாமல் தானே சாவி போட்டுத் திறந்து கொண்டு உள்ளே வருவதும் உண்டு. இதனாலேயே உட்புறம் உள்ள இரண்டாவது தாழ்ப்பாளை அவன் போடுவதில்லை. இரவு படுக்கப் போவதற்கு முன்னர் மட்டும் போடுவார்கள். பள்ளி சென்ற சரோ ஏதோ காரணமாகத் திரும்பி வந்திருந்தாள் மறந்து போன எதையோ எடுத்துப் போக வந்திருந்தால் அதில் வியப்பதற்கு ஏதுமில்லை. ஆனால் அவள் பதில் கூறாதிருக்கிறாளே, அதுதான் ஆச்சரியம். அதைவிட வியப்பு; அவள் கொலுசுகளைக் கழற்றுவதுதான். ஏன்? எதற்காக?

யாரோ நடப்பது போலிருந்தது. யார்? ஒருவரா? இருவரா? பாதங்கள் நகர்ந்த திசையில் சுபாஷின் தலை, அதிலிருந்த பார்வையற்ற கண்கள் திரும்பின.



''சரோ! ஏன் பதில் சொல்ல மாட்டேனென்கிறாய் சரோ!''

அமைதி! பூரண அமைதி!

யாருமே இல்லை. வெறும் பிரமைதான்.

அவன் மறுபடியும் டைப்செய்ய ஆரம்பித்தான்.

பெட்ரூம் கதவு இலேசாக மூடப்படுவது கேட்டது. ஒரே ஒரு கிங் ஒலி! சரேலென்று திரும்பினான். காற்றிலே சாத்திக் கொள்கிறதா, அல்லது....

அவனுக்கு நெஞ்சு திக் திக்கென்று அடித்துக்கொண்டது. என்ன இது ஏன் இப்படி என் மனம் பிரமை பிடித்து அலைகிறது? இங்கே யார் வர முடியும்?

கட்டிலில் யாரோ அமர்வது போல் ஓசை! கட்டிலின் ஒரு கிரீச் சத்தம். என்ன நடக்கிறது அங்கே? சரோ வந்துவிட்டாள் என்றால் ஏன் பேசாமலிருக்கிறாள்? அவள் பின்னோடு யார் யாருமில்லையா? நிஜமாகவே யாருமில்லையா?

அவன் எழுந்து நடந்தான். பெட்ரூம் வாசலை நெருங்கித் துழாவினான். கதவு சாத்தித்தான் இருந்தது. யார் சாத்தியது? படுக்கை அறைக் கதவைச் சாத்திவிட்டுப் பள்ளிக்கூடம் போகிற பழக்கமே சரோவுக்கு இல்லையே!

மெதுவாகத் தள்ளினான். திறந்துகொண்டது.

கட்டிலின் ஒரு பக்கத்தில் ஒரு கிரீச் ஒலி. யாரோ ஓசைப்படாமல் எழுந்திருக்க முயலுகிறார்கள். யார்? கட்டிலின் மறு புறத்திலிருந்தும் அப்படியே ஒரு சிறு ஓசை. கட்டிலில் இருவர் இருந்திருக்கிறார்களா? எவ்வளவு நேரமாக? இருவரும் இரு பக்கத்தில் இறங்கிவிட்டார்களா?

''சரோ'' என்று அதட்டலாக அழைத்தான். ''எதற்குக் கொலுசுகளைக் கழற்றினாய்? எனக்குச் சத்தம் கேட்க வேண்டாம் என்றா? பள்ளிக்கூடம் போகாமல் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

மௌனம். பூரண அமைதி.

சீச்சீ! என்னுடைய சரோவைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைத்து விட்டேன்! என்று வெட்கப்பட்டான். ஒரே ஒரு கணம் கூட இப்படி ஓர் எண்ணம் என் மனத்தில் இருந்ததாக அவளுக்குத் தெரிய வந்தால் எவ்வளவு வேதனைப் படுவாள்?

ஆனாலும்.. ஆனாலும்...

அவன் மெல்ல மெல்ல படக் படக்கென்று நெஞ்சம் அடித்துக் கொள்ள முன்னேறினான். கட்டில்... மெத்தை... விரிப்பு... மேலும் துழாவினான்.... தலையணை.... முந்தாநாள் இரவு சரோ படித்துக்கொண்டிருந்த புத்தகம்... ஒரு பிரா!... ரவிக்கை! அவன் திடுக்கிட்டான்.

அறையின் மூலையில் நின்று கொண்டிருந்த பத்து முகத்தில் குரூரப் புன்னகை அரும்பியது.

அவள் குளிப்பதற்கு முன் கழற்றிப் போட்டதா? பள்ளி செல்லும் அவசரத்தில் அவற்றைத் துவைக்கும் கூடையிலோ வண்ணான் பெட்டியிலோ போடாமல் சென்றுளா? அல்லது இப்போதுதான் கழற்றிப் போட்டிருக்கிறுளா? அப்படியானுல் அவள் இங்குதான் இருக்கிருளா? அவளுடன் வேறு யார்? அவன் நாசிகள் சுருங்கி விரிந்து அடங்கின. சிறு சிறு மூச்சுக்களாக உள்ளுக்கிழுத்தான். சரோவுக்கு உள்ள மணமும் சுபாஷுக்கு உள்ள மணமும் தவிர அவனும் பத்துவையும் அந்த அறைக்குள் நுகர முடிந்தது. தம்பதியின் படுக்கை அறை அது. அங்கு அவர்கள் மணம் நிறைந்திருப்பதில் வியப்பில்லை. ஆனுல் இப்போது பத்துவையும் புதிதாக அங்கு நுகர முடிகிறது என்றுல்? பத்து அங்குதான் அருகில் இருக்கிருன். அவன் முகத்தில் வேதனையும் குழப்பமும்



''சப்பாத்தி கேட்டீங்களே,எத்தினி வேணும்?''
''குருமாவுக்கும் பாத்தி கட்டுற அளவுக்குக் கொண்டா!''

அ. இராமதாஸ்

போட்டுவிடுவதைப் பார்த்து வெகுவாக ரசித்தான் பத்து.

சுபாஷ் சிந்தித்தான்: சரேலென்று தான் வெளியேறிப் படுக்கை அறையின் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டால்? குற்றவாளிகள் உள்ளுக்குள்ளே சிறைப் படுத்தப்படுவார்கள்.

கூடவே அது அபத்தமான யோசனை என்றும் அவனுக்குத் தோன்றியது. அப்புறம் யாரை அழைத்து யாரைக் குற்றவாளி என்று சுட்டிக் காட்ட? தன் மனைவியையும் பத்துவையுமா? தனக்குத்தானே அவமானத்தைத் தேடிக் கொள்ளவா?

தாங்க முடியாத வேதனையோடு வெட்கித் தலை கவிழ்ந்தான் சுபாஷ். மெல்ல மெல்ல இதயம் கனக்க அறையை விட்டு வெளியேறினுன். பத்மநாபன் நிதானமாக மேல் துண்டு செருப்பு குழல் பெட்டி கொறுக எல்லாம் கையோடு எடுத்துக் கொண்டாகி விட்டதா என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு மெல்ல வாசலை அடைந்தான். கதவைத் திறந்து கொண்டு ஃபிளாட்டை விட்டு வெளியேறிச் சத்தமே எழாமல் கதவை இழுத்துச் சாத்தினுன். கிளிக்கென்ற ஒலியோடு ஸ்பிரிங் பூட்டு இயங்கியது.

மாலையில் சரோ திரும்பியபோது தலையில் கையை வைத்துக் கொண்டு சுபாஷ் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

''சந்துரு! என்ன ஆச்சு உங்களுக்கு? குளிக்கலே?'' சமையலறையில் எட்டிப் பார்த்தாள். பிசைந்து வைத்த தயிர் சாதம் அப்படியே புளித்துப் போய் இருந்தது. ''சந்துரு! என்ன கோபம்? சமையல் செய்து வைக்கவில்லை என்று?சொல்லுங்கள் சந்துரு!''

''என்னை மன்னித்தேன் என்று சொல்லு சரோ!'' என்றுன் சோகமே வடிவாக.

''மன்னிப்பதா? உங்களையா? எதற்கு?''

''உன்னைச் சந்தேகித்ததற்கு!''

''எதற்காக என்னைச் சந்தேகித்தீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே?''

அவன் அழுதே விட்டான். மாலை மாலையாகப் பார்வையற்ற கண்களிலிருந்து நீர் பெருகியது. நாற்காலியில் அமர்ந்திருந்த அவன் கழுத்தில் தன் கரங்களைச் சுற்றி வளைத்துத் தன்பால் இழுத்துக் கொண்டாள். அவள் நெஞ்சில் முகம் புதைத்து விம்மிய அவன் கேசத்தைக் கோதி விட்டாள். இது என்ன அசட்டுத்தனம்?

''சரோ! நீ அந்த பத்துவுடன் சேர்ந்து கொண்டு என்னை ஏமாற்றுவது போல் ஒரு பிரமை. நான் பார்வையற்றவன் என்பதால் இந்த வீட்டிலேயே எனக்கு நீ துரோகம் இழைப்பது போல் ஒரு தோற்றம் சரோ! அது கற்பனையா, சொப்பனமா, சித்தப் பிரமையா எதுவுமே எனக்குப் புரியவில்லை.''

அவள் துணுக்குற்றுள். ''என்னது! சீச்சீ'' அருவருப்புடன் அகன்றுள். ''சொப்பனத்தில் கூட அப்படி எண்ணலாமா நீங்கள்?''

''கூடாது சரோ! கூடாது. அதனுல்தான் மன்னிப்புக் கேட்கிறேன். இந்தக் குருட்டுப் பயலின் குருட்டுப் புத்தியை அபத்தக் கற்பனைகளை மன்னித்துவிடுவாயா? முடியுமா? முடியும் என்றுல்? மன்னித்தேன் என்று சொல்லு! இல்லாது போனுல் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்!''

அவள் அவனைக் குழந்தை யாக்கி மறுபடி வாரி அணைத்தாள். ''அசடு! அசடு! ஏதாவது பிதற்றுகிறீர்கள். பேசாமல் குளித்துவிட்டு வாருங்கள். நிமிஷமாக நல்ல சூப் தயாரித்துத் தருகிறேன். அரை மணியில் சூடாகச் சாப்பாடு போடுகிறேன். பசியினுல் களைத்துக் கண்கள் இருண்டுவரத் துர்சொப்பனம் ஏதோ கண்டிருக்கிறீர்கள்.''

அவன் எழுந்து போய்க் குளித்துவிட்டு வந்தான். அப்புறம் நெய்யில் வறுத்த ரொட்டித் துகள்கள் மிதக்கும் சூப் அருந்தினுன். பிறகு சூடான சாம்பார் சாதம் தயிர், வாழைப்பழம்.

''ஏதாவது பேசுங்கள். எதற்கு இப்படிப் பறிகொடுத்தவர் போல் உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்றுள்.

''சரோ இப்படி வா!'' என்று படுக்கை அறைக்கு அழைத்துப் போனுன். ''இங்கு

உட்கார்'' என்று கட்டிலில் உட்கார வைத்தான். தானும் பக்கத்தில் அமர்ந்தான். ''என்னை மன்னித்தேன் என்று சொல்லு. சொன்னால்தான் ஆயிற்று. ஒரே ஒரு தரம் ப்ளீஸ்!''

''சொல்கிறேன். கற்பனையோ பிரமையோ கனவோ எதுவானாலும் நீங்கள் அவ்வாறு மனைவியைச் சந்தேகித்தது தவறு தான். எனவே நீங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்டதில் தப்புமில்லை, நான் உங்களை மன்னிப்பதில் தவறுமில்லை.'' தயக்கமோ தடுமாற்றமோ இன்றி அவள் சம்பிரமாகச் சொன்னாள்.

''தாங்க்யூ சரோ'' என்றான்.

அவள் அவனை இழுத்துத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள். முதலில் அசட்டுப் பிசட்டு என்று கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டியது அப்புறம் அதைவிட அசட்டுத் தனமாக மனைவியிடம் மன்னிக்கச் சொல்லிக் கெஞ்சுவது. இப்படியெல்லாம் இன்னொரு தரம் நடந்து கொண்டால் என்ன கிடைக்கும் தெரியுமா? கன்னத்தில் பூசை விழும்!'' என்று சொல்லிப் பட் பட்டென்று நாலு தடவை செல்லமாக அவன் கன்னத்தைத் தட்டினாள் சரோ. ''உலகில் எந்தச் சக்தியாலும் நம் காதலை அழிக்க முடியாத போது கேவலம் ஒரு சொப்பனத்து'.கா நாம் பயப்படப் போகிறோம்?''

8

பயப்பட வேண்டாம் என்று தீர்மானித்தார்களே ஒழிய துர் சொப்பனமோ பிரமையோ எதுவானாலும் அதற்காக அவர்கள் பயப்பட்டே ஆக வேண்டியிருந்தது. இரண்டு நாட்கள் கழித்து அதே மாதிரி பிரமை மறுபடியும் ஏற்பட்டது சுபாஷுக்கு.

மீண்டும் முன் மாதிரியே வார்த்தைகளற்ற ஓர் ஒலி நாடகத்தை வெற்றிகரமாக நடத்தி விட்டான் பத்மநாபன். காலிங் பெல்லை அழுத்தி 'மீட்டர் ரீடிங் ஸார்' என்று மாற்றிக் கொண்ட கரகரத்த குரலில் கூறி உள்ளே நுழைந்து மீட்டர் படிப்பது போல் பாவனை செய்துவிட்டு வெளியேறுவது போல் போக்குக் காட்டும் வரை மின்வாரியப் பணியாளாய் நடித்தவன் பிறகு பத்மநாபனாகவே மாறினான். மின்வாரியப் பணியாள் போய் விட்டதாக எண்ணி சுபாஷ் கதவைச் சாத்தினான். ஆனால் பத்மநாபன் உள்ளேயே தான் ஒரு மூலையில் மூச்சு விடுவது கூடக் கேட்காதபடி மிக அமைதியாக ஒடுங்கியிருந்தான். அரை மணி, முக்கால் மணி நேரம் கழித்து மெல்லத் தன் நாடகத்தை மறுபடியும் ஆரம்பித்தான்: சிறு சிறு ஓசைகளின் மூலம், சதங்கை ஒலி மூலம் வாசலிலிருந்து தன்னுடன் சரோஜாவையும் உடன் அழைத்துக் கொண்டு படுக்கை அறைக்குச் சென்றான். 'கதவைச் சாத்தினான். கட்டிலில் சரோஜாவைக் கிடத்தினான். தானும் அவளருகே படுத்தான். அனைத்தையும் கூர்ந்து செவிப் புலனால் கேட்டுக் கொண்டிருந்த சுபாஷ் பீதியால் மிரண்டான். அருவருப்பால் மனம் கூசினான். ''மோகினிப் பிசாசு என்பார்களே அதுவா இது? சீச்சீ! அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது என்று பகுத்தறிவுவாதியான எனக்குத் தெரியாது?''

முன்னை விடச் சற்று துணிச்சல் அதிகரித்திருந்தது பத்துவுக்கு. ரகசியமான அந்நியோன்ய நெருக்கத்தில் ஏற்படக்கூடிய சிறு சிறு ஒலிகளை எழுப்பிக் காட்டினான். ஒரு ஏக்கப் பெருமூச்சு, கண்டத்திலிருந்து எழும் ஒரு தாப ஒலி, திருப்தியுற்ற ஒரு முனகல், இதழ்கள் சேர்கையில் தவிர்க்க முயன்று முடியாது போன ஓரிரு சிறு சத்தங்கள்.

ஆவேசத்தோடு எழுந்து போய்ப் படாரென்று கதவைத் திறந்து கட்டிலை நாடி அதைக் குத்து குத்தென்று குத்தினான் சுபாஷ். தலையணை துவண்டது. விரிப்புக் கலைந்தது. அவ்வளவுதான் நிகர பலன்! யார் இருந்தார்கள்? யாருமில்லை! அவ்வளவும் சித்தப் பிரமை! வெறும் கற்பனை! தனக்குப் பைத்தியம் பிடித்துக் கொண்டிருக்கிறதா? அவன் தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, வேதனையால் நெஞ்சு கனக்கத் திரும்பினான், தான் இலச்சியப் பணியாற்றும் மேஜைக்கு.

பத்மநாபனுக்கு ஒரே சந்தோஷம். இன்று இவ்வளவு போதும்: நாடகத்தை அளவோடு நடத்துவதில்தான் தன் சாமர்த்தியமே அடங்கியிருக்கிறது. அவன் ஓசைப்படாமல் வெளியேறினான்.

அன்று மாலை நடந்தது எதையும் சுபாஷ் தன் மனைவியிடம் கூறவேயில்லை. அவளை மறுபடியும் சந்தேகிப்பதாகச் சொன்னால் அவள் மனம் எவ்வளவு புண்படும் என்று அறிந்திருந்ததால் பேசாதிருந்தான். ஆனால் அவளே ஏதோ சரியில்லை என்று புரிந்து கொண்டாள். கேட்டாள். மறைக்க முடியவில்லை. ''ஆனால் நீங்கள் குறிப்பிடுகிற அந்த நேரத்தில் நான் கணக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தேன். வகுப்பில் நாற்பது பிள்ளைகள் சாட்சி.''

''ஐயோ! என்னை வதைக்காதே சரோ! நான் உன் கற்புக்குச் சாட்சியமா கேட்டேன்? என் பித்துக்கு மருந்து அல்லவா தேடுகிறேன்.'' அவனைச் சமாதானப்படுத்தித் தைரிய மூட்ட அவளுக்கு நீண்ட நேரமாகியது.

மூன்றாவது தடவையும் இப்படி ஒரு பிரமை ஏற்பட்டபோது அவன் தன் கட்டுப்பாடு அடியோடு இழந்தான். அன்று பத்மநாபன் ஒரு சான்ஸ் எடுத்துப் பார்க்கலாம் என்ற நோக்கில்தான் காலையில் ஜனநடமாட்

டம் இல்லாத சமயம் பார்த்து அந்த ஃபிளாட்டின் பின்புற சுழல் படிக்கட்டு வழியே மேலேறிக் கொல்லைக் கதவைத் தொட்டான். திறந்து கொண்டது. அவ னுக்கே வியப்புத் தாங்கவில்லை. எவ்வளவு வசதியாய்ப் போயிற்று! கொல்லைக் கதவைப் பள்ளி செல்கிற அவசரத்தில் தாளிடாமல் போயிருக்கிறாள், சரோ. அல்லது அவனுக் குப் பிறகு கொல்லைப்புறமாகத் தன் வீடு திரும்பிய வேலைக்காரி புறப்படு முன் 'கொல் லைக் கதவைச்சாத்திக்கிங்க' என்று சுபாஷிடம் கூறிச் சென்ற போதிலும் வேலை முனைப்பில் இருந்த சுபாஷ் அதைச் செய்யாமலே இருந் திருப்பான். எப்படியானாலும் அவனுக்கு ரொம்ப சௌகரியமாகப் போய்விட்டது. ஒளியற்றவனைப் பைத்தியமாக அடிக்க ஓர் ஒலி நாடகம் மறுபடியும் வெற்றிகரமாக நடந்தேறியது. சுபாஷ் தாங்க முடியாத கோபத்தோடு படுக்கை விரிப்பை நார் நாரா கக் கிழித்தான். தலையணைப் பஞ்சு சிதற, தூள் பறக்கக் குத்திக் குதறினான். சரோ திரும்பி வந்ததும் படுக்கை அறை அலங் கோலத்தை ஒரு பார்வை பார்த்தாள். கண வனின் பரிதாப முகத்தை ஒரு தடவை திரும்பி நோக்கினாள். ''அமைதியாகக் கேட் டாள்: மறுபடியுமா?''

அவன் கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினான். ''இதோடு மூன்று நான்கு தடவை இப்படி ஆகிவிட்டது. என்னால் தாங்க முடியவில்லை சரோ. எனக் குப் பைத்தியம்தான் பிடித்துக் கொண் டிருக்கிறது. அது முற்றுமுன் என்னை யாரா வது டாக்டரிடம் அழைத்துப் போ, ப்ளீஸ்! டேக் மி டு எ ஸைக்கியாட்ரிஸ்ட்!''

அவள் அவனை நெருங்கி ஆதரவாக அணைத்தாள். தட்டிக் கொடுத்தாள். ''பயப் படாதீர்கள் சுபாஷ்! அதைரியப்படவே கூடாது. என்ன ஆனாலும் சரி, நான் உங் களைக் கைவிட மாட்டேன். என்னை நம் புங்கள்.''

அப்பாவுக்கு அவள் ஃபோன் போட்டாள்.

• • •

நர்ஸிங் ஹோமுக்கு வந்து அவனைப் பார்த்தான் பத்மநாபன். ''என்ன வேடிக்கை பார்த்தாயா? என்னைப் பைத்தி யக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப் பார்த் தாய். கடைசியில் நீயே இங்கு வந்து சேர்ந்திருக்கிறாய்.''

''உன்னைப் பற்றி அப்படி நினைத்ததற்கு ஆண்டவன் கொடுத்த தண்டனைதானோ என் னவோ? இது'' என்றான் சுபாஷ்.

''சேச்சே! அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. இன்று இரவே இவர் வீடு திரும்பி விடுவார். நீங்கள் வேறு எதையாவது கூறிக் குழப் பாதீர்கள்'' என்று கண்டித்தாள் சரோ.

''ஷாக் ட்ரீட்மெண்ட் தரச் சொல்லு. சட்டென்று சரியாகி விடும்'' என்றான் பத்து. ''நான் வேணுமானால் டாக்டரிடம் பேசு கிறேன்.''

''என்ன ட்ரீட்மெண்ட் என்று எனக்குத் தெரியும். நீங்கள் டாக்டராக மாறாதீர்கள்'' என்றார் அப்போது யதேச்சையாக உள்ளே வந்த டாக்டர்.

''நான் தெரிந்துதான் சொல்கிறேன் டாக்டர். என் தூரத்து உறவினர்களிலேயே ஒருவருக்கு ஒரே ஒரு நாள் ஷாக் கொடுத்த தில் பைத்தியம் அடியோடு தெளிந்து இப் போது கல்யாணமாகிக் குழந்தையும் குட்டியு மாக இருக்கிறான்'' என்றான் பத்து.

''ஆர் யூ எ டாக்டர்?''

''இல்லை.''

''தென் வில் யூ கெட் அவுட் ஆஃப் மை நர்ஸிங் ஹோம்? அதிகப் பிரசங்கிகளுக்கு இங்கே இடமில்லை.''

அவன் கோபத்துடன் தாம் தூம் என்று துகள் பறக்க வெளியேறினான்.

''டாக்டர்! யூ கேவ் ஹிம் த ஷாக் ஆஃப் ஹிஸ் லைஃப்'' என்றாள் சரோ. ''அவர் தம் வாழ்நாளில் இப்படித் தம்மிடம் யாரும் பேசிக் கேட்டிருக்க மாட்டார். யார் தெரி யுமா அவர்?''

''எனக்குத் தெரிய அவசியமில்லை.''

''ஃப்ளூட் பத்மநாபன் ஸார். ஹி இஸ் எ ஜீனியஸ்! அண்ட் எ குட் ஃபிரெண்ட் ஆஃப் மைன்.''

''சரி, ஃப்ளூட் வாசிக்கட்டும், கேட்கிறேன். சபாஷ் போடுகிறேன். வைத்தியம் பண்ண வந்தால் விடுவேனா?'' என்றார் டாக்டர். ''நான் ஃப்ளூட் வாசிக்க அவன் காது கொடுத் துக் கேட்பானா விசாரித்துச் சொல்லுங்க!''

இருவருமே குபீரென்று சிரித்தார்கள்.

டாக்டர் இரண்டாவது முறையாக அன்று அவனை அக்கறையோடு பரிசோதித்தார். அவன் பிறவியிலேயே பார்வை இழந்தது பற்றிக் கேட்டறிந்தார். வேறு ஏதாவது உடல் கோளாறு உண்டா? தாம்பத்திய உற வெல்லாம் சரியாக, திருப்தியாக இருக்கிறதா என்று இருவரையுமே பலவாறாகவும் வின வினார். கடைசியில் ''ஐ ஃபைண்ட் நத்திங் ராங் வித் யூ. இருந்தாலும் ஒரு நாள் இரண்டு நாள் இங்கே இருந்துட்டுப் போயேன்'' என்றார். ''நீ வீட்டுக்குப் போகலாம்'' என் றார் சரோவைப் பார்த்து. ''இரண்டு நாள் பிறந்த வீட்டில் இரு. ஃபார் எ சேஞ்ச். இவனை நான் கவனிக்கிறேன். உனக்குக் கவலையே வேண்டாம். அப்பாவிடமும் சொல்லு.''

இரண்டு நாட்கள் கழித்துக் கணவன் வீடு திரும்பும்வரை அவள் தன் பெற்றோர்

பி.ஜி. வோட்ஹவுஸ் தமது நாவல்களில் வரும் பாத்திரங்களைப் பற்றி 40, 50 பக்கங்கள் குறிப்புத் தயாரிப்பாராம். திரைக் கதைகளுக்கு 400 500 பக்கங்கள் குறிப்பு எழுதுவாராம். இதைக் கடைசியில் இரண்டு மூன்று பக்கங் களுக்குச் சுருக்குவார். அவரே சொல்லியிருக் கிறார்: ''நாளைக்கு நான் மேல் உலகம் போனால் மிக மட்டமான எழுத்தாளன் என்று என்னைப் பற்றி அனைவரும் கூறினாலும், ஒரு குரலாவது ''இருக்கலாம் ஐயா! ஆனால்மனுஷன் கஷ் டப்பட்டு உழைத்தான்'' என்று சொல்லக் கூடும்.

-கோ. நீபா



இன்பப் பொங்கல்
வருகுது!
இனிய செய்தி
சொல்கிறோம்!

20% தள்ளுபடி!
எல்லா பட்டு, பருத்தி
ரகங்களுக்கும்

ஹேண்ட்லூம் ஹவுஸ்
டிசம்பர் 15 முதல் அளிக்கிறது!

விழாக் காலத் தள்ளுபடிக்கும் மேலாக,
ஹேண்ட்லூம் ஹவுஸ் உங்களுக்கு அளிப்பது —

- தேர்ந்தெடுக்கப்பட்ட அகில இந்திய ரகங்கள் — தேங்கிப் போன சரக்குகள் அல்ல.
- விசேஷ கவனத்துடன் இன்முகச் சேவை.



ஹேண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார்,
சென்னை 600 003.

ADWAVE/HH/1194 TAM

- ஞாயிற்றுக் கிழமையும் உங்களுக்காகவே திறந்திருக்கும்.

மது விலக்கு

மூதறிஞர் இராஜாஜியின் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழ்நாடு அரசு அவருக்குச் செலுத்தும் அஞ்சலி மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் படுத்துவதுதான்.

தமிழ்நாடு அரசு, மதுவிலக்குக் கொள்கையை வெற்றிகரமாக நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளது. கள்ளச் சாராயம் காய்ச்சுதல், மது வகைகள், போதை மருந்துகள் ஆகியவற்றை அறவே அகற்றவும், மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் படுத்தவும் அவசரச் சட்டம் நிறைவேற்றியுள்ளது.

மதுவிலக்குக் குற்றவாளிகள் அவர்களின் இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். அவர்களுக்குக் கடுந்தண்டனையும், பெரும் அபராதமும் விதிக்கப்படும்.

தமிழகத்தின் பெருமகனும், மதுவிலக்கு இயக்கத்தின் ஒப்பற்ற தலைவருமான இராஜாஜியின் நூற்றாண்டு விழாவின் நினைவாக, மதுவிலக்கை முழுமையாக அமுல்படுத்துவதே பெரிதும் பொருத்தமானதாகும்.

வழிவழியாக வரும் சந்ததியினருக்கு அவர் வழங்கிய "கள் ஒழிக" என்ற நூலிலிருந்து சில பொன்மொழிகள் கீழே தரப்பட்டுள்ளன.

மதுவிலக்கு ஏன்?

போதை உண்டாக்கும் கள்ளு, சாராயம் முதலிய எல்லா பண்டங்களிலுமுள்ள வெறிமூலப் பொருளுக்கு "மதுசாரம்" என்று பெயர். மதுசாரம் உடல் நலத்திற்குக் கேடுவிளைவிக்கிறது; அது, ஒழுக்கத்தையும் பாதிக்கிறது.

ஏழைகளிடத்தில் நிரந்தரமாக கள்ளு, சாராயக் கடைகள் வைத்து ஆசை காட்டுவது எவ்வகையிலும் நியாயமாகாது.

சம்பூர்வமாக மதுவிலக்கை அமுல்படுத்தினால்தான் மதுபான வியாபாரத்தை நிறுத்த முடியும். வேறு எந்த உபாயத்தாலும் முடியாது.

மனமாற்றத்திற்குப் பிரச்சாரமும், மது வியாபார விலக்கும்-இரண்டும் ஒரே சமயத்தில் நடைபெற வேண்டும். ஒன்றுக்கு ஒன்று உதவியாக இருக்கும்.

தனிமனிதன் சுதந்திரம்

ஒரு மனிதனுடைய நடவடிக்கை அவனுடைய குடும்பத்தை பாதிக்கிறது. ஒருவன் சம்பாதிக்கும் பொருளில், மக்கள் மனைவிக்கும் பங்கு உண்டு. அவன் இஷ்டப்படி கள்ளு, சாராயம் வாங்கிக் குடித்தால் மக்கள், மனைவியின் உரிமைகள் பாதிக்கப்படும். சுதந்திரம் என்பது மனம் போனபடி நடக்கிற அனாசார சட்டமல்ல. சமுதாய ஒழுங்குக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும். ஒரு வியாபாரம் நாட்டுக்குக் கேடு விளைவிப்பதானால் அதைத் தடுக்கும் உரிமை சமுதாயத்திற்கு உண்டு. சமுதாயத்தின் உரிமைகளை அரசாங்கம்தான் நிறைவேற்றவேண்டும்.

குடிப்பவன் தன் சுதந்திரத்தை தானே விற்று விடுகிறான். அடிமையாகி விடுகிறான். இஷ்டப்பட்டதை




நான் 'வாங்கிக் குடிப்பேன்' என்கிற உரிமை தன்னைத்தானே விற்றுக் கொள்ளும் உரிமையாக முடிகிறது. நாகரீக சமுதாயங்களில் பொது நன்மைக்காக தனிப்பட்டவர்களின் உரிமைகள் கட்டுப்பட வேண்டியது அவசியம்.

குடும்பத்திற்குப் போதுமான உணவு

அரசாங்கத்தார் செய்யக்கூடிய அநேக திட்டங்களுள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பெரிதும் நன்மைதரக் கூடிய திட்டம் மதுவிலக்குத் திட்டம்தான். தாழ்த்தப் பட்டவர்களின் பொருள் நிலையும், சமுதாயத்தில் அவர்களுக்குள்ள அந்தஸ்தும் இரண்டும் மேன்மைப்படுவதற்கு மதுவிலக்கே வழி. உண்மையில் பணக்காரர்களும் படித்தவர்களும் மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி தங்களுக்காக அக்கறை செலுத்த வேண்டியதில்லை. ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும்தான் இது அவசியம்.

கள்ளு, சாராயக் கடைகளை மூடினோமானால் ஏழை மக்களுக்கு சரியான ஆகாரமும் ஓய்வும் கிடைக்கும். வீட்டிலுள்ள மனைவி மக்களுக்கு உணவு குறையாமல் இருக்கும்.

ஒரு வேளை சாப்பாட்டின் விலையை விட ஒரு தொழிலாளி ஒரு தடவை குடிப்பதற்கு அதிகமாக செலவழிக்கிறான். ஒருவன் ஒரு தடவை குடிக்கும் கள்ளின் விலையைக் கொண்டு அவன் குடும்பம் முழுதும் ஒரு வேளை சாப்பாட்டை நம் நாட்டில் சாப்பிடலாம். ஆகையால் கள்ளிலும் சாராயத்திலும் ஏழைகளைத் தள்ளும் கடைகளை மூடினோமானால் அந்த ஏழைகளுக்கு நாம் நன்மை செய்தவர்களாவோம். தொழிலாளர் நலனுக்காகவும் மதுவிலக்கை அமுலாக்குவது மிகமிக முக்கியமான செயலாகும்.



இயக்குநர், செய்தி, மக்கள்-தொடர்புத்துறை தமிழ்நாடு அரசு

கிரியாஸக்தி

செம்பியன்



வீட்டிலே தங்கி, காரில் நர்ஸிங் ஹோம் வந்து போய்க் கொண்டிருந்தாள். ஒரு வாரம் லீவு போட்டிருந்தான். ஆண்டியப்பனும் அவர் மனைவியும் வந்து மாப்பிள்ளையைப் பார்த்தார்கள். "டோண்ட் ஒர்ரி சுபாஷ். யூ வில் பி ஆல்ரைட்" என்றார்.

"நீங்க ஒர்ரி பண்ணிக்கக் கூடாதேன்னு தான் எனக்குக் கவலை" என்றான் சுபாஷ்.

"மைல்ட் ஹாலூஸினேஷன் என்கிறார் டாக்டர். அதன் அர்த்தம் என்னை விட உனக்கு நன்றாகத் தெரியுமே. சித்தப் பிரமை அல்லது மனப் பிரமை. யூ மஸ்ட் ஓவர் கம் இட். அதற்கு ஒரே வழி மனசைத் திடமா வைச்சுக்கறதுதான். பிறந்தது முதலே பார்வையற்று இருந்தும் எம். ஏ. படிக்கத் தேறி இலக்கிய உலகிலும் புகழ் பெற்று வளர ஆரம்பிக்கும் அளவுக்கு மனோ திடம் உள்ள உனக்கு இந்தச் சின்ன விஷயத்தை வெற்றி கொள்வதா கஷ்டமாக இருக்கப் போகிறது?"

"டாக்டர் சோதித்துப் பார்த்து, 'ஐ ஃபைண்ட் நத்திங் ராங் வித் யூ'ன்னு சொன்னதுமே உடம்பு பூரா ஒரு புத்துணர்ச்சி பரவின மாதிரி இருக்கு. உற்சாகமா இருக்கேன்."

"குட் குட்" என்றார். சற்று நேரம் ஊர் உலகக் கதை பேசிவிட்டுப் புறப்பட்டார்.

டிஸ்சார்ஜ் ஆனதும் வீட்டிலே அவர்களை இறக்கி விட்ட பிறகு டிரைவர் கிளம்பாமல் நின்று கொண்டிருந்தார். "நீ போகலாம்" என்றாள் சரோ.

"ஐயா ஒரு வாரம் உங்களிடமே டியூட்டி பார்க்கச் சொல்லி அனுப்பினாங்கம்மா" என்றார்.

"அவசியமில்லே. ஏதாவது வேணும்னா உடனே அப்பாவுக்கு ஃபோன் பண்ணறேன்."

எப்போதுமே அவளிடம் உள்ள மதிப்பு மேலும் உயர்ந்தது டிரைவருக்கு. கும்பிட்டு வணங்கினார். "மாப்பிள்ளை ஐயாவுக்குச் சீக்கிரம் குணமாகணும்னு முருகனைப் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

"உன் பிரார்த்தனை ஏற்கனவே பலிச்சுடுச்சு!" என்று அவள் புன்னகைத்தாள்.

"வர்றேம்மா" என்று கூறிப் புறப்பட்டார்.

நாலு நாள் கணவனுடனேயே இருந்து கவனித்துக் கொண்டாள். உற்சாகப்படுத்திப் பேசினாள். ருசியாகச் சமைத்துப் போட்டாள். டாக்டர் கொடுத்திருந்த நரம்பு டானிக்குகளை வேளா வேளைக்குத் தந்தாள். தேகப் பயிற்சிகள் சொல்லித் தந்திருந்தார். அவற்றை வற்புறுத்திச் செய்யச் சொன்னாள். பத்துவும் இடையில் இரண்டு தடவை வந்து பார்த்துவிட்டுப் பத்து நிமிஷங்களில் திரும்பி விட்டான்.

மறுபடியும் அவன் பள்ளிக்கூடம் போக வேண்டிய தினம் வந்தபோது அவன் அவளுக்கு ஆறுதலும் தைரியமும் கூற வேண்டியிருந்தது. "லீவு எக்ஸ்டெண்ட் பண்ணாதே. அனாவசியம். போய் வா. எனக்கு ஒன்றுமில்லே" என்று வற்புறுத்திக் கூறினான்.

இரு தினங்களுக்குப் பிறகு அன்று அவள் கிளாஸ் எடுத்துக் கொண்டிருந்த போது பியூன் வந்து, 'ஃபோன் வந்திருக்குங்க ஏதோ அர்ஜண்ட் விஷயமாம்' என்றான். அவள் சுபாஷுக்குத் தான் ஏதோ ஆபத்து என்று முடிவு கட்டினவளாக நெஞ்சம் பதைக்க ஓட்டமும் நடையுமாக ஹெட் மிஸ்ட்ரஸ் அறைக்குச் சென்று மூச்சிரைக்க ஃபோன் ரிஸீவரைக் கையில் எடுத்தாள். "ஹலோ!"

"நான் தற்கொலை செய்துக்கப்போறேன்!" என்று குரல் ஒலித்தது. ஒரு விநாடி உலகமே காலடியிலிருந்து நழுவிப் போவது போல் இருந்தது. அடுத்த விநாடியே அது சுபாஷின் குரல் அல்ல, பத்துவின் குரல் என்று புரிந்து ஓரளவு நிம்மதி பெற்றுப் பெருமூச்செறிந்தாள். இடக் கரம் நெஞ்சை அழுத்திக்கொண்டது. இதயப் படபடப்பு சற்றுத் தணிந்தது. இருந்தாலும் பத்துவிடமும் அவன் இசையிடமும் கூட அவளுக்கு அக்கறை உண்டு என்பதால் பரபரப்பு முழுவதும் அடங்கவில்லை.

"இதென்ன பிதற்றல்?" என்றாள் கண்டிக்கும் குரலில். அவன் இசையை உலகு இழப்பது என்பது அவளால் சகித்துக்கொள்ள முடியாததாய் இருந்தது.

"பிதற்றல் இல்லே. முடிவு செய்துவிட்டேன். நான் கடலில் மூழ்கிச் சாகாமல் இருக்கணும்னா மாலை பள்ளி விட்டதும் நேரே காந்தி சிலைக்குப் பக்கத்தில் வந்து என்னை நீ சந்திக்கணும். நாலு மணியிலிருந்து ஐந்து மணி வரை பார்ப்பேன். நீ வரலைன்னா நேரே கடலை நோக்கி நடந்து கொண்டேயிருப்பேன். யாரும் தடுக்க முயன்றாங்கன்னா இருட்டும் வரை காத்திருந்து பிறகு அலைகளை நோக்கி நடந்து போய்க் கொண்டே இருப்பேன். புரியுதா?"

"வீட்டுக்கு வாங்க, பேசலாம்."

"முடியாது. உன்னிடம் தனியே பேசணும். சுபாஷ் எதிரே பேசுவதற்கில்லே."

அவன் ஃபோனை வைத்து விட்டான்.

பட்டப் பகலில் கடற் கரை திறந்த வெளியில் அவன் தன்னை என்ன செய்துவிட முடியும் என்று தைரியம் அடைந்து சென்றாள். ஒரு மணி நேரம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு மூன்றே முக்காலுக்கு அங்கு போய் விட்டாள். வீட்டுக்கு நேரம் கழித்துத்திரும்ப அவளுக்கு இஷ்டமில்லை. தனக்கு முன்பே அவன் வந்து காத்திருப்பது அறிந்து அவன் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து புன்முறுவல் செய்தான்.

"இதென்ன இப்படி, தத்துப் பித்தென்று நடந்து கொள்கிறீர்கள்? என்ன ஆயிற்று உங்களுக்கு?"

''சொல்கிறேன்'' என்றான். காந்தித் தாத்தா அளித்த நிழலிலேயே அமர்ந்தார்கள்.

''இதோ பார், நீ என் காதலை உதறி ஒரு குருடனை மணந்ததிலிருந்தே எனக்கு உன் மீது அனுதாபம். இப்போதோ அவன் குருடன் மட்டுமல்ல, பைத்தியம் என்பதும் தெளிவாகிவிட்டது. குருடனையும். பைத்தியத்தையும் கட்டிக் கொண்டு வாழ்நாளெல்லாம் நீ அவதிப்படுவதைக் காண எனக்குச் சகிக்கவில்லை.''

''உலக மகா உளறல்'' என்று அவள் கேலியாகச் சிரித்தாள்.

அவன் அவள் கரங்களைப் பலவந்தமாகச் சிறைப்படுத்தி ''கேலி பண்ணாதே சரோ!'' என்றான், கோபமாக. அவன் கண்கள் பளபளத்தன. அவள் மிரண்டாள். அவன் முக பாவம் உடனே மாறியது. கனிவு ததும்பப் பார்த்து நயமாகச் சொன்னான்: ''ஒரே ஒரு வார்த்தை சரி என்று சொல்லு. நாம் இருவரும் ஆனந்தமாகச் சுகிக்கலாம். அந்தக் குருட்டுப் பயலுக்கு ஒன்றும் தெரியப் போவதில்லை. அப்படியே அவன் எதையாவது சந்தேகித்தாலும் வெளியே சொல்லிக் கொள்ளவெட்கப்படுவான். அப்படி வெளியே சொன்னாலும் பைத்தியம் மறுபடியும் உளற ஆரம்பித்து விட்டது என்றுதான் நினைப் பார்களே யொழிய அவனை யாரும் நம்ப மாட்டார்கள். நர்ஸிங் ஹோமுக்கு அல்லது பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு மறுபடியும் அனுப்பி வைக்கலாம். நம்முடைய ரகசியம் யாருக்குமே எப்போதுமே தெரிய வராது. சரோ! என்ன சொல்கிறாய்? நம் வாழ்க்கை ஒரே ஆனந்தமயமாக நொடியில் மாறி விடும். சரி என்று கூற மாட்டாயா ப்ளீஸ்!'' அவன் குரல் தழுதழுக்கக் கெஞ்சினான்.

அவளுக்கு அவனை அப்படியே வெட்டிச் சாய்த்து விடலாம் போல ஆத்திரம் வந்தது. அதே சமயம் இவ்வளவு பெரிய மேதை இப்பேர்பட்ட முட்டாளாயிருக்கிறானே என்று அனுதாபம் பொங்கியது.

''என் கரங்களை விடு!'' என்று அமைதியாகக் கம்பீரமாக உத்தர விட்டாள். அவன் பிடி தளர்ந்தது. விடுவித்தான்.

''இதோ பார்! நான் சொல்வதை நன்றாகக் கேட்டு மனசில் பதிய வைத்துக் கொள். உன்னிடமிருந்த இசைத் திறனுக்கு நான் அடிமையானேன். உன்னிடமல்ல. ஆனால் இப்போது அதுகூடத் தவறு என்று நான் புரிந்து கொண்டிருக்கிறேன். யாருமே எதற்குமே தன் சுயநிலை இழந்து அடிமைப் படக் கூடாது என்பதை அறிந்து கொண்டிருக்கிறேன். அப்படி நான் உன் இசைக்கு அடிமைப்பட்டதால்தான் உன்னிடம் அனுதாபம் காட்டி உனது பெரும் தவறுகளை மறைக்க உன்னை அவமானத்திலிருந்து காப்பாற்ற நான் சில சிறு பொய்களை என் கணவரிடம் கூற நேர்ந்தது. இதனால் மேலும் தவறு இழைக்க உனக்கு அதிகத் துணிவை நானே தந்திருக்கிறேன். இப்போதே என் தவற்றை உணர்ந்து விட்டேன். உன்னிடம் பரிதாப உணர்வு காட்டக் கூடாது என்று சுபாஷ் என்னை எச்சரித்தார். ஆனால்... அவரே' ஐயோ பாவம்' என்று பரிதாபப்பட்டு உனக்கு ரொம்ப இடம் தருகிறார். இதனால் எல்லாம் துணிவு பெற்ற உன் மனம் ரொம்பவும் விகாரப்பட்டுப் போயிருக்கிறது. இறுதியாகச் சொல்கிறேன். நீ எப்போ எங்கள் வாழ்க்கையிலிருந்து விடைபெற்றுக் கண் காணாமல் ஒழிந்து போகிறாயோ அப்போதுதான் எனக்கு நிம்மதி. நீ ஒழிந்து போ! கடலில் விழுந்து சாகிறேன் என்றாயல்லவா? முதலில் அதைச் செய்!''

அவள் எழுந்து அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் விடுவிடுவென்று பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள். அப்படி நடக்கும் போதே இந்தச் சந்திப்புச் சம்பாஷணை பற்றி சுபாஷிடம் சொல்வதா வேண்டாமா என்று அவள் மனம் அசை போட்டது. இதைக் கூறப் போக அவர் மனோ வியாதி மீண்டும் தலை காட்டப் போகிறதே என்ற அச்சத்தில் வேண்டாம் என்று தீர்மானித்தாள்.

விருட்டென்று எழுந்து 'நடந்த அவளை அவன் தடுத்து நிறுத்த முயலவில்லை. பின் தொடரவில்லை. இருந்த இடத்திலேயே இருந்தபடி அவமானமும் ஆத்திரமும் குரோத அலைகளாக நெஞ்சத்தில் பொங்கிப் புரள உறுமினான். பற்களை நறநறவென்று கடித்தான். அவன் கைவிரல்கள் முஷ்டியாகிப் பிரிந்தன.

9

பத்மநாபன் சுபாஷின் ஃப்ளாட்டை அடைந்து காலிங் பெல்லை அழுத்தினான்.

சற்று நேரத்தில் காலடியோசை கேட்டது. தொடர்ந்து ''யாரது?'' என்ற சுபாஷின் குரல் ஒலித்தது.

''லாண்டிரி.''

கதவு திறந்தது.

''துணி கொண்டாந்திருக்கியா?''

''ஆமாங்க.''

''வைச்சுட்டுப் போ. அம்மா இல்லையே. கணக்குப் பார்க்கவும் அழுக்குத் துணி போடவும்.''

''ஞாயிற்றுக் கிழமை வரேங்க'' குரலை லாண்டிரிப் பையனுடையது மாதிரி மாற்றிக் கொண்டான். அப்பையனை அந்த ஃப்ளாட்டிலேயே ஒரிரு முறை பத்து பார்த்ததுண்டு. பேசக் கேட்டதுண்டு. சோபா எதிரே மேஜை மீது கற்பனையான ஒரு துணி மூட்டையை வைத்துவிட்டுத் திரும்பினான்.



''வரேங்க'' — வெளியேறுவது போல் பாவனை செய்துவிட்டு, சரேலென்று மறுபடி உள்ளே பாய்ந்து ஒதுங்கிக் கொண்டான், வெற்றுக்கால்கள் ஓசை எழுப்பாதபடிக்கு. சுபாஷ் கதவைச் சாத்தினான். ஸ்பிரிங் பூட்டு இயங்கியது. ஏதோ நினைத்துக் கொண்டு மற்றொரு தாழ்ப்பாளையும் போட்டான்.— புதுப் பழக்கம்!

'அடேய் உஷாராயிட்டியா?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் பத்து. 'ஆனாலும் உனக்கு மேல் கெட்டிக்காரன்டா நான்!' சற்று நேரம் போகட்டும் என்று காத்திருந்தான்.

டைப்ரைட்டரை இயக்க ஆரம்பித்தான். சுபாஷ். 'கதையா, கட்டுரையா என்ன உருவாகிறது? இந்தப் பைத்தியம் எழுதுவதையும் படிக்கிறார்களே!'

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு பொறுமை இழந்தவனாக மெல்ல எழுந்து கொண்டான். சுபாஷ் டைப்ரைட்டரை இயக்கியபடி இருந்த அறையில் மின் விசிறி ஓடிக்கொண்டிருந்தது. அதற்கு அடுத்த சிறிய சாப்பாட்டு அறையில் மின் விசிறி பொருத்த கொக்கி உண்டு, கூரையில். ஆனால் அதில் விசிறி போடப்படவில்லை. துணி உலர்த்த சுவருக்குச்சுவர் டானாக ஆணி அடித்துச் கயிறு கட்டப்பட்டிருந்தது. நல்ல உறுதியான நூல் கயிறு. ரொம்பக் கனமும் இல்லை, ரொம்ப மெலிதும் இல்லை. பத்மநாபன் ஒரு நாற்காலியை நகர்த்திப் போட்டு அதன் மேல் ஒரு ஸ்டூலை வைத்து அந்தக் கயிற்றை அவிழ்த்தான். மிக ஜாக்கிரதையாக இருந்தும் இலேசான ஓசை ஏதும் சுபாஷ் செவிக்கு எட்டியதோ அல்லது உள்ளுணர்வால் உந்தப்பட்டுத்தான் கேட்டானோ ''யார் அது?'' என்றான்: அமைதியானான் பத்து. மறுபடி டைப் ரைட்டர் இயங்க ஆரம்பித்தது. பத்து மறு முனைக்கு ஸ்டூல், நாற்காலி எல்லாம் நகர்த்திக் கொடிக் கயிற்றை அவிழ்த்தான். பிறகு அறையின் மையத்துக்கு நாற்காலி, ஸ்டூல் நகர்ந்தது. ஃபான் தொங்க வேண்டிய கொக்கியிலிருந்து இப்போது துணி உலர்த்தும் கொடிக் கயிறு சுருக்குடன் தொங்கியது.

அந்தச் சுருக்கில் தன் தலையை மாட்டிக் கொண்டு பார்த்தான் பத்து. 'அளவு சரியாகத்தான் இருக்கிறது. இப்படியே நாமே இதில் தொங்கிவிட்டால் என்ன? அலைபாயும் மனத்தின் கஷ்டங்களுக்கெல்லாம் விடிவுகாலம் பிறந்துவிடும். வேண்டாம், வேண்டாம்! சுபாஷே தொங்கட்டும்! கண்ணும் தெரியாமலிருந்து பிறகு பைத்தியமும் பிடித்து விட்டதால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டான் என்ற முடிவுக்கு உலகம் வரட்டும்.

'அவனை இங்கே தொங்க விடுவது கஷ்டமாகத்தான் இருக்கப் போகிறது. முதலில் இந்தக் கயிற்றைப் பயன்படுத்தி அவன் கழுத்தைச் சுற்றி இறுக்கி மூச்சுத் திணற வைத்துக் கொன்றுவிட வேண்டும். அப்புறம் கழுத்திலிருந்து கயிற்றை அவிழ்த்துச் சுருக்கிட்டு மறுபடி அவன் கழுத்தில் மாட்டிவிட வேண்டும். உடலை இங்கு இழுத்து வந்து கயிற்றைக் கொக்கியில் கொடுத்துக் கோத்து இழுத்து இவன் உடலை உயரே தூக்க வேண்டும். போதிய அளவு தூக்கி அது தொங்கும் போது கொக்கியிலே கயிற்றை முடிச்சுப் போட்டுக் கட்டிவிட வேண்டும்.

'இதெல்லாம் சாத்தியமா? நடக்குமா? நிறைவேற்றும் அளவுக்குத் தன்னிடம் உடல் பலம் இருக்கிறதா? ஏன் இல்லை? என்ன பெரிய கஷ்டம்? மனோ பலம்தான் முக்கியம். அது உடல் வலிமையையும் தரும். எப்படி இதைச் செய்ய வேண்டும் என்று ஒரு மாதிரி ஒத்திகை பார்த்துக் கொண்டாகி விட்டது. பிறகு என்ன? காரியத்தை நிறைவேற்றிவிட வேண்டியதுதானே! சரோவைத் தான் என்னால் எந்த விதத்திலும் அடைய முடியாதிருக்கிறது. அவளை என்னிடமிருந்து பறித்து என் வாழ்க்கையை நாசமாக்கியவனைப் பழிவாங்கி விடவாவது வேண்டாமா?

அவன் கயிற்றை எடுத்துக் கொண்டு சுபாஷ் இருந்த அறையை அடைந்தான். ஒற்றை முடிச்சுடன் மாலையாக விளங்கிய கயிற்றை எப்படி அவன் கழுத்தில் மாட்டி எப்படி விருட்டென்று இழுக்க வேண்டும் என்று ஒருமுறை மறுபடியும் ஒத்திகை பார்த்துக் கொண்டான்.

''யாரது?'' என்றான் சுபாஷ்.

பதில் இல்லை.

''பத்து!''

மௌனம். அவன் கண்கள் பளபளத்தன.

''பத்து! நீ வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும்!''

அடி உதட்டைக் கடித்துக் கொண்டான் பத்து.

''நீ வருவாய் என்று எதிர்பார்த்துத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். அப்படி எதிர்பார்த்தபடியே இருந்ததால் நீ வந்துவிட்டதையும் புரிந்து கொண்டேன். லாண்டரிப் பையனாக நீ வேஷம் போட்டது ரொம்ப நன்றாக இருந்தது. லாண்டிரிப் பையன் வந்ததையோ துணி மூட்டை வைத்து விட்டுப் போனதையோ கூற நான் உயிரோடு இருக்க மாட்டேன் என்று திட்டம் போட்டாய். யாரையுமே யாருமே சந்திக்க இடமில்லாமல் நான் தற்கொலை செய்து கொண்டதாக இருக்க வேண்டும் என்று நினைத்தாய். அதற்காகத் துணி உலர்த்தும் கயிற்றை அவிழ்த்து வந்திருக்கிறாய்! அப்படித்தானே? ஃபான் கொக்கியில் சுருக்குத் தொங்க விட்டு ஒத்திகையும் பார்த்துவிட்டாய்!''

அவன் வெலவெலத்துப் போனான். ''உனக்குத்தான் கண் தெரியாதே எப்படிப் பார்த்தாய்?''

''அப்படிக் கேள் சொல்கிறேன். பார்வையற்றவர்கள் காது ரொம்பக் கூர்மையானது. ஒவ்வொரு சிறு ஒலியையும் கிரகித்துக் கொள்ளும். அதிலும் எதிர்பார்ப்பு இருந்தால் செவி எச்சரிக்கை அடையும். நீ வரு

வாய், என்னைக் கொல்லத் திட்டம் போட்டு வருவாய் என்று நான் எதிர்பார்த்தேன். அதனால் ஒவ்வொரு கணமும் எச்சரிக்கையாய் இருந்தேன். புரிந்து விட்டது.''

''என்னை எதிர்பார்க்க வேண்டும் என்று ஏன் தோன்றியது?''

''என்னைப் பைத்தியமாக அடிக்கப் பார்த்தாய். பலனில்லாமல் போய்விட்டது. அதனால் அடுத்த கட்டமாகக் கொலை செய்யத்தானே முயல்வாய்?''

''பலனளிக்காமல் போய்விட்டது என்று எவ்வாறு சொல்கிறாய்? டாக்டரிடம் போனாயா இல்லையா?'' என்று சவாலாகக் கேட்டான்.

''வாஸ்தவம்தான் பத்து. அந்த நாடகத்தை நீ வெற்றிகரமாய் நடத்தினாய். எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக நான் நினைத்துக் கொள்ள வேண்டும் என்று நீ கருதியபடியே நடந்தது. ஆனால் பத்து, நீ ஒரு தவறு செய்து விட்டாய். உன் நாடகத்தை என்னோடு மட்டும் நீ நிறுத்திக்கொண்டிருக்க வேண்டும். நான் நர்ஸிங் ஹோமிலிருந்து திரும்பியதும் மறுபடி ஆரம்பித்திருக்க வேண்டும். அப்போது நிஜமாகவே நான் நிலைகுலைந்து உண்மையாகவே எனக்குப் பித்துப் பிடித்திருக்கலாம். ஆனால் நீ அவசரப்பட்டு விட்டாய். எனக்குப் பைத்தியம் தான் என்று உறுதிப்படுத்தும் ஆசையில் நீ டாக்டருக்கே அறிவுரை வழங்க ஆரம்பித்து விட்டாய்!''

''வெறும் முட்டாள் அந்த டாக்டர். சொல்லிக் கொடுத்தால் கூடத் தெரியவில்லை அவனுக்கு.''

''நீ கற்றுத் தருவதை அவர் விரும்பவில்லை பத்து. எனக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் தர வேண்டும் என்று நீ யோசனை கூறியதும் எப்படி எரிந்து விழுந்தார் நினைவிருக்கிறதா?''

''ஆமாம்.''

''அதற்குப் பிறகும் அவருக்கு போனில் உபதேசம் செய்யும் அசட்டுக் காரியத்தை நீ செய்யலாமா? 'டாக்டர்! சுபாஷ் என்னுடைய பெஸ்ட் ஃப்ரெண்ட். அதனால் போன் பண்ணுகிறேன்.' என்று ஆரம்பித்து நான் அடிக்கிற லூட்டி சகிக்கவில்லை என்பதாகவும் என் மனைவிக்கு நான் பெரிய பாரமாக இருப்பதாகவும் சொன்னாயல்லவா? 'பிதடின் ஊசி நாலு போடுங்கள்' என்று அறிவுரை வழங்கினாயல்லவா? 'என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும். நீ உன் வேலையைப் பார்' என்று டாக்டர் உன்னிடம் எரிந்து விழுந்தபோது நீ பரபரப்படைந்து 'செக்கனும் மாத்திரையாவது பிரிஸ்கிரைப் பண்ணுங்கள் டாக்டர்! அவனுடன் சேர்ந்து சரோவும் நிம்மதியாய்த் தூங்கட்டும். தினம் ராத்தூக்கமின்றிக் கஷ்டப்படுகிறாள்' என்று மறுபடியும் யோசனை கூறினாயல்லவா?''

''ஆமாம், அதனால் என்ன?''

''டாக்டர் கோபத்துடன் போனை வைத்துவிட்டார். என்னை மீண்டும் பரிசோதிக்க வந்த சமயம், 'உன்னைவிட உன் நண்பனைப் பார்த்தால்தான் மூளைக்கோளாறு உள்ளவன் போல் தோன்றுகிறது. சைக்கியாட்ரிக் சிகிச்சை அவனுக்குத்தான் தேவை' என்றார்.

'' 'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் டாக்டர்?' என்றேன். 'ஷாக் ட்ரீட்மெண்ட் என்கிறான், பிதடின் ஊசி என்கிறான்,செக்கனல் டாப்லெட் என்கிறான். நீ போய் அவனை அனுப்பிவை' என்றார் டாக்டர் சிரித்துக் கொண்டே.

''அந்தக் கணத்தில் எனக்குச் சந்தேகம் உதித்தது. நான் உன்னுடைய விகார மனத்தின், வக்கிரமான மூளையின் சூழ்ச்சிகளுக்கும் சதிகளுக்கும் பலியாகிக் கொண்டிருக்கிறேனோ என்று சந்தேகித்தேன். ஆனால் அதை என்னால் எப்படி நிரூபிக்க முடியும்? எனவே என் சந்தேகத்தை யாரிடமும் வெளியிடாமல் அமைதியாக, ஆனால் எச்சரிக்கையாக இருந்தேன்.

''நீயாகவே வருவாய் முதல் கட்ட முயற்சி தோல்வியுற இரண்டாவது கட்டமாக என்னைத் தீர்த்துக்கட்ட முயல்வாய் என்று எதிர்பார்த்தேன், காத்திருந்தேன், வீண் போகவில்லை.''

''ரொம்ப சரி, பரலோகப் பயணத்துக்குத் தயாராயிருக்கிறாயல்லவா?''

''இருக்கிறேன் பத்து. சரோவை நீ அடைய முடியாது போனதால்தானே இவ்வளவு கோபம் என்மீது உனக்கு? என்னாலும் அவளைத் துறந்து வாழ முடியாது. நம் இருவரில் யாரேனும் ஒருவர் மடிந்தால் இன்னொருவரேனும் சந்தோஷமாக வாழலாம் இல்லையா? எனவே நான் சாகத் தயாராகவே இருக்கிறேன். உன்னுடன் ஒத்துழைக்கக் கூடத் தயாரா யிருக்கிறேன்!''

''ரொம்ப நல்ல முடிவு. உன்னைப் பாராட்டுகிறேன்.''

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும் சொல்லு! முதலில் என்னை நீ கொன்று பிறகு என் உடலைத் தூக்கித் தூக்கிலே தொங்க விடுவதெல்லாம் உனக்கு ரொம்பச் சிரமம். நீ மட்டும் கொஞ்சம் உதவினால் போதும். நானே தூக்கிலே தொங்கிவிடுவேன்.''

''என்ன உதவி எதிர்பார்க்கிறாய்?''


''சுருக்குக் கயிறு தயார் செய். என் கையைப் பிடித்து அடுத்த அறைக்கு அழைத்துப் போ. நாற்காலி அல்லது ஸ்டூல் மீது நான் ஏற உதவு.''

''சரி வா'' என்றான். கையைப் பிடித்து அழைத்துப் போனான். நிற்க வைத்துவிட்டு நாற்காலி, ஸ்டூல் மீது முதலில் தான் ஏறிச் சுருக்குடன் கூடிய கயிற்றைக் கட்டினான்.

''அரிச்சந்திரன் கதையை அப்படியே எடுத்தா படம் ஓடாது. அதனாலே ஒரு சின்ன சேஞ்ச் பண்ணணும்.''

''எப்படி?''

''ரெண்டே ரெண்டு பொய் மட்டும் சொல்றான்னுதான்!'' -வ. தேனப்பன்



''உறுதியாகக் கட்டு. தளராமல் இருக்குமா, இழுத்துப் பார். கழன்று தொங்கப் போகிறது'' என்றான் சுபாஷ் மேஜை மேல் இருந்தபடி.

''சரியாகத்தான் இருக்கிறது'' என்று கூறியபடியே மேஜை மேல் குதித்து இறங்கினான் பத்து. நாற்காலியை நெருங்கி அதன் மேல் ஏறத் தனக்கு உதவ வேண்டும் என்று கோருபவனாகப் பத்து பக்கம் தன் கரத்தை நீட்டினான் சுபாஷ். அதைப் பற்றியது பத்துவின் வலக்கரம். அவ்வளவுதான், அடுத்த கணம் ஒரு அந்தர் பல்டி அடித்து தடாலென்று மேஜை மேல் விழுந்தான் பத்து. என்ன நடந்தது என்று அவனுக்கே புரிய வருவதற்குள் சுபாஷின் முழங்கால் ஒன்று அவன் நெஞ்சுக் குழிக்கு மிக அருகே அழுந்திக் கொண்டிருந்தது. சுபாஷின் இடக் கரம் பத்துவின் இரு கைகளையும் முறுக்கி மணிக்கட்டுக் கருகே இறுகப் பற்றியிருந்தது. வலக்கரம் பாக்கெட்டுக்குள் துழாவி ஒரு நைலான் கயிற்றை எடுத்துக் கரத்தைச் சுற்றிக் கட்டியது. ''உன்னை எதிர்பார்த்து எச்சரிக்கையாக இருந்தேனல்லவா? அதனால் கயிற்றையும் தயாராய்ப் பாக்கெட்டில் வைத்திருந்தேன்'' என்றான்.

''என்ன இது? எப்படி நான் விழுந்தேன்?''

''ஜூடோ'' என்றான் சுபாஷ். ''கல்லூரியில் படிக்கும்போது பார்வையற்றவனுக்கு என்றேனும் உதவலாம் என்பதால் சில ஜூடோ பிடிகளைப் பயின்றேன். இன்று பயன் தந்தது. அது மட்டுமா, நீ சரோவுக்குத் திருமணப் பரிசாகத் தந்தாயே டேப் ரிகார்டர், அதுவும் இன்றுதான் மெய்யான பயன் அளித்திருக்கிறது. நமது சம்பாஷணை முழுதும் அதில் ரிகார்ட் ஆகியிருக்கிறது'' என்று கூறியபடியே கால்களையும் சேர்த்து வைத்து இறுகக் கட்டினான்.

''இப்போது என்ன செய்யப் போகிறாய் சுபாஷ்?'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

''சரோவின் அப்பாவுக்கு போன் செய்து வக்கீலுடன் வரச் சொல்லப் போகிறேன். போலீஸ் வரவும் காத்திருப்பேன். இங்கு தொங்கும் சுருக்குக் கயிறு, டேப் ரிகார்டரில் பதிவான சம்பாஷணை எல்லாம் உன்னைச் சிறைக்கு அனுப்பி வைக்கப் போதுமானவை. ஆனால் உன்னிடம் கருணை காட்டுமாறு கோரப் போகிறேன். உனக்கு சித்த ஸ்வாதீனம் இல்லை, நீ பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட வேண்டியவன், என்று உனக்காகப் பரிந்துரைப்பேன்.''

''பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கா?''

''ஆமாம். ஷாக் ட்ரீட்மெண்ட். எட்டு நாளைக்குச் சேர்ந்தாற்போல் ஷாக் கொடுத்தால் நீ சரியாகி விடுவாய்! உனக்குத்தான் இதெல்லாம் அத்துப்படியாயிற்றே'' என்று கேலி செய்தான். ''நீயே டாக்டரிடம் உனக்குத் தேவைப்படும் வைத்தியத்தைச் சிபாரிசு செய்யலாம்!''

''ஐயோ வேண்டாம்! பைத்தியம் என்று முத்திரை பெறுவதை விட நான் சாகவே விரும்புகிறேன். கட்டை அவிழ்த்துவிடு. நான் தயாரித்த சுருக்கில் நானே தொங்கி விடுகிறேன்.'' என்று கண்ணீர் பெருக்கெடுக்கக் கெஞ்சினான்.

சுபாஷ் கருணை காட்டவில்லை.

● ● ●

சுபாஷிடம் தான் மறைத்து வைத்திருந்த சில விஷயங்களை இனி வெளியிடத் தயக்கமின்றி முன்வந்தாள் சரோ.

''எனக்குப் புரிகிறது சரோ! அவனை ஏற்கவும் முடியாமல், காட்டிக் கொடுக்கவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாக நீ பட்ட அவதி எனக்குப் புரிகிறது. அவனும் என்ன சாமானியப்பட்டவனா? இசையில் எப்படி ஜீனியஸோ, அப்படியே துர்புத்தியுடன் செயல்படுவதிலும் அவன் மாமேதையாகத்தான் இருந்தான். எவ்வளவு சாமர்த்தியமாக, எத்தனை விதமாக நடித்து ஏமாற்றினான்!'' — வியந்தான் சுபாஷ்.

''நான் கிரியா சக்தின்னு அவர் சொன்னார். நீங்களும் சொன்னீங்க. அவரது இசை ஞானத்துக்கு மட்டும் நான் கிரியா சக்தியா இருந்திருக்கக் கூடாதா? அவரது துர்புத்தி வளரவும் கிரியா சக்தியா இருந்திருக்கிறேனே, அதுதான் எனக்கு வருத்தம்.''

''உலகில் நல்லது கெட்டது இரண்டும் தான் இருக்கும் சரோ. பத்துவைப் போல் நல்லது கெட்டது இரண்டையும் உள்ளடக்கிய 'ஸ்பிலிட் பர்சனாலிடி'களையும் பார்க்கத் தான் செய்கிறோம். எப்படியோ நாம் இருவரும் அனுபவித்த மனக் கஷ்டத்துக்கு எல்லாம் முடிவு ஏற்பட்டு விட்டது. என்னுடைய இந்த வெற்றியை நாம் கொண்டாட வேண்டாமா?'' என்று அவள் விரல்களை வருடியபடியே அவன் கேட்டான். அவன் அதரங்கள் அவள் கன்னங்களை மேய்ந்தன.

அவன் எதற்கு அடிபோடுகிறான் என்று ஊகித்தவளாக அவள் அவனுக்கு உதவப் போனாள்.

''இல்லை சரோ! நான் அதற்கு இப்போ அவசரப்படவில்லை. நான் கேட்க வந்தது என்னவென்றால் இன்று மாலை வயலின் வேணு கோபாலன் கச்சேரி இருக்கிறதே போவோமா என்றுதான்.''

அவள் தன் காதுகளை நம்பவே முடியாதவளாகச் சில விநாடிகள் ஆச்சரியத்துடன் அவன் முகத்தைப் பார்த்தபடி இருந்தாள். பிறகு அடக்க மாட்டாமல் உடல் குலுங்கக் குபீரென்று சிரித்தாள். அந்த நகைப்பினூடே சந்தோஷ மிகுதியில் அவளுடைய கைகள் இரண்டும் அவன் கன்னங்களைத் தட்டிக் கொடுத்தபோது கைவளையல்களும் சிரித்தன. கால்களை உற்சாகத்துடன் ஆட்டியபோது கொலுசுகளும் சேர்ந்து கொண்டன. வளையொலி எது, கொலுசு ஒலி எது, சரோவின் சிரிப்பு ஒலி எது என்று தனித் தனியே இனம் கண்டுகொள்ள முயன்று தோல்வியுற்றபோது சுபாஷும் கலகலவென்று சிரித்தான்.



இழப்புக்கள்... எதிர்பார்ப்புக்கள்

எம்.ஏ.சுசீலா

'ஸ்கூல்' விடுகிற நேரம். இந்த மழைக்கு எப்படித்தான் கணக்காகத் தெரிகிறதோ? தினம் நாலரைக்கு 'பெல்' அடிக்க வேண்டியதுதான்! என்னமோ.... தனக்காகவே அது அடிக்கப்படுகிற மாதிரியல்லவா நினைத்துக் கொள்கிறது?

ஒரு கையால் புடவையை லேசாக உயர்த்திப் பற்றிக் கொண்டு அதே கையால் இருத்துவதற்குக் கொண்டு போகிற நோட்டுப் புத்தகங்களும், 'டிபன் பாக்'ஸும் கனம் தாளாமல் பிதுங்கி அழுத்துகிற — அவளே பார்த்துப் பின்னிய அந்த 'ஒயர்' கூடையையும் சுமந்து கொண்டு, மற்றொரு கையில் குடையைப் பிடித்தவாறு மதுரை வீதிகளில் ஆறாய் ஓடும் முழங்காலளவு நீரில்.... தேர்ந்த ஒரு சர்க்கஸ் வித்தைக்காரியைப் போல்'பாலன்ஸ்' செய்து நடப்பதுகூட உமாவுக்குப் பிரச்னையில்லை.

ஆனால்...அந்தச் செருப்புக்கள்! மூன்று மாதமாக 'பட்ஜெட்'டில் இடமில்லாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து... ஒவ்வொரு காதும் அறுந்து போகும்போது இருபது காசும் நாலணாவும் கொடுத்துக் கொடுத்து 'ரிப்பேர்' செய்து வைத்துக்கொண்டிருந்த அந்தப் பழைய செருப்புக்கள், 'இனிமேல் உனக்காக உழைக்க எங்களிடம் திராணியில்லை' என்கிற மாதிரி ஒரேயடியாக உயிர் மூச்சை விட்ட பிற்பாடு இந்த மாதம் ரூ. 11.95-ஐ அதற்காகவே திட்டம் போட்டு ஒதுக்கி வைத்து.... ஸ்கூலில் சம்பளம் போட்ட அதே நாளில்... எங்கே ஒரு நாளைத் தள்ளிப் போட்டால் கூட மனம் மாறிவிடப் போகிறதோ என்ற பயத்தில் வாங்கிய அந்தப் புதிய செருப்புக்கள்!

உமா தன் கால்களை ஒருமுறை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டாள். சனியன் பிடித்த மழை ஸ்கூலிலிருந்து கிளம்புகிறபோதே இவ்வளவு தூரம் வலுக்கும் என்று தெரிந்திருந்தால் அங்கேயே கழற்றிப்போட்டுவிட்டுவெறுங்காலோடாவது வந்திருக்கலாம்.

மதுரையில் நடக்கவிருக்கிற உலகத் தமிழ் மகாநாட்டுக்காகத் தெரு ஓரங்களில் செடி வைக்கத் தோண்டிப் போட்டிருக்கிற பள்ளங்களில் விழுந்து விடாமலிருக்க வீதி நடுவாக அவள் நடந்து போகிறாள். வாகனங்கள் அவ்வப்போது அசுரத்தனமாய் வாரியடிக்கும் செந்நீர் அவளை முழுவதுமாய் அபிஷேகம் செய்கிறது. இதோ அதோ என்று டவுன் ஹால் ரோடை நெருங்கியாயிற்று. மழை மிகவும் வலுக்கிறது.

அரைப் புடவையின் ஒரு பாகத்தையே தலையைச் சுற்றி முட்டாகப் போட்டபடி அலுமினியம் பித்தளைத் தூக்குச் சட்டிகளை ஏந்திய அங்கச் சித்தாள் பெண்கள் 'பஸ் ஸ்டாண்டை' நோக்கி ஓட்டமும் நடையுமாக வருகிறார்கள்.

''ஏ ராக்கு! அட உன்னைத்தான் புள்ளே! என்ன இந்த ஓட்டம் ஓடறே? மழையிலே வளுக்கி விளுந்து மூஞ்சி மோரையெல்லாம் பேத்துக்கப் போறே!''

''உனக்கென்ன பொன்னி! நீ பேசுவே எங்காத்தா வூட்டுலே சீக்கோடே முனகிக் கிட்டுக்கிடக்கும்!ராவைக்குச் சோறாக்கி வைக்கலேன்னு எங்கப்பன் வேறே குடிச்சிட்டு வந்து அதை அடிச்சுப் போட்டுடுவான்!... நானும் என்னோட தம்பிங்க ரெண்டு பேரும் வேலை பார்த்து இன்னிக்குக் கெடச்சிருக்கிற கூலியிலேதான் அரிசியும் வெஞ்சனமும் வாங்கி அடுப்பு மூட்டி உலை வைக்கணும்'' என்று பொன்னியின் குரல் ஒலிக்க இருவரும் பஸ்ஸைப் பிடிப்பதற்கு விரைகிறார்கள்.

தெருக்களில் ஓடும் மழை நீர் ஆறெல்லாம் ஒன்று கலக்கிய மகா சமுத்திரமாக 'ஹோ'என்ற பேரிரைச்சலுடன் அலைமோதிக் கொண்டிருக்கிற சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டுக்கு ஒரு வழியாக உமா வந்து சேர்ந்து விடுகிறாள். கிளம்புவதற்கு ஆயத்தமாக நின்றுகொண்டிருக்கும் 29-ஏயில் தெய்வ தரிசனமே கிட்டியவளாய்.... வண்டிக்கு முன்புறமாய் முண்டியடிக்கும் பெண்கள் கூட்டத்தில் தானும் ஒருத்தியாய்ச் சங்கமிக்கிறாள்.

குடை, கூடை, புடவை அத்தனையும் இடது கையில் இடுக்கிக் கொண்டு வலது கையால் பஸ்ஸின் கைப்பிடியைப் பற்றிய வண்ணம் ஒரு காலைத் தூக்கிப் படியில் வைக்கிறாள். பூமியில் புதையும் சேற்றின் அழுத்தத்திலிருந்து அடுத்த காலை விடுவித்துக் கொள்ளும் வேகத்தில்... அழுத்தம் லேசாகிக் காலிலிருந்து விடுபட்டுச் செருப்பு மிதக்க ஆரம்பிக்கிறது. ஒரு கணம் கைப்பிடியும் மறந்தவளாய்ப் பாய்ந்து அதைப் பற்றப் போகும் வேளையில் எங்கிருந்தோ வந்து மோதிய சாக்கடை அலையொன்று அதை வேகமாக அடித்துச் செல்கிறது.

ஒரு கால் படியிலும் மறு கால் அந்தரத்திலுமாய் உமா தத்தளிக்கிற நேரத்தில் டிரைவர் இன்ஜினை 'ஸ்டார்ட்' செய்கிறார். அப்பொழுதுதான் மூச்சிரைக்க ஓடிவருகிற கூடைக்காரி ஒருத்தி இடுப்புச் சுமை தாளாமல் அவளை விலாவில் இடிக்கிறாள்.

''என்னம்மா இது! ஒண்ணுலே ஏறு! இல்லாட்டி எறங்கு! வாசலை அடைச்சிட்டு....''

இன்னும் காது கொண்டு கேட்க முடியாத வார்த்தைப் பிரயோகங்களிலே வசை அங்கே விநியோகமாகிறது.

கண்டக்டர் விசில் கொடுக்கிறார்.

இனியும் யோசிக்க இடமில்லை. சடாரென்று பஸ்ஸுக்குள் பாயும் உமா 'ஹாண்டில் பாரை'ப் பிடித்துக் கொண்டு தொங்குகிறாள். மணி இப்பொழுதே ஏழரை. விளாங்குடி போய்ச் சேர எப்படியும் எட்டாகிவிடும். பிறகு அவள் கொஞ்ச தூரம் இருட்டில் தனியாக நடந்து வேறு போக வேண்டும்.

பஸ்ஸைக் கோட்டை விட்டு விட்டுக் கொட்டுகிற மழையில்... ஆளை மூழ்கடிக்கிற நீர்மட்டத்தில் நின்று கொண்டு அலைந்

தானும்.:.. நீரோட்ட வேகத்தில் அது இந்நேரம் எங்கே போயிருக்குமோ?

பஸ் உறுமிக் கொண்டு கிளம்புகிறது. —

பதினேழாம் நம்பர் பஸ் ஸ்டாப்பில் ஈக்களும், கொசுக்களும் ஏற்கனவே ருசிபார்த்து வைத்திருக்கிற பிளாட்பாரத்து முறுக்குகளைத் தம்பிகளுக்கு வாங்கிக் கொடுத்து விட்டுத் தானும் ஒன்றை சுவராஸ்யமாய்க் கடித்துக் கொண்டிருக்கும் ராக்குவின் கால்களில் தரை தட்டிக் கரை சேர்கிறது 'அது'.

''ஹை.... செருப்பு!''

அதை எடுக்கிற ஆர்வத்தில் முறுக்கு கை நழுவிப் போனது கூடத் தெரியவில்லை அவளுக்கு! இடது காலில் நிதானமாக அதைப் போட்டுக் கொண்டு திருப்பித் திருப்பிப் பார்க்கிறாள். பாந்தப் பதிய அது அவளுக்கு அழகாய்த்தான் இருக்கிறது. ஒரு காலில் மட்டுமே அணிந்திருக்கிறோம் என்ற கூச்ச உணர்வுகளெல்லாம் இல்லாதவளாய்... அந்தச் செருப்போடு சிறிது தூரம் ஒயில் நடை பயில்கிறாள்.



''இந்தப் புள்ளைக்கு ஆசையைப் பாரு!'' பொன்னி கைகளை வாயில் பொத்திக்கொண்டு குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறாள்.

தூக்குச் சட்டியைக் கீழே இறக்கி வைத்தவள் இடுப்புச் சேலையை உயர்த்திச் செருகிக் கொண்டு பிளாட்பாரத்தின் ஒரு கோடி முதல் மறு கோடி வரை இரு கைகளாலும் துழாவுகிறாள்.

''உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிடுச்சா புள்ளே! நாளைக்கு 'சன்னி' கண்டா வேலைக்குப் போயி ஆக்கிப் போடறது யாரு?''

பொன்னியின் சொற்களால் ராக்குவின் 'நிஷ்காமிய கர்மம்' சிறிதும் கலையவில்லை. 17ம் நம்பரில் ஏறுகிறவரை கூட அந்த ஒற்றைச் செருப்பை சர்வ ஜாக்கிரதையாய் முந்தானையில் முடிந்து கொண்டு போகிறாள். பஸ் நகருகிற நேரத்திலும் அவள் கண்கள் பிளாட்பாரத்தில் மோதும் அலைகளை ஆவலோடு... ஏக்கத்தோடு வெறிக்கின்றன. விளாங்குடி ஸ்டேஷன் ஸ்டாப்பில் இறங்கிக் கரிசல்குளம் கிராமத்துக்குப் போகிற பாதையில் உமா நடந்து போய்க் கொண்டிருக்கிறாள். ஒற்றைச் செருப்பு நடையில் வேகத்தைத் தடுக்கிறது. இதை வீட்டுக்குக் கொண்டுபோய் என்ன செய்வது? பார்க்கிற போதெல்லாம் 11.95, மனசில் ஓர் உறுத்தலாய் நெருடிக் கொண்டே இருக்கும்.. குனிந்து அதைக் கழற்றியவள், தூரத்து வயற்காட்டில் வீசி எறிந்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வேகமாக நடக்கிறாள்.

கிட்டத்தட்ட அதே நேரத்தில், பஸ் ஸ்டாண்டில் மீண்டும் ஒரு நாள் அலையடிக்கும் போது, இன்னொரு செருப்பும் கரை சேரும் என்ற உறுதியான நம்பிக்கையில் அந்த ஒற்றைச் செருப்பைத் தன் குடிசை எரவாணத்தில் செருகி வைத்திருக்கிறாள் ராக்கு.



பரிபாடலில் (11.74-92) இந்த நோன்பை 'அம்பா ஆடல்' என்றும் 'தைந் நீராடல்' என்றும் பெயரிட்டு இப்படி விவரமாகவும் சுவையாகவும் சொல்கிறார். அதன் கருத்து:

முன் பனிக்காலம். மேகங்கள் இடிப்பதை நீங்கின. பனியால் எங்கும் குளிர் நடுக்கிறது. சூரிய வெப்பம் தாக்காத மார்கழி மாதம்; பௌர்ணமியும் திருவாதிரையும் கூடிய நன்னாள். கன்னிப் பெண்கள் வையை யாற்றின் கரையிலே அம் பாவாடலைத் தொடங்கினார்கள். அவர்கள் இப்பனிக் காலத்து அருணோதயத்திலே நீராடி வயதுமுதிர்ந்த பார்ப்பனிகள்காட்டியவழியே அம்பா பூசை செய்வர். அக்காலத்தில் அவர்களுடைய ஈரப் பாவாடைகள் காய்வதற்காக, அந்தணர்கள் செய்துவிட்டுப் போன ஓமத்தீக்களின் அருகிலே தங்கள் தாய்மார்களோடு நிற்பர். இத்தகைய தவம் பொருந்திய தைந் நீராடல் என்ற விரதத்தைச் செய்வதற்கு ஏற்ற இடமாக அமைந்தது வையை நதி.

பாகவதம் கூறும் **காத்யாயனி** விரதமும் பிங்கலத்தைக் குறிப்பிடும் **பாவை** யாடலும், ஆண்டாளுடையவும், மாணிக்கவாசகருடையவும் பாக்கள் முறையே திருப்பாவை திரு எம்பாவை என்றே பெயர் பெற்றிருப்பதும், ஆண்டாள் வெளிப்படவே 'நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ' என்பதும் (கிரியை அதாவது வழிபாட்டுக் கிரியையே கிரிசை எனப்படுகிறது. 'கிரிசை கெட்டுப் போச்சு' என்று இன்னும் பேச்சில் வழக்கில் சொல்கிறோம்.) இந்நோன்பு அம்பிகையைக் குறித்ததே எனக் காட்டுகின்றது. திருமாலை வழிபடுபவரும் சிவபெருமானை வழிபடுபவரும், ஆக இரு திறத்தினரும் பண்டைக் காலம் தொட்டு நம்தமிழ் நாட்டில் அம்பாவாடலாம் பாவையாடல் மூலம் உமையன்னையை வழிபட்டு, அவளது அருள்கொண்டே தம் தம் வழிபாட்டுக் கடவுளான திருமாலுடையவும் சிவபெருமானுடையவும் அருளைப் பெற்றிருக்கின்றனர்.

'அரியலால் தேவியில்லை' — சிவபெருமானுடைய தேவி திருமாலை அன்றி வேறில்லை— என்ற அப்பர் வாக்கின்படி தேவியே விஷ்ணு ஸ்வரூபமாக இருப்பதாலும், சிவ சரீரத்தில் பாதியாவதாலும் அரி அரன் இவர்களில் எந்த மூர்த்தியை உபாசிப்பவர்களும் அம்பாள் வழிபாட்டின் மூலமே அந்த அந்த மூர்த்தியின் அருளைப் பெற்றார்கள் போலும்.

மார்கழியில் செய்யப்படும் நீராடல் எதனால் 'தைந் நீராடல்' எனப் பெற்றது எனில்: தற்போது தமிழகம் நீங்கலாக, ஆந்திரம், கர்நாடகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் பின்பற்றப்படும் பஞ்சாங்கப்படி அமாவாசைக்கு மறுதினமே பிரதி மாதமும் பிறந்துவிடும். தனுர் மாதமாம் மார்கழியில் அமாவாசை ஆனவுடன் மேற்சொன்ன சாந்திரமானப் பிரகாரம் தை(ஷ்ய) மாதம் பிறந்துவிடுவதால் — இன்றைக்கும் நாம், நோன்புகளையும் திருநாட்களையும் சாந்திரமானப்படியே அநுசரிப்பதற்கிணங்க—தைந் நீராடல் என்று ஆன்றோர் பெயரிட்டுள்ளனர். பரிபாடல் மட்டுமின்றி, நற்றிணை (80), கலித்தொகை (59) போன்ற சங்க நூல்களிலும் 'தைந் நீராடல்' என்றே குறிக்கப்பட்டிருக்கிறது.

மார்கழி மாதத்தில் தேனினுமினிய நீந்தமிழ் திருப்பாவை — திருவெம்பாவைகளை ஓதுதலையும் இறை வழிபாட்டையும் வைகறையில் முடிப்பதால் நாம் ஆன்ம நலன் உறுவதோடு நாடும் மழை வளம் பெறும். 'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து', 'ஆழி மழைக்கண்ணா!.... வாழ உலகினிற் பெய்திடாய்' என்று ஆண்டாள் செப்புகிறாள். மாணிக்கவாசகர், திருப்பாவை — திருவெம்பாவை இரண்டுக்கும் பொதுப் பாவையாம் தேவி எவ்வாறு தன் பாகம் பிரியாப் பரமசிவனுக்கும் முந்திக்கொண்டு அருள் சுரக்கிறாளோ, அவ்வாறே மழை பொழிய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறார்.

...நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங் கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும்
இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

குங்குமப் பொட்டுகள் யாவும் ஒரே வகை அல்ல !

சிங்கார் நிச்சயமாக மேன்மையானது
• சன்னமாகவும், சமனமாகவும் அணிந்திடக் கூடியது • எழில் மிகுந்தது • வழிந்து பரவாது • உலர்ந்ததும் கீறல் விழாது • கறை ஏற்படுத்தாது • சுகாதார முறையில் தயாரித்தது.

குறிப்பிட்டுக்
கேட்பீர் எப்போதும்

சிங்கார்

முழுமை எழில் கொஞ்சும்,
இந்தியாவின்
உச்ச விற்பனையுள்ள
குங்குமப் பொட்டு.

பாரமௌண்ட் ப்ராடக்ட்ஸ்,
809, ப்ரஸாத் சேம்பர்ஸ்,
பம்பாய் 400 004.



ஸிந்தூர்



everest/638/SH Tam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயக் காசு